302
93

# த.ச.பே. செயலக வெளியீடு

தொகுதி-2 எண்-1

27 மார்ச் 1992

©

V211,31 N92
N92.211
63177

(302)
93

வெளியீடு 9-10-1992 Issued 9-10-1992

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
## செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES

## OFFICIAL REPORT

வெள்ளிக்கிழமை, மார்ச் 27, 1992 - தொகுதி 21, எண் 1
Friday the 27th March, 1992 - Volume 21 No. 1

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009
Legislative Assembly Secretariat,
Madras-600 009

விலை ரூ. 3-00] [Price Rs. 3-00

(302)

## உள்ளடக்கம்.

27—3—1992.


| | பக்கங்கள் |
|---|---|
| தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும் | iii—vi |
| Personal of the Government of Tamil Nadu .. | vii—ix |
| தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள். | xiii—xiv |
| தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் பட்டியல் (அகர வரிசைப்படி). | xv—xxvi |
| 1. சிறப்புக் குறிப்பு— | |
| (அ) தனியார் மருத்துவக் கல்லூரி துவக்கப்படுவதை எதிர்த்து மருத்துவக் கல்லூரி மாணவர்கள் நடத்தி வரும் போராட்டம் குறித்து. | 1—4 |
| (ஆ) நாகப்பட்டினம் பகுதியில் காணாமற் போன மீனவர்கள் குறித்து பத்திரிகையில் வந்துள்ள செய்தி குறித்து. | 4—7 |
| 2. கவன ஈர்ப்பு— | |
| (அ) தலைஞாயிறு நடிப்பிசைப் புலவர் சர்க்கரை ஆலைக் கழிவு நீரால் சீர்காழிப் பகுதி குடிநீர், விளைநிலம் பாதிக்கப்படுவது குறித்து. | 7—11 |
| (ஆ) நீலகிரி மாவட்டத்தில் லாரிகள் ஓடாதது குறித்து. | 11—14 |
| 3. அறிக்கை அளித்தல்— | |
| (அ) பொதுக் கணக்குக் குழு ... .. | 15—16 |
| (ஆ) அரசு உறுதிமொழிக் குழு .. .. | 16 |
| 4. சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)— | |
| (அ) நகராட்சிச் சட்டங்கள் சார்ந்த (திருத்த) சட்டமுன்வடிவு, 1992. | 16—59 |

V211,31'N92
N92-A1.1
163177
... 600 008


| | |
|---|---|
| (ஆ) ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றிய மன்றங்கள் (தனி அலுவலர்கள் நியமன) திருத்தச் சட்டமுன்வடிவு. 1992. | 16–61 |
| | 16–18 |
| *திரு. ப. ரங்கநாதன் .. | 20–21,24–26 |
| *திரு. செ. து. வரதராஜன் .. | 26–28 |
| டாக்டர் தே. குமாரதாஸ் .. | 28–23 |
| திரு. செ. கு. தமிழரசன் .. | 34–36,37–39 |
| *திரு. ச. காந்திராஜன் .. | 40–42,46–48 |
| *திரு. ச. அழகிரி .. | 48–54 |
| மாண்புமிகு திரு, அழகு திருநாவுக்கரசு | 54–60 |
| (இ) நிதி ஒதுக்கச் (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்டமுன்வடிவு, 1992, | 61–62 |
| (ஈ) நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு, 1992 .. | 63–64 |
| **5, மானியக் கோரிக்கைகள், 1992-93— விவாதமும் வாக்கெடுப்பும்— தொடர்ச்சி,** | |
| (அ) கோரிக்கை எண். 33— வீட்டுவசதி (ஆ) கோரிக்கை எண். 34— நகர்ப்பகுதி வளர்ச்சி, | 64–122 |
| * மாண்புமிகு திரு, டி, எம், செல்வ கணபதி, | 65–66 100–120 |
| *திரு, கே, செல்வராஜ் .. | 66–71 |
| *திரு, எம், கே, பாலன் .. | 71–74 |
| *திரு, உ, பலராமன் .. | 75–81 |
| *திரு, வி, கே, லட்சுமணன் .. | 81–87 |
| *திரு, எஸ், அண்ணாமலை .. | 88–90 |
| *திரு, ப, ரங்கநாதன், .. | 91–100 |
| **6, உறுப்பினர் பேரவைப் பணிகளினின்று தற்காலிகமாக நீக்கிவைக்கப்படுதல்,** | 122–124 |
| **7, பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்,** | 124–125 |




## தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும்,

## ஆளுநர்— திரு. பீஷ்ம நாராயண் சிங்.

## அமைச்சரவையின் உறுப்பினர்கள்.

1. முதலமைச்சர் .. மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : பொது, பொது நிர்வாகம், இந்திய ஆட்சிப் பணியாளர், இந்திய காவல் பணியாளர் மற்றும் அனைத்திந்தியப் பணியாளர்கள், மாவட்ட வருவாய் அதிகாரிகள், காவல், இலஞ்ச ஒழிப்பு, தொழில்கள், மதுவிலக்கு மற்றும் ஆயத்துறை, சர்க்கரைப்பாகு கழிவு, சிறுபான்மையினர் நலம், இந்து சமய அறநிலையத் துறை, செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில் நுட்பவியல், திரைப்படச் சட்டம், சுற்றுலா மற்றும் சுற்றுலா வளர்ச்சிக் கழகம், சுரங்கம் மற்றும் கனிம வளம், தமிழ் வளர்ச்சி மற்றும் தமிழ்ப் பண்பாடு, மின்னணுவியல் மற்றும் அச்சுக் காகிதக் கட்டுப்பாடு.

2. நிதி அமைச்சர் .. மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : நிதி, திட்டம், தேர்தல்கள், சட்டமன்றம்.

3. சட்ட அமைச்சர் .. மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : சட்டம், நீதிமன்றங்கள், சிறைகள், எடைகள்—அளவைகள் பற்றி சட்டம் இயற்றுதல், கடன் நிவாரணம் (கடன் வழங்கல், சீட்டு நிதி இவை பற்றிய சட்டம் இயற்றுதல் உட்பட), கம்பெனிகள் பதிவு.

4. வருவாய்த் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : வருவாய், மாவட்ட வருவாய்த் துறைப் பணியாளர்கள், மாவட்டத் துணை ஆட்சியாளர்கள், ஆவணப் பதிவுத் துறை, முத்திரைச் சட்டம், எழுது பொருள் மற்றும் அச்சுத் துறை, அரசு அச்சகம், பூமி தானம் மற்றும் கிராமதானம், பயண இசைவுச் சீட்டு, வணிக வரிகள்.

5. பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. இராம வீரப்பன் : பிற்பட்டோர் நலம், மிகப் பிற்பட்டோர் நலம், மற்றும் சீர்மரபினர், வெளிநாடு வாழ் இந்தியர்கள், அகதிகள் மற்றும் வெளியேற்றப் பட்டோர், முன்னாள் இராணுவத்தினர் நலம்.

6. கல்வி அமைச்சர் .. மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : கல்வி, தொழில் நுட்பக் கல்வி, அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல், விளையாட்டு மற்றும் இளைஞர் நலம், தொல் பொருளியல்.

7. மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர். .. மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மக்கள் நல்வாழ்வு, மருத்துவக் கல்வி, குடும்ப நலம், சுற்றுச் சூழல் மாசு கட்டுப்படுத்தல்.

8. போக்குவரத்துத் துறை அமைச்சர். .. மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : போக்கு வரத்து, அரசுடைமையாக்கப் பட்ட போக்குவரத்து, இயக் கூர்திகள் சட்டம், துறை முகங்கள், வனங்கள் மற்றும் சின்கோனா.

9. கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர். .. மாண்புமிகு திரு. இ. மது சூதனன் : கைத்தறி மற்றும் நெசவாலைகள்.



10. பொதுப்பணித் துறை அமைச்சர். .. மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : பொதுப் பணிகள், பாசனம் (சிறுபாசனம் உட்பட) நெடுஞ்சாலைகள், மின்சாரம், மரபுசாரா எரிசக்தி வளர்ச்சி, இரும்பு மற்றும் எஃகுக் கட்டுப்பாடு.

11. உள்ளாட்சித் துறை அமைச்சர். .. மாண்புமிகு திரு. அழகு திரு நாவுக்கரசு : நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி, ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள், வறுமை ஒழிப்புத் திட்டங்கள், கிராமப் புறக் கடன் சம்பந்தப்பட்டவை நகர்ப்புற மற்றும் கிராமப்புறக் குடிநீர் வழங்கல்.

12. உணவு-கூட்டுறவுத் துறை அமைச்சர். .. மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : உணவு, கூட்டுறவு, நுகர்பொருள் வழங்கல், விலைவாசிக் கட்டுப்பாடு, புள்ளி விவரங்கள்.

13. தொழிலாளர் நலத் துறை அமைச்சர். .. மாண்புமிகு திரு. செ. ரகுபதி : தொழிலாளர், வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சி, நகர்ப்புற மற்றும் கிராமப் புற வேலைவாய்ப்புத் திட்டங்கள், மக்கள் தொகைக் கணக்கு.

14. வேளாண்மைத் துறை அமைச்சர். .. மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : வேளாண்மை, வேளாண்மைப் பொறியியல், வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், தோட்டக் கலை, சர்க்கரை வரி மற்றும் சர்க்கரை வளர்ச்சி.

15. வீட்டு வசதி-நகர்ப் புற வளர்ச்சித் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. டி. எம். செல்வ கணபதி : வீட்டு வசதி, குடிசை மாற்றுத் திட்டம், ஊரக வீட்டு வசதி வளர்ச்சி, இடவசதிக் கட்டுப்பாடு, நகர அமைப்பு, நகர்ப்புற வளர்ச்சி, சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்.

16. சமூக நலத்துறை அமைச்சர். .. மாண்புமிகு திருமதி இரா. இந்திர குமாரி: சமூக நலம் (மகளிர் மற்றும் குழந்தைகள் நலம் உட்பட), சத்துணவு, பிச்சைக்காரர் விடுதிகள், அனாதை விடுதிகள், சீர் திருத்த நிர்வாகம்.

17. ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர். .. மாண்புமிகு திரு: எம். ஆனந்தன்: ஆதி திராவிடர் நலம், மலை வாழ் பழங்குடியினர் மற்றும் பிணைத் தொழிலாளர், கால் நடை பராமரிப்பு, பால், பால் பெருக்குத் திட்டம்.

18. மீனளத்துறை அமைச்சர். .. மாண்புமிகு திரு. டி. ஜெய குமார்: மீனளம்.

19. ஊரகத் தொழில் துறை அமைச்சர். .. மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான்: சிறு தொழில்கள், ஊரகத் தொழில்கள் (குடிசைத் தொழில்கள் உட்பட), கதர் மற்றும் கிராமத் தொழில்கள் வாரியம், வக்ஃப்.



## PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU

### GOVERNOR OF TAMIL NADU

THIRU BHISHMA NARAIN SINGH

### MEMBERS OF THE COUNCIL OF MINISTERS.

1. Chief Minister .. **The Hon. Dr. J. JAYALALITHA:** Public, General Administration, Indian Administrative Service, Indian Police Service and other All India Services, District Revenue Officers, Police, Prevention of Corruption, Industries, Prohibition and Excise, Molasses, Minorities, Hindu Religious and Charitable Endowments, Information, and Publicity, Film Technology, Cinematograph Act, Tourism and Tourism Development Corporation, Mines and Minerals, Tamil Development and Tamil Culture, (—) Electronics and Newsprint Control.

2. Minister for Finance .. **The Hon. Dr. V. R. NEDUNCHEZHIAN:** Finance, Planning, Elections and Legislature.

3. Minister for Law .. **The Hon. Thiru K. A. KRISHNASAMY:** Law, Courts, Prisons, Legislation on Weights and Measures, Debt Relief including Legislation on Money-lending Chits and Registration of Companies.

4. Minister for Revenue **The Hon. Thiru S. D. SOMASUNDARAM:** Revenue, District Revenue Establish ment, Deputy Collectors, Registration Stamp Act, Stationary and Printing Government Press, Bhoodan and Gramdan, Passports and Commercial Taxes.

5. Minister for Backward Classes .. **The Hon. Thiru ERAAMA VEERAPPAN:** Backward Classes, Most Backward Classes and Denotified Communities, Indian Overseas, Refugees and Evacuees and Welfare of Ex-Servicemen.

6. Minister for Education . . The Hon. Dr. C. ARANGANAYAGAM: Education, Technical Edcuation, Science and Technology, Sports and Youth Welfare and Archeology.

7. Minister for Health . . The Hon. Thiru S. MUTHUSAMY: Health, Medical Education, Family Welfare and Environmental Pollution Control.

8. Minister for Transport . . The Hon. Thiru K. A. SENGOTTAYAN: Transport, Nationalised Transport, Motor Vehicles Act, Ports, Forests and Cinchona.

9. Minister for Handlooms and Textiles . . The Hon. Thiru E. MADHUSUDHANAN: Handlooms and Textiles.

10. Minsiter for Public Works . . The Hon. Thiru S. KANNAPPAN: Public Works, Irrigation including Minor Irrigation, Highways, Electricity Non-Conventional Energy Development and Iron and Steel Control.

11. Minister for Local Administration . . The Hon. Thiru ALAGU THIRUNAVUK-KARASU: Municipal Administration, Rural Development, Panchayats and Panchayat Unions, Poverty Alleviation Programmes, Rural Indebtedness and Urban and Rural Water Supply.

12. Minister for Food and Co-operation . . The Hon. Thiru G. VISWANATHAN: Food, Co-operation, Civil Supplies, Price Control and Statistics.

13. Minister for Labour . . The Hon. Thiru S. RAGUPATHY: Labour, Employment and Training, Urban and Rural Employment Programmes and Census.

14. Minister for Agriculture . . The Hon. Thiru. Ku. Pa. KRISHNAN: Agriculture, Agricultural Engineering, Agro Service, Co-operatives, Horticulture Sugarcane Cess and Sugarcane Development.



15. Minister for Housing and Urban Development . . The Hon. Thiru T. M.SELVAGANAPATHI: Housing, Slum Clearance, Rural Housing Development, Accommodation Control, Town Planning, Urban Development and Madras Metropolitan Development Authority.

16. Minister for Social Welfare. The Hon. Tmt. R. INDRA KUMARI: Social Welfare including Women's and Children's Welfare, Nutritious Noon Meals, Beggar Homes, Orphanage and Correctional Administration.

17. Minister for Adi-Dravidar Welfare The Hon. Thiru. M. ANANDAN: Adi-Dravidar Welfare, Hill Tribes, Bonded Labour, Animal Husbandry, Milk and Dairy Development.

18. Minister for Fisheries. The Hon. Thiru. D. JAYAKUMAR: Fisheries.

19. Minister for Rural Industries. The Hon. Thiru S. NAGOORMEERAN: Small Scale Industries, Rural Industries including Cottage Industries, Khadi and Village Industries Board and Wakf.

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

பேரவைத் தலைவர்,

மாண்புமிகு திரு. இரா. முத்தையா,

பேரவைத் துணைத் தலைவர்:

பேராசிரியர் க. பொன்னுசாமி.

மாற்றுத் தலைவர்கள் பட்டியல்:

1. திரு. ம. சின்னசாமி.
2. திரு. வ. சத்தியமூர்த்தி.
3. திரு. ஆர். சிங்காரம்.
4. திரு. வே. தம்புசாமி.
5. திரு. நா. சா. பழனிசாமி.

செயலாளர்:

திரு. செ. சு. ஜானகிராமன்.

## பேரவையின் முக்கிய அலுவலர்கள் (அகர வரிசைப்படி)

| | | |
|---|---|---|
| இராமச்சந்திரன், திரு. ரெ. கு. பி,ஏ.,பி,எல்., | .. | இணைச் செயலாளர். |
| சுந்தரராஜன், திரு. கா. செ,. பி.ஏ., பி.ஜி.எல்., | .. | இணைச் செயலாளர். |
| இராசமாணிக்கம், திரு. பெ., பி,ஏ,.பி.எல். | .. | துணைச் செயலாளர் (பதிப்பாளர்). |
| சண்முகநாதன், திரு. கோ., பி.காம். | .. | துணைச் செயலாளர் (பதிப்பாளர்). |
| சந்திரசேகர், திரு. ஆர்., .. பி.ஏ., | .. | துணைச் செயலாளர். |
| சாலமன் ஜெயபால், திரு. டி., பி.எஸ்ஸி.,பி.எல். | .. | துணைச் செயலாளர். |
| ஜேக்கப் ஆர்தர், திரு. தா., பி.ஏ.,பி,எல்,.டி.பி. மற்றும் பி.ஏ. | .. | துணைச் செயலாளர். |
| கிருஷ்ணமூர்த்தி, திரு. சு., பி.எஸ்ஸி., | .. | குழு அலுவலர். |
| வெங்கட்டராமன், திரு. ப, சீ., பி.காம்., | .. | குழு அலுவலர். |
| அப்துல் சத்தார், திரு. ஜெ., பி.ஏ.,பி.எல்,. | ... | சார்புச் செயலாளர். |
| இராசாராமன், திரு. வி., பி.எஸ்ஸி,.பி.எல்., | .. | சார்புச் செயலாளர். |
| உமா, திருமதி வி, நா,. பி.ஏ., | ... | சார்புச் செயலாளர். |
| கண்ணன், திரு. கே,. பி.எஸ்ஸி., பி.எல்., | | சார்புச் செயலாளர். |
| கணேசன், திரு. சா., பி.ஏ. பி.ஜி.எல். | | சார்புச் செயலாளர் |
| சாமிநாதன், திரு. கி,. பி,ஏ., பி.ஜி,எல்., | ... | சார்புச் செயலாளர். |
| பவானி சுப்பையா, திருமதி. பி.ஏ.,பி.ஜி.எல்., | ... | சார்புச் செயலாளர். |
| பானுமதி அனந்தராஜன், திருமதி. பி.எஸ்ஸி.,பி.ஜி.எல்., | | சார்புச் செயலாளர். |

| | |
|---|---|
| முடிகோபதி, திரு. நா., எம்.ஏ. ... | சார்புச் செயலாளர். |
| முனிர் உன்னிசா., திருமதி. பி.எஸ்ஸி.பி.ஜி.எல். .. | சார்புச் செயலாளர். |
| ராஜன், திரு. கே. பி. டி. ஆர்.எஸ். .. | சார்புச் செயலாளர். |
| ராஜேந்திரன், திரு. பி. சி., பி.ஏ., .. | சார்புச் செயலாளர். |
| வெங்கட்டராமன், திரு. கோ. .. | பேரவைத் தலைவரின் தனிச் செயலாளர். |
| சுந்தரராஜுலு, திரு. துரை. எம்.ஏ... | தலைமை நிருபர். |
| துரைபாண்டியன், திரு. செ. ஏ. பி,ஏ,. ... | தலைமை நிருபர். |
| ஜெயதேவ், திரு. பி. சி. ... ... | தலைமை நிருபர். |



## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

## உறுப்பினர்கள் பட்டியல் (அகர வரிசைப்படி)

### பெயர்களும் தொகுதிகளும்.

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். | தொகுதியின் பெயர். |
|---|---|
| (1) | (2) |
| 1. அண்ணாமலை, திரு. எஸ். .. | ஆலந்தூர். |
| 2. அபரஞ்சி, திரு. பெ. .. | அரூர் (செ. வ.) |
| 3. அபுல்ஹசன், திரு. எம்.எம்.எஸ். | மயிலாடுதுறை. |
| 4. அமர்நாத், திரு. ஓ. எஸ். .. | மதுரை கிழக்கு. |
| 5. அம்மமுத்து பிள்ளை, டாக்டர் மு. ... | கன்னியாகுமரி. |
| 6. அரங்கநாதன், திரு. ஆர். டி... | விருத்தாசலம். |
| 7. அரங்கநாயகம், டாக்டர் செ. | தொண்டாமுத்தூர். |
| 8. அர்ச்சுனன், திரு. க. ... ... | வீரபாண்டி. |
| 9. அழகிரி, திரு. ச. ... ... | சிதம்பரம், |
| 10. அழகு திருநாவுக்கரசு, திரு. | ஒரத்தநாடு. |
| 11. அறிவழகன், திரு. ஆ. ... | கிருஷ்ணராயபுரம் (செ. வ.), |
| 12. அன்பழகன், திரு. எஸ். ... | நாமக்கல் (செ.வ.), |
| 13. ஆசைமணி, திரு. எஸ். ... | குத்தாலம், |
| 14. ஆண்டி அம்பலம், திரு. எம். ... | நத்தம். |
| 15. ஆண்டித் தேவர், திரு. எஸ். | திருப்பரங்குன்றம், |
| 16. ஆரோக்கியசாமி, டாக்டர் ச. | திருச்சிராப்பள்ளி-I. |
| 17. ஆறுமுகம், திரு. செ. ... | வானூர் (செ.வ.) |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|
| 18. ஆனந்தன், திரு. எம். ... | உளுந்தூர்பேட்டை (செ.வ.). |
| 19. இந்திர்குமாரி, திருமதி இரா. | நாட்ராம்பள்ளி. |
| 20. இராசமாணிக்கம், திரு. க. வெ. வீ., ... | மேலூர். |
| 21. இராசாராமன், திரு. சோ. ... | பாபநாசம். |
| 22. இராசாராம், திரு. க. ... | பனைமரத்துப்பட்டி. |
| 23. இராதாகிருஷ்ணன், திரு. த. க... | திருமங்கலம். |
| 24. இராமகிருஷ்ணன், டாக்டர் இ. ... | அச்சரப்பாக்கம் (செ.வ.). |
| 25. இராமசாமி அம்பலம், திரு. கே. ஆர். ... | திருவாடனை. |
| 26. இராமசாமி, திரு. சி. ... | சங்கராபுரம். |
| 27. இராமச்சந்திரன், திரு. மா. சா. மா. ... | இளையாங்குடி. |
| 28. இராமச்சந்திரன், திரு. ஒ. ஆர். | கம்பம். |
| 29. இராமச்சந்திரன், திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். ... | சாத்தூர். |
| 30. இராமச்சந்திரன், திரு. ச. ... | பண்ருட்டி. |
| 31. இராமதாஸ், திரு. எஸ். எஸ். ஆர். | செஞ்சி. |
| 32. இராமநாதன், திரு. இராம. ... | கும்பகோணம். |
| 33. இராஜமன்னார், திரு. சூ. சே. ... | ஒட்டப்பிடாரம் (செ. வ.). |
| 34. இராஜன்பாபு என்கிற தணிகைபாபு, திரு. இ. | திருத்தணி. |



| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|
| 35. இராஜேந்திரன், திரு. பி. வி. | வேதாரண்யம். |
| 36. இராம வீரப்பன், திரு. ... | காங்கேயம். |
| 37. இலதா பிரியகுமார், திருமதி... | அரக்கோணம். (செ. வ.). |
| 38. இளம்வழுதி, திரு. ... | எழும்பூர். |
| 39. ஈஸ்வரமூர்த்தி, திரு. பி. ... | தாராபுரம் (செ.வ.). |
| 40. ஈஸ்வரன், திரு. ஆர். .. | வாசுதேவநல்லூர். (செ.வ.). |
| 41. ஏகாம்பர ரெட்டி, திரு. எ. | பள்ளிப்பட்டு. |
| 42. கண்ணப்பன், திரு. எஸ். ... | திருப்பத்தூர். |
| 43. கண்ணன், திரு. வே. .. | திருவண்ணாமலை. |
| 44. கந்தசாமி, திரு. கா. ... | தலைவாசல் (செ.வ.). |
| 45. கருப்புசாமி, டாக்டர் எம். .. | குன்னூர் (செ.வ.). |
| 46. கலியபெருமாள், திரு. ப. ... | திருவையாறு. |
| 47. கலைச்செல்வி, திருமதி கே. எம். | காட்பாடி. |
| 48. கவிநிலவு தர்மராஜ், திருமதி | மொடக்குறிச்சி. |
| 49. கற்பகம் இளங்கோ, திருமதி | காரைக்குடி. |
| 50. கனகவல்லி, திருமதி என். சி. | விளாத்திகுளம். |
| 51. காஞ்சி பன்னீர் செல்வம், திரு. | உத்திரமேரூர். |
| 52. காந்திராஜன், திரு. ச. .. | வேடசந்தூர். |
| 53. காளன், திரு. கோ. ... | வில்லிவாக்கம். |
| 54. காளிராஜன், டாக்டர் மு. .. | சமயநல்லூர் (செ.வ.). |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். | தொகுதியின் பெயர். |
|---|---|
| (1) | (2) |
| 55. கிருஷ்ணசாமி, திரு. கே. ஏ. .. | ஆயிரம் விளக்கு. |
| 56. கிருஷ்ணன் திரு. எஸ். எம். | தாம்பரம். |
| 57. கிருஷ்ணன், திரு. கு. ப. .. | ஸ்ரீரங்கம். |
| 58. கிருஷ்ணன், திரு. சி. .. .. | ஓமலூர். |
| 59. குப்பன், திரு. க. .. .. | திருவொற்றியூர். |
| 60. குமரி அனந்தன், திரு. .. | சாத்தான்குளம். |
| 61. குமாரதாஸ், டாக்டர் தே. .. | கிள்ளியூர். |
| 62. குழந்தைவேலு, திரு. சி. .. | குளத்தூர் (செ.வ.). |
| 63. கோடிமாரி, திரு. ஆர். .. | நாகப்பட்டினம். |
| 64. கோபாலகிருஷ்ணன், திரு. .. | சங்கரநயினார்கோவில். (செ.வ.). |
| 65. கோபால், திரு. க. .. .. | நன்னிலம் (செ.வ.). |
| 66. கோவிந்தராசு, திரு. மா. .. | ரிஷிவந்தியம். |
| 67. சக்குபாய், திருமதி ரா. .. | கும்மிடிப்பூண்டி. |
| 68. சக்குபாய் தேவராஜ். திருமதி டி. | திருவள்ளூர். |
| 69. சஞ்சய் ராமசாமி, திரு. .. | விருதுநகர். |
| 70. சண்முகநாதன், திரு. எஸ். .. | ஆலங்குடி. |
| 71. சண்முகம், திரு. எஸ். வி. .. | மதுரை மேற்கு. |
| 72. சத்தியமூர்த்தி, திரு. வ. .. | கடலாடி. |
| 73. சந்திரசேகர், திரு. வி. பி. | பொள்ளாச்சி. |
| 74. சம்பத், திரு. எ. .. .. | வாணியம்பாடி. |
| 75. சரஸ்வதி, திருமதி அ. தி. .. | சத்தியமங்கலம். |
| 76. சரஸ்வதி, திருமதி ப. .. | கபிலர்மலை. |



| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். | தொகுதியின் பெயர். |
|---|---|
| (1) | (2) |
| 77. சரோஜா, டாக்டர் வெ. | சங்கரி (செ.வ.). |
| 78. சாத்தையா, திரு. தி... .. | இராஜபாளையம் (செ.வ.). |
| 79. சாவித்திரி அம்மாள், திருமதி ஆர். | முகையூர். |
| 80. சிங்காரம், திரு. ஆர். .. | பேராவூரணி. |
| 81. சிங்காரம், திரு. கே. .. | மொரப்பூர். |
| 82. சிங்கை கோவிந்தராசு, திரு. .. | சிங்காநல்லூர். |
| 83. சியாமளா, திருமதி ரெ. .. | கோவில்பட்டி. |
| 84. சிவசுப்பிரமணியன், திரு. கு. | குறிஞ்சிப்பாடி. |
| 85. சிவபதி, திரு. என். ஆர். ... | தொட்டியம். |
| 86. சின்னசாமி, திரு. ம. ... | கரூர். |
| 87. சின்னசாமி, திரு. கா. ... | சேந்தமங்கலம் (ம.ப.) |
| 88. சின்னசாமி, திரு, வி கே. ... | பவானிசாகர். |
| 89. சின்னப்பன், திரு. கே. கே. .. | ஜெயங்கொண்டம். |
| 90. சீனியம்மாள், டாக்டர் மு. .. | அவினாசி (செ.வ.). |
| 91. சீனிவாசன், திரு. ஆ. கு. .. | பெரணமல்லூர். |
| 92. சீனிவாசன், திரு. கு. .. | மன்னார்குடி. |
| 93. சுதர்சனம், திரு. டி. .. | பூந்தமல்லி. |
| 94. சுந்தரசாமி, திரு. எம். .. | கலசப்பாக்கம். |
| 95. சுந்தரதாஸ், திரு. மா. .. | விளவன்கோடு. |
| 96. சுந்தரம், திரு. எம். கே. ... | தண்டராம்பட்டு. |
| 97. சுந்தரராஜ், டாக்டர். எஸ். ... | பரமக்குடி (செ.வ.). |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். | தொகுதியின் பெயர். |
|---|---|
| (1) | (2) |
| 98. சுந்தரவேல், திரு. ஏ. கே. சி. | திருப்பத்தூர். |
| 99. சுந்தராம்பாள், திருமதி செ. | மேட்டூர். |
| 100. சுப்பிரமணியம், திரு. வ. மு. | மானாமதுரை (செ.வ.). |
| 101. சுப்பிரமணியன், திரு. வி. என். | பெருந்துறை. |
| 102. சுப்பிரமணியன், திரு. வீ. | கண்டமங்கலம் (செ.வ.). |
| 103. சுப்புரத்தினம், திரு. ஆ. .. | பழனி (செ.வ.). |
| 104. சுலோசனா, செல்வி எல். .. | மேட்டுப்பாளையம். |
| 105. சுவாமிநாதன், திரு. சி. .. | புதுக்கோட்டை. |
| 106. செங்கோட்டையன், திரு. கே. ஏ. .. | கோபிசெட்டிபாளையம். |
| 107. செல்லக்குமார், டாக்டர் அ. | அண்ணா நகர். |
| 108. செல்லசாமி, திரு. ஏ. டி. .. | ஒட்டன்சத்திரம். |
| 109. செல்லதுரை, திரு. ஆ. .. | திருச்செந்தூர். |
| 110. செல்வகணபதி, திரு. டி. எம். | திருச்செங்கோடு. |
| 111. செல்வராசன், திரு. அ. .. | துறைமுகம். |
| 112. செல்வராஜ், திரு. கே. .. | கோயம்புத்தூர் மேற்கு. |
| 113. செழியன், திரு. தா. .. | பெரம்பலூர் (செ.வ.). |
| 114. சேகர், டாக்டர் எம். பி. .. | பெரம்பூர் (செ.வ.). |
| 115. சேகர், திரு. எம். ஜி. .. | பாலக்கோடு. |
| 116. சொக்கலிங்கம், திரு. பி. .. | மதுராந்தகம். |
| 117. சோமசுந்தரம், திரு. எஸ். டி. | தஞ்சாவூர். |
| 118. ஞானசேகரன், திரு. சி. .. | வேலூர். |



| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். | தொகுதியின் பெயர். |
|---|---|
| (1) | (2) |
| 119. டேனியல்ராஜ், திரு. எஸ். .. | ஸ்ரீவைகுண்டம். |
| 120. தங்கமுத்து, திரு. கு. .. | திருவோணம். |
| 121. தங்கராஜ், திரு. ஆர். .. | ஆண்டிமடம். |
| 122. தங்கவேல், திரு. எம். .. | முசிறி. |
| 123. தண்டாயுதபாணி, திரு. வி. | குடியாத்தம். |
| 124. தமிழரசன், திரு. செ. கு. .. | வந்தவாசி (செ.வ.). |
| 125. தமிழரசு, திரு. வெ. .. | ஆத்தூர். |
| 126. தம்புசாமி, திரு. வே. .. | திருவாரூர் (செ.வ.). |
| 127. தர்மலிங்கம், திரு. கி. .. | அணைக்கட்டு. |
| 128. தர்மலிங்கம், திரு. பே. .. | பாளையங்கோட்டை. |
| 129. தவசி, திரு. கே. .. | ஆண்டிப்பட்டி. |
| 130. தனபால், திரு. ம. .. | திருப்போரூர் (செ.வ.). |
| 131. தாமரைக்கனி, திரு. இரா. .. | ஸ்ரீவில்லிபுத்தூர். |
| 132. தாமோதரன், திரு. சி. .. | நெல்லிக்குப்பம். |
| 133. திருநாவுக்கரசு, திரு. எஸ். .. | அறந்தாங்கி. |
| 134. துரை, திரு. எஸ். எம். .. | ஆத்தூர். |
| 135. துரைமுருகன், திரு. கு. சு. .. | பல்லடம். |
| 136. துரை ராமசாமி, திரு. .. | வெள்ளக்கோவில். |
| 137. தெய்வநாயகம், திரு. எ. .. | மதுரை (மத்தி). |
| 138. தென்னவன், திரு. மு. .. | இராமநாதபுரம். |
| 139. தேவராஜ், திரு. அ. .. | செய்யாறு. |
| 140. தேனி பன்னீர்செல்வம், திரு. | போடிநாயக்கனூர். |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். | தொகுதியின் பெயர். |
|---|---|
| (1) | (2) |
| 141. நடேசன், திரு. இரா. .. | திருவட்டாறு. |
| 142. நடேசன், திரு. மு. .. | சேலம்-2. |
| 143. நடேசன் பால்ராஜ், திரு. வெ. | நாங்குநேரி. |
| 144. நாகூர் மீரான், திரு. எஸ். | கடையநல்லூர். |
| 145. நிர்மலா, செல்வி பி. .. | திண்டுக்கல். |
| 146. நெடுஞ்செழியன், டாக்டர் இரா. | தேனி. |
| 147. பஞ்சவர்ணம், திருமதி. கே. | வலங்கைமான் (செ. வ.). |
| 148. பட்டாபிராமன், திரு. கா. ப. .. | காஞ்சிபுரம். |
| 149. பரந்தாமன், டாக்டர் ஜெ. | பேரணாம்பட்டு (செ. வ.). |
| 150. பரமசிவம், திரு. ஆர். பி. .. | சின்னசேலம். |
| 151. பரமசிவன், திரு. ஏ. எம். .. | சோழவந்தான். |
| 152. பலராமன், திரு. உ. .. | பூங்கா நகர். |
| 153. பழனிசாமி, திரு. இரா. .. | தாரமங்கலம். |
| 154. பழனிசாமி, திரு. க. .. | எடப்பாடி. |
| 155. பழனிசாமி, திரு. நா. சா. | கிணத்துக்கடவு. |
| 156. பழனிசாமி, திரு. வெ. .. | திருப்பூர். |
| 157. பழனிசாமி, திரு. ஜி. .. | திருத்துறைப்பூண்டி (செ.வ.). |
| 158. பழனியம்மாள், திருமதி க. | ராசிபுரம். |
| 159. பன்னீர்செல்வம், திரு. என். | திருவிடைமருதூர். |
| 160. பன்னீர்செல்வம், திரு. சா. .. | திண்டிவனம். |



| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். | தொகுதியின் பெயர். |
|---|---|
| (1) | (2) |
| 161. பன்னீர்செல்வம், திரு. ஜெ. .. | திருநாவலூர். |
| 162. பாண்டியம்மாள், திருமதி இரா. | உசிலம்பட்டி. |
| 163. பாப்பா சுந்தரம், திரு. அ. .. | குளித்தலை. |
| 164. பாலகங்காதரன், திரு. ஜெ. | சிவகாசி. |
| 165. பாலகிருஷ்ணன், திரு. சோ. | முதுகுளத்தூர். |
| 166. பாலசுப்ரமணியன், திரு. எஸ். ஆர். | பொங்கலூர். |
| 167. பாலசுப்பிரமணியன், திரு. கி. | பட்டுக்கோட்டை. |
| 168. பாலன், திரு. எம். கே. .. | சைதாப்பேட்டை. |
| 169. பாலையா, திரு. ஆ. .. | குளச்சல். |
| 170. பீட்ரிக்ஸ் டி சோசா, டாக்டர் .. | நியமனம். |
| 171. பீட்டர் அல்போன்ஸ், திரு. எஸ். | தென்காசி. |
| 172. புதுநயினார் ஆதித்தன், திரு. இரா. .. | சேரன்மகாதேவி. |
| 173. புரட்சிமணி, திரு. ச. .. | மங்களூர் (செ.வ.). |
| 174. புருஷோத்தமன், டாக்டர் வெ. | பெண்ணாகரம். |
| 175. பூராசாமி, திரு. எம். .. | பூம்புகார். |
| 176. பெரியசாமி, திரு. வே. .. | அந்தியூர் (செ.வ.). |
| 177. பெரியவீரன், திரு. எம். .. | பெரியகுளம். |
| 178. பெருமாள், திரு. செ. .. | ஏற்காடு (ம.ப.). |
| 179. பொன்னம்மாள், திருமதி ஏ. எஸ். .. | நிலக்கோட்டை (செ.வ.). |
| 180. பொன்னுசாமி, பேராசிரியர் க. | மருங்காபுரி. |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும் | தொகுதியின் பெயர் |
|---|---|
| (1) | (2) |
| 181. பொன்னுசாமி, திரு. பெ. .. | தருமபுரி. |
| 182. பொன்னுவேலு, திரு. ஏ. தா. | வரகூர் (செ.வ.). |
| 183. போளூர் வரதன், திரு. .. | ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.). |
| 184. மணிமேகலை, டாக்டர் சு. .. | அரியலூர். |
| 185. மணிமேகலை, திருமதி வி. ஜி. | அருப்புக்கோட்டை |
| 186. மணிவாசகம், திரு. கே. பி. | உடுமலைப்பேட்டை. |
| 187. மதுசூதனன், திரு. இ. .. | டாக்டர் இராதா கிருஷ்ணன் நகர். |
| 188. மரியம்உல் ஆசியா, திருமதி | அரவக்குறிச்சி. |
| 189. மல்லிகா, செல்வி கோ. .. | புவனகிரி. |
| 190. மனோகரன், திரு. கே. ஏ. .. | ஓசூர். |
| 191. மாணிக்கம், திரு. சி. .. | ஈரோடு. |
| 192. மாலா, டாக்டர் ஜி. ஆர். .. | திருச்சிராப்பள்ளி-2. |
| 193. முத்துசாமி, திரு. சு. .. | பவானி. |
| 194. முத்தையா, திரு. இரா. | சேடப்பட்டி. |
| 195. முருகானந்தம், திரு. கே. ஆர். | சிவகங்கை. |
| 196. முருகையா பாண்டியன், திரு. ஆர். .. | அம்பாசமுத்திரம். |
| 197. முனிரத்தினம், திரு. ஏ. எம். | சோளிங்கர். |
| 198. முனிவெங்கடப்பன், திரு. தே. | கிருஷ்ணகிரி. |



| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். | தொகுதியின் பெயர். |
|---|---|
| (1) | (2) |
| 199. முனுசாமி, திரு. கா. பூ. .. | காவேரிப்பட்டினம். |
| 200. முஹமது ஆசிப், திரு. .. | திருவல்லிக்கேணி. |
| 201. மூர்த்தி, திரு. து. .. .. | சீர்காழி.(செ.வ.). |
| 202. மோசஸ், டாக்டர் எம். .. | நாகர்கோவில். |
| 203. ரகுபதி, திரு. செ. .. | திருமயம். |
| 204. ரங்கநாதன், திரு. ப. .. | புரசைவாக்கம். |
| 205. ரங்கராஜன், திரு. டி. எம். | மயிலாப்பூர். |
| 206. ரத்தினவேல், திரு. த. .. | திருவெறும்பூர். |
| 207. ரமணி நல்லதம்பி, திருமதி. | ராதாபுரம். |
| 208. ரமேஷ், திரு. வி. பி. ஆர். .. | தூத்துக்குடி. |
| 209. ரவிக்குமார், திரு. ஏ. .. | பொன்னேரி. (செ.வ.). |
| 210. ரவிச்சந்திரன், திரு. வி. .. | உப்பிலியாபுரம் (ம.ப.). |
| 211. ராமசுப்பு, திரு. எஸ். எஸ். .. | ஆலங்குளம். |
| 212. ராஜூ, திரு. எச். எம். .. | உதகமண்டலம். |
| 213. ராஜூ, திரு. கே. ஆர். .. | கூடலூர். |
| 214. ராஜூ, திரு. கே. பி. .. | பேரூர். |
| 215. ராஜேந்திரன், திரு. என். ஆர். | காட்டுமன்னார் கோவில் (செ.வ.). |
| 216. லட்சுமணன், திரு. வி. கே. | கோயம்புத்தூர் [கிழக்கு. |
| 217. லாரன்ஸ், திரு. கு. .. | பத்மநாபபுரம். |
| 218. லோகாம்பாள், திருமதி ஜெ. . | லால்குடி. |
| 219. வரதராஜன், திரு. செ. து. ... | செங்கல்பட்டு. |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|
| 220. விசுவநாதன், திரு. ஜி. .. | ஆற்காடு. |
| 221. வீரபாண்டியன், டாக்டர் பெ. | செங்கம் (செ.வ.). |
| 222. வெங்கடராமரெட்டி, திரு. மு. | தளி. |
| 223. வெங்கடேசன், திரு. பி. ஆர். எஸ். .. | கடலூர். |
| 224. வேடியப்பன், திரு. தா. .. | போளூர். |
| 225. வேணுகோபால், திரு. என். ஜி. | ராணிப்பேட்டை. |
| 226. வேலையா, திரு. டி. .. | திருநெல்வேலி. |
| 227. ஜனார்தனன், திரு. தே. .. | விழுப்புரம் |
| 228. ஜானகிராமன், திரு. கோ. .. | மேல்மலையனூர். |
| 229. ஜீனத் சர்புதீன், திருமதி .. | சேப்பாக்கம். |
| 230. ஜெயக்குமார், திரு. எஸ். .. | தியாகராய நகர். |
| 231. ஜெயகுமார், திரு. டி. .. | ராயபுரம். |
| 232. ஜெயராமன், திரு. எஸ். ஆர். | சேலம்-1. |
| 233. ஜெயலலிதா, டாக்டர் ஜெ. | பர்கூர். |
| 234. ஜெய்சன் ஜேக்கப், டாக்டர் | ஆரணி. |
| 235. ஸ்ரீதரன், டாக்டர் அ. .. | வால்பாறை (செ.வ.). |

### பேரவை நடவடிக்கைகளில் பங்கு கொள்ள உரிமை பெற்றவர்.

சுப்பிரமணியன், திரு. கே. .. தலைமை வழக்கறிஞர்.

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

**பங்குனி 14, பிரஜோற்பத்தி — திருவள்ளுவர் ஆண்டு 2023**
**1992, மார்ச் 27, வெள்ளிக்கிழமை**

மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. இரா. முத்தையா அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

''எய்தற் கரியது இயைந்தக்கால் அந்நிலையே
செய்தற் கரிய செயல்.

கிடைத்தற்கரிய காலம் வந்து வாய்க்குமானால், அந்த வாய்ப்பைப் பயன்படுத்திக்கொண்டு அப்போதே செய்தற்கரிய செயல்களைச் செய்ய வேண்டும்,,

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

### 1. சிறப்புக் குறிப்பு

**(அ) தனியார் மருத்துவக் கல்லூரி துவக்கப்படுவதை எதிர்த்து மருத்துவக் கல்லூரி மாணவர்கள் நடத்தி வரும் போராட்டம் குறித்து.**

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மருத்துவக் கல்லூரி மாணவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டிருப்பதைப் பற்றி ஒரு பிரச்சினையை அவையில் எழுப்புவதற்கு திரு. சி. ஞானசேகரன், திரு. கே. செல்வராஜ் ஆகியோர் அறிவிப்புக் கொடுத்து இருக்கின்றனர். இதே பொருள் பற்றி அவையில் எழுப்ப வேண்டுமென்று விதி 55-ன் கீழ் திரு. ஜி. பழனிசாமி அவர்களும் ஒரு அறிவிப்பைக் கொடுத்திருக்கிறார்கள். இந்த மூவரும் கொடுத்திருக்கிற இந்த அறிவிப்பு குறித்து அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வரக் கேட்டுக் கொள்கிறேன்' திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலத்தில் உள்ள திருமுருக கிருபானந்த வாரியார் தவத்திரு சுந்தரசுவாமி எஜுகேஷன் டிரஸ்ட் என்ற தனியார் கல்லூரி அரசு ஆணையை மீறி 30 மாணவர்களைச் சேர்த்து மருத்துவக் கல்லூரி வகுப்புக்களை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். இதை அனுமதிப்போமேயானால், இது பின்னால் ஒரு

தவறான உதாரணமாக அமைந்துவிடும். எதிர்காலத்தில் தனியார் கல்லூரிகள் எல்லாம் இஷ்டப்பட்டாற்போல் மாணவர்களைச் சேர்த்துக் கொண்டு கடைசியில் பரீட்சை எழுதுகிற நேரத்தில் எப்படியும் அரசிடம் நாம் அனுமதி பெற்றுவிடலாம் என்றிருக்கிற நிலையை இது கொண்டுவந்துவிடும், என்கிற காரணத்தினாலே, சேலத்தில் இருக்கக்கூடிய அரசு மருத்துவக் கல்லூரி மாணவர்களும், சென்னையிலே இருக்கக்கூடிய கீழ்ப்பாக்கம் ஸ்டான்லி மற்றும் மெட்ராஸ் மெடிக்கல் காலேஜ் மாணவர்களும் சேர்ந்து ஒரு போராட்டத்தை ஏற்படுத்தினார்கள். நேற்று சாலை மறியலிலே ஈடுபட்டு சென்னையிலே 250 மாணவர்கள், 75 மாணவியர்கள் கைது செய்யப்பட்டு, சிறையிலே அடைக்கப்பட்டிருக்கிறார்கள். அதேபோல் 250 மாணவர்கள் சேலத்தில் சிறையிலே அடைக்கப்பட்டிருக்கிறார்கள். இப்பொழுது பதட்டமான நிலை உருவாகியிருக்கிறது. இந்த நிலை தொடர்ந்து பல கல்லூரிகளுக்குச் சென்றுவிடுமேயானால் நிலைமை மிக மோசமாகிவிடும். ஆகவே, இதற்கு முற்றுப் புள்ளி வைத்து, இந்தப் பிரச்சினைக்கு முடிவு காண்பது அரசின் தலையாய கடமையாகும். ஆகவே, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் உடனே நடவடிக்கை எடுத்து சிறையில் அடைக்கப்பட்டிருக்கும் அந்த மாணவ மாணவியர்களை விடுதலை செய்து, அரசு ஆணையை மீறி எந்தக் கல்லூரியும் மாணவர்களை இனி வகுப்புகளில் சேர்த்து பாடம் நடத்தக்கூடாது என்ற வழிமுறையை ஏற்படுத்துமாறு, நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்:</u> மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு.சு.முத்துசாமி பேரவைத் தலைவர் அவர்களே, முதலிலேயே சொல்லி விடுகிறேன். மாணவர்களைச் சிறையிலே அடைத்திருக்கிறார்கள்என்று சொன்னால் ஏதோ அடைத்து வைத்திருப்பதைப்போல மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். அப்படிப்பட்ட நிலை இல்லை. தெளிவாகவே இங்கே சொல்லி விடுகிறேன். மாண்புமிகு உறுப்பினர் சொன்னதுபோல, திருமுருக கிருபானந்தவாரியார் தவத்திரு சுந்தரசுவாமி மெடிக்கல் எஜுகேஷன்டிரஸ்ட் சேலத்தில் மருத்துவக் கல்லூரி ஒன்றினைத் துவக்க வேண்டுமென்றுசொல்லி பல்கலைக் கழகத்திற்கு மனுச் செய்திருந்தது. அதே நேரத்தில் அவர்கள் நீதிமன்றத்திற்குச் சென்று தாங்கள் கல்லூரியை ஆரம்பிப்பதற்கு அனுமதி அளிப்பதற்கான உத்தரவைக் கொடுக்க வேண்டுமென்று சொல்லிக் கேட்டார்கள். நீதிமன்றத்திற்குச் சென்றபோது, உயர்நீதி மன்றத்திலே இருந்து உத்தரவை எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக் கழகத்திற்குக் கொடுத்தார்கள். இந்த டிரஸ்ட் கொடுத்திருக்கின்ற மனுவை 1-4-1992க்குள்ளாகப் பரிசீலனை செய்து, முடிவை அறிவிக்க



வேண்டுமென்று சொல்லியிருந்தார்கள். இவ்வாணையை
எதிர்த்து உயர்நீதி மன்ற பெஞ்சில் அரசாங்கம் இப்போது,
தடை பெற்றுள்ளது. மேலும், அரசாங்கத்தின் முன் அனுமதி
பெற்ற பின்புதான் பல்கலைக் கழகம் அனுமதிக்க வேண்டுமென்ற
சட்ட விதிகளை வலியுறுத்தி, உயர்நீதிமன்ற பெஞ்சுக்கு 'அப்பீல்'
செய்யப்பட்டுள்ளது. இதற்கிடையில், இந்த டிரஸ்ட்
கல்லூரியில் சேருவதற்கு மனுக்களை விநியோகம் செய்திருப்ப
தாகவும், சில மாணவர்களை சேர்த்து இருப்பதாகவும்,
வகுப்புகளை நடத்துவதற்கு முயற்சிகளை மேற்கொண்டிருப்ப
தாகவும் அரசாங்கத்திற்குத் தகவல் கிடைத்தது. உடனே
அரசாங்கம் கல்லூரியிலே மாணவர்களைச் சேர்க்கக் கூடாது,
வகுப்புகளை நடத்தக் கூடாது என்று தடை உத்தரவைப்
பிறப்பிப்பததற்காக இப்போது நீதி மன்றத்திற்கு செல்ல ஏற்பாட்
டைச் செய்து கொண்டிருக்கிறது. அதேபோன்று நீதிமன்றத்
திலே வழக்கு முடிவு பெறாமல் நிலுவையில் இருக்கின்ற
சூழ்நிலையில் பல்கலைக் கழகத்தினுடைய அனுமதியைப் பெறா
மல் மாணவர்களைச் சேர்ப்பது தவறு. சட்டத்திற்குப் புறம்
பானது மட்டுமல்ல, நீதிமன்றத்திலே வழக்கு இருக்கும்போது
சேர்ப்பது நீதிமன்றத்தை அவமதிப்பதாகும் என்று சொல்லி
நீதிமன்ற அவமதிப்பு வழக்கு ஒன்றை எம்.ஜி.ஆர். மருத்துவப்
பல்கலைக் கழகம் இந்த டிரஸ்டுக்கு எதிராகத் தொடுக்க
ஏற்பாட்டைச் செய்து கொண்டிருக்கிறது.

முற்பகல் 9-35

இதற்கிடையில் இந்தக் கல்லூரி மனுவைப் பெற்ற ஒரு
மாணவர் சேலம் மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளருக்குக்
கொடுத்த புகாரின் பேரில் ஏமாற்று வழக்கு ஒன்று இந்த
டிரஸ்டின்மீது 25-3-1992 அன்று பதிவு செய்யப்பட்டு அங்கே
அவர்கள் விசாரிப்பதற்காகப் போனபோது அது சம்பந்தமான
நபர் அங்கே கிடைக்காத காரணத்தினாலே அந்த வழக்குஇப்போது
அவர்கள் கையிலே இருக்கிறது.

அதுமட்டுமல்லாமல் அரசு மருத்துவக் கல்லூரி மாணவர்கள் இந்த டிரஸ்ட் சட்டவிரோதமான காரியங்களிலே ஈடுபட்டிருக்கிறது என்று சொல்லி அந்தக் கல்லூரிக்கு முன்னாலே போராட்டம் நடத்திய காரணத்தினால் மாவட்ட ஆட்சித் தலைவர் சட்டம் ஒழுங்கை நிலை நிறுத்த வேண்டும் என்ற நோக்கத்தோடு, அந்தக் கல்லூரிக்கு சீல் வைத்துள்ளார் என்பதையும் இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்கிறேன். நேற்று 26--3-1992 அன்று சீல் வைக்கப்பட்டிருக்கிறது.

இந்த அரசைப் பொறுத்தவரையில் தமிழகத்தினுடைய முதலமைச்சர் புரட்சித் தலைவி அவர்கள் திட்டவட்டமாக சட்டமன்றத்திலேயே அறிவித்திருக்கிறார்கள், அதேபோன்று

மானியக் கோரிக்கையிலேயும் அறிவித்திருக்கிறோம். புதிதாக தனியார் எந்தக் கல்லூரியும் துவங்குவதற்கு நாங்கள் அனு மதிக்கப் போவதில்லை என்று சொல்லி ஏற்கனவே கொள்கை முடிவாக நாங்கள் இங்கே அறிவித்திருக்கிறோம். எனவே அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் இதிலே ஒரு தெளி வான முடிவு அறிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் இந்தக் குறிப்பிட்ட கல்லூரியைப் பொறுத்தவரையில் இந்தப் பிரச்சினை நீதிமன்றத்திலே இருக்கின்ற காரணத்தினால், இதிலே அரசாங்கம் நடவடிக்கை எடுக்கிறபோது மிக முன்னெச்சரிக்கை யோடு எடுக்க வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. எனவே நீதி மன்றத்திலே நமக்குக் கிடைக்க இருக்கின்ற தீர்ப்புக்கு எந்தப் பங்கமும் வந்துவிடக்கூடாது என்ற வகையிலே மிக நிதானமான நடவடிக்கையை இந்த அரசாங்கம் எடுத்துக் கொண்டிருக்கிறது. ஆனால் உறுதியான சட்டரீதியான நடவடிக்கையை நாங்கள் எடுத்துக் கொண்டிருக்கிறோம் என்பதை மாண்புமிகு உறுப் பினர்கள் நிச்சயமாக ஏற்றுக் கொள்வார்கள் என்று நான் கருது கிறேன். எனவே தொடர்ந்து நீதிமன்றத்திலேயும் சட்டத்திற் குட்பட்டு நாம் என்ன நடவடிக்கை எடுக்க வேண்டுமோ அந்த நடவடிக்கையை எடுத்துக் கொண்டிருக்கிறோம். எனவே இந்த மன்றத்தினுடைய வாயிலாக நாம் மாணவர்களைக் கேட்டுக்கொள்வது, உறுதியான நடவடிக்கையை எடுத்திருப்ப தோடு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொள்கை ரீதியாக அறிவித்திருக்கிற காரணத்தினாலேயும் போராட்டத்தைக் கைவிட்டு அவர்கள் கல்லூரிக்கு செல்கின்ற நிலையை ஏற்படுத்த வேண்டும் என்று இந்த மாமன்றத்தின் வாயிலாக நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

(ஆ) நாகப்பட்டினம் பகுதியில் காணாமல்போன மீனவர்கள் குறித்து பத்திரிகையில் வந்துள்ள செய்தி குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்.

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 4,5 நாட்களுக்கு முன்னால் நாகப்பட்டினம் சட்டமன்ற உறுப்பினர் கோடிமாரி அவர்கள் நாகப்பட்டினம் கடற்கரையில் இருந்து மீன் பிடிக்கச் சென்ற சில மீனவர்களைக் காணவில்லை என்ற நிகழ்வினை அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவந்து, முதலமைச்சர் அவர்களின் பதிலைப் பெற்றார் கள். நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அது சம்பந்தமாக நடவடிக்கை எடுப்பதாக இந்த மன்றத்திலே வாக்களித்திருக்கிறார்கள். இதற்கிடையில் கடற்கரையிலே ஏழு பிணங்கள் ஒதுங்கி இருப்பதாக ஒரு பத்திரிகைச் செய்தி சொல்கிறது. அதிலே மாண்புமிகு முதல்வர் அவர்களும் மத்திய அரசிடம் தொடர்பு கொண்டு அந்த மீனவர்களுடைய



துயர் துடைப்பதற்கு வேண்டிய நடவடிக்கையை எடுத்துக் கொண்டிருக்கின்றார்கள் என்பதை எங்களைப் போன்றவர்கள் அறிவார்கள். ஆனால் இன்றைக்குப் பத்திரிகையிலே வந்திருக் கின்ற ஒரு செய்தி தமிழ்நாட்டு மக்களுடைய ஒட்டுமொத்தமான கவனத்தை ஈர்த்திருக்கிறது.

இலங்கைக் கடற்படையினரைப் போல வேடமிட்டு புலிகள் இந்த மீனவர்களைக் கொல்லுகின்றார்கள் என்று சில பேர்கள் சொல்லவில்லை, போவோர் வருவோர் சொல்லவில்லை, யாரோ சொல்லவில்லை, இலங்கைக் கடற்படைத் தளபதி அட்மிரல் பெர்னான்டோ அவர்கள் கூறியிருக்கிறார்கள். கடந்த ஆட்சி இங்கே நடந்த போது, எங்களது மதிப்பிற்குரிய மாண்புமிகு திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் அவர்கள் விடுதலைப் புலிகளே மீனவர்களைக் கடத்திக்கொண்டு செல்லுகிறார்கள், அதுவும் ராணுவ உடை யிலே என்று சொல்லி அந்த அரசினுடைய கவனத்தை ஈர்த் தோம். அப்போது இந்த அவையிலே தந்த பதில், அவர்களே கொண்டுபோய் வி.சி.ஆர். வீடியோ போட்டுக் காண்பித்தார்கள் என்றெல்லாம் சொல்லி இந்த அவையிலே தவறான தகவலைத் தந்திருக்கிறார்கள். நான் இதை எதற்குச் சொல்லுகிறேன் என்று சொன்னால் தமிழகக்கடற்கரையிலே வாழ்கின்ற மக்களுக்கு மத்திய மாநில அரசு மீது ஒரு வெறுப்பு வரவேண்டுமென்ற நோக்கத்தோடு ஒரு பெரிய சதியே இதன் பின்னாலே இருப்ப தாகத்தான் நாங்கள் உணருகிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதிலே உங்களுக்கு நான் ஒன்றைச் சொல்லி விடுகிறேன். நான் அரசாங்கத்தின் கவனத் திற்குக் கொண்டுவர வேண்டும் என்று, இப்போது தான் நீங்கள் என்னுடைய கவனத்திற்கு கொண்டுவந்து கொடுத்திருக்கிறீர்கள். நானும் அரசாங்கத்தின் கவனத்திற்கு கொண்டு சென்றிருக்கிறேன். இதிலே மத்திய அரசுத் துறைகளின் மூலமும் சில விவரங்கள் பெறவேண்டி இருக்கின்ற காரணத்தினால் இப்போது உடனடியாக நடவடிக்கை எடுக்க இயலவில்லை என்று தெரிவித்திருக் கின்றார்கள். எனவே, தாங்கள் தெரிவித்திருக்கிற இந்தக் கருத்துக்களை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு சென்று, அரசாங்கமும் அவைக்குத் தக்க பதில் கொடுப்பதற்குரிய நடவடிக்கைகள் எடுத்து வருகிறோம் என்பதைத் தெரிவித் திருக்கிறார்கள். எனவே, அந்த பதில் வந்த உடன்........

முற்பகல் 9-40

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்: இது குறித்து ஒரு அறிக்கை தாக்கல் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்:</u> தாக்கல் செய்வதாகத் தெரிவித்திருக்கிறார்கள். அந்த மீனவர்கள் தாக்கப்பட்ட பிரச்சினை பற்றி தாங்கள் கொடுத்திருப்பது, திரு. ஜி. பழனி சாமி கொடுத்திருப்பது, இதுபற்றி ஒரு Spɩcial Mentlon ஆக எழுப்ப வேண்டுமென்று நாகப்பட்டினம் சட்டமன்ற உறுப்பினர் திரு. ஆர். கோடிமாரி கொடுத்திருப்பது, திரு. ஆர். சிங்காரம் கொடுத்திருப்பது, திரு.சி. ஞானசேகரன் இன்னும் மற்ற உறுப்பினர்கள் கொடுத்திருக்கிற தகவல்கள் எல்லாம் அரசாங்கத்திற்கு அனுப்பப்பட்டிருக்கின்றன.

இதற்கு மத்திய அரசுத் துறையின் மூலமும் பதில் பெற்றுத் தர வேண்டியிருக்கிற காரணத்தால் அதைப் பெற்றுத் தருவதாக அரசாங்கத்திலிருந்து தெரிவிக்கப்பட்டிருக்கிறது. விரைவில் அதற்குரிய அறிக்கை அங்கே அளிக்கப்படும் என்று உறுதியளித் திருக்கிறார்கள். எனவே, இதற்கு மேற்கொண்டு வேண்டாம் என்று கருதுகிறேன்.

<u>திரு. ஜி. பழனிசாமி:</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . . .

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> நான் தான் சொல்லிவிட் டேனே. மாநில அரசு மட்டுமே இதில் விவரங்களைச் சேகரித் துக் கொடுக் கக்கூடிய வாய்ப்பு இல்லாத ஒரு பிரச்சினையாக இருக்கிற காரணத்தினாலே உடனடியாக எடுத்துக் கொள்ள முடியவில்லை என்று சொன்னேன்.

<u>திரு. ஜி. பழனிசாமி :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுகுறித்து அநேகமாக அந்தப் பகுதியிலே இருக்கக் கூடிய , நாகப்பட்டினம், முத்துப்பேட்டை, திருத்துறைப்பூண்டி யில் இருக்கக்கூடிய கடலோரப் பகுதியிலே இருக்கிற மற்றும் வேதாரண்யம் பகுதியிலே இருக்கிற மீனவர்கள் நேற்றே மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடத்திலே மகஜர் கொடுத் திருக்கிறார்கள். இன்றைக்கு அந்தப் பகுதியிலே இருக்கக்கூடிய மக்கள்—அநேகமாக காயிதே மில்லத் மாவட்டம், நாகப்பட்டினம் பகுதியிலே இருக்கக்கூடிய அத்தனைபேரும்—கடையடைப்பு நடத்தி, பந்த் நடத்தி, இதுகுறித்து நடவடிக்கை எடுக்க வேண்டு மென்று சொல்லியிருக்கிறார்கள்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> அதனால்தான் சொல்கி றேன், பிரச்சினைக்கு உள்ளே போக வேண்டாம். நீங்கள் கொடுத்திருக்கிறீர்கள். அதை அரசாங்கத்தின் கவனத்திற்கு நான் எடுத்துச் சென்றிருக்கிறேன். அவர்களும் முழுப் பதிலும் பெற்றுத்தானே கொடுக்கமுடியும். இது மாநில அரசு மட்டுமே ஒரு முடிவெடுத்து சொல்லக்கூடிய பிரச்சினை அல்ல. ஆகவேதான், நாங்கள் அதற்குரிய பதிலைத் தருகிறோம்



என்று சொல்லியிருக்கிறார்கள். முழுமையாகப் பெற்று கொடுத் தால்தான் சரியாக இருக்கும். பத்திரிகையிலே வந்திருக்கிறது அல்லது மீனவர்கள் போராடுகிறார்கள் என்று மட்டும் சொல் வது பொருத்தமாக இருக்காது. என்ன நடந்தது, அதற்கு என்ன மேல் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. மத்திய அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதை எல்லாம் சேர்த்து மொத்தமாக பதில் சொன்னால்தான் அது உரிய பதிலாக அமையும். அதற்காக உரிய கால அவகாசம் அரசாங்கத்திற்குத் தேவைதான் என்கிற காரணத்தாலே இன்றைக்கு எடுக்கவில்லை.

## <u>2. கவன ஈர்ப்பு</u>

(அ) <u>தலைஞாயிறு நடிப்பிசைப் புலவர் சர்க்கரை ஆலைக் கழிவு நீரால் சீர்காழிப் பகுதி குடிநீர், விளைநிலம் பாதிக்கப் படுவது குறித்து.</u>

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்:</u> அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பு. திரு. து. மூர்த்தி அவர்கள், அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

<u>திரு. து. மூர்த்தி;</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர் களே, "மயிலாடுதுறை வட்டம், தலைஞாயிறு நடிப்பிசைப் புலவர் கூட்டுறவு சர்க்கரை ஆலையிலிருந்து வெளிவரும் கழிவு நீரால் சீர்காழி பகுதியில் குடிநீர் மற்றும் விளைநிலம் பாதிப்பு குறித்து" மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

<u>மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டிருக்கிறது.

### <u>அறிக்கை</u>

திருவாளர்கள் நடிப்பிசைப் புலவர் கே. ஆர். ராமசாமி கூட்டுறவு சர்க்கரை ஆலை லிமிடெட் என்ற நிறுவனம் நாகை காயிதே மில்லத் மாவட்டத்தில் மயிலாடுதுறை வட்டத்தில், தலைஞாயிறு கிராமத்தில் 25-1-1967 முதல் செயல்பட்டு வருகின்றது.

இந்த சர்க்கரை ஆலையில் கீழ்க்கண்டவை உற்பத்தி செய்யப் படுகின்றன.

1. சர்க்கரை .. 4,000 டன் மாதத்திற்கு
2. சர்க்கரை கசடு .. 1,500 டன் மாதத்திற்கு
3. பில்டர் கேக் .. 800 டன் மாதத்திற்கு
4. கரும்பு சக்கை .. 12,000 டன் மாதத்திற்கு

இந்த சர்க்கரை ஆலையானது கீழ்க்கண்ட மூலப் பொருட்களை பயன்படுத்துகின்றது.

1. கரும்பு .. நாளொன்றுக்கு 1,900 டன்
2. சுட்ட சுண்ணாம்பு நாளொன்றுக்கு 2.53 டன்
3. சல்பர் .. நாளொன்றிற்கு 600-700 கிலோ

இந்த தொழிற்சாலை, குடிநீர் மற்றும் தொழிலாளர்களின் அன்றாட உபயோகத்திற்காக 90 கிலோ லிட்டர் தண்ணீரையும், குளிர்விப்பதற்காக 50 கிலோ லிட்டர் தண்ணீரையும், செய் முறைக்காக 1,450 கிலோ லிட்டர் தண்ணீரையும் பயன்படுத்தி வருகின்றது.

சர்க்கரை ஆலையிலிருந்து 60 கிலோ லிட்டர் வடிகால் கழிவு நீரும், 700 கிலோ லிட்டர் செய்முறை கழிவு நீரும் வெளியேற்றப் படுகின்றன.

சர்க்கரை உற்பத்தி செய்வதற்கான செயல்முறை கீழ் வருமாறு:—

கரும்பானது பிழியப்பட்டு சாறு எடுக்கப்படுகின்றது கரும்பு சாரானது வடிகட்டப்பட்டு தெளியவைக்கப்படுகின்றது. தெளிய வைக்கப்பட்ட சாரானது சூடேற்றப்பட்டு சுண்ணாம்பு மற்றும் சல்பர்-டை-ஆக்சைடு வாயுவினால் சுத்தம் செய்யப் படுகின்றது. சுத்தம் செய்யப்பட்ட சாரானது செறியூட்டப்பட்டு பாகு தயாரிக்கப்படுகின்றது. சர்க்கரைப் பாகு சூடேற்றப் பட்டு சர்க்கரை துகள்களாக தயாரிக்கப்படுகின்றது. பின் விற்பனைக்கு அனுப்பப்படுகின்றது.





செயல்முறையிலிருந்து கழிவு நீரானது கரும்பு அரைப்பு பகுதி, கொதிகலன் பகுதி, தரையினைக் கழுவும் தண்ணீர் மற்றும் ஸ்ப்ரே பாண்ட் உபரி நீர் ஆகிய பகுதிகளிலிருந்து வெளி யேற்றப்படுகிறது.

செயல்முறை கழிவு நீரினை சுத்திகரிப்பதற்கு கழிவு நீர்ச் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கப்பட்டுள்ளது. சுத்திகரிப்பு நிலையத்தில் கீழ்க்கண்ட அமைப்புகள் உள்ளன:—

1. எண்ணை மற்றும் கிரீஸ் வடிப்பான்
2. சுண்ணாம்பு கலக்கும் தொட்டி
3. சேகரிக்கும் தொட்டி
4. உயிரக்மில்லா கழிவு நீர் சுத்திகரிப்புத் தொட்டி
5. காற்றேற்றும் தொட்டி
6. தெளிய வைக்கும் தொட்டி
7. சேறு உலர்த்தும் படுகை-4

சுத்திகரிப்பு செய்யப்பட்ட செயல்முறை கழிவு நீரானது தொழிற்சாலைக்கு அருகில் செல்கின்ற பொதுப்பணித் துறை பாசன வாய்க்காலில் வெளி விடப்படுகிறது.

சுத்திகரிப்பு செய்யப்பட்ட செயல்முறைக் கழிவு நீரினை பரிசோதித்ததில் அது தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் நிர்ணயித்துள்ள வரைமுறையினை விட அதிகமாக இருப்பது கண்டறியப்பட்டது.

20-2-1992 அன்று சர்க்கரை ஆலை ஆய்வு செய்யப் பட்ட பொழுது சுத்திகரிப்பு நிலையம் இயக்கப்படவில்லை எனவும், செயல்முறை கழிவு நீர் சுத்திகரிப்பு செய்யப் படாமல் அருகிலிருந்த நிலத்தில் வெளிவிடப்பட்டது தெரிய வந்தது. ஆகவே சுத்திகரிப்பு நிலையத்தினை தொடர்ச்சியாக இயக்க வேண்டும் என அறிவுறுத்தப்பட்டது.

மேலும் சர்க்கரை ஆலையின் நிர்வாகியை 6-3-1992 அன்று தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரிய அலுவலகத்திற்கு அழைத்து சுத்திகரிப்பு நிலையத்தில் உள்ள குறைபாட்டினை எடுத்துக் காட்டி, சுத்திகரிப்பு நிலையம் தொடர்ந்து இயங்க எடுக்கப் பட்டுள்ள நடவடிக்கை குறித்தும், செயல்முறை கழிவுநீர் பாசன வாய்க்காலுக்கு செல்லாமல் இருக்க எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்தும் கொதிகலன் புகைபோக்கியிலிருந்து வெளிவரும் துகளினைத் தடுக்கவல்ல தூசு திரட்டியினை சரி செய்ய எடுக்கப் பட்ட நடவடிக்கை குறித்தும் விவாதிக்கப்பட்டது.

விவாதத்தின்பொழுது சர்க்கரை ஆலையின் நிர்வாகி செய்முறை கழிவு நீர் சுத்தம் செய்யப்படாமல் வெளியேற்றம் செய்யப்படும் பாதையினை உடன் அடைப்பதாகவும் செயல்முறை கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் மற்றும் காற்று சுத்திகரிப்பு சாதனத்தில் உள்ள குறைபாடுகளை நிவர்த்தி செய்து தொடர்ச்சியாக இயக்குவதாகவும் தெரிவித்துள்ளார். தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் இத்தொழிற்சாலையைத் தொடர்ந்து முனைப்பாகக் கண்காணித்து வருகிறது.

திரு. து. மூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே நடிப்பிசைப் புலவர் கே. ஆர். இராமசாமி கூட்டுறவு சர்க்கரை ஆலையின் மூலமாக வெளிவருகின்ற கழிவு நீரை முறையாக அவர்கள் வெளியேற்றாமல் அந்த நீர் சீர்காழி பகுதியிலே இருக்கின்ற திருநகரி வாய்க்கால் என்ற இடத்திலும், வைத்தீஸ்வரன் கோயில் ஊராட்சிப் பகுதியில் இருக்கின்ற குளங்கள் நீர்நிலைகள் போன்ற அந்தப் பகுதியிலே இருக்கின்ற அத்தனை வாய்க்கால்களிலும் இந்த கழிவுநீர் வந்து சேர்ந்ததால் அந்தப் பகுதியிலே இருக்கின்ற மக்கள் அந்த நீரை பயன்படுத்த முடியாமல் மிகவும் சிரமமான ஒரு சூழ்நிலை இருந்து வருகிறது. அதோடு மட்டுமல்லாமல் அந்தப் பகுதியிலே இருக்கின்ற விளை நிலங்கள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கின்றன. எனவே, இதைத் தொடர்ந்து கவனத்தில் எடுத்துக் கொண்டு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது சம்பந்தமாக உரிய நடவடிக்கைகளை மாசுக் கட்டுப்பாடு வாரியம் எடுத்திருக்கிறது. சமீபத்திலே அந்த ஆலையின் நிர்வாக இயக்குநரை அழைத்து உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். இப்படிப்பட்ட கழிவுநீரை சுத்திகரிப்பு செய்யாமல் வெளியிலே விடக் கூடாது. ஒருவேளை சுத்திகரிப்பு நிலையம் முறையாக செயல்படவில்லையென்று சொன்னால், அந்தத் தண்ணீர் வெளியிலே வராமல் பார்த்துக் கொள்ள வேண்டும் என்றெல்லாம் மாசு கட்டுப்பாடு வாரியம் நேராகவே அவர்களை அழைத்துப் பேசி அறிவுரை வழங்கியிருக்கிறது. எனவே, இனிமேல் அநேகமாக இதுபோன்ற தவறுகள் நடக்காமல் அந்த ஆலை நடந்துகொள்ளும் என்ற நம்பிக்கை இருக்கிறது.

முற்பகல் 9-45

திரு. து. மூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே இன்றைக்கு அந்தக் கழிவு நீரால் சுமார் 10,000க்கும் மேற்பட்ட ஏக்கர் விளைநிலங்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு அமைச்சரவர்கள் அதிகாரிகளை அழைத்து நேரடியாகப் பேசி இருக்கிறேன் என்று சொன்னார்கள். அதற்கு என்னுடைய



மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். தொடர்ந்து அதிகாரிகளுடைய அலட்சியப் போக்கால் அந்தப் பகுதியில் உள்ள ஏழை விவசாயிகள் வெகுவாகப் பாதிக்கப்பட்டிருப்பதோடு, மிக முக்கியமான பெருந்தோட்டம் ஏரியிலும், திருவாளி ஏரிப் பகுதியிலும் இருக்கிற ஒரு லட்சம் மீன்கள் நாசமடைந்திருக்கின்றன. இன்றைக்கு அந்த நஷ்டத்தோடு, பொது மக்களின் விளை நிலங்களும் பாதிக்கப்பட்டிருப்பதால், அங்கே பயிர், தானிய வகைகள் வெகுவாகப் பாதிக்கப்பட்டிருக்கின்றன. தொடர்ந்து இதுபோன்ற நிலைமை ஏற்படாத வண்ணம், வடிகால் வாய்க்காலில் அந்தக் கழிவு நீரை விடுவதற்கு அரசு ஒரு நிரந்தர தீர்வு காண்பதற்கு ஒரு முறையை மாண்புமிகு அமைச்சரவர்கள் கண்டு, அந்தப் பகுதியில் உள்ள ஏழை விவசாயிகளுடைய துயரை நீக்க ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே சொன்னேன். மாசுக் கட்டுப்பாடு வாரியத்திலே சம்பந்தப்பட்ட அதிகாரிகளை அழைத்து உரிய அறிவுரை வழங்கப்பட்டிருக்கிறது. அங்கே சுத்திகரிப்பு நிலையம் ஏற்கனவே இருக்கிறது. அந்த சுத்திகரிப்பு நிலையம் முறையாகப் பயன்படுத்தப்பட்டால் இந்தக் கழிவு நீர் வெளியே வருவதால் ஏற்படும் ஆபத்து இருக்காது. சுத்திகரிப்பு நிலையம் பயன்படாத நிலையிலே, அதை உபயோகிக்காமல், கழிவு நீரை சுத்திகரிப்பு செய்யாமல் வெளியேற்றுகிற போதுதான் இந்தப் பிரச்சினை உருவாகிறது. எனவே சம்பந்தப்பட்ட ஆலையினுடைய நிர்வாகிக்கு சுத்திகரிப்பு நிலையம் எந்தக் காரணத்தைக் கொண்டும் இயங்காமல் இருக்கக் கூடாது. கண்டிப்பாக இயக்குகிற நிலையைக் கண்காணித்துக் கொண்டு இருக்க வேண்டும்; ஒருவேளை அப்படி இயங்காத நிலை ஏற்படுமானால் அந்தத் தண்ணீர் வெளியே போகாமல் தடுக்கப்பட வேண்டும் அல்லது அது இயங்குகிற வரையில் அந்த ஆலை நிறுத்தி வைக்கப்பட வேண்டும். என்ற அறிவுரை எல்லாம் அவர்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது. எனவே, சுத்திகரிப்பு நிலையம் ஒழுங்காக இயங்கிக் கொண்டிருக்கிற வரையில், தண்ணீர் வெளியில் வருவதில் பிரச்சினை இருக்காது. அதை இனிமேல் மாசுக் கட்டுப்பாடு வாரியம் மிகக் கவனமாகக் கண்காணிக்கும் என்பதை மட்டும் தெரிவித்துக் கொள்கிறேன்.

## (ஆ) நீலகிரி மாவட்டத்தில் லாரிகள் ஓடாதது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்த கவன ஈர்ப்பு திரு எச். எம், ராஜு அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம்

வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. எச். எம். ராஜு.

*திரு. எச். எம். ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நீலகிரி மாவட்டத்தில் 16-3-1992 முதல் லாரிகள் ஓடாதது குறித்து" மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்தை ஈர்க்கிறேன்.

*மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது குறித்து விவர அறிக்கை பேரவை முன் வைக்கப்பட்டிருக்கிறது.

## அறிக்கை

நீலகிரி மாவட்டத்தில் கடந்த 16-3-1992 திங்கட்கிழமை முதல் லாரிகள் ஓடுவதில்லையாதலால் பொதுமக்களுக்கும் விவசாயிகளுக்கும் ஏற்பட்டிருக்கும் பாதிப்பு குறித்து அரசின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. நீலகிரி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் வார நாட்களில் சரக்கு வாகனங்கள் (லாரிகள்) காலை 8-30 முதல் 11-00 மணி வரையிலும் மாலை 3-30 முதல் 7-00 மணி வரையிலும் அங்காடி பகுதிகளில் நுழையக் கூடாது என்று கடிதம் எண். அ 1/11615/92, நாள் 6-2-1992ல் ஆணை பிறப்பித்துள்ளதோடு, காந்தல் என்ற இடத்தில் லாரிகளை நிறுத்துவதற்கு இடம் ஒதுக்கிக் கொடுத்திருப்பதாகவும் தெரிவித்துள்ளார். ஆனால், ஊட்டி மற்றும் குன்னூர் பகுதி லாரி உரிமையாளர்கள் எல்லா இடங்களிலும், எல்லா நேரங்களிலும் லாரிகளை செலுத்துவதற்கு அனுமதி வேண்டும் எனக் கோரி கடந்த 16-3-1992 முதல் தொடர்ந்து வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டிருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

2. வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்களை பேச்சு வார்த்தைக்கு அழைத்து அதன் மூலம் தீர்வு காண்பதற்கு உதக மண்டலம் வட்டாரப் போக்குவரத்து அலுவலர் நடவடிக்கை எடுத்துள்ளார். ஆயினும், வேலை நிறுத்தப் போராட்டம் தொடர்ந்து நடப்பதாகவும் இதனைத் தவிர்க்க மேலும் பேச்சு வார்த்தை நடைபெற்றுக் கொண்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. விரைவில் பிரச்சினை தீர்க்கப்படும்.





திரு. எச். எம். ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சரவர்கள் அவைக்குக் கொடுத்த அறிக்கைக்கு நன்றி கூறிக்கொள்கிறேன். நீலகிரி மாவட்டம் என்பது நமது மாநிலத்திலேயே சிறிய மாவட்டம். இன்றைக்கு 12-வது நாளாக அங்கே லாரிகள் ஓடவில்லை. மாவட்ட நிர்வாகம் லாரி உரிமையாளர்களுக்கு அறிவித்த அறிவிப்பில் ஒரு குறிப்பிட்ட நேரத்தில், அதாவது காலை 8-30 மணியிலிருந்து 11 மணி வரையிலும், மாலை 3-30 மணியிலிருந்து 7 மணி வரையிலும் லாரிகள் மார்க்கெட் அருகிலும், மார்க்கெட்டுக்கும் வரக்கூடாது என்ற கடுமையான நிபந்தனையை விதித்திருக்கிறார்கள். நூற்றுக்கணக்கான லாரிகள் பொது மக்களின் அன்றாட வாழ்க்கைக்குத் தேவையான அத்தியாவசியப் பொருள்களை, மேட்டுப்பாளையம், கோவை, சேலம், திருச்சி, ஈரோடு போன்ற இடங்களிலிருந்து உதகை மார்க்கெட்டுக்குக் கொண்டு வருகின்றன. சில லாரிகள் வழியிலேயே பழுதடைந்து நின்று விடுகின்றன. அந்த லாரிகள் குறித்த நேரத்தில் அங்கே வந்து சேர முடியாத சூழ்நிலை இருக்கிறது. மேற்படி நிபந்தனையால் பொதுமக்களும் விவசாயிகளும், வியாபாரிகளும், பளு தூக்கும் ஏழைக் கூலித் தொழிலாளர்களும் மிகுந்ததொரு பெரிய பாதிப்புக்கு உட்பட்டிருக்கிறார்கள். மிக முக்கியமானதொரு பாதிப்பை நிவர்த்தி செய்யும் வகையில் மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சரவர்கள் மேற்கூறிய நிபந்தனையை ரத்து செய்து, இதற்கு முன்பு இருந்ததுபோல லாரிகளை மார்க்கெட்டிலும், மார்க்கெட் அருகிலும் நிறுத்தி வைக்க உடனே ஒரு அனுமதியை அளிப்பாரா என்று மாவட்ட மக்கள் சார்பாக அறிய விரும்புகிறேன்.

*மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நீலகிரி மாவட்டம் சிறிய மாவட்டம் என்று சொன்னார்கள். அழகின் சிகரமாக விளங்கிக் கொண்டிருக்கிற சிறந்த மாவட்டமாக அந்த மாவட்டம் இருந்து கொண்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர்கள் குறிப்பிடுகிற நேரத்தில் தினசரி அங்காடியில் இடம் நெருக்கடியாக இருக்கிற காரணத்தால் காலை 8.30 மணி முதல் 11 மணி வரையிலும், மாலை 3.30 மணி முதல் 7 மணி வரையிலும் வாகனங்களை நிறுத்துவதன் வாயிலாக நெரிசல் ஏற்படுகிறது என்ற கருத்தின் அடிப்படையிலும் மக்கள் நடந்து செல்லக்கூடத் தடங்கல் ஏற்படுகிறது என்பதைக் கருத்தில் கொண்டும் தான் மாவட்ட ஆட்சித் தலைவரும், அங்கே இருக்கிற வட்டாரப் போக்குவரத்து அதிகாரியும் இதைச் செய்திருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் போன்றவர்கள், அதைப்போலவே நாடாளுமன்ற உறுப்பினர்கள்,

பொது சேவை செய்கின்ற நிறுவனங்களைச் சேர்ந்தவர்கள் அத்தனை பேரும் தங்களுடைய கருத்துக்களை மாவட்ட ஆட்சித் தலைவரிடம் எடுத்துச் சொன்னவுடன் இதை மாற்ற வேண்டுமா அல்லது மாற்ற வேண்டாமா என்பது பின்னர் முடிவு செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 9–50

திரு. எச். எம். ராஜு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நல்லதொரு கருத்தைச் சொன்னார்கள், இதை எதற்காகச் சொல்கிறேன் என்றால், அங்கே வண்டிகளின் எண்ணிக்கை அதிகமாகிவிட்டது. ஆகவே லாரிகளுக்கு நிரந்தரமாக ஒரு ஸ்டாண்டை உதகை நகரத்தில் அமைத்துக் கொடுத்தால் இந்தப் பிரச்சினை தீர்ந்துவிடும். அங்கே நாங்கள் 3 பேர்தான் சட்டமன்ற உறுப்பினர்களாக இருக்கிறோம். மற்ற மாவட்டங்கள் போல் 10—15 பேர் இல்லை. நாங்கள் மூன்று பேரும், ஒரு பாராளுமன்ற உறுப்பினரும் சேர்ந்து இதற்கு ஏற்பாடு செய்யச் சொன்னால் நாங்களே பேசி முடித்துக் கொள்ளலாம், மாவட்ட நிர்வாகம் மூன்று எம்.எல்.ஏ.க்களையும் பாராளுமன்ற உறுப்பினரையும் கூப்பிட்டு இந்தப்பிரச்சினையை எவ்வாறு தீர்ப்பது என்று கேட்டால் எங்களால் இப்பிரச்னையைத் தீர்க்க முடியும் என்று சொல்வதுடன் மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களும் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் யோசனையின் பேரில் ஒரு நல்ல இடத்தை எங்களுக்குக் கொடுத்து நிரந்தரமான லாரி ஸ்டாண்ட் ஒன்றை உதகை மக்களுக்குக் கொடுத்து, அவர்களுடைய வாழ்க்கை நல்ல விதத்தில் அமைய ஏற்பாடு செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய தமிழகத்தின் ஒப்பற்ற தலைவியாக இருக்கிற தமிழகத்தின் முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சியில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப் போல பாராளுமன்ற உறுப்பினர், சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் பொது சேவை நிறுவனங்களைச் சேர்ந்தவர்கள் எல்லாம் ஒரு நல்ல இடத்தைக் கொடுத்தால் அதற்கு உடனடியாக நடவடிக்கை மேற்கொள்வதற்கு மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சரும் நானும் தயாராக இருக்கிறோம் என்பதைப் பணிவன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன். (குறுக்கீடு)



மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் எம். கருப்புசாமி இது கவன ஈர்ப்பு. கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்த உறுப்பினர்தான் கேள்வி கேட்கமுடியும். கேள்வி நேரத்தில் கேட்பதைப் போல் மற்ற உறுப்பினர்கள் எல்லாம் கேட்க முடியாது. விதியைப் படியுங்கள்.

### 3. அறிக்கை அளித்தல்.

### (அ) பொதுக் கணக்குக் குழு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : குழுக்களின் அறிக்கைகளை அளித்தல். பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள், பொதுக் கணக்குக் குழுவின் தலைவர்.

திருமதி ஏ. எஸ், பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. 1991—92 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவின் பின்வரும் அறிக்கைகளைப் பேரவைக்கு அளிக்கின்றேன் :

(1) தமிழக அரசின் 1962—63, 1964—65 மற்றும் 1970—71 ஆம் ஆண்டுகளுக்கான கணக்குகள் குறித்து இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் சிவில் அறிக்கைகளில், கல்வி மற்றும் தமிழ் வளர்ச்சி மற்றும் பண்பாட்டுத் துறைகள் குறித்து பொதுக் கணக்குக் குழு அளித்த தனது முந்தைய அறிக்கைகள், நான்காவது அறிக்கை (ஏழாவது பேரவை) மற்றும் ஐந்தாவது அறிக்கை (எட்டாவது பேரவை) களில் மேலும் தொடரப்பட்ட பரிந்துரைகளின் மீது அரசுமேற்கொண்டு எடுத்துள்ள நடவடிக்கை பற்றிய முப்பத்தி நான்காவது அறிக்கையை பேரவைக்கு அளிக்கின்றேன்.

(2) இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1982—83 மற்றும் 1983—84 ஆம் ஆண்டுகளுக்கான (சிவில்) அறிக்கைகளில் சுற்றுப்புறம் மற்றும் வனத்துறை பற்றிய பத்திகள் மீது பொதுக் கணக்குக் குழு அளித்த பதினைந்தாவது அறிக்கை (ஒன்பதாவது பேரவை)யில் கண்டுள்ள பரிந்துரைகள் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் பற்றிய முப்பத்தைந்தாவது அறிக்கையையும் பேரவைக்கு அளிக்கின்றேன்.

(3) இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1977—78 மற்றும் 1978—79 ஆம் ஆண்டுகளுக்கான (சிவில்) அறிக்கைகளின் மீது பொதுக் கணக்குக் குழு அளித்த இருபத்தி மூன்றாவது அறிக்கை (ஏழாவது பேரவை) மற்றும் இருப்பத்தெட்டாவது அறிக்கை (ஒன்பதாவது

பேரவை) யில் கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை குறித்து மேலும் தொடர்ப்பட்டுள்ள பரிந்துரைகளின் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை பற்றிய முப்பத்தாறாவது அறிக்கையையும் நான் பேரவைக்கு அளிக்கின்றேன்.

(4) இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1978—79 ஆம் ஆண்டிற்கான (சிவில்) அறிக்கைகளின் மீது பொதுக் கணக்குக் குழு அளித்த முப்பத்தோறாவது அறிக்கை (ஏழாவது) பேரவையில் கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை பற்றிய பரிந்துரையின் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை பற்றிய முப்பத்தேழாவது அறிக்கையையும் நான் இப்பேரவைக்கு அளிக்கின்றேன்,

(ஆ) அரசு உறுதிமொழிக் குழு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அரசு உறுதிமொழிக் குழுவின் அறிக்கையை அளித்தல். திரு. இரா. நடேசன். அரசு உறுதிமொழிக் குழுவின் தலைவர்.

திரு. இரா. நடேசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

1991—92 ஆம் ஆண்டிற்கான அரசு உறுதிமொழிக் குழுவின் (பத்தாவது சட்டமன்றப் பேரவை) மூன்றாவது அறிக்கையைப் பேரவைக்கு அளிக்கின்றேன்.

(ஆய்வு செய்தல்)

4. சட்டமுன்வடிவுகள்

(அ) நகராட்சிச் சட்டங்கள் சார்ந்த (திருத்த) சட்ட முன்வடிவு, 1992,

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அரசினர் சட்ட முன் வடிவுகள் ஆய்வு செய்தல். 26—3—1992 அன்று மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள், 1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சிச் சட்டங்கள் சார்ந்த (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 8/1992) ஆய்வுக்கு எடுத்து கொள்ளப் பெற வேண்டுமென்று முன்மொழிந்த தீர்மானத்தின் மீது விவாதம் —தொடர்ச்சி. திரு. ப. ரங்கநாதன், நேற்றைக்கு விட்ட இடத்திலிருந்து தொடரவும்.



முற்பகல் 9-55

திரு. ப. ரங்கநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சிச் சட்டங்கள் சார்ந்த (திருத்த) சட்ட முன் வடிவு எண் 8/1992 என்ற தலைப்பிலே ஒரு சில கருத்துக்களைக் கூற அனுமதிக்குமாறு தங்களைக் கேட்டுக் கொள்கிறேன். இந்த சட்டத் திருத்த முன்வடிவு மீது நேற்றைக்கு மாண்புமிகு உறுப்பினர் பழனிசாமி அவர்களும் பேசி, அவர் பேசிய பேச்சுக்கு மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் பதிலுரையும் தந்துள்ளார்கள். நாங்களும் தனி அலுவலரை நியமிக்க வேண்டாம் என்றுதான் சொல்லுகிறோம். காரணம், சென்னை மாநகராட்சி 1973 ஆம் ஆண்டு கலைக்கப்பட்டு ஏறத்தாழ 36 முறை ஆறு மாதங்களுக்கு ஒரு முறை திருத்தச் சட்ட முன் வடிவின் மூலமாக தனி அலுவலர்களை நியமித்து வந்து கொண்டிருக்கிறார்கள். இப்போது 37-வது முறையாக தனி அலுவலர்களின் பதவிக் காலம் நீட்டிப்புச் செய்வதற்கு 8/92 என்ற சட்ட முன் வடிவை இங்கே அறிமுகம் செய்திருக்கிறார் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள். நாம், காங்கிரஸ் கட்சியும், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமும் சட்ட மன்றத் தேர்தலிலே கூட்டணி அமைத்து போட்டி யிட்டோம். சென்னை நகரத்தைப் பொறுத்த வரையில் 12 தொகுதிகளில் அமோக வெற்றி பெற்று, கடந்த சட்டமன்ற கூட்டத் தொடரிலே மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் மாநகராட்சி தேர்தல் உடனே நடை பெறும் என்றும் அறிவித்தார்கள். ஆனால் அன்றைக்கு இந்த சட்டமன்றத்திற்குள்ளே நுழைய முடியாத கட்சிகள் எல்லாம், இப்போதுதான் தேர்தலை சந்தித்தோம், உடனே தேர்தல் தேவையா என்று அறிக்கை விட்டவர்கள், அவர்கள் கூட்டணியிலே இருந்தவர்கள், இப்போது மாநகராட்சி தேர்தலை உடனே நடத்த வேண்டும் என்று வலியுறுத்திக் கூறிக் கொண்டிருக்கிறார்கள்.

திரு. ஜி. பழனிசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, பாயின்ட் ஆப் ஆர்டர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உங்களை ஒன்றும் சொல்லவில்லை. இதிலே பாயின்ட் ஆப் ஆர்டர் இல்லை. பாயின்ட் ஆப் ஆர்டர் என்றால்தான் பேசலாம். வெளியே அந்தக் கட்சி அப்படி அறிக்கையை விட்டது, அதோடு தோழமையாக இருந்தவர்கள் தேர்தல் நடத்தவேண்டு மென்று கேட்டார்கள். தேர்தல் நடத்த வேண்டுமென்று

கேட்டீர்கள்—என்று சொல்லுகிறார்கள். அதிலே ஒன்றும் இல்லையே. உட்காருங்கள் (குறுக்கீடு). இதிலே பாயின்ட் ஆப் ஆர்டர் இல்லை. நேரத்தை வீண் அடிக்க வேண்டாம் (குறுக்கீடு). பாயின்ட் ஆப் ஆர்டர் என்றால் நீங்கள் பேசாததைச் சொல்லுகிறார் என்று சொன்னால் அதுதான் பாயின்ட் ஆப் ஆர்டர். இது பாயிண்ட் ஆப் ஆர்டர் என்று வராது. அவர் பேசிய பிறகு ஏதாவது விளக்கம் அளியுங்கள். அவர் பேசியதற்குப் பிறகு விளக்கம் கேளுங்களேன். (குறுக்கீடு) இல்லை. இல்லை. அவர் பேசியதற்குப் பிறகு அவர் பேசியதில் முரண்பாடு இருந்தால் நீங்கள் எழுந்து கேட்கலாம். அவர் பேசும் போது குடுக்கிடுவது என்பது அவரைப் பேச வேண்டாம் என்று சொல்லுவது போல இருக்கிறது. உட்காருங்கள். இதிலே பாயின்ட் ஆப் ஆர்டர் வராது என்று சொன்னேன். இதிலே பாயின்ட் ஆப் ஆர்டர் இல்லை. உட்காருங்கள். ஒரு உறுப்பினர் பேசினால் இன்னுமொரு உறுப்பினர் எழுந்து குறுக்கிட்டுத்தான் ஆக வேண்டுமென்று அவசியமில்லை. அவருடைய பேச்சில் ஏதாவது முரண்பாடு இருந்தால்தான் நீங்கள் எழுந்து அதைப் பற்றிக் குறிப்பிடலாம். உட்காருங்கள். திரு. ப. ரங்கநாதன்.

திரு. ப. ரங்கநாதன் : பேரவைத் தலைவர் அவர்களே, நாங்கள் சொல்லுகிற கருத்தினை கேட்டு, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், நான் பேசி அமர்ந்தவுடன் அவர் பேசினால் நன்றாக இருக்கும் என்று நினைக்கிறேன்.

*மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு நிதி அமைச்சர்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாங்கள் கூறுவதுபோன்று மாண்புமிகு உறுப்பினர் கூறுவதிலே முரண்பாடோ வேறுபாடோ இருக்குமேயானால் மாண்புமிகு தலைவர் அவர்களே அவருக்கு அனுமதி அளித்திருக்கிறார்கள். கடைசியில் அவருடைய தன்னிலை விளக்கத்தை எடுத்துச் சொல்லலாம். இடையிடையே குறுக்கிட்டு தடுக்க வேண்டிய அவசியமில்லை. பேரவைத் தலைவர் அவர்களே தங்களுக்கு அனுமதி தந்திருக்கிறார்கள். தன்னிலை விளக்கம் தர வேண்டுமானால் இறுதியில் தரலாம்.



முற்பகல் 10-00

திரு. ப. ரங்கநாதன் : பேரவைத் தலைவர் அவர்களே, நாங்கள் இரண்டு கட்சிகளும் தேர்தல் நேரத்தில் கூட்டணி வைத்து வெற்றி பெற்றோம். நான் மீண்டும் இங்கே அவையிலே இல்லாத கட்சிகளுக்கும் இங்கே தப்பித் தவறி வந்திருக்கின்ற ஒரு சில கட்சி நண்பர்களுக்கும் (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் தே. குமாரதாஸ், என்ன? சொல்லுங்கள்.

டாக்டர் தே. குமாரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜனநாயகத்தில் வெற்றி தோல்விகள் சகஜம், ஆக மற்ற கட்சிகளை தப்பித் தவறி வந்து இருக்கிற கட்சிகள் என்று சொன்னால்........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இல்லை, இல்லை அப்படி வருகிற காலத்தில் நீங்களும் அதைத்தான் பேசுவீர்கள், (குறுக்கீடு) நீங்கள் தப்பித் தவறி ஒரே ஆள் வந்து இருக்கிறீர்கள்; தப்பி வந்து இருக்கிறீர்கள் என்ற பொருளில் சொல்வது தவறு அல்ல.

டாக்டர் தே. குமாரதாஸ் : தலைவர் அவர்களே....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் தே. குமாரதாஸ் உட்காருங்கள். மாண்புமிகு கல்வி அமைச்சர்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, தப்பித்தவறி கட்சிக்கு ஒருவர் என்று வேண்டுமானால் ஒத்துக்கொள்ளலாம்.

டாக்டர் தே. குமாரதாஸ் : தலைவர் அவர்களே....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இல்லை, இல்லை. அதாவது அப்படி வருகிற காலத்தில் நீங்களும் அப்படித் தான் பேசுவீர்கள்.

டாக்டர் தே. குமாரதாஸ்: நாங்கள் அப்படிப் பேச மாட்டோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதைவிட அதிகமாக எல்லாம் பேசி இருக்கிறீர்கள். மாண்புமிகு நிதி அமைச்சர்.

[1992 மார்ச் 3

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே; மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், 'சிலர் தப்பித் தவறி வந்து இருக்கிறார்கள்' என்று குறிப்பிட்டார்கள். தாங்கள் வேண்டுமானால் தப்பவும் இல்லை தவறவும் இல்லை, உறுதியாகத்தான் நடந்து வந்து இருக்கிறீர்கள் என்று எடுத்துக்கொள்ளலாம்.

திரு. ப. ரங்கநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வந்து இருக்கின்ற உறுப்பினர்கள் தேர்தல் வேண்டுமென்று நேற்றைக்கு முன்தினம் இங்கே அவையில் குறிப்பிட்டார்கள். எங்கள் கூட்டணி தேர்தலை சந்திப்பதற்குத் தயாராக இருக்கின்றது. இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. குமாரதாஸ் அவர்கள் இடையிலே குறுக்கிட்டுப் பேசும் நேரத்தில் மறைந்த ராஜீவ் காந்தி இறந்ததால்தான் வெற்றி பெற்றதாகக் குறிப்பிட்டார்கள். ராஜீவ்காந்தி உயிருடன் இருந்த காலத்தில் ஜனதாதளக் கட்சி மத்தியிலே இருந்தபோது நாடாளுமன்ற தேர்தல் வந்தது. அப்போது இங்கே மாநிலத்திலே திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியிலே இருந்தது. தமிழகத்திலே இருக்கின்ற 39 தொகுதிகளில் 38 தொகுதிகளிலும் காங்கிரஸ்-அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் அமோகமான வெற்றியைப் பெற்றது. (குறுக்கீடு).

டாக்டர் தே. குமாரதாஸ் : தலைவர் அவர்களே......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதில் என்ன இருக்கிறது? (குறுக்கீடு) இதிலே என்ன இருக்கிறது? (குறுக்கீடு) டாக்டர் தே. குமாரதாஸ், இது ஒரு பில் மீது நடைபெறுகிற விவாதம். இந்த விவாதத்தை நீங்கள் இப்படியே இழுத்துக்கொண்டே போனால் நன்றாக இருக்காது. உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். (குறுக்கீடு). தேவை இல்லாமல் இதிலே நீங்கள் குறுக்கிட்டுக் கொண்டே இருக்கக் கூடாது.

திரு. ப. ரங்கநாதன் : தலைவர் அவர்களே, அதே நேரத்தில், ராஜீவ் காந்தி, இறந்ததனால்தான் நாங்கள் வெற்றி பெறவில்லை என்பதை டாக்டர் குமாரதாஸ் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

டாக்டர் தே. குமாரதாஸ் : தலைவர் அவர்களே....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் தே. குமாரதாஸ், இது நல்ல முறை அல்ல. ஒரு உறுப்பினர் பேசிக்கொண்டு இருக்கும்போது ஒவ்வொரு முறையும் நான் எழுந்துகொண்டே இருப்பேன் என்று சொல்வது, நல்ல முறை அல்ல.





டாக்டர் தே. குமாரதாஸ்: தலைவர் அவர்களே, தவறான தகவல் சொல்கிறார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தவறான தகவல் ஒன்றும் அவர் சொல்லவில்லை. (குறுக்கீடு) அவர் தவறான தகவல் ஒன்றும் சொல்லவில்லை. டாக்டர் தே. குமாரதாஸ் அவர்களுக்கு மட்டுமே தெரியும் என்று சொல்லிக்கொண்டு இருக்கக் கூடாது. மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர்.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. எது தவறான தகவல்? 1989-லே நடைபெற்ற தேர்தலிலே 39 இடத்திலே, 38 இடங்களிலே வெற்றி பெற்று வந்தது மறுக்க முடியாத உண்மை. எது தவறான தகவல்? ஒரே இடத்திலே கூட அன்று 3 ஆயிரம் ஓட்டு வித்தியாசத்திலே தப்பித் தவறி தான் ஜெயித்தீர்கள் (மேசையைத் தட்டும் ஒலி.)

டாக்டர் தே. குமாரதாஸ் : தலைவர் அவர்களே....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவு செய்து அதா எல்லாம் வது நீங்கள் இந்த அரசியல் விவாதங்கள் செய்துகொண்டு இருக்க முடியாது. அவர் சொன்னதற்கு ஏதாவது நீங்கள் பேசுகின்றபோது வேண்டுமானால் பதில் சொல்லலாம். (குறுக்கீடு) அல்லது முரண்பாடு இருக்குமே யானால் நீங்கள் கடைசியில் எழுந்து குறிப்பிடலாம்.

திரு. ஜி. பழனிசாமி : தலைவர் அவர்களே, அவர் இதிலே பேசவில்லை. நாடாளுமன்ற நடைமுறைக்கு......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இல்லை, அவர் சொன்னதினால் இது வந்தது.

திரு. ப. ரங்கநாதன் : பேரவைத் தலைவர் அவர்களே, 38 தொகுதிகளிலே அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் காங்கிரஸ் கட்சி கூட்டணி, திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியில் இருந்தபோது, அவர்களுடைய ரௌடித்தனத்தை எல்லாம் சந்தித்து நாங்கள் வெற்றியை பெற்றோம். ஆனால், ஒரே ஒரு இடத்தில்............

டாக்டர் தே. குமாரதாஸ் : தலைவர் அவர்களே....

திரு. ஜி. பழனிசாமி : தலைவர் அவர்களே........

திரு. ப. ரங்கநாதன் : தலைவர் அவர்களே, ஓரே ஒரு இடத்தில் நாகப்பட்டினத்தில் மட்டும் தப்பித் தவறி வந்தார்கள். (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எதிர்க்கட்சித் தலைவர்.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : பேரவைத் தலைவர் அவர்களே, அவர் எதைச் சொல்கிறார் என்று சொல்கிறேன். அன்றைய தினம், இன்றைய முதல்வர் மீது கொலை முயற்சி நடைபெற்றது. (குறுக்கீடு).

டாக்டர் தே. குமாரதாஸ் : தலைவர் அவர்களே....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒவ்வொரு உறுப்பினருக்கும் பேசுவதற்கு உரிமை உண்டு. (குறுக்கீடு) கேளுங்கள். (குறுக்கீடு) ஓர் உறுப்பினர் பேசிக்கொண்டு இருக்கிற போது அந்தச் சொற்றொடருக்கு உள்ளே உடனே போய் நீங்கள் கேட்டீர்கள் என்றால் அவர் அதற்குப் பிறகு ஏதோ சொல்வதற்காகத்தான் (குறுக்கீடு) இல்லை, நீங்களாகத்தான் ராஜீவ் காந்தியினாலே தான் இந்த சட்டமன்றத் தேர்தலிலே இத்தனை பேர் வெற்றி பெற்றார்கள் என்று சொன்னீர்கள். அதற்கு அவர் 'இல்லை, ராஜீவ் காந்தி இருந்த காலத்தில் தி.மு.க.வும் ஆட்சியிலே இருந்தபோது, இவ்வளவு ரௌடித்தனத்தையும் மீறி நாங்கள் ஜெயித்து வந்து இருக்கிறோம் (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, இப்போது வெற்றி பெற்று வந்து இருப்பது இதனால் தான் என்று நீங்கள் கூறுவது சரி அல்ல' என்று சொல்வதற்கு வருகிறார். அவர் அதைச் சொல்வதற்கு—நீங்கள் எப்படி ராஜீவ் காந்தி அவர்களால் தான் வெற்றி பெற்றீர்கள் என்று சொல்வதற்கு உங்களுக்கு உரிமை இருக்கிறதோ, அதே உரிமை அவர்களுக்கு இல்லையென்று எப்படி சொல்ல முடியும்? ஆகவே தான் நான் சொன்னேன். நீங்கள் இடையிலே எழுந்து தேவையற்ற விவாதத்தை உருவாக்காதீர்கள் என்று சொன்னேன். நீங்கள் விடாப்பிடியாக எதையாவது பேசுகிறபோது உங்களுக்குப் சொல்ல பதில் இதிலே நேரம் தான் போகிறது. (குறுக்கீடு) உட்காருங்கள். நான் சொல்லிவிடுகிறேன். நீங்கள் எப்படிச் சொல்கிறீர்களோ அதைப்போல அவருக்குப் பதில் சொல்ல உரிமை உண்டு இல்லையா. மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.



முற்பகல் 10—05

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ரங்கநாதன் அவர்கள் பேசுகிறபோது யாரையும் குறிப்பிட்டுச் சொல்லவில்லை. குமாரதாஸ் ரவுடித்தனம் பண்ணினார் என்று அவர் ஒன்றும் சொல்லவில்லை. எனவே, அவர் இவ்வளவு தூரம் எழுந்து அதையெல்லாம் பேசுவதைப் பார்த்தால் சந்தேகம் ஏற்பட்டு விடும் மக்களுக்கு என்ற காரணத்தால்—அவர் பொதுவாகத்தான் சொன்னார். அந்த தேர்தலில் நடந்த ரவுடித்தனத்தையெல்லாம் அவர் பொதுவாகச் சொல்லியிருக்கிறார். உங்களை தனிப்பட்ட முறையில் பழனிசாமியையோ குமாரதாசையோ சொல்லவில்லை. எனவே, நீங்கள் எழுந்திருந்தால் சந்தேகம் வருகிறது. (குறுக்கீடுகள்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஜி. பழனிசாமி.

திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ரவுடித்தனம் என்பதை அவைக்குறிப்பிலேயிருந்து நீக்க வேண்டும். ரவுடித்தனம் என்பது ஒரு கட்சியை மிகவும் குறைத்து மதிப்பிடும். அப்படி கொச்சைப் படுத்திப் பேசுவது நல்லதல்ல.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதாவது மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் சொன்னதைப் போல (குறுக்கீடு) கேளுங்கள். குறிப்பிட்ட ஒருவரைச் சொல்கிற போதுதான் அந்த வார்த்தையைப் பயன்படுத்தக்கூடாது. பொதுவாக ரவுடித்தனம் இருந்தது என்று சொல்லுகிற போது—அது யாரையும் ஒருவரைக் குறிப்பிட்டுச் சொன்னால் சொல்லக்கூடாது என்று நீங்கள் சொல்வது சரி. அவர் பொதுவாகச் சொல்வதைக் குறித்து அமைச்சர் சொல்வதைப் போல் நீங்கள் ஏன் எழுந்திருக்கிறீர்கள்? மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு ரங்கநாதன் அவர்கள் கோடிட்டு காட்டியிருப்பது அவர் சட்டமன்றத் தேர்தலில் போட்டியிடுகிற போதும் சரி, மற்ற நேரங்களிலும் சரி, அந்தப் பகுதியில் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்கள் இப்படிப்பட்டவர்களால் கொலைவெறி தாக்குதலுக்கு ஆளாகி ஒரு அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத் தொண்டன் உயிர் இழந்திருக்கிறான். அதை

நினைவூட்டுவதற்கு தான் அவர் தன்னுடைய பேச்சை உருவாக்கியிருக்கிறார் என்பதை அவைக்கு தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> திரு. ப. ரங்கநாதன், பில்லுக்கு வாருங்கள். சென்னை மாநகராட்சிக்கு வாருங்கள்.

<u>திரு. ப. ரங்கநாதன் :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 38 தொகுதிகளில் நாம் வெற்றி பெற்றோம். அப்போது மத்திய சென்னையிலே ஆளுங்கட்சியினரால் குறிப்பாக ஆயிரம் விளக்குத் தொகுதியில் இருக்கிற அன்றைய முதலமைச்சர் வீடு, அண்ணாசாலையில் உள்ள அன்பகம்—அவற்றினருகில் வழக்கறிஞர் ஆர். எஸ். சுப்பிரமணியம் அவர்களை பட்டப்பகலில் அடித்து கொலை செய்திருக்கிறார்கள். மற்றொன்றையும் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். பாண்டிச்சேரியில் நடந்த தேர்தலின் போது இன்றைய முதலமைச்சர் அந்தத் தேர்தலில் வாக்காளர்கள சந்தித்து வாக்குகளைச் சேகரிப்பதற்காக சென்னையியிலிருந்து புறப்பட்டுப் போய் திரும்பி வருகிற நேரத்தில் அந்த ஆட்சியில்—தி.மு.க. ஆட்சியில் விமான நிலையம் அருகில் மண்பாடி "லாரியை வைத்து தாக்கிக் கொல்ல நினைத்தார்கள். இது இங்கேயிருக்கிற உறுப்பினர்களுக்கு நன்றாகத் தெரியும். இதை இல்லையென்று மறுக்க முடியுமா? இது ரவுடிசம் இல்லையா? அதைப்போல செம்பியம் பகுதியில் என்னுடைய தொகுதியில் (குறுக்கீடு) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உங்களுக்கு நன்றாகத் தெரியும். மாண்புமிகு அமைச்சர்கள், போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களுக்கும் தெரியும், சுகாதாரத் துறை அமைச்சர் அவர்களுக்கும் தெரியும், கைத்தறி துறை அமைச்சர் அவர்களுக்கும் தெரியும். ஒரு அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத் தொண்டரை பட்ட பகலிலே அடித்து கொலை செய்கிறார்கள். இந்த கொலைவெறி பிடித்தவர்களைத் தான் நான் ரவுடி என்று குறிப்பிட்டேன். நேற்றைக்கு முன்தினம் கூட 25ஆம் தேதி இதே அவையில் அன்றைய எதிர்க்கட்சித் தலைவரை அவையிலேயே முன்னாள் அமைச்சர்கள்—அன்றைய அமைச்சர்கள் என் தொகுதியில் நின்று தோல்வியுற்ற அரிசி பேர ஊழல் மன்னன் இங்கே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை கொலை செய்ய முயன்றதாக பத்திரிகைகளில் செய்திகள் வந்திருக்கின்றன. புகைப்படமும் இருக்கிறது. தொலைக் காட்சியும் அதைப் படம்பிடித்து இருக்கிறது. இதையெல்லாம் அன்றைக்கு சட்டமன்ற உறுப்பினர்களாக இருந்தவர்கள் மறுக்க முடியுமா என்று கேட்க விரும்புகிறேன்.



<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> அடுத்து பில்லுக்கு வாருங்கள்.

<u>திரு. ப. ரங்கநாதன் :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதையெல்லாம் எதற்காகக் குறிப்பிடுகிறேன் என்றால் தேர்தல் வேண்டுமென்று கேட்பவர்களுக்கு எங்களுடைய கூட்டணித் தேர்தலைச் சந்திப்பதற்கு எக்காலத்திலும் தயங்காது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி). இந்தச் சட்டமன்றக் கூட்டத் தொடர் முடிந்தவுடன், நாங்கள் தேர்தலைச் சந்திக்கத் தயாராக இருக்கிறோம். நீங்கள் தயாரா?

முற்பகல் 10-10

சென்னை மாநகராட்சியைப் பொறுத்தவரையில், 150 கோட்டங்கள், தமிழகத்திலே இருக்கிற ஏறத்தாழ 380 ஊராட்சி மன்றங்கள், அனைத்திலும் எங்களுடைய கூட்டணி நிச்சயமாக வெற்றி பெறும். இங்கே, இப்போது, தப்பித் தவறி வந்திருக்கிற உறுப்பினர் அவர்களுடைய தொகுதியிலே இருக்கிற அனைத்து உள்ளாட்சி தேர்தல்களிலும் கூட, இந்தக் கூட்டணிதான் நிச்சயமாக வெற்றி பெறும் என்பதை இந்த நேரத்திலே கூறிக்கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன். ஆகவே, நாங்களும் தேர்தல் வேண்டும் என்றுதான் சொல்கிறோமே தவிர, தேர்தல் வேண்டாம் என்று சொல்லவில்லை. ஆளும் கட்சி, தோழமைக் கட்சியைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர்களும் தேர்தல் வேண்டும் என்றுதான் கூறுகிறார்கள்.

நேற்று மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். இதிலே சட்டப் பிரச்சினைகள் இருக்கின்றன. அதற்காகத்தான் நாங்கள் தேர்தலைத் தள்ளி வைக்கிறோம். சட்டத் திருத்தத்தைக் கொண்டு வந்திருக்கிறோம் என்று. அதன் அடிப்படையில்தான், இந்த உள்ளாட்சி அமைப்புகளுக்கு தேர்தலை தள்ளி வைப்பதற்காகவும் இங்கே பேரவை. சட்ட முன்வடிவு 8/1992 என்ற சட்டத்தினை உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் அறிமுகம் செய்திருக்கிறார்கள்.

அதே நேரத்தில், சென்னை மாநகராட்சியைப் பொறுத்தவரையில் ஒரு சில கருத்துக்களைக் கூறலாம் என்று ஆசைப்படுகிறேன். சென்னை மாநகராட்சியில், ஏறத்தாழ 24 உட்பிரிவுகள் இருக்கின்றன. அதிலே, கோட்டங்களில் பணியாற்றுகிற பொறியாளர்களும், ஒவ்வொரு கோட்டத்திற்கு ஒரு பொறியாளர் என்று 15 கோட்டங்களுக்கு 10 வட்ட

[திரு. ப. ரங்கநாதன்] [1992 மார்ச் 27

அலுவலர்களின் கீழ் சென்னை மாநகராட்சியிலே பணி நடைபெற்றுக் கொண்டு வருகிறது. அங்கே பல துறைகளிலே, தனியார் தெருக்களுக்கு தனிப் பிரிவு என்றும், மலேரியாவைப் போக்குவதற்கு தனிப் பிரிவு என்றும், குப்பைகளை அகற்றுவதற்கு தனிப் பிரிவு என்றும், தாய்-சேய் மகப்பேறு விடுதிகளைப் பராமரிப்பதற்கு தனிப் பிரிவு என்றும், உரிமங்கள் வழங்குவதற்கு தனிப் பிரிவு என்றும் சொல்லி, இப்படி 24 பிரிவுகள் அங்கே இயங்கிக் கொண்டு இருக்கின்றன. ஆனால் பணிகள் திறம்பட நடைபெறுவதில்லை. தனியார் தெருக்களைப் பராமரிக்கின்ற பொறியாளர்கள் எல்லாம் கடந்த ஆண்டுகளிலே சென்னை நகரத்திலே ஒரு தனியார் தெருவிலும் தார் சாலைகளை அமைக்கின்ற பணியை மேற்கொள்ளவில்லை. அதே நேரத்தில், சென்னை மாநகராட்சியில் அதிகாரிகள்தான் அதிகரித்துக்கொண்டு இருக்கிறார்களே ஒழிய கீழ்மட்டத்திலே, கோட்டங்களிலே பணியாற்றுகிற கடைநிலை ஊழியர்கள் எண்ணிக்கை அங்கே மிக மிகக் குறைவாகத்தான் இருக்கின்றது. காரணம், 1980 ஆம் ஆண்டு முதல் இன்று வரையில், அங்கே பணியிலிருந்து ஓய்வுபெற்றவர்களுக்கும், பணியிலே இருக்கும்போது, இறந்தவர்களுக்கும் மாற்றுப் பணியாளர்களை, இதுவரையில், 12 ஆண்டுக் காலமாக நிரப்பாமல் இருப்பதால் தாங்கள் முயற்சி எடுக்கவேண்டும். உடனடியாக நிரப்புவதற்கான பணியினை மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல் அங்கே அதிகாரிகளின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே போவதால் மாநகராட்சியினுடைய பராமரிப்புச் செலவுகள்தான், நிர்வாகச் செலவுகள் தான் அதிகரித்துக் கொண்டிருக்கின்றன. சென்னை மாநகராட்சியிலே ஏறத்தாழ 80 கோடி ரூபாய் வருமானம் என்றால், அங்கே நிர்வாகச் செலவுக்காக 60 கோடி ரூபாயை ஆண்டு ஒன்றுக்குச் செலவு செய்கின்ற நிலை இருக்கின்றது. இதை அமைச்சர் அவர்கள் தெரிந்து கொண்டு, அங்கே மேல் நிலையில் இருக்கின்ற, தலைமை நிலையிலே இருக்கின்ற அதிகாரிகளைக் குறைத்து அடித்தளத்திலே கோட்டங்களில் பணி செய்வதற்குக் கூடுதலான, சாதாரணப் பணியாளர்களை உடனடியாக நியமிக்கவேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக் கொண்டு, இந்தச் சட்டத் திருத்தத்தை நாங்கள் எங்கள் கட்சியின் சார்பிலே வரவேற்று, வருகின்ற காலங்களில் தேர்தலை நடத்தவேண்டும் என்று இந்த மாமன்றத்திலே கேட்டு, எனக்குப் பேச வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி கூறி அமர்கிறேன். நன்றி, வணக்கம்.



1992 மார்ச் 27]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. செ. து. வரதராஜன்.

முற்பகல் 10-15

*திரு. செ. து. வரதராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பேரவையில் எனக்குப் பேச வாய்ப்பளித்த தங்கத் தலைவிக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்து என்னுடைய பேச்சைத் துவக்குகிறேன்.

1991 ஆகஸ்டு 30-ல் உள்ளாட்சித் தேர்தல்களை நடத்தி முடிக்க புரட்சித் தலைவி அரசு அனைத்து முடிவையும் செய்திருந்தது. அனைத்துக் கட்சிகளும், தேர்தலை நடத்தி முடித்திருக்கும். ஆனால் தமிழ் நாட்டிலே தலையாய பிரச்சினையாக இருந்த காவிரிப் பிரச்சினையால் ஏற்பட்ட எதிர்பாராத சூழ்நிலையால் தேர்தல்கள் ஒத்திவைக்கப்பட்டன. எங்கள் தங்கத் தலைவி தினமும் ஆயிரக்கணக்கான மக்களைச் சந்தித்துக் கொண்டிருக்கிறார். எப்போதும் மக்களைச் சந்திப்பதற்கு அஞ்சுவதே இல்லை. ஆனால் மக்களுடைய செல்வாக்கை இழந்த தி.மு.க. தலைவர் கருணாநிதி அவர்கள், தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி ஆகஸ்டு 30 ஆம் தேதி தேர்தல் நடைபெறும் என்று தெரிவித்தபோது, 'இப்போதுதான் தேர்தல் முடிந்தது. இப்போது ஏன் மற்றொரு தேர்தல்' என்று கூறினார்கள். ஆனால்இப்போது தேர்தலைச் சந்திக்கத் தயாரா என்று கூறுகிறார். ஏனென்றால் இப்போது இருக்கின்ற சூழ்நிலையில் தேர்தலை வைக்க வாய்ப்பில்லை என்ற ஒரு தைரியத்தில் அப்படிக் கூறுகிறார். எங்கள் தங்கத் தலைவி எப்போதும் மக்களைச் சந்தித்து மக்கள் மத்தியில் நீதி கோர தயங்கமாட்டார்கள் என்பதை மிக அடக்கத்தோடு தெரியப்படுத்திக்கொள்கிறேன்.

தற்போது மார்ச் மாதம் முதல் பேரவையில் வரவு-செலவுத் திட்டங்கள் தொடர்பான கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. எல்லா அரசியல் கட்சிகளும் விவாதத்திலே முழுமையாக ஈடுபட்டுக்கொண்டிருக்கிற காலக் கட்டம் இது. எம்.பி.க்களும், எம்.எல்.ஏ.க்களும், அரசியல்வாதிகளும், அனைவரும் சென்னையில் தங்கியிருக்க வேண்டியதாலும், நடைபெற இருக்கின்ற கூட்டுறவுத் தேர்தல், மே மாதம் அனைத்துக் கூட்டுறவுச் சங்கங்களுக்கான தேர்தலை நடத்த அரசு முடிவு செய்திருப்பதாலும், கூட்டுறவு ஸ்தாபனங்கள் மூலம் அதிகாரிகளும், தமிழகத்திலே உள்ள கூட்டுறவுச் சங்கங்களுடைய உறுப்பினர்களும் தேர்தலில் பங்குபெறவும், அரசியல் கட்சிகள் பங்குபெறவும் பொதுமக்கள் எதிர்பார்த்திருப்பதால், தேர்தல் சிறப்பாகவும், அமைதியாகவும், நடைபெறுவதற்கான வழி வகுக்கவும். பள்ளி மாணவர்கள் படிக்கின்ற காலமாக இருக்

கின்ற காரணத்தினாலும், கோடை காலத்தில் விடுமுறை விடுவதாலும், மீண்டும் பள்ளியிலே சேர்க்க வேண்டியிருப்பதாலும், அந்தக் கூட்டுறவு தேர்தல் தமிழகத்தில் சுறுசுறுப்பாகவும், எதிர்பார்ப்புகளும் இருக்கின்ற நிலையில் இப்போது உள்ளாட்சித் தேர்தலை நடத்துவதற்குரிய காலமாக இருக்காது என்கின்ற காரணத்தால் ஒத்தி செயல்பட அதிகாரிகளுக்கும் கட்சித் தோழர்களுக்கும் இது ஒரு வாய்ப்பாக இருக்கும் என்பதற்காக, இந்தத் தேர்தலை மிக விரைவிலேயே நடத்துவதற்கு ஏற்பாடு செய்யும் வகையில் அனைத்து உள் கட்சி அமைப்புகளும், தனி அதிகாரிகள் பதவிக் காலத்தை 1992 செப்டம்பர் 30ஆம் நாள் வரை நீட்டிப்பது தவிர்க்க இயலாத ஒன்று என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன், இந்த நிலையில் தங்கத் தலைவி அரசு இன்று உள்ளாட்சித் துறையின் மாண்புமிகு அமைச்சர் அவர்களும், நகராட்சி, உள்ளாட்சி, உள்ளாட்சி ஒன்றிய மன்றங்களின் தேர்தலைத் தள்ளி வைக்க திருத்த சட்டமுன் வடிவை வைத்ததற்காக இந்த அரசை மிகவும் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

செங்கற்பட்டு நகராட்சியின் நிதிநிலைமை மிகவும் மோசமான நிலையிலுள்ளது. பணியாளர்களுக்கு மாதச் சம்பளம்கூட வழங்கமுடியாத நிலையில் மிகவும் கஷ்டமான சூழ்நிலை இருக்கிறது, எங்கள் நகராட்சி ஒரு கிராமமாகவும் இல்லை, நகரமாகவும் இல்லை. நீண்ட நாட்களாக பழைய செங்கற்பட்டாகவே இருக்கிறதே தவிர, எந்த முன்னேற்றமும் இல்லை, எனவே மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சரவர்கள் கொண்டு வந்துள்ள உள்ளாட்சி தொடர்பான திருத்த மசோதாவினை வரவேற்று, எங்களுடைய நகராட்சிக்கு சில நல்ல பல பணிகளை அளிக்க வேண்டுமாய் நான் வேண்டி விரும்பி கேட்டுக் கொள்கிறேன். இந்த அரசு மிகுந்த அக்கறையோடும் நீண்டநாள் குறைபாடுகளை நீக்கவேண்டி அதற்கான பல நல்ல திட்டங்களை தற்போது நிறைவேற்றிக்கொண்டு வருகிறது. இந்தப் பணிகள் முடிவடையும்வரை உள்ளாட்சி, உள்ளாட்சி ஒன்றிய மன்றங்கள், நகராட்சி ஆகியவற்றுக்கான தேர்தலைத் தள்ளி வைப்பதுதான் சாலச் சிறந்தது என்று தெரிவித்து என்னுடைய பாராட்டுதலைத் தெரியப்படுத்திக் கொண்டு, இந்த வாய்ப்பினை அளித்த தலைவர் அவர்களுக்கு நன்றி சொல்லி விடைபெறுகிறேன்,

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் தே, குமாரதாஸ்.

[முற்பகல் 10-20]

டாக்டர் தே. குமாரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் இங்கே மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் மூலம் கொண்டு வந்திருக்கிற சட்டத்



திருத்தத்தில் சில நிர்ப்பந்தங்களின் — நிர்ப்பந்தம் என்று சொன்ன உடனே வெளியே இருக்கிற நிர்ப்பந்தம் என்று கருதி விடக் கூடாது. இந்தச் சட்டத் திருத்தத்தை நான் எதிர்த்து என்னுடைய சில கருத்துக்களை உங்கள் முன்னாலே கூறலாம் என்று கருதுகிறேன். இன்றைய தினம் தனி அதிகாரிகளுடைய பதவிக் காலத்தை நீட்டிக்கின்ற , , , ,

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் தே. குமாரதாஸ், பொதுவாக பேரவை உறுப்பினர்கள் இங்கே பேசுகிறபோது எந்த நிர்ப்பந்தத்திற்கும், எந்த விதமான சூழ்நிலைக்கும், எந்த விதமான பாரபட்சமான தன்மைக்கும் ஆளாகாது பேச வேண்டும் என்றே விதி இருக்கிறது, வேறு எந்தவிதமான நிர்ப்பந்தத்திற்கும் நீங்கள் ஆளாகக் கூடாது என்றும், ரொம்ப சர்வ சுதந்திரமாகப் பேச வேண்டும் என்பதுதான் விதி. ஆகவே நீங்கள் உள்ளே இருக்கிற நிர்ப்பந்தமோ, வெளியே இருக்கிற நிர்ப்பந்தமோ எந்த நிர்ப்பந்தத்திற்கும் ஆளாகக்கூடாது.

டாக்டர் தே. குமாரதாஸ் : பேரவைத் தலைவர் அவர்களே, உங்களுடைய விளக்கத்திற்கு நன்றி, இந்தச் சட்டத்திருத்தத்தில் வருகிற 31-ஆம் தேதியிலிருந்து செப்டம்பர் மாதம் 30-ம் தேதி வரைக்கும் இந்தப் பதவிக் காலத்தை தனி அலுவலர்களுக்கு நீட்டித்துக் கொடுக்கிற அளவில் இங்கே அறிமுகம் செய்திருக்கிறார்கள், ஏற்கெனவே இருக்கக் கூடிய தனி அதிகாரிகள் அவர்களுக்குத் தோன்றுகிற விதத்திலேதான் ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள் செயல்பட்டு வருகின்றன. சட்டமன்ற உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பவர்களைக் கலந்து குறைகளை நிவர்த்தி செய்ய வேண்டும். பொது மக்களுக்கு முக்கியத்துவம் வாய்ந்த பணிகள் எவை என்று கலந்து ஆலோசிக்காமல் காண்டிராக்டர்கள் சொல்லுகிற வேலைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து எல்லாப் பகுதிகளிலேயும் செய்து வருகிற ஒரு சூழ்நிலை இருக்கிறது.

அதைப்போல இன்றைக்கு ஜனநாயகத்தின் அடிப்படையாக இருக்கிற ஊராட்சி, ஊராட்சி ஒன்றியங்கள், நகராட்சி, மாநகராட்சிகளுக்குத் தற்சமயம் தேர்தலே இல்லை என்ற பட்சத்தில், எந்தப் பகுதியிலே தெரு விளக்குகள் எரியவில்லை என்று சொன்னாலும்கூட சட்ட மன்ற உறுப்பினர்களைப் போய் கேள், அவனால்தான் தெருவிளக்கு எரியவில்லை என்ற ஒரு குறைபாட்டினைச் சொல்லி சட்டமன்ற உறுப்பினர்கள் மீது அந்தப் பழியைப்போட்டு விடுகிறார்கள். தனி அதிகாரிகளாக இருக்கக் கூடிய அதிகாரிகளும் ஆமாம் என்று சொல்லி விட்டு பழியைச் சட்டமன்ற உறுப்பினர்கள் மீது போடுகிற ஒரு சூழ்நிலை இருக்கிறது. அதைப் போல ஊராட்சி ஒன்றியங்களுக்கு உட்பட்ட பகுதிகளில் அது வில்லேஜ் பஞ்சாயத்தாக இருந்தால் நேரிடையாக பி.டி.ஓ. வினுடைய கண்ட்ரோலுக்கு

கீழே வருகிறது, டவுன் பஞ்சாயத்தாக இருந்தால் டி.பி.ஓ. கண்ட்ரோலுக்கு கீழே வருகிறது என்று ஒரு அமைப்பு வைத்திருக்கிறார்கள், ஆழ் குழாய்க் கிணறு ஒன்று பழுதடைந்திருக்கிறது என்று வைத்துக்கொள்ளுங்கள். அந்த ஆழ் குழாய்க் கிணற்றைச் சரி செய்வதற்காக நாம் பி.டி.ஓ.விடம் சென்றால், அவர்கள் உடனே டவுன் பஞ்சாயத்து அதிகாரிகளுக்கு எழுதி, அவர்கள் உடனே பணம் 250 ரூபாய் கட்ட வேண்டும் என்று சொல்லி அதற்குப் பிறகு பணம் கட்டி, பணம் கட்டியாகிவிட்டது என்று பி.டி.ஓ. சொல்லி, அவர் அதற்குப் பிறகு டி.பி.ஓ. விற்குச் சொல்லி ஒரு சர்க்கிள்........

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்,

<u>மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு</u> : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறிப்பாக தெருவிளக்கு பிரச்சினை பற்றியும், குடிதண்ணீர் பிரச்சினை பற்றியும் ஊராட்சி ஒன்றியத்திலே இருக்கிற ஆணையாளர்களுக்கு எல்லாம் தீவிரமாக செயல்படுத்த வேண்டும் என்று அறிவுரைகள் வழங்கப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினருடைய தொகுதியிலே இப்படிப்பட்ட குறைகள் இருந்தால் என்னிடத்திலே தெரிவித்தால் அது குறித்து உடனே நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

<u>டாக்டர் தே. குமாரதாஸ்</u> : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உத்திரவாதம் அளித்ததோடு அதிகாரிகளுக்கு அறிவுரை வழங்கப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். நன்றி, ஆனால் இதிலே குறைபாடுகளை— இப்போது நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் ஒரு விளக்கம் கேட்கக் கடமைப்பட்டிருக்கிறேன். ஊராட்சி அல்லது பேரூராட்சி என்று வருகிற நேரத்தில் இரண்டும் இரண்டு வேறுவிதமான கட்டுப்பாடுகளுக்கு, இரண்டு விதமான கண்ட்ரோல்களுக்குப் போகிறது. ஊராட்சியினுடைய குறைபாடுகளை நாம் பி. டி. ஓ.விடம் சொன்னால், அதை டி.பி.ஓ.-விடம் தான் சொல்ல வேண்டும் என்று சொல்லுகிறார்கள். பிறகு டி.பி.ஓ.-விடம் பார்த்து அவர் டி.டி.ஓ.-விற்கு அனுப்பி ஒரு சர்க்கிள் சுற்றி வருவதனால் குறைந்த பட்சம் 2 மாதம் ஆகிவிடுகிறது. ஒரு ஆழ் குழாய்க் கிணறு . . .

<u>மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு</u> : பேரவைத் தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட கால தாமதத்தைத் தவிர்ப்பதற்காகத்தான் பல்வேறு ஆணைகளும் அறிவுரைகளும் பிறப்பிக்கப்பட்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். எந்த ஊரிலாவது குடிநீர்ப் பிரச்சினை, தெருவிளக்குப் பிரச்சினை ஏற்பட்டிருந்தால் அதுபற்றி அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்தால் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.





<u>டாக்டர் தே. குமாரதாஸ்</u> : மாண்புமிகு தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கூறிய விளக்கத்திற்கு நன்றி. அதைப் போல இன்னும் சொல்ல வேண்டுமென்று சொன்னால்— இந்த மாமன்றத்திலே பேசுகிறபோது தேர்தலைக்கண்டு எதிர்க்கட்சிகள் — நாங்கள்— பயந்து கொண்டு இருக்கிறோம் என்று பொருள்பட சொல்லுகிறார்கள். ஜனநாயக அடிப்படையில் வெற்றி தோல்வி என்பது சகஜம். 1980-ல் நடைபெற்ற தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகமும், இங்கே இந்திரா காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த நபர்களும் கூட்டணி வைத்து தேர்தல் களத்திலே போட்டியிட்டார்கள். (மணியடிக்கப்பெற்றது).

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : ஏற்கெனவே இது பற்றி இந்த அவையில் பேசப்பட்டு இருக்கிறது, நீங்கள் இந்திரா காங்கிரஸ் கட்சி. இந்திரா காங்கிரஸ் கட்சி என்று பேசக் கூடாது என்று நானே உங்களுக்குத் தெரிவித்திருக்கிறேன். திரும்பவும் அந்த வாதத்திற்குள்ளே போக வேண்டாம். காங்கிரஸ் கட்சி என்று சொல்லுங்கள்.

<u>டாக்டர் தே. குமாரதாஸ்</u> : காங்கிரஸ் (ஐ).

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத் துறை அமைச்சர்.

முற்பகல் 10-25

<u>மாண்புமிகு திரு. சு. முத்துசாமி</u> : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களால் இந்திரா காந்தி அம்மையாரை மறக்கவே முடியாது என்பதற்கு ஒரு உதாரணம், அவர்களையே நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். எனவே அந்தப் பக்கமாகக் கூட போய்விட்டால் நன்றாக இருக்கும் என்று கருதுகிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : காங்கிரஸ் (ஐ) என்பது நம்முடைய சட்டமன்றத்தைப் பொறுத்தவரையில் இல்லை. இந்திய தேசியக் காங்கிரஸ் கட்சி தான் இருக்கிறது, எனவே நீங்கள் இந்த அவைக்குள்ளே பேசுகின்றபோது அப்படி குறிப்பிட முடியாது. நீங்கள் ஏதாவது பொதுக் கூட்டத்தில் இதையெல்லாம் வைத்துக்கொள்ளுங்கள். இங்கே வேண்டாம். அந்த வாய்ப்பு இல்லை என்று பார்க்கிறீர்களோ என்னவோ, தெரியவில்லை,

<u>டாக்டர் தே. குமாரதாஸ்</u> : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கூட்டணியின் சார்பாக 1980-ல் போட்டியிட்டு அன்றைக்கு அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு ஒரே ஒரு பாராளுமன்ற இடம் . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : பேரவைத் தலைவர் அவர்களே, 1980-ஆம் ஆண்டு அப்படிப்பட்ட நிலை ஏன் ஏற் பட்டது என்பது நண்பருக்குத் தெரிந்திருக்க வேண்டும்,

"We do not want a 'Tamasha, in New Delhi. We want a stable Government."

என்று சொன்னவர் கருணாநிதி. ஆக ஜனதா இருந்தால் தமாஷா
தான் நடக்கும் என்று அவரே சொல்லி, நேருவின் மகளே வருக
நிலையான ஆட்சி தருக என்று அவர் சொன்னதற்குப் பின்னாலே,
அதோடு நிறுத்தவில்லை அவர், நேருவின் பேரப்பிள்ளை, இந்திரா
வின் வீரப்பிள்ளை என்று இளவலையும் அவர் பாராட்டி அவரா
கவே வந்து வைத்துக் கொண்ட உறவு அந்த உறவு, அவர் சொன்
னதைப்போல ஜனதா தளம் கூடாது, ஜனதா ஆட்சிக்கு வரக்
கூடாது என்று தமிழக மக்கள் அன்றைய தினம் அளித்த தீர்ப்பு
தான் அந்த தீர்ப்பு.

டாக்டர் தே. குமாரதாஸ் : பேரவைத் தலைவர் அவர்களே,
திராவிட முன்னேற்றக் கட்சியினுடைய தலைவர் டாக்டர் கலை
ஞர் அவர்கள் சொன்னதன் பலனை இன்றைக்கு அனுபவித்துக்
கொண்டிருக்கிறார் என்பதும் நாட்டு மக்களுக்குத் தெரியும். ஆக
இன்றையதினம் வரக்கூடிய தேர்தலிலே கூட்டணிகள்
எப்படி இருந்தாலும் அதைப்பற்றி எங்களுக்குப் பிரச்சினை
இல்லை. ஜனநாயகத்தின் அடிப்படையில், ஊராட்சி, ஊராட்சி
ஒன்றியங்கள் நகராட்சி, மாநகராட்சிக்கான தேர்தல்
உடனே நடத்தப்பட வேண்டும், நீங்கள் தனி அதிகாரிகள் மூலம்
ஆட்சிகளை நிர்வகித்துக் கொண்டு செல்வது என்று சொன்னால்
மக்களுடைய குறைபாடுகளை, குறை நிறைகளை அறிந்து
அவர்களால் செயல்பட முடியாது, ஏனென்று சொன்னால்
பொதுமக்களாக களத்திலே போட்டியிட்டு வருகின்றவர்தான்
அந்தப் பகுதியிலே இருக்கின்ற பிரச்சினைகள், தெருவிளக்குப்
பிரச்சினையானாலும் சரி, குடிதண்ணீர்ப் பிரச்சினையானாலும்
சரி, சாலைப் பிரச்சினையானாலும் சரி, போக்குவரத்துப் பிரச்
சினையானாலும் சரி, இப்படிப்பட்ட பிரச்சினைகளை எல்லாம்
பொதுமக்களுடைய பிரதிநிதிகளாக வருகின்றவர்கள்தான்
அடுத்த முறையும் மக்களுக்குத் தொண்டாற்றி வரவேண்டும்
என்ற எண்ணத்தின் அடிப்படையிலே செயல்படுகின்ற ஒரு எண்
ணம் ஏற்படும், அதைவிடுத்து, அதிகாரிகள் செயல்படுவார்கள்
என்று சொன்னால் அவர்களுக்கு யாருடைய வாக்குகளும் வேண்
டாம். எனவே அவர்கள் அந்தத் தேர்தலைப் பற்றியோ, மக்க
ளுக்கு ஆற்றுகின்ற தொண்டினைப் பற்றியோ எண்ணாமல், அவர்



களுக்கு வருகின்ற லாபத்தை மாத்திரம் அவர்கள் கருத்திலே கொண்டு செயல்படுவார்கள். எனவே, உடனடியாக இந்த ஊராட்சி, ஊராட்சி ஒன்றியங்களுக்கான தேர்தலை நடத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இங்கே பேசிய நண்பர்கள், மாண்புமிகு உறுப்பினர்கள் குறிப்பிட்டதைப்போல கடந்த முறை 1984-லே நான் சட்டமன்ற உறுப்பினராக வந்த நேரத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்கள் 22 பேர்கள் சட்டமன்ற உறுப்பினர்களாக இருந்தார்கள். ஆனால் 1987-ல் அவர்கள் ஆட்சிக்கு வந்திருக்கிறார்கள். இன்றைக்கு நீங்கள் அறுதிப் பெரும்பான்மையாக இருக்கக் கூடும், உங்களுடைய செயல்பாட்டை வருகின்ற ஊராட்சி. ஊராட்சி ஒன்றியத் தேர்தல்களில் நிரூபிப்பதற்கு மக்கள் தயாராக இருக்கிறார்கள். ஆக, உங்களுடைய பணி சிறப்பாக இருக்க வேண்டும். ஆக, ஊராட்சி, ஊராட்சி ஒன்றியங்கள், மாநகராட்சி, நகராட்சிகளுக்கான தேர்தல் நடக்கின்றபோது நீங்கள் இந்த ஓராண்டு காலத்தில் ஆற்றிய தொண்டின் அடிப்படையில் மக்கள் வாக்களிப்பதற்குத் தயாராக இருக்கிறார்கள். எனவே தேர்தலில் வெற்றி தோல்வி என்பது சகஜம். அது எப்படி வந்தாலும் ஏற்றுக்கொள்கின்ற மனப்பக்குவம் எங்களுக்கு இருக்கிறது. உங்களைப் போல வென்றவுடன் ஆஹா, ஓஹோ நாங்கள் வென்றுவிட்டோம் என்று சொல்லவோ, தோல்வி அடைந்தவுடன் நாங்கள் தோற்றுவிட்டோம் என்று சொல்வதற்கு நாங்கள் தயாராக இல்லை என்று சொல்லவோ மாட்டோம். எனவே நடைபெற இருக்கின்ற தேர்தலை 6 மாத காலத்திற்குத் தள்ளி வைப்பதை நான் வன்மையாகக் கண்டித்து அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு தவறான கருத்தை இங்கே தெரிவித்திருக்கிறார். 1980-ல் நாடாளுமன்றத் தேர்தல் எப்படி நடந்தது, அதிலே அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்ற கழகம் இரண்டு இடம் தானே வந்தது என்று சொன்னார்கள். அது உண்மைதான். 1980-ல் நாடாளுமன்றத் தேர்தலில், காங்கிரஸுக்கும் எங்களுக்கும் கூட்டு இல்லை. ஆனால் ஜனதா கட்சிக்கும் எங்களுக்கும்தான் கூட்டு. (சிரிப்பு). 1980-ல் ஜனதாவுக்கும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் தான் கூட்டு. அப்பொழுது இந்தியா பூராவும் ஜனதா வெற்றிபெற்றால் நிலையான ஆட்சி இருக்காது. இரண்டே இரண்டு ஆண்டுகள் தான் அவர்களாலே இந்தியப் பேரரசிலே ஆட்சியில் இருக்க முடிந்தது. எனவே மீண்டும் ஜனதா ஆட்சி வந்தால், இரண்டு ஆண்டிலோ, ஒரு ஆண்டிலோ போய் விடும் என்றுதான் அன்றைக்கு மக்கள் எண்ணி ஜனதாவை எதிர்த்தார்கள். ஜனதாவோடு நாங்கள் சேர்ந்ததால் எதனோடோ

சேர்ந்த கன்றும் என்று சொல்வார்களே அது போன்று அவர்க ளோடு சேர்ந்த எங்களுக்கும் ஒரு படிப்பினையாக ஆயிற்று. அதற்குப் பிறகு நடந்த சட்டமன்றத் தேர்தலில் அதே ஆண் டிலே தன்னந்தனியாக இருந்து அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் வெற்றி பெற்று வந்திருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

முற்பகல் 10-30

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு வேளாண் மைத் துறை அமைச்சர்.

*மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வில்லன்கள் துள்ளுவதும் இறுதியில் வீழ்ந்து விடுவதும் இயற்கை. கருணாநிதி அவர்களுக்கு நல்ல ஒரு அறி வுரையை மாண்புமிகு உறுப்பினர் திரு. குமாரதாஸ் அவர்கள் வழங்கியிருக்கிறார். அவர்களுக்கு நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. செ. கு. தமிழரசன்.

திரு. செ. கு. தமிழரசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகராட்சிகள், மாநகராட்சிகள், உள்ளாட்சி மன்றங் களுக்கான தனி அலுவலர்களின் பதவிக் காலத்தை 6 மாதத்திற்கு நீட்டித்து மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற இந்த சட்டத் திருத்தத்தை நான் இந்தியக் குடியரசு கட்சியின் சார்பில் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இங்கே பேசிய மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர்கள் தேர்தல்கள் விரைந்து நடத்தப்பட வேண்டும் : உள்ளாட்சி மன்றங்களுக்கான தேர்தல்களை மிக விரைவாக நடத்தியாக வேண்டும் என்றெல்லாம் வலியுறுத்தி இருக்கிறார்கள். அவர்கள் ஒரு விஷயத்தை மறந்து விட்டு இங்கே பேசிக் கொண்டிருக்கிறார் கள். இந்தத் தேர்தலை இன்றைக்கு அரசு விரும்பினாலும்கூட நடத்த முடியாது. காரணம் இந்த உள்ளாட்சிகளில் தாழ்த்தப் பட்ட மக்களுக்கு இட ஒதுக்கீடு வேண்டும் என்று கோரி சென்னை உயர்நீதிமன்றத்தில் திரு. கந்தசாமி சிங் என்பவராலே வழக்கு தொடரப்பட்டு இந்தத் தேர்தலுக்குத் தடை விதிக்கப்பட்டிருக் கிறது என்பதை மறந்து, தேர்தலுக்கு இன்றைக்கு மிக தடையாக இருக்கிற ஒரு மையக் கருத்தை மறந்து, அவர்கள் தேர்தல் நடத்தி யாகவேண்டும் என்று கேட்டுக்கொண்டு இருக்கிறார்கள். ஆக, அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையிலே தான் மீண்டும் 6 மாத காலத் திற்கு இந்தத் தனி அலுவலர்களின் பதவிக் காலத்தை நீட்டித்து வைக்கலாம் என்று மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் இந்த தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். எனவே, அதை நான் மனப்பூர்வமாக வரவேற்கக் கடமைப் பட்டிருக்கிறேன்.





இதன் பேரில் சில கருத்துக்களை நான் சொல்ல விழைகிறேன். நம்முடைய சட்டமன்றம் இருக்கிறதே இந்த சட்டமன்றம் மிகத் தொன்மை வாய்ந்த சட்டமன்றம். இந்தியாவுக்கு முன் உதாரணமாக 1921 ஆம் ஆண்டிலேயே கம்யூனல் ஜி.ஓ. வகுப்பு வாரி பிரதிநிதித்துவம் என்று சொல்லப்படுகிறதை இந்தியா வுக்கு அறிமுகப்படுத்திய மாமன்றம், இந்த மாமன்றத்தில்தான் முதன் முதலில் இட ஒதுக்கீடு முறை கொண்டுவரப்பட்டது. அன்றைக்கு இந்த மாமன்றத்தில்தான் தாத்தா இரட்டைமலை சீனிவாசன் போன்றவர்கள், தந்தை சிவராஜ் போன்றவர்கள், பெரியவர் எம். சி. ராஜா போன்றவர்கள், உதகை முனுசாமிப் பிள்ளை போன்றவர்கள் எல்லாம் இந்த கம்யூனல் ஜி.ஓ.வுக்காகப் போராடி அதைத் திராவிட இயக்கத்தின் முதல் வெற்றியாக அன்றைக்குப் பெற்று இருக்கிறார்கள். மறைந்த தாத்தா இரட்டைமலை சீனிவாசன் அவர்கள், அவர்களுடைய சமாதியில் கூட இந்த கம்யூனல் ஜி.ஓ.-வை பொருத்தி வைக்க வேண்டுமென்று எழுதி வைத்துவிட்டு செத்து இருக்கிறார்கள். அப்படி போராடிப் பெற்றிருக்கிறார்கள். இதற்குப் பின்னாலே தான் இந்தியா விலே 1932-ல் உத்தமர் காந்திஜி அவர்களுக்கும் அண்ணல் அம் பேத்கார் அவர்களுக்கும் ஏற்பட்ட பூனா ஒப்பந்தத்தின் விளை வாக மற்றத் துறைகளில் இட ஒதுக்கீடுமுறை அமல் செய்யப் பட்டது. அந்த வழியில் இன்றைக்குத் தமிழகத்தில் இருக்கிற 99 நகராட்சிகளிலும், 386 ஊராட்சி ஒன்றியங்களிலும், 12,612 ஊராட்சிகளிலும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இட ஒதுக்கீடு கிடைக்க முடியாத நிலைமை இருக்கிறது.

முற்பகல் 10.35

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் இந்த முறையைக் கொண்டுவர வேண்டுமென்று விரும்பினார்கள். ஏதோ ஒரே நாளில் இதைக் கொண்டுவந்து விடவில்லை. ஏறக்குறைய 15-க்கு மேற்பட்ட சர்வ கட்சிக் கூட்டங்களை அவர்கள் நடத்தினார்கள். இந்த சர்வ கட்சிக் கூட்டங்களில் இன்றைக்கு இருக்கிற எல்லா அரசியல் கட்சிகளும் பங்கேற்றுக் கொண்டது. அனைத்து அரசி யல் கட்சிகளின் முழு ஒப்புதலோடுதான் அவர்கள் இந்தத் திட்டத்தைக் கொண்டு வந்தார்கள். இந்தத் திட்டத்தை அவர் கள் அறிமுகப்படுத்தியபோது, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு 18 சதவீதம், பெண்களுக்கு 15 சதவீதம், ஊராட்சித் தேர்தல்களில் ஒதுக்க வேண்டுமென்ற அந்தத் திட்டத்தை அவர்கள் அறிமுகப் படுத்தியபோது நாங்கள் கூட அவரை வாழ்த்துவதற்காகவும், பாராட்டுவதற்காகவும் நேரில் சென்றோம். அப்போது அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள். உங்களுக்காக நான் இதைக் கொண்டுவரவில்லை. என்னுடைய ஆத்ம திருப்திக்காக இதைக் கொண்டு வந்திருக்கிறேன் என்று பாராட்டப் போன எங்களிடம் சொன்னார்கள். சொல்லிவிட்டு அவர்கள் சொன்னார்கள், எனக்கு மிகப் பெரிய செல்வாக்கு இருக்கிறது என்றால், ஆதரவு

இருக்கிறது என்றால் அது பெண்களாலும், தாழ்த்தப்பட்ட மக்களாலும் தான். எனவே அவர்களுக்கு ஏதாவது செய்யவேண்டுமென்று நான் ஆத்ம திருப்தியோடு, ஆத்ம உணர்வோடு விரும்பியதனால்தான் இந்த இட ஒதுக்கீட்டு முறையைக் கொண்டு வந்தேன் என்று அவர்கள் அன்றைக்குச் சுட்டிக் காட்டியதை இன்றைக்கு நினைக்கிறபோது என்னைப் புல்லரிக்கச் செய்கிறது. அப்படிப்பட்ட ஒரு ஒப்புயர்வுத் திட்டமாக அதைக் கொண்டு வந்தார்கள். புரட்சித் தலைவி அவர்கள் இதை வலியுறுத்தி இருக்கிறார்கள். இந்த இட ஒதுக்கீட்டு முறையைப் பற்றி நான் இங்கே ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். அன்றைக்கு சிதம்பரத்திலே நந்தனார் கோயிலுக்குள்ளே போவதற்கு விரும்பியபோது, திருநாளைப் போவார் என்று அழைக்கப்படுகிற அவர் ஒருநாளும் அவர் அந்த கோயிலுக்குள் போக முடியாமல் வெளியே நின்று தரிசனம் கிடைக்காதா என்று ஏங்கியபோது, மாடு தின்னும் புலையா உனக்கு மார்கழி திருநாளா என்று ஏசியவர்கள் மத்தியிலே அவர் ''சந்நிதானம் மறைக்குதே சற்றே விலகி இரும் பிள்ளாய்'' என்று கதறிய அந்த வரலாறெல்லாம் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னாலே உண்டு. ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாக இருந்த அந்த ஒரு மாபெரும் பிரச்சினை, இன்றைக்கு ஒரு சமூகப் புரட்சிக்கு வித்திட்டு இருக்கிற தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் வேத ஆகமக் கல்லூரியிலேயே (மேசையைத் தட்டும் ஒலி) திராவிட இயக்கத்தின் பரிணாமமாக இருந்துகொண்டிருக்கிற அவர்கள், வேத ஆகமக் கல்லூரியிலேயே 18 விழுக்காட்டை ஒதுக்கி, இனி தாழ்த்தப்பட்டவன் கூட கோயிலிலே போய் வழிபடலாம் என்ற ஒரு மாபெரும் (மேசையைத் தட்டும் ஒலி) சரித்திரப் புரட்சியை ஏற்படுத்தி இருக்கிறார்களே, இதைத் திராவிட உணர்வு கொண்டவன், சமூகப் புரட்சியிலே நம்பிக்கை கொண்டவன், சமூக சீர்திருத்தத்திலேநம்பிக்கை உள்ளவன் ஒவ்வொருவனும் பாராட்டியே ஆக வேண்டும். பாராட்டத் தவறினால் அவன் சமுதாய விரோதி. (மேசையைத் தட்டும் ஒலி) அப்படிப்பட்ட ஒரு நிலைமையை இன்றைக்குத் தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் உருவாக்கியிருக்கிறார்கள். எனவே இந்த இட ஒதுக்கீட்டு முறையை நாம் கொண்டுவந்து தேர்தல் நடத்தினால்தான் அது சரியானதாக இருக்கும். அப்படிப்பட்ட ஒரு சிக்கல், அப்படிப்பட்ட ஒரு பிரச்சினை இன்றைக்கு அரசு முன்னால் இருந்துகொண்டு இருக்கிறது. நான் நேரடியாக ஒன்றைக் கேட்க விரும்புகிறேன். இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய உறுப்பினர் மாண்புமிகு திரு. பழனிசாமி அவர்கள் தேர்தல் நடத்தியாக வேண்டும் என்று சொல்கிறார். இந்த இட ஒதுக்கீடு பிரச்சினை பற்றி அவர்களுக்குக் கவலையில்லை. தேர்தல் நடத்தியாக வேண்டும் என்கிறார். இட ஒதுக்கீடு முறையே இல்லாவிட்டால் அவர் இந்த சட்டமன்றத்திற்கு வந்து இருக்க முடியாது. (மேசையைத் தட்டும் ஒலி) அவரே, அப்படிப்பட்ட ஒரு இட ஒதுக்கீட்டின் முறையால்தான் இங்கே வந்து இருக்கிறார். நான்



நேரடியாகவே கேட்க விரும்புகிறேன். ஜனதா தளம் ஆனாலும், வேறு எந்த எதிர்க்கட்சியானாலும், நீங்கள் இட ஒதுக்கீட்டு முறையை ஆதரிக்கிறீர்களா, இல்லையா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் தே. குமாரதாஸ்

டாக்டர் தே. குமாரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இட ஒதுக்கீடு பற்றி எங்களுக்குத் தெரிந்ததைவிட மாண்புமிகு உறுப்பினர் திரு. செ.கு. தமிழரசன் அவர்களுக்குத் தெரிய வாய்ப்புகள் இருக்க முடியாது என்று கருதுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் அந்த மாதிரி சொல்லக்கூடாது. உறுப்பினர் கருத்தைத் தெரிவிக்கிறார். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நண்பர் தமிழரசன், தாழ்த்தப்பட்ட மக்களுக்கும், ஆதி திராவிட சமுதாயத்திற்கும் இட ஒதுக்கீடு செய்யப்பட்ட பிறகே தேர்தல் நடத்த வேண்டுமென்று சொல்கிறார். நண்பர் குமாரதாஸ், இட ஒதுக்கீடு செய்து விட்டு தேர்தல் நடத்த வேண்டுமென்று சொல்கிறாரா, இட ஒதுக்கீடு இல்லாமல் முன்பு இருந்ததைப் போலவே தேர்தல் நடத்த வேண்டும் ; அவர்களுக்கு என்று தனியாக இட ஒதுக்கீடு தேவையில்லை என்று சொல்கிறாரா என்று அறிய விரும்புகிறேன்.

டாக்டர் தே. குமாரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இட ஒதுக்கீடு தேவைதான். அதில் எங்களுக்குக் கருத்து வேறுபாடு இல்லை. அரசு முன்னின்று, வேகமாக, தேங்கிக் கிடக்கிற வழக்குகளை டிஸ்போஸ் செய்து, அந்தத் தேர்தலை ஏன் நீங்கள் நடத்துவதற்குத் தயங்குகிறீர்கள் என்பது தான் என்னுடைய கேள்வி. தேர்தல் நடத்துவதாக இருந்தால், உடனடியாக, நீதித் துறையிடம் சொல்லி நடத்த வேண்டும். ஸ்டே, ஸ்டே என்று சொல்லி, 5 ஆண்டுகளை ஸ்டே மூலம் ஓட்ட நினைக்கிறீர்களா அல்லது ஸ்டேயை வெகேட் பண்ணி உடனே தேர்தல் நடத்த நினைக்கிறீர்களா என்பதை நான் அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஜி. பழனிசாமி.

திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. கு. தமிழரசன் அவர்கள் பேசுகிறபோது, தாழ்த்தப்பட்டவர்களுக்கான இட

[திரு. ஜி. பழனிசாமி] [1992 மார்ச் 27

ஒதுக்கீடு காரணமாகத்தான் இந்த உள்ளாட்சித் தேர்தல், மார்ச் மாதம் 31 ஆம் தேதியிலிருந்து செப்டம்பர் மாதம் 30 ஆம் தேதி வரைக்கும் ஒத்திவைக்கப்படுகிறது என்றும், தனி அலுவலர்கள் நியமிக்கப்படுவதாகவும், அவருடைய கருத்தை இங்கே வலியுறுத்துகிறார். இது அப்படியல்ல. ஏற்கெனவே ஒத்திவைக்கப்பட்டிருக்கிற 6 மாத கால அவகாசம் முடிந்த காரணத்தால் மேலும் 6 மாத காலத்தை நீட்டிப்பதற்காகத்தான் ஒத்தி வைக்கப்படுகிறதே தவிர, ஏதோ தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இட ஒதுக்கீடு கிடைக்காத காரணத்தால் தான் ஒத்திவைக்கப்பட்டதாக அவருடைய கருத்தை இங்கே வலியுறுத்துகிறார். இந்தச் சட்ட முன்வடிவுக்கு மாறான கருத்தை இந்தச் சபையிலே மாண்புமிகு உறுப்பினர் கொண்டுவருகிறார் என்பதனை உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சட்ட அமைச்சர்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. மாண்புமிகு உறுப்பினர் திரு. குமாரதாஸ் அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். நீதி மன்றத்திலே தடை வாங்கப்பட்டிருக்கிறது; அதனைத் துரிதப்படுத்த வேண்டுமென்று சொன்னார்கள். ஆனால். அந்தத்தடை வாங்கியவர்களே இவர்களது தோழமைக் கட்சி தி.மு.க. என்பதை இந்த நேரத்திலே சொல்லிக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, இவர்கள் தி.மு.க. இடத்திலே சொல்லி அந்த வழக்கை வாபஸ் வாங்கியதற்குப் பின்னால், அரசு பரிசீலனை செய்வதற்கு வசதியாக இருக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் தே. குமாரதாஸ்.

டாக்டர் தே. குமாரதாஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேர்தலில் கூட்டணி என்பது வேறு. எல்லாவற்றுக்கும் நாங்கள் போய் நின்றுகொண்டு யாரிடமும் கை நீட்ட முடியாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் அவர்களுக்காக ஏதேதோ இங்கே வந்து வக்காலத்து வாங்குகிறீர்களே, இதையும் சேர்த்துச் செய்யுங்கள் என்று அமைச்சர் தெரிவிக்கிறார். . திரு. செ. கு. தமிழரசன்.

திரு. செ. கு. தமிழரசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் தவறான கருத்தைச் சொல்லவில்லை. இன்றைக்கு அரசே விரும்பினாலும்கூட தேர்தலை நடத்திட முடியாது.



1992 மார்ச் 27] [திரு. செ. கு. தமிழரசன்]

தடை உத்தரவு இருக்கிறது. அப்படிப்பட்ட ஒரு சிக்கல் இருக்கிறது. எனவே, அந்தப் பிரச்சினை குறித்து உங்கள் கருத்து என்ன என்றுதான் நான் கேட்க விரும்புகிறேன். இது தவறான கருத்து அல்ல.

முற்பகல் 10-40

டாக்டர் தே. குமாரதாஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசே விரும்பினாலும்கூட தேர்தலை நடத்த முடியாது என்று சொல்கிறார்கள். அப்படியென்றால் அரசு விரும்பவில்லை என்று சொல்கிறாரா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதெல்லாம்-வார்த்தைக்கு வரார்த்தைஅரசு சொல்ல வேண்டியது.

திரு. செ. கு. தமிழரசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டத் திருத்தங்களைக் கொண்டு வருகிறபொழுது' அந்தச் சட்டத் திருத்தத்திலே காரணங்களைச் சொல்லி எந்தச் சட்டத் திருத்தத்தையும் கொண்டுவர முடியாது. ஆறு மாத காலத்திற்கு நீட்டிக்க வேண்டும் என்று கேட்பார்களே தவிர, அதற்குரிய காரணங்களை அதிலே சொல்வது என்பது நம்முடைய சட்டமன்ற மரபு அல்ல. எனவே தான், அந்த வெறும் திருத்தத்தை அவர்கள் கொண்டு வந்திருக்கிறார்கள். இந்தப் பின்னணியெல்லாம் இருக்கிறது என்பதற்கு நான் எடுத்து விளக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுமட்டுமல்ல, இன்றைக்கு நம்முடைய மறைந்த அமரர் இராஜிவ் காந்தி அவர்கள் பஞ்சாயத்து ராஜ் என்று கொண்டு வந்தார்கள். அதன்படி இந்தியா முழுவதும் எல்லா மாநிலங்களிலும் இந்த இட ஒதுக்கீடு முறையை உள்ளாட்சியிலே கொண்டு வந்து விடலாம். அதை ஒரு அரசியல் சட்டத்திற்குள்ளாகவே கொண்டு வந்து விடலாம் என்று அவர்கள் விரும்பினார்கள். அதற்குப் பிறகு இப்பொழுது சட்டத் திருத்தம் பாராளுமன்றத்திலே அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிறது. விரைவிலே அந்த பஞ்சாயத்து ராஜ் ஆக்ட் பாராளுமன்றத்திலே நிறைவேற்றப்பட இருக்கிறது. அது வெகு விரைவிலே, ஒரு ஆறு மாத காலத்திலே கூட நடக்கலாம். எனவே, அப்படியொரு நிலைமை அங்கே வருகிறபொழுது மீண்டும் நாம் இங்கே ஒரு தேர்தலை நடத்த வேண்டியிருக்கும். எனவே, அந்த அரசியல் சட்டத் திருத்தமும் பாராளுமன்றத்திலே வந்துவிட்டால் நமக்கு நடத்துவதற்கு வசதியாக இருக்கும்.

இன்றைக்குக்கூட நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். இந்தியாவிலே பெரிய மாநகராட்சி பம்பாய் மாநகராட்சி. அந்த பம்பாய் மாநகராட்சிக்கு இன்றைக்கு இந்திய தேசிய காங்கிரஸ்

[திரு. செ. கு. தமிழரசன்] [1992 மார்ச் 27

கட்சியினுடைய உதவியோடு ஒரு தாழ்த்தப்பட்டவர், அதுவும் எங்கள் கட்சிக்காரர்— குடியரசுக் கட்சிக்காரர் மாநகராட்சித் தந்தையாக போன வாரம் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார். பெரிய மாநகராட்சி. எனவே, இப்படி வாய்ப்புகளெல்லாம் வருவதற்கு வழி இருக்கிறபொழுது, ஒரு மிகப்பெரிய மக்கள் சமுதாயத்தை நாம் புறக்கணித்துவிடக் கூடாது, இப்படிப் பட்ட சட்டப் பிரச்சினையிலே இதை நீட்டித்து வைப்பது மிக மிக அவசியம்.

பக்கத்திலே இருக்கிற ஆந்திராவிலே கூட இப்படிப்பட்ட ஜில்லா பரிஷத் என்று சொல்லப்படுகின்ற உள்ளாட்சிகளிலே இட ஒதுக்கீடு இருக்கிறது. நாம் ஒரு கமிட்டியைக் போட்டு, பிற மாநிலங்களிலே ஆய்ந்து இங்கே கூட கொண்டு வருவதற்குக் கொஞ்சம் அவகாசம் எடுத்துக் கொள்ளலாம். எனவே, இந்தச் சட்டமுன்வடிவை நான் பாராட்டி, வரவேற்று, எவ்வளவு காலமானாலும் பரவாயில்லை, நீங்கள் இந்த இட ஒதுக்கீடு முறைக்குப் பிறகு தேர்தலை நடத்தினால் அது மக்களுக்கு நாம் செய்கிற மிகப் பெரிய நன்மையாக இருக்கும் என்று சொல்லி, பாராட்டி, வரவேற்று அமர்கிறேன். நன்றி. வணக்கம்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> திரு. ச. காந்திராஜன்.

<u>*திரு. ச. காந்திராஜன் :</u> மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இன்று மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சரவர்களால் ஊராட்சிகள், நகராட்சிகள் மற்றும் ஊராட்சி மன்றங்களுக்காகத் தனி அதிகாரிகளினுடைய நியமனத் திருத்தம் குறித்து கொண்டு வந்துள்ள சட்ட முன்வடிவுகள் 8-92, 9-92 மற்றும் அதனைச் சார்ந்துள்ள முன்வடிவுகளின் மீது ஆளுகின்ற அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக இது வரவேற்கத்தக்கது என்கின்ற வகையிலே என்னுடைய சில கருத்துக்களைச் சொல்ல விழைகிறேன்.

இன்றையதினம் இந்தச் சட்டமுன்வடிவுகள் கொண்டுவரப் படுகின்றபொழுது ஒன்றைக்கூற விரும்புகிறேன். இங்கே ஏற்கனவே நம்முடைய மரியாதைக்குரிய மாண்புமிகு தமிழகத்தினுடைய முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் தாங்கள் பதவிக்கு வந்தவுடனேயே ஜனநாயகத்தின் மீது நம்பிக்கை கொண்டுள்ள கட்சி என்ற காரணத்தின் அடிப்படையில் உடனடியாக இந்த உள்ளாட்சி மன்றங்களுக்கான தேர்தல்களையும், மாநகராட்சி, நகராட்சி மன்றங்கள் மற்றும் அதனைச் சார்ந்து உள்ளவைகளுக்கான தேர்தல்களையும் நடத்துவதற்கு, அதற்கான அறிவிப்பை வெளியிட்டார்கள். இருந்தாலும்கூட, காலச் சூழ்நிலையில் திடீரென்று ஏற்பட்ட காவிரிப் பிரச்சினையின் காரணமாக அன்றைய தினம் அந்தத் தேர்தல் ஒத்தி வைக்கப்பட்டது என்பதை இங்கே இருக்கின்ற மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களும்,



1992 மார்ச் 27]

[திரு. ச. காந்திராஜன்]

இந்த நாட்டு மக்களும் அறிவார்கள். இருந்தாலும்கூட, அதற்குப் பின்னாலே இன்றைய தினம் அதனுடைய காலம் 6 மாதம் முடிகின்ற தறுவாயில் இதனை நீட்டிக்கின்ற இந்த நேரத்தில் இங்கே அதற்கான காரணங்களும் சொல்லப்பட்டிருக்கின்றன.

தற்போது வரவு - செலவுத் திட்டத்தினுடைய கூட்டத் தொடர் நடந்து கொண்டிருக்கிற காரணத்தினாலே, மிகவும் குறுகிய காலத்திற்குள்ளாக ஏற்கெனவே போடப்பட்ட சட்டங்கள் 28/91, 33 மற்றும் 14/91 என்கிற சட்டத்தினுடைய காலங்கள் முடிவடைகின்ற காரணத்தினாலே, இப்பொழுது குறுகிய காலம் மட்டுமே இருக்கின்ற காரணத்தாலேயும் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சரவர்கள் இந்தச் சட்ட முன்வடிவை இன்றையதினம் இங்கே கொண்டு வந்திருக்கிறார்கள்.

இருந்தபோதிலும்கூட இங்கே பல்வேறு மாண்புமிகு உறுப்பினர்களெல்லாம் பல்வேறு கருத்துக்களைத் தெரிவித்திருந்தாலும் கூட, சட்டமன்றக் கூட்டத் தொடரானது ஏப்ரல் மாதம் 28-ஆம் தேதி வரை நடைபெறவுள்ள சூழ்நிலையையும் நாம் கருத்திலே கொண்டாக வேண்டும். எனவே, மார்ச் 31-ஆம் தேதி முடிவடைகின்ற இந்தச் சட்டத்தினை நீட்டிப்பது என்பது காலத்தின் கட்டாயம் என்பதையும் நாம் உணர்ந்தாக வேண்டும்.

முற்பகல் 10-45

அதுமட்டுமல்ல ; அதற்குப் பின்னாலே இன்றையதினம் சென்னை உயர்நீதிமன்றமானது, இங்கே கூட்டுறவுத் தேர்தல்களை மே மாதம் 31-ஆம் தேதிக்குள் நடத்த வேண்டுமென்கிற தீர்ப்பினை ஏற்கனவே தெரிவித்திருக்கிற காரணத்தினாலே, அமைச்சர்களும், சட்டமன்ற உறுப்பினர்களும் கூட்டுறவு அமைப்புகளைச் சார்ந்த அதிகாரிகளும், அதிலே முழுமையாக ஈடுபட்டிருக்கிற காரணத்தினாலே, அந்தத் தேர்தலையும் இப்போது நடத்த முடியாது என்கிற காரணத்தினாலேதான் 6 மாத காலம் தனி அலுவலர்களுடைய பதவிக் காலத்தை நீட்டிப்பு செய்வது கட்டாயம் என்பதை இந்த நேரத்திலே சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். இப்படிப்பட்ட சூழ்நிலைகளில் கால நீட்டிப்பு செய்கிறபோது, இங்கே மாண்புமிகு குமாரதாஸ் அவர்கள், இதனை உள்நோக்கம் கற்பிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் பேசியதைப் போல— பல்வேறு நபர்கள் நாளையே பல கடிதங்களை எழுதக் கூடும்; அப்படிப்பட்டவர்களுக்கெல்லாம் நான் சொல்லிக் கொள்வேன் ; நிச்சயமாக ஜனநாயகத்தின்மீது மிகுந்த நம்பிக்கையும், நல்ல ஆர்வமும் கொண்டிருக்கிற நம்முடைய மரியாதைக்குரிய புரட்சித் தலைவி அவர்கள் இன்று மட்டுமல்ல, தேர்தலைச் சந்திப்பதற்கு எந்தக் காலத்திலுமே, எதிர்க்கட்சியாக இருந்த போதிலும் சரி, ஆளுங்

கட்சியாக இருந்தாலும் சரி, (மேசையைத் தட்டும் ஒலி), தயங்கியதில்லை. நாட்டுமக்களுக்கு அடிப்படை நோக்கங்களை நிறைவேற்றுகிற வாய்ப்பாக இந்த உள்ளாட்சி நிறுவனங்கள் இருக்கிற காரணத்தினால், அதை நிறைவேற்ற வேண்டும் ; தேர்தலை நடத்த வேண்டும் என்கிற காரணத்தினாலேதான், அதற்காகத்தான் இந்த 6 மாத கால நீட்டிப்பைச் செய்வதோடு, அதற்கு முன்னுதாரணமாகத்தான், வந்தவுடனே தேர்தலை அறிவித்தார்கள் என்பதை நாம் கருத்திலே கொண்டாக வேண்டும். இப்போதுள்ள சூழ்நிலைகள் பற்றியும் நான் ஒரு சில கருத்துக்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

என்னுடைய தொகுதியாக இருக்கிற வேடசந்தூர் மட்டுமல்ல ; தென் பகுதிகள், தென் மாவட்டங்கள் அனைத்தும் இன்றையதினம் குடிநீர் கூட இல்லாத ஒரு அவலநிலையில், மோசமான சூழ்நிலையில் இருந்து கொண்டிருக்கின்றன. அவ்வளவு கடுமையான வறட்சி இருக்கிற காரணத்தினால், தென் மாவட்டங்களிலே இருக்கிற மக்கள் கால்நடைகளை எல்லாம் விற்கிற ஒரு கொடுமையான மோசமான சூழ்நிலை இருந்து கொண்டிருக்கிறது இப்படிப்பட்ட நேரத்தில், அங்கே உள்ளாட்சித் தேர்தலை வைத்தால், நிச்சயமாக மக்களும் அதனை விரும்ப மாட்டார்கள் என்று ஆணித்தரமாக, உறுதியாக அவர்களுடைய எண்ணங்களை இங்கே நான் தெரிவித்தாகவேண்டும். எனவே, இப்படிப்பட்ட காலகட்டத்தில்தான், சிலர் இந்த அரசாங்கம் நல்லதைச் செய்தாலும் சரி, எதைச் செய்தாலும் சரி, அதற்கெல்லாம் ஒரு காரணத்தையும் மாசையும் கற்பிக்க வேண்டுமென்ற கெட்ட நோக்கத்தோடு செயல்படுகிறார்கள். நாளையே கடிதங்களை எழுதுவார்கள். தம்பி, நீங்கள் தேர்தலுக்குத் தயாராக இருந்தாலும்கூட, பார்த்தீர்களா ? என்று தொடங்கி, பல்வேறு கருத்துக்களையெல்லாம் எழுதுவார்கள். நான் அவர்களுக்கு ஒன்றைச் சொல்லிக் கொள்கிறேன். ஜனநாயகத்தின்மீது நம்பிக்கை கொண்ட இயக்கம், எங்களுடைய அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக இயக்கம். அதனுடைய அரசாங்கம்தான் இன்றையதினம் ஆட்சி செய்து கொண்டிருக்கிறது. அதனுடைய தலைமையாக ஒப்பற்ற புறநானூற்றில் பாடப்பெற்ற போர்ப்படைத் தளபதிகளாக மாண்புமிகு அமைச்சர்கள், எங்களுடைய மரியாதைக்குரிய மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் பின்னாலே செயல்பட்டுக் கொண்டு இருக்கிறார்கள். நான் எதிர்கட்சியைச் சார்ந்தவர்களுக்கெல்லாம் ஒன்றைச் சொல்லிக் கொள்வேன்; நிச்சயமாக இன்றையதினம் தேர்தல் நடந்தால், நாங்கள் தான் ஜெயிப்போம் என்ற அந்த உறுதியையும் இந்த





நேரத்திலே சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஏதோ, நான் இதை ஒரு வெறும் விவாதமாகச் சொல்லவில்லை. கடந்த காலத்தை எண்ணிப் பாருங்கள். ஜனநாயகத்தின் மீது பற்று உடையவர்கள் என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள், இங்கே இருக்கிற மாண்புமிகு குமாரதாஸ் அவர்களும், பழனிசாமி அவர்களும். ஆனால், கடந்த கால ஜனநாயகத்தைப் பற்றிச் சற்று சிந்தித்துப் பாருங்கள். ஜனநாயகம் இந்த அவையிலே குழிதோண்டி புதைக்கப்பட்ட அந்தக் காலத்தை நீங்கள் சிந்தித்துப் பாருங்கள். அதற்குப் பிறகு, எதிர்க் கட்சித் தலைவியாக இருந்த ஒரு தலைவியை, எங்களுடைய தானைத் தலைவியை, உத்தமத் தலைவியை, புரட்சித் தலைவி அவர்களைக் கொல்ல நினைத்து, லாரியை விட்டு மோதச் செய்து, ஜனநாயகத்தைக் குழிதோண்டிப் புதைத்ததையும் சிந்தித்துப் பாருங்கள். எனவே, அப்படிப்பட்ட அந்தத் திராவிட முன்னேற்றக் கழகமும் சரி, அதனைச் சார்ந்திருக்கிற நீங்களும் சரி, இன்றைய தினம் அந்தத் தேர்தல்களிலே......

திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவ்வாறு கொல்ல முயற்சித்தவர்கள் நீங்கள் என்று அவர் சொன்னதாக இருந்தால் நீங்கள் ஆட்சேபனை தெரிவிக்கலாம். அவர் உங்களைச் சொல்லவில்லை ; உங்களைச் சார்ந்தவர்களைச் சொல்கிறார்.

திரு. மா. சுந்தரதாஸ் : இவர்களும் சார்ந்தவர்கள் தான்.

திரு. ஜி. பழனிசாமி : எப்போதுமே, அராஜகத்திற்கு நாங்கள் துணைபோகிறவர்கள் அல்ல.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஜி. பழனிசாமி! நீங்கள் உட்காருங்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

முற்பகல் 10-50

*மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவாதம், இங்கே உள்ளாட்சித் தேர்தல் நடத்துவது பற்றியதாகும். கடந்த ஆண்டு ஆட்சிப் பொறுப்பேற்றவுடனேயே, ஆகஸ்ட் மாத

இறுதிக்குள் பட்ஜெட் கூட்டத் தொடர் தொடங்குவதற்கு
முன்னாலேயே உள்ளாட்சி மன்றத் தேர்தல்களை நடத்த
வேண்டுமென்று முடிவு செய்து. அறிவிக்கப்பட்டபோது,
மாண்புமிகு உறுப்பினர் குமாரதாஸ் அவர்களும் மாண்புமிகு
உறுப்பினர் பழனிசாமி அவர்களும் சார்ந்திருந்த
கட்சிகள், அதை ஆதரித்தார்களா ? அப்போது இவர்கள்
சார்ந்திருக்கிற கட்சிகளும், திராவிட முன்னேற்றக்
கழகமும், பாட்டாளி மக்கள் கட்சியும், '' ஏன் இவ்வளவு
அவசரப்படுகிறார்கள் ? அனைத்திந்திய அண்ணா திராவிட
முன்னேற்றக் கழக அரசு உள்ளாட்சி மன்றத் தேர்தல்களை
நடத்துவதற்கு ஏன் இவ்வளவு அவசரம் காட்டுகிறது?
இவ்வளவு அவசரப்பட்டு அந்தத் தேர்தல்களை நடத்தக்
கூடாது '' என்று எதிர்த்தார்களா இல்லையா என்பதை
இங்கே நினைவுகூர்ந்து தெளிவாக்க வேண்டும் என்று
கேட்டுக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஜி. பழனிசாமி.

திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள்
சொல்வதை நான் ஏற்றுக் கொள்கிறேன். சட்டமன்ற,
நாடாளுமன்றத் தேர்தல்கள் நடந்து முடிந்த ஒரு மாதத்
திற்கு உள்ளாக உள்ளாட்சி அமைப்புகளின் தேர்தல்களை
நடத்த வேண்டுமென்று சொல்லி அரசு உத்தரவிட்டது.
அதோடு மட்டுமல்ல. உள்ளாட்சி அமைப்புகளின்
தேர்தல்களை நடத்துவதற்காக மட்டும் உத்தரவிடவில்லை.
அதே நேரத்தில் சட்டமன்றத்திற்கான இடைத்
தேர்தலுக்கான தேதியையும் அறிவித்தார்கள். அந்தத்
தேதியே உள்ளாட்சி மன்றத் தேர்தல்களுக்கும், சட்ட
மன்ற இடைத் தேர்தலுக்கும் உட்பட்டிருந்தது. ஆனால்,
தொடர்ந்து வருடத்திற்கு ஒரு தேர்தல் என்பதைச்
சந்தித்த மக்கள் ஒருமாத கால அவகாசத்திற்குள்ளாக
இந்தத் தேர்தலைக் கொண்டு வருவது சரியில்லை
என்பதைத்தான் எங்களுடைய கட்சியின் கருத்தாகச்
சொன்னோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு முதல்வர்
அவர்கள்,

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, அந்த நேரத்தில் இந்த
அறிவிப்பு செய்யப்பட்டபோது, பொதுமக்கள் அதற்கு
எந்தவிதமான எதிர்ப்பும் தெரிவிக்கவில்லை. நாங்கள்



அடியோடு துடைத்து எறியப்படுவோம், துடைத்துவிடப்
படுவோம் என்று பயப்பட்டு, எதிர்க்கட்சிகள்தான் இதற்கு
எதிர்ப்புத் தெரிவித்தன என்பதை மீண்டும் நினைவுகூர
விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, நாங்கள் நிச்சயமாக இப்போது
சொல்லுகிறோம். நீங்கள் தேர்தலை வையுங்கள், நாங்கள்
சந்திக்கத் தயாராக இருக்கின்றோம். நீங்கள் தேர்தலைச்
சந்திக்க பின்வாங்குவதால்தான் அந்தத் தேர்தலை ஒத்தி
வைக்கிறீர்கள். தவிர, இன்று ஏறியிருக்கிற
விலைவாசிகளால் மக்களை சந்திப்பதற்குப் பயந்துதான்
பின்வாங்குகிறீர்கள்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, நிச்சயமாக இந்த அரசு
தேர்தல்களைச் சந்திக்கப் பயந்து பின்வாங்குகிற அரசு
அல்ல. (மேசையைத் தட்டும் ஒலி) எந்தக் காலகட்டத்திலும்
தேர்தல்களைச் சந்திக்க நாங்கள் பின்வாங்க
மாட்டோம். இவர்கள் ஏன் உண்மையை மூடிமறைக்க
முயலுகிறார்கள் ? கடந்த ஆண்டு, சட்டமன்ற, நாடாளு
மன்றத் தேர்தல்கள் முடிந்த உடனேயே, 1½ மாத
காலத்திற்குள் உள்ளாட்சித் மன்றத் தேர்தல்களும், சட்ட
மன்ற இடைத் தேர்தல்களும் நடைபெறும் என்று
அறிவித்தோம். அவற்றைச் சந்திப்பதற்கு நாங்களும்
தயாராக இருந்தோம். ஆனால், தமிழகத்தில் உள்ள
எதிர்க்கட்சிகளில் ஒரு கட்சி கூட அந்த நேரத்தில்
தேர்தல்களைச் சந்திக்கத் தயாராக இருக்கவில்லை.
(மேசையைத் தட்டும் ஒலி) அன்றைக்கு வெளிவந்த
பத்திரிகைகளை எடுத்துப் பார்த்தாலே தெரியும்.
ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு பத்திரிகையிலும் இப்போது
அரசுக்கு, இந்த ஆட்சிக்கு ஏன் இவ்வளவு அவசரம் ?
இப்போது உள்ளாட்சித் தேர்தல்களை நடத்தக்கூடாது
என்றுதான் திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டிருந்
தார்கள். அதன் பின்னர், விலைவாசி ஏற்றத்தினாலேயோ,
வேறு எந்தக் காரணத்தினாலேயோ உள்ளாட்சி மன்றத்
தேர்தல்களை நடத்துவதற்குத் தயங்கி, பயந்து பின்வாங்கி
நாங்கள் இதுவரை ஒத்திப்போடவில்லை, அதன் பிறகு,
மூன்று சட்டமன்றக் கூட்டத் தொடர்கள் நடைபெற்று
விட்டன. நான்காவது சட்டமன்றக் கூட்டத்தொடர்—
பட்ஜெட்— இப்போது நடைபெறுகிறது. அதாவது ஆட்சிப்
பொறுப்பேற்ற 8 மாத காலத்திற்குள்ளேயே இரண்டு
முறை, ஆளுநர் உரை, அதற்கான சட்டமன்றக் கூட்டத்
தொடர்கள், இரண்டு முறை பட்ஜெட்டைச் சமர்ப்பிக்க

வேண்டிய கட்டாயம் வேறு எந்த அரசுக்கும் இதுவரை ஏற்பட்டது இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி) சரித்திரத்திலேயே முதன்முறையாக, 8 மாத காலத்திற்குள் நான்கு சட்டமன்றத் தொடர்களை இந்த அரசு நடத்த வேண்டிய ஒரு கட்டாயத்திற்கு உள்ளாக்கப்பட்டு, இப்போது அதை நடத்திக் கொண்டிருக்கிறோம். இதையெல்லாம் ஏற்கனவே விவரமாகத் தெளிவாக்கியிருக்கிறேன். இந்த பட்ஜெட் கூட்டத் தொடர் முடிவதற்கே ஏப்ரல் மாதம் இறுதியாகிவிடும். அதன் பின்னர், சென்னை உயர் நீதிமன்றம் இட்டுள்ள உத்திரவின்படி மே 31 ஆம் தேதிக்குள் கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல்களை நடத்தியாக வேண்டும். எனவே, மே 31 ஆம் தேதி முடிந்த பிறகுதான் உள்ளாட்சி மன்றத் தேர்தல்களை நடத்த முடியும். அதன் பின்னர் நடத்திக்காட்டுகிறோம் (மேசையைத் தட்டும் ஒலி). உங்களுக்குத் துணிவு இருந்தால், உங்களுக்கு அந்தச் சாமர்த்தியம் இருந்தால், நீங்கள் எங்களைத் தேர்தல் களத்தில் சந்தித்து, வென்று பாருங்கள் என்று இந்த நேரத்தில் கூறிக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> திரு. சா. காந்திராஜன், (குறுக்கீடு)

<u>டாக்டர் தே. குமாரதாஸ் :</u> பேரவைத் தலைவர் அவர்களே........

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> அவர் கேட்டார். நீங்கள் ஒவ்வொன்றுக்குப் எழுந்து நிற்கக் கூடாது. திரு. ஜி. பழனிசாமி அவர்கள் பேசியதற்கு, மாண்புமிகு முதல்வர் அவர்கள் பதில் சொல்லியிருக்கிறார்கள், அதற்கு அவர் திரும்ப பதில் சொல்லி இருக்கிறார், திரு. சா. காந்திராஜன்.

<u>திரு. ச. காந்திராஜன் :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே......

முற்பகல் 10-55

<u>மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய ஆட்சேபனையே என்னவென்றால, நாங்கள் நடத்துகிறோம் என்று சொன்ன நாட்களில் இவர்கள் கூடாது, கூடாது என்று கூக்குரலிட்டார்கள். இன்றைக்கு மே 31 ஆம் தேதி வரை



நடத்த முடியாது என்பதை இவர்களே தெரிந்து கொண்டிருக்கின்றார்கள். அப்படித் தெரிந்து கொண்டும்கூட, "நடத்துங்கள், நடத்துங்கள்" என்றால் என்ன அர்த்தம் ?

<u>டாக்டர் தே. குமாரதாஸ் :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.......

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> நீங்கள் இதிலே சம்பந்தப்படவில்லை. திரு. ஜி. பழனிசாமி அவர்கள்தான் சம்பந்தப்பட்டு இருக்கின்றார்கள். திரு. ஜி. பழனிசாமி அவர்கள்தான் இந்த விவாதத்திற்குச் சம்பந்தப்பட்டிருக்கிறாரே தவிர. நீங்கள் இல்லை. (குறுக்கீடு) திரு. ச. காந்திராஜன்.

<u>டாக்டர் தே. குமாரதாஸ் :</u> பேரவைத் தலைவர் அவர்களே, நான் இவ்வளவு தூரம் (குறுக்கீடு)

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> உட்காருங்கள். தயவுசெய்து உட்காருங்கள். நான் உட்காரச் சொன்னதற்குப் பிறகு (குறுக்கீடு) நீங்கள் பதில் பேசிக் கொண்டிருக்கக்கூடாது. உட்காருங்கள். அவர் பேசுகிறார். திரு. ச. காந்திராஜன்.

<u>திரு. ச. காந்திராஜன் :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களைப் பற்றி நான் சொல்வதற்குக் காரணம், ஜனநாயகத்தின் மீது நம்பிக்கை இல்லாதவர்கள் உங்கள் கட்சிக்காரர்கள் என்று சொல்வதற்குக் காரணமே, அன்றையதினம் புரட்சித் தலைவி அவர்களை நேரடியாக சந்திக்கமுடியாத அவர்கள், அந்தத் தைரியம் இல்லாதவர்கள். அவர்களை உயிரோடு விட்டு வைத்திருந்தால்தானே, இந்த நாட்டிலே அவர்கள் உலவ முடியும் என்கிற காரணத்தினாலே, ஜனநாயகத்தில் நம்பிக்கை இழந்த அவர்கள் அந்த கொலைவெறித் தாக்குதல்களை இந்தச் சட்டமன்றத்திலே செய்தார்கள். இது தமிழக சட்டமன்ற வரலாற்றிலே ஒரு சோக சம்பவமாக நடைபெற்றது. அப்படிப்பட்ட சம்பவங்களை இங்கே செய்தார்கள் என்பதற்காகத்தான் நான் இன்றையதினம் கோடிட்டுக் காட்டுகிறேன். அப்படிப்பட்ட சூழ்நிலையிலே கூட எங்களுடைய மதிப்பிற்குரிய தமிழகத்தினுடைய முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், அன்றையதினம் தன்னந்தனியாக நின்று மதுரையிலே, மருங்காபுரியிலே உங்களை வெற்றி கண்டார்களா இல்லையா என்பதுதான் என்னுடைய கேள்வி.. எனவே இப்படிப்பட்ட உயிருக்கு ஆபத்தான சூழ்நிலையிலேகூட தன்னந்தனியாக நின்று, உங்களையெல்லாம் புறமுதுகிட்டு ஓடச்செய்தவர்கள்

[திரு. ச. சந்திரராஜன்] 1992 மார்ச் 27]

எங்களுடைய புரட்சித் தலைவி என்ற காரணத்தினாலே தான் தேர்தலுக்கு எந்த சூழ்நிலையிலும், என்றைய சூழ் நிலையிலும் அவர்கள் பயந்தது கிடையாது என்பதைத் தான் மறுபடியும் நான் இங்கே சொல்ல ஆசைப்படுகிறேன். இன்றையதினம் இந்தத் தேர்தலை எப்போது வேண்டு மானாலும், சந்திக்க தயாராக இருக்கிறோம். இங்கே மதிப்பிற்குரிய தமிழகத்தினுடைய முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் சொன்னது போல அவர் சந்திக்கத் தயாராக இருக்கிறாரா என்கின்ற அந்த எங்கள் கேள்விக்கு பதில் சொல்லாமல் நீங்கள் எங்கேயோ சுற்றி வளைத்துக்கொண்டு போகிறீர்கள். வேண்டுமென்றே தவறான திசைக்குப் போய்க்கொண்டிருக்கிறீர்கள் என்பதை மட்டும் இந்த நேரத்திலே சொல்லிக்கொள்கிறேன். அது மட்டுமல்ல, இங்கே மாண்புமிகு குமாரதாஸ் அவர்களும், மாண்புமிகு திரு. பழனிசாமி அவர்களும் சொன்னார்கள், பல்வேறு பிரச்சினைகளைக் கூறி தேர்தலைச் சந்தியுங்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். நான் ஒன்றை மட்டும் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். உங்களுடைய சோதனைக்காகத்தான் பழனி பாராளுமன்ற இடைத் தேர்தல் வர இருக்கிறது. நாங்கள் இன்றையதினம் சொல்லிக்கொள்கிறோம். இன்னும் பல நாட்கள், பல நாட்கால அவகாசம் உங்களுக்கு இருக்கிறது. எனவே இங்கே ஜனதா தளத்தினுடைய உறுப்பினர் மாண்புமிகு குமாரதாஸ் அவர்கள் இப்போதிருந்தே உங்களுடைய தேசிய முன்னணித் தலைவர்களை எல்லாம் ஒன்று சேர்த்து அதற்குப் பின்னாலே இங்கே திராவிட முன்னேற்றக் கழகத்துடன் இணைந்து பழனியில் நிற்பதற்கு யாராவது தயாராக இருக்கிறார்களா என்று தேடிப் பார்த்து, வேட் பாளர்களையும் கண்டுபிடித்து நீங்கள் அந்தத் தேர்தலிலே எங்களுடைய முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவியைச் சந்தியுங்கள். நாங்கள் உங்களை அங்கே சந்திக்கத் தயாராக இருக்கிறோம் என்று சொல்லிக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி). எனவே நாங்களும், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமும், இப்போது எங்களுடைய மதிப்பிற்குரிய தமிழகத்தினுடைய ஒப்பற்ற முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களும் தேர்தலைச் சந்திக்க எப்போதும் தயாராகவே இருக் கின்றோம். எனவே தமிழ்நாட்டு மக்கள் நாங்கள் செய்த நல்ல பணிகளுக்கு நல்ல தீர்ப்பினை விரைவில் தருவார்கள். அவர்களுடைய நம்பிக்கையை—என்றென்றும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் மீதும், எங்களுடைய கூட்டணிக் கட்சியாக இருக்கின்ற காங்கிரஸ் மீதும் கொண்டுள்ள பற்றும் பாசத்தையும் என்றென்றும் தமிழக மக்கள் மாற்றமாட்டார்கள் என்ற நிச்சயமான நம்பிக்கையோடு, இந்த சட்டமுன்வடிவினை நான் இங்கே வரவேற்று அமைகிறேன். நன்றி. வணக்கம்.



1992 மார்ச் 27]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ச. அழகிரி.

* திரு. ச. அழகிரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் தனி அதிகாரிகளுடைய நியமனத்தை மேலும் 6 மாத காலம் நீட்டிப்பதற்காக ஒரு சட்டமுன் வடிவை இங்கே கொண்டு வந்திருக்கிறார்கள். அந்தச் சட்டமுன் வடிவு எவ்வளவு தேவையானது என்பதைப் பற்றித் தமிழக முதலமைச்சர் அவர்கள் மிகத் தெளிவாக இங்கே தன் னுடைய கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். எனவே, அந்தக் கருத்தினை எங்களுடைய இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பாக நான் ஏற்று மிக விரைவிலே தேர்தலை நடத்துவதற்கான ஏற்பாட்டினைச் செய்ய வேண்டும் என்று அவர்களைக் கேட்டுக்கொள்ள ஆசைப் படுகிறேன். அதிலும் குறிப்பாக தாழ்த்தப்பட்ட பழங் குடிமக்களுக்கு இட ஒதுக்கீடு தந்து தேர்தலை நடத்துவது என்பது ''மண்டல்'' அவர்களுடைய சமநீதிக் கொள்கைக்கு உகந்ததான ஒரு கொள்கை என்பதனை நான் இங்கே கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். எனவே, ஒவ்வொரு ஜனநாயக அமைப்பிலும் தாழ்த்தப்பட்டவர்களும், பழங்குடி மக்களும் இடம் பெறுகிற வகையில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்த உள்ளாட்சி மன்றங்களிலும் அவர்களுக்குப் பிரதிநிதித் துவத்தைத் தந்து அவர்களையும் இதிலே இடம் பெறச் செய்து இந்த உள்ளாட்சி மன்றத் தேர்தல்களை நடத்தினால் அது சிறப்புடையதாக இருக்கும் என்பதில் மாற்றுக் கருத்து இருக்க முடியாது. இன்றைக்கு உள்ளாட்சி மன்றங்களிலே தனி அதிகாரிகளுடைய நியமனம் தொடர்ந்து கொண்டிருக்கிற காரணத்தால் இயற்கையாக அங்கே இருக்கின்ற சில பிரச்சினைகளை நான் இந்த அவைக்கு எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். குறிப்பாக, உள்ளாட்சி மன்றங்களைத் தனி அதிகாரிகளே நிர்வகிக்கின்ற நிலைமை இருந்து வருகிற காரணத்தால் கிராமப்புறங்களில் ஏற்படுகின்ற பிரச்சினைகள் மிகவும் கவலையளிக்கக் கூடியதாக இருக்கிறது. மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிந்துகொள்ள வேண்டும் என்பதற்காக ஒரு தகவலை நான் சொல்ல ஆசைப்படுகிறேன்.

முற்பகல் 11-00

உதாரணமாக ஒரு கிராமத்திலே இருக்கிற குடிநீர் மேல்நிலைத் தொட்டியில் இருக்கிற மோட்டார் பழுது அடைந்துவிட்டால் அந்த மோட்டார் பழுதடைந்துவிட்டது என்பதைச் சொல்வதற்கு அந்த ஊராட்சி மன்றத்தில் இருக்கிற எழுத்தர் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திற்கு வந்து அவர் குறித்து வைக்க வேண்டும். அப்படி குறித்து வைக்கக்கூடிய அந்த எழுத்தர் அந்தக் கிராமத்திலே

இருப்பதில்லை. வேறு ஏதாவது ஒரு கிராமத்திலே குடியிருந்துவிட்டு இங்கே வந்து பணியாற்றக்கூடியவராக போய் இருக்கிறார். எனவே அவருக்கு அந்தச் செய்தி அதற்குப் பிறகு அவர் வந்து ஊராட்சி ஒன்றியத்திலே எழுதி வைப்பதற்கே ஒரு வார காலம் ஆகிறது. அதன் பிறகு ஊராட்சி ஒன்றியத்திலே இருக்கிற அதிகாரிகள், கோட்ட வளர்ச்சி அதிகாரிக்கு அதைத் தெரிவித்து அதன் பிறகு கோட்ட வளர்ச்சி அதிகாரி அவர்கள் உதவி செயற் பொறியாளருக்குத் தெரிவித்து அதன்பிறகு உதவி செயற் பொறியாளர் வந்து அந்த மின் மோட்டாரை எடுத்துச்சென்று மாவட்டத்திலே எங்கேயாவது ஒரு மைய இடத்தில் சரி செய்து அதன்பிறகு, திரும்பவும் கொண்டு வந்து கிராமத்திலே அவர்கள் வைப்பதற்கு, மிக விரைவாக செயல்பட்டால்கூட 60 நாட்களுக்குக் குறைவு இல்லாமல் ஆகிறது. இது போன்ற கால கட்டங்களில் எங்களைப் போன்ற சட்ட மன்ற உறுப்பினர்களிடம் கிராம மக்கள் வந்து பெரிய அளவிலே குறைபட்டுக்கொள்கிறார்கள். அந்தக் குறைபாட்டிலே இருக்கிற சிரமம் என்னவென்றால் அவர்கள் சொல்வது "மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இவைகளை எல்லாம் செய்யச் சொல்கிறார்கள், ஆனால் சட்ட மன்ற உறுப்பினர்களாகிய நீங்களும் அதிகாரிகளும் இவைகளைச் சரியாக கவனிப்பது இல்லை." என்கின்ற அளவுக்கு ஒரு பெரிய குறைபாட்டை அவர்கள் எங்கள்மீது சொல்கிறார்கள். நான் இதற்கு முன்பு 5 ஆண்டுக்காலம் ஊராட்சி ஒன்றியத்திலே தலைவராக இருந்தவன். அப்போதெல்லாம் எங்களுக்கு இந்தப் பிரச்சினை இல்லை.

குறிப்பாக, இப்போது இருக்கின்ற பிரச்சினை, எங்களுடைய கார் செல்கிறது என்று சொன்னாலே பெண்கள் புரிந்துகொண்டு விடுகிறார்கள். திரும்ப வருகிற நேரத்தில் பெண்களே வந்து காரை மறித்து குடிதண்ணீருக்கு இவ்வளவு பிரச்சினை இருக்கிறது. சாலை வசதியிலே இவ்வளவு பிரச்சினை இருக்கிறது. இவைகளை ஏன் நீங்கள் சரி செய்யக் கூடாது? ஏன் முதலமைச்சருக்கு நீங்கள் இந்தச் செய்தியைச் சொல்லக் கூடாது என்று எங்களிடம் கேட்கிறார்கள்.

தெருவிளக்கைப் பொறுத்தவரையில், உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் ஒரு பெரிய புரட்சியைச் செய்திருக்கிறார்கள். அதற்காக நான் மாண்புமிகு முதல்வர் அவர்களையும், உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களையும் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அதற்கு முன்பு எல்லாம் தெருவிளக்குகளுக்கான அந்தக் குழல்விளக்கை [illegible] ரூபாய்க்குத்தான் வாங்கி நாங்கள் போடக்கூடிய ஒரு வாய்ப்பு இருந்தது. ஆனால் இன்றைய சூழ்நிலையில்,





எச்.எம்.டி., மைசூர் லாம்ப் போன்ற சிறந்த விளக்குகளை, நீண்டநாள் வரக்கூடிய விளக்குகளை இன்றைக்கு நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் பெரிய முயற்சி செய்து கிராமங்களிலே போட்டிருக்கிறார்கள். அதன்மூலமாக தெரு விளக்குப் பிரச்சினை ஓரளவுக்குத் தீர்க்கப்பட்டிருக்கிறது. ஆனாலும்கூட, இவ்வளவு உயர்ந்த விலையில் தெருவிளக்கு வாங்கிப் போட்டாலும்கூட, அந்தத்தெரு விளக்குகளைப் பொருத்துகிறவர்கள் அதிகாரிகளாக இருக்கிற காரணத்தினால் அவர்கள் அவைகளைச் சரியாகப் பொருத்தாமல் காலம் தாழ்த்துவது அல்லது விற்றுவிடுவது அல்லது அவைகளை அரசியல் நோக்கங்களுக்காக மறைத்து வைத்துவிடுவது என்கின்ற சூழ்நிலைகள் எல்லாம் இன்றைக்கு ஏற்பட்டிருக்கின்றன. எனவே, இவைகளை எல்லாம் பார்க்கின்றபோது, இந்த ஊராட்சி ஒன்றியங்களை எல்லாம், உள்ளாட்சி மன்ற அமைப்புகளை எல்லாம் தனி அதிகாரிகளை வைத்துக் கொண்டே நடத்துவது என்பது மிகவும் சிரமமான காரியம் என்பதை நான் இங்கே எடுத்துச்சொல்ல விரும்புகிறேன்.

இன்றைக்கு சாலைகளைச் செப்பனிடுவதற்காகத் திட்ட ஒதுக்கீட்டிற்கு மேலாக 1.2 கோடி ரூபாயை நாம் ஒதுக்கியிருக்கிறோம். அதுபோல ஆழ்குழாய் கிணறுகளை சரி செய்வதற்காக 6 கோடி ரூபாய்களை நாம் அதிகமாக ஒதுக்கியிருக்கிறோம். இவ்வளவு பெரிய தொகைகளை ஒதுக்கியும் கூட இவைகளைச் செலவு செய்யக்கூடிய பொறுப்பு உள்ளாட்சி மன்றங்களிலே இருக்கிற தனி அதிகாரிகளிடம் தான் இருக்கிறது.

முற்பகல் 11-05

இன்றைக்கு என்னுடைய ஊராட்சி ஒன்றியம் 40 கிலோ மீட்டர் நீளத்திற்குப் பரந்து விரிந்து கிடக்கிறது. எந்த ஒரு அதிகாரியும் இவ்வளவு தொலை தூரத்திற்குச் சென்று, தினம் தினம் அந்தக் கிராமத்திலே என்ன பிரச்சினை ஏற்பட்டிருக்கிறது, அந்தப் பிரச்சினையை எப்படிச் சரி செய்வது என்கிற ஒரு பணியைச் செய்வதற்கு அவர்களுக்கு இயற்கையாகவே முடியவில்லை. அவர்களுக்கு மனமில்லை என்பது ஒருபுறமிருக்க, மற்றொரு புறம், இவ்வளவு சிரமங்களை ஏற்றுக்கொள்வதற்கு அவர்கள் தயாராக இல்லை. எனவே அப்படி இருக்கிற நிர்வாக அமைப்பை வைத்துக்கொண்டு, இவ்வளவு கோடிக் கணக்கான ரூபாய்களை நாம் செலவு செய்தாலும்கூட அதனால் என்ன பலன் இருக்கிறது என்பதை இந்த அவையினுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

[திரு. ச. அழகிரி] [1992 மார்ச் 27

இன்றைக்கு நாம் வரிகளை எல்லாம் மிக அதிகமாகப் போட்டிருக்கிறோம். அசோகர் காலத்தில்கூட விளைச்சலில் ஆறில் ஒரு பங்குதான் வரி போட்டிருக்கிறார்கள். ஆனால் இன்றைக்கு மாண்புமிகு நாவலர் அவர்கள் காலத்தில் நம்முடைய சகோதரர் திரு. சிங்காரம் அவர்கள் சுட்டிக் காட்டியதுபோல, 300 சதவிகிதம் அந்த வரி அதிகமாகப் போயிருக்கிறது. ஆனாலும்கூட கிராமப்புறங்களில் உள்ள மக்களிடம் இதை நாங்கள் எடுத்துச் சொல்வதற்கு வாய்ப்பு இருக்கிறது. நானே கூடச் சொன்னேன். நாவலர் அவர்கள்கூட அதற்காக என்னைப் பாராட்டலாம். அவர்கள் சொல்வதற்கு முன்பே அந்தப் பிரச்சாரத்தை நான் தொடங்கி இருக்கிறேன். இந்த வரிகள் எல்லாம் அரசாங்கத்திற்குப் போகவில்லை, மாறாக உள்ளாட்சிக்குத்தான் வருகிறது. அந்தப் பணத்தை நாம் தான் செலவு செய்யப் போகிறோம்; நம்முடைய கிராமங்களுக்குத்தான் அந்தத் தொகை செலவு செய்யப்படப் போகிறது; எனவே தயவு செய்து அதைப் பொறுத்துக் கொள்ள வேண்டுமென்று சொல்லியிருக்கிறேன். விவசாயிகளும், பொது மக்களும் அதை ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறார்கள். ஆனால் அங்கே ஒரு கேள்வி தொக்கி நிற்கிறது. இவ்வளவு அதிகப்படியான தொகையை நாம் பெற்றும்கூட, விவசாயிகளிடமிருந்து, பொதுமக்களிடமிருந்து வரியாகப் பெற்றும்கூட, உள்ளாட்சி அமைப்புகளுக்கு அந்த நிதியை வழங்கும்போது, அந்த நிதி ஆதாரங்கள் சரியான முறையில் செலவழிக்கப்படுகின்றனவா என்பதை மேற்பார்வையிடுவதற்கு நம்மிடம் சரியான அமைப்பு இருக்கிறதா என்பதைத் தயவு செய்து நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். இன்றைக்கு ஊராட்சி ஒன்றியங்களுக்கு 400 அல்லது 450 மெட்ரிக் டன் சிமெண்ட் இருந்தால் போதுமானது. நாங்கள் ஊராட்சி ஒன்றியத் தலைவர்களாக இருந்தபோது அந்தந்த மாதத்திற்கு எந்த அளவுக்கு சிமெண்ட் தேவையோ அதை மட்டும்தான் வாங்குவோம். ஆனால் இன்றைக்கு இருக்கிற தனி அதிகாரிகள் 600-லிருந்து 700 மெட்ரிக் டன் சிமெண்டை வாங்கி சேமித்து வைத்திருக்கிறார்கள். இவ்வளவு சிமெண்ட் வைப்பதற்கு இடம் கிடையாது. அவைகளை அப்படியே தெருவிலே அடுக்கி வைக்கிறபோது கட்டியாகிப்போய் விடுகிறது. அவை உபயோகத்திற்குப் பயன்படக் கூடியவையாக இல்லை. ஒதுக்கப்பட்டுள்ள நிதியிலே பெரும் பகுதி சிமெண்டாக வாங்கப்பட்டுவிட்ட காரணத்தால், வேலை செய்கிறவர்கள் வேலை செய்ததற்காகப் பணம் கேட்கிறபோது, அவர்களுக்குக் கொடுக்க அங்கே பணம் குறைவாக இருக்கிறது. இதைப்போன்ற அதிகார துஷ்பிரயோகம் அதிகாரிகள் செய்வதை அமைச்சரவர்கள் கொஞ்சம் மேற்பார்வையிடவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.



1992 மார்ச் 27] [திரு. ச. அழகிரி]

நம்முடைய மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கிராமப்புற சூழ்நிலையிலிருந்து வந்தவர்கள். எனவே, இதைப்போன்ற பல்வேறு பிரச்சினைகளை அவர்கள் நன்றாகப் புரிந்து வைத்திருக்கிறார்கள். ஒவ்வொரு முறையும் உள்ளாட்சி மன்றங்களில் ஏற்படும் பிரச்சினைகளை அவரிடம் சொல்லும்போது, அவர்கள் மிக வேகமாகச் செயல்பட்டு, அதிலே உள்ள குறைபாடுகளைக் களைவதற்கு முயற்சி செய்தார்கள். ஆனால் என்னுடைய கருத்து, ஒரு அமைச்சரோ அல்லது சட்ட மன்ற, பாராளுமன்ற உறுப்பினரோ பரந்து கிடக்கின்ற இந்த உள்ளாட்சி அமைப்புகளை எல்லாம் தினம்தினம் மேற்பார்வையிட்டு, அவைகளைச் சரிசெய்துவிட முடியுமா என்பதுதான். இதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

இன்றைக்கு ஐ.ஆர்.டி.பி. திட்டத்தின்கீழ் நாம் கடன் கொடுக்கிறோம். 10 பேருக்குக் கடன் கொடுக்க வேண்டுமென்றால் 30 பேரை அதிகாரிகள் தயார் செய்கிறார்கள். கடன் கொடுக்கப் போவது 10 பேருக்குத்தான். ஆனால் அதிகாரிகள் தயார் செய்வது 30 பேர்களைக் கொண்ட பட்டியல். எனவே இந்த 30 பேரும் தங்களுக்குக் கடன் கிடைக்குமென்று எண்ணுகிறார்கள், அதற்கு ஆசைப்படுகிறார்கள். பல நூறு ரூபாய்களை அதற்காகச் செலவு செய்கிறார்கள். ஆனால் கடன் கொடுப்பது 10 பேருக்குத்தான். இதைப் போன்ற நடைமுறைகளை நாம் போக்க வேண்டும், நீக்க வேண்டும். எந்த பத்து பேருக்குக் கடன் கிடைக்க வேண்டுமென்று நாம் எண்ணுகிறோமோ அவர்களை மட்டும் நாம் தேடிக் கண்டுபிடித்து, அவர்களுக்கு மட்டும் கடன் கொடுக்கும் வழிமுறையைக் கொண்டு வந்தால் அது ஏற்புடையதாக இருக்கும். அதனால் ஏழை மக்களுடைய பாதிப்பு குறையும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

உள்ளாட்சி மன்றங்களைப் பொறுத்தவரையில் நிர்வாகச் சீர்திருத்தம் மிகவும் தேவையானது. ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் 60-லிருந்து 70 ஊராட்சி மன்றங்கள் இருக்கின்றன. 100 அல்லது 110 கிராமங்கள் இருக்கின்றன.

முற்பகல் 11-10

இவ்வளவு பரந்து விரிந்து கிடக்கிற கிராமங்களை அதிகாரிகளால் மேற்பார்வையிட முடியுமா என்றால் நிச்சயமாக முடியாது. எனவே 40-க்கு மேற்பட்ட கிராமங்கள் இல்லாத அளவுக்கு ஊராட்சி அமைப்புகளை நமது அரசாங்கம் ஏற்படுத்தவேண்டும். இன்றைக்கு என்னுடைய

ஊராட்சி ஒன்றியத்திலே கூட 65 கிராமங்கள் இருக்கின்றன, எனவே, திருமுட்டம் பகுதியைத் தனியாகப் பிரித்து அதற்கு ஒரு ஊராட்சி ஒன்றியத்தைக் கொடுத்தால் நடைமுறை சிக்கல்களைக் குறைத்துவிடமுடியும். அது, கிராம மக்களுக்குப் பயனுள்ளதாகவும் இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்ள ஆசைப்படுகிறேன். எவ்வளவு ஆயிரக்கணக்கான கோடி ரூபாய்களைத் திட்டங்களுக்காக நாம் ஒதுக்கினாலும் அந்தத் திட்டங்கள் எல்லாம் சென்றடையக்கூடிய இடங்கள் கிராமங்கள்தான். எனவே அந்த நிதி வெள்ளம் கிராமங்களுக்குச் சென்றடைகிற போது அந்த ஆற்றின் இரண்டு கரைகளும் மிகப் பலமாக இருக்கவேண்டும். அந்த ஆற்றின் கரைகள் என்பது உள்ளாட்சி அமைப்புகள்தான். எனவே உள்ளாட்சி அமைப்புகள் பலமாக இருந்தால்தான் அரசாங்கத்தின் திட்டங்கள் நிச்சயமாக வெற்றி பெறுவதற்கான வாய்ப்பு ஏற்படும் என்பதை இங்கே கூறிக்கொள்கிறேன். கிராமப்புற ஏழை மக்கள் நம்மிடம் கேட்பது மூன்று தேவைகள்தான். குடிப்பதற்குத் தண்ணீர் கொடுங்கள், இரவு நேரங்களில் வெளிச்சத்திற்கு மின்சாரத்தைத் தாருங்கள், சாலை வசதிகளை எங்களுக்குச் செப்பனிட்டுத் தாருங்கள் என்றுதான் கிராம மக்கள் கேட்கிறார்கள். ஆனால் இவ்வளவு நீண்ட காலமாகியும் இந்த மூன்று தேவைகளையும் நிறைவேற்றுவதற்கு நம்மால் முடியவில்லை என்பதை மெத்த வருத்தத்துடன் இந்த அவையில் தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்படி கூட அரசாங்கம் ஒரு திட்டத்தைக் கொண்டு வரலாம். 50 ஆண்டுகளுக்கு முன்பு கூட குடிநீர் வடிகால் வாரியம் கிடையாது. அதற்காகப் பெரிய அதிகாரிகள் எல்லாம் கிடையாது. மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் கிடையாது. இவைகளெல்லாம் இல்லாமலேயே கிராம மக்கள் வாழ்ந்திருக்கிறார்கள். ஆனால் இன்று இவ்வளவையும் வைத்துக்கொண்டும் கூட கிராம மக்களுக்கு நம்மால் குடிநீர் வழங்க முடியவில்லை என்ற சூழ்நிலை இருக்கிறது. எனவே அவற்றுக்குப் பதிலாக, ஒவ்வொரு தெருவுக்கும் இரண்டு குடிநீர் கைப்பம்புகளை வைத்துக் கொடுத்தாலும்கூட இந்தப் பிரச்சினை குறைந்துவிடும், பொருளாதார ரீதியாக நமக்குப் பணமும் மிச்சமாகும் என்பதை நான் இந்த நேரத்தில் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். ஏனென்றால் அந்த அளவுக்கு வறட்சிக் காலங்களில் குடிநீர்ப் பிரச்சினை அதிகமாக இருக்கின்றது.

மேலும் ஊராட்சி ஒன்றியங்களிலே அதிகாரிகள் தேவையில்லாத அளவுக்குப் பல பதவிகளில் ஏராளமாக இருக்கிறார்கள். எல்லா துறைகளுக்கும் அதிகாரிகள் இருக்





கிறார்கள். ஆனால் அவர்களுக்கு ஒரு இடம் கிடையாது. அவர்கள் உட்காருவதற்கு அறைகள் கிடையாது. அவர்களுக்கு என்று வரையறுக்கப்பட்ட வேலைகள் கிடையாது. அந்த அளவுக்கு அங்கே அதிகாரிகள் எண்ணிக்கை அதிகமாக இருக்கிறது. ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்துக்கும் இரண்டு பி.டி.ஓ. இருக்கிறார்கள். பி.டி.ஓ. எண்ணிக்கையைக் குறைத்து அதற்குப் பதிலாக ஓவர்சீயர்களுடைய எண்ணிக்கையை அதிகரிக்கலாம். குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்கக்கூடிய பிஃட்டர்களுடைய எண்ணிக்கையை அதிகரிக்கலாம். இப்படியெல்லாம் செய்து ஒரு நிர்வாகச் சீர்திருத்தத்தைக் கொண்டு வருவதன் மூலமாக இவைகளை நாம் மேம்படுத்தலாம் என்று கூறிக்கொண்டு மேலும் இன்னொரு முறை தனி அதிகாரிகள் நியமனச் சட்டத்தை நீட்டிக்கக் கூடிய வாய்ப்பை ஏற்படுத்தாமல் மிக விரைவில் தேர்தலை நடத்தும் சூழ்நிலையை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தோற்றுவிப்பார்கள் என்ற நம்பிக்கையோடு சட்டமுன்வடிவை ஆதரித்து நான் விடைபெறுகிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர்.

<u>மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்தில் இப்போது ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட இந்தச் சட்டமுன்வடிவின் மீது மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய மேலான கருத்துக்களைச் சொன்னார்கள். அதற்காக, என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அந்தக் கருத்துக்களின் அடிப்படையில் என்னுடைய விளக்கங்களைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தமிழகத்தின் ஆட்சித் தலைவராக இருக்கின்ற ஐந்தரைக்கோடி தமிழ் மக்களின் நம்பிக்கை நட்சத்திரமாக இருந்து தமிழகத்தை ஆட்சி செய்து கொண்டிருக்கிற தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்களைப் பொறுத்த வரையில், தமிழகத்தின் நிர்வாகத் திறமையை எடுத்துக் காட்டுகிற அளவில் தமிழகத்தில் இருக்கிற அத்தனை பேரும் பாராட்டுகிற அளவிலே தமிழகத்தின் ஆட்சியை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய ஆட்சியின் திறமையைப் பற்றியும், அவருடைய ஜனநாயகப் பண்புகள் பற்றியும் தமிழகத்தில் இருக்கிற தலைவர்கள் மட்டுமல்ல, இந்தியத் துணைக்கண்டத்திலே இருக்கிற தலைவர்களும் பாராட்டுகிற அளவில் அவர் செயல்படுகின்ற விதத்தைப் பார்த்து, தமிழக மக்கள் சென்ற தேர்தலில் மட்டுமல்ல, இனி எந்தத் தேர்தல் வந்தாலும் அவருக்குத்தான் நாங்கள் வாக்களிக்கப் போகிறோம் என்று சொல்கிற அளவில்தான்

சென்ற தேர்தலில் ஒட்டுமொத்தமாக மக்கள் தீர்ப்பை வழங்கியிருக்கிறார்கள். அப்படி ஆட்சித் திறமையும், தகுதியும் கொண்டிருக்கிற தமிழகத்தின் முதல்வர் புரட்சித் தலைவி அவர்களைப் பொறுத்தவரையில் தேர்தலைச் சந்திப்பதற்கு எவ்விதத் தயக்கமும் இல்லை என்பதை இந்த நேரத்தில் உங்களுக்கு அவர்கள் நேரடியாக இங்கே சட்டமன்றத்தில் தெரிவித்திருக்கிறார்கள்.

முற்பகல் 11-15

அந்த அடிப்படையிலேதான் தமிழகத்திலே 12,612 ஊராட்சிகளும், 631 பேரூராட்சிகளும், 386 ஊராட்சி ஒன்றியங்களும், 99 நகராட்சிகளும் உள்ளன. இவற்றிற்கான தேர்தல் 23—2—1986 அன்று நடைபெற்றது. தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களும், தலைவர்களும் 3—3—1986 அன்று பதவியேற்றனர். பதவிக் காலம் 3 ஆண்டுகளாக இருந்தது. பின்னர் 5 ஆண்டுகளாக உயர்த்தப்பட்டது. தேர்ந்தெடுக்கப்பட்ட மன்றங்களின் பதவிக் காலம் 3—3—1991 அன்று முடிவடைந்தது.

மக்கள் தொகைக் கணக்கெடுப்புப் பணியின் காரணமாக உள்ளாட்சித் தேர்தல்கள் 10—4—1991-க்குத் தள்ளி வைக்கப்பட்டது. குடியரசுத் தலைவர் ஆட்சி கொண்டு வரப்பட்டதால் 10—4—1991-ல் தேர்தல்கள் நடைபெறவில்லை. தனி அலுவலர்களின் பதவிக் காலம் நீட்டிக்கப்பட்டது.

சென்னை மாநகராட்சிக்கு 1—11—1968 அன்று தேர்தல் நடைபெற்றது. 3 ஆண்டுகளாக இருந்த மன்றத்தின் பதவிக் காலம் 5 ஆண்டுகளாக நீட்டித்துச் சட்டம் இயற்றப்பட்டது. மன்றத்தின் பதவிக் காலம் 30—11—1973 அன்று முடிவடைந்தது. பின்னர் தனி அலுவலர் நியமிக்கப்பட்டார்.

மதுரை மாநகராட்சிக்கு 26—7—1978 அன்று தேர்தல் நடைபெற்றது. மன்றத்தின் பதவிக் காலம் 6 ஆண்டுகளாக ஏற்கனவே உயர்த்தப்பட்டுள்ளது. எனவே, மன்றத்தின் பதவிக் காலம் 29—7—1984 அன்று முடிவடைந்தது. பின்னர் தனி அலுவலர் நியமிக்கப்பட்டார்.

கோயம்புத்தூர் நகராட்சி 1—5—1981 முதல் மாநகராட்சியாக உயர்த்தப்பட்டது.

அம்பத்தூர் நகரியம் 1—11—1990-லிருந்தும் ஒசூர் பேரூராட்சி 15—1—1992-லிருந்தும் நகராட்சிகளாக உயர்த்தப்பட்டன.



சென்னை, மதுரை மற்றும் கோயம்புத்தூர் மாநகராட்சி மன்றங்களுக்கு 29—8—1990-ல் தேர்தல் நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. ஆனால் மாநகராட்சி வார்டுகளில் தாழ்த்தப்பட்டவர்களுக்கும் பெண்களுக்கும் இடஒதுக்கீடு செய்து அரசு வெளியிட்ட ஆணைக்கு எதிராக தொடரப்பட்ட வழக்கில் தேர்தல் நடத்துவதற்குத் தடை விதிக்கப்பட்டது. அதனால் தேர்தல் நடைபெறவில்லை.

தனி அலுவலர்களின் பதவிக் காலம் நீட்டிக்கப்பட்டது. 15-6-1991 அன்று சட்டமன்றத் தேர்தல் முடிந்து மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றவுடன், உள்ளாட்சித் தேர்தல்களை நடத்துவதற்கு முடிவு செய்து அதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய உத்தரவிட்டார்கள். ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்களுக்கு 30-8-1991 அன்று தேர்தல்களை நடத்துவதற்கான தேர்தல் அறிவிக்கையும் 24—7—1991 அன்று வெளியிடப்பட்டது. ஆனால் காவிரி நதி நீர்ப் பிரச்சினையில் ஏற்பட்ட திருப்பத்தினைத் தொடர்ந்து, தமிழக மக்கள் அனைவரும் ஒரு கொதிப்பான மனநிலையில் இருந்தார்கள். தமிழக மக்களின் ஒருமித்த கருத்தினை வலியுறுத்துவதற்காக மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் 30-7-1991 அன்று தேர்தலைத் தள்ளி வைத்து உத்தரவிட்டார்கள். இது இந்திய மக்கள் அனைவரும், காவிரிப் பிரச்சினையில், தமிழகத்து மக்களின் உணர்வுகளைப் புரிந்து கொள்ள வழி வகுத்தது. இதன் காரணமாக, பல ஆண்டு காலமாகத் தீர்க்கப்படாமல் இருந்த காவிரிப் பிரச்சினையில் ஒரு புதிய திருப்பம் ஏற்பட்டது. மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவியின் இந்த நடவடிக்கை, இந்தியத் துணைக் கண்டத்தில் உள்ள அனைத்து அரசியல் கட்சித் தலைவர்களும், பத்திரிகையாளர்களும் பாராட்டத்தக்க வகையில் அமைந்தது.

உள்ளாட்சி மன்றங்களின் தனி அலுவலர்களின் பதவிக் காலம் வருகிற 31-3-1992 அன்று முடிவடைகிறது. தற்போது சட்டமன்றப் பேரவையில் வரவு-செலவுத் திட்டம் தாக்கல் செய்யப்பட்டு பல்வேறு துறைகளின் மானியக் கோரிக்கைகளின் மீது விவாதங்கள் நடைபெற்று வருகின்றன. இந்நிலையில் தேர்தல் நடத்தினால் தேர்தல் பணிகளுக்கு அனைத்து அரசியல் கட்சிகளுக்கும் நேரம் ஒதுக்க இயலாது. எனவே, தேர்தல்களை மீண்டும் தள்ளி வைக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

[திரு. அழகு திருநாவுக்கரசு] [1992 மார்ச் 27

எனவே, தற்போது ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றிய மன்றங்கள், நகராட்சிகள், மாநகராட்சி மன்றங்களில் உள்ள தனி அலுவலர்களின் பதவிக் காலத்தை 30—9—1992 வரை நீட்டிக்க அரசு முடிவு எடுத்துள்ளது. எனவே, இச்சட்டத் திருத்தம் கொண்டு வரப்பட்டுள்ளது. இது ஒரு உத்தேச அளவுதான். 30-9-1992-க்கு முன்பாகக் கூட தேர்தல் நடைபெற்று தேர்ந்தெடுக்கப் பட்ட உறுப்பினர்களும், தலைவர்களும் பதவி ஏற்க இச்சட்டத் திருத்தத்தில் வழி வகை செய்யப்பட்டுள்ளது. எனவே, இந்தக் கருத்துக்களை ஏற்றுக் கொண்டு இந்த சட்டமுன்வடிவுகளை நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உள் ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ஆம் என்க. (ஆம்)

மறுப்போர் இல்லை என்க. (இல்லை).

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி.)

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 6 முடிய திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 6 முடிய சட்டமுன்வடிவின் பகுதி யாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ஆம் என்க. (ஆம்).

மறுப்போர் '' இல்லை '' என்க. (இல்லை).

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே. அதிகம். தீர்மானம் நிறைவேறியது (மேசையைத் தட்டும் ஒலி).

பிரிவு 1. முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்ட முன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.



1992 மார்ச் 27] [பேரவைத் தலைவர்]

ஏற்போர் '' ஆம் '' என்க. (ஆம்).

மறுப்போர் '' இல்லை '' என்க. (இல்லை).

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'' 1992-ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சிச் சட்டங் கள் சார்ந்த (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 8/1992) நிறைவேற்றப் பட வேண்டும் ''

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உள் ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவை யின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் '' ஆம் '' என்க. (ஆம்).

மறுப்போர் '' இல்லை '' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி.)

முற்பகல் 11-20

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது என்கிறபோது நீங்கள் கரவொலி எழுப்பினால் போதும்; ஒவ்வொரு பிரிவுக்கும் கரவொலி எழுப்பிக் கொண்டு இருக்க வேண்டியதில்லை.

(ஆ) ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றிய மன்றங்கள் (தனி அலுவலர்கள் நியமன) திருத்தச் சட்ட முன்வடிவு 1992.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றிய மன்றங்கள் (தனி அலுவலர்கள் நியமன) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 9/1992) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டுமென்று உள்ளாட்சித் துறை அமைச்சர் கோருவார். மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றிய மன்றங்கள் (தனி அலுவலர்கள் நியமன) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 9/1992) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்.''
எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ''ஆம்'' என்க. (ஆம்).

மறுப்போர் ''இல்லை'' என்க. (இல்லை).

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

**ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.**

சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவு 2, திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2 சட்டமுன் வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ''ஆம்'' என்க. (ஆம்).

மறுப்போர் ''இல்லை'' என்க. (இல்லை).



ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ''ஆம்'' என்க.— (ஆம்).

மறுப்போர் ''இல்லை'' என்க.—(இல்லை).

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றிய மன்றங்கள் (தனி அலுவலர்கள் நியமன) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 9/1992) நிறைவேற்றப்பெற வேண்டும்'' எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ''ஆம்'' என்க.— (ஆம்).

மறுப்போர் ''இல்லை'' என்க.— (இல்லை).

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி).

**(இ) நிதி ஒதுக்க (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்ட முன்வடிவு, 1992.**

[1992 மார்ச் 27

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்க (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 10/1992). மாண்புமிகு நிதி அமைச்சர்.

*மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்க (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்டமுன் வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 10/1992) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்''

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ''ஆம்'' என்க. (ஆம்).

மறுப்போர் ''இல்லை'' என்க. (இல்லை).

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2, 3 மற்றும் இணைப்புப் பட்டியல். திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2, 3 மற்றும் இணைப்புப் பட்டியல் சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ''ஆம்'' என்க. (ஆம்).

மறுப்போர் ''இல்லை'' என்க. (இல்லை).

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.



1992 மார்ச் 27] [பேரவைத் தலைவர்]

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்ட முன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ''ஆம்'' என்க. —(ஆம்)

மறுப்போர் ''இல்லை'' என்க. —(இல்லை).

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு நிதி அமைச்சர்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்க (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 10/1992) நிறைவேற்றப் பெற வேண்டும்.''

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ''ஆம்'' என்க —(ஆம்).

மறுப்போர் ''இல்லை'' என்க —(இல்லை).

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி).

## (ஈ) நிதி ஒதுக்கச் சட்ட முன் வடிவு, 1992.

[1992 மார்ச் 27

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 11/1992). மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்க சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 11/1992) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்.'' எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ''ஆம்'' என்க —(ஆம்).

மறுப்போர் ''இல்லை'' என்க —(இல்லை).

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவு 2 மற்றும் இணைப்புப் பட்டியல் திருத்தங்கள் இல்லை.

முற்பகல் 11-25.

பிரிவு 2 மற்றும் இணைப்புப் பட்டியல் சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ''ஆம்'' என்க —(ஆம்).

மறுப்போர் ''இல்லை'' என்க —(இல்லை).

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.



1992 மார்ச் 27] [பேரவைத் தலைவர்]

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ''ஆம்'' என்க. (ஆம்)

மறுப்போர் ''இல்லை'' என்க. (இல்லை).

ஏற்போரே அதிகம். என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 11/1992) நிறைவேற்றப்பெற வேண்டும்''. எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ''ஆம்'' என்க. – (ஆம்).

மறுப்போர் ''இல்லை'' என்க. – (இல்லை).

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி.)

5. மானியக் கோரிக்கைகள், 1992-93, விவாதமும் வாக்கெடுப்பும்—(தொடர்ச்சி).

(அ) கோரிக்கை எண். 33—வீட்டு வசதி.

(ஆ) கோரிக்கை எண். 34— நகர்ப்பகுதி வளர்ச்சி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண். 33—வீட்டு வசதி. மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''வீட்டு வசதி பற்றிய 33ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ. 21,11,55,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்'' எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண். 995. திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''தமிழகத்தில் வீடற்றவர்கள் எத்தனை பேர் என்று கணக்கெடுத்து சட்டமன்ற உறுப்பினர் உள்பட வீடில்லாதார்க்கு வீட்டு வசதி வாரியத்தின் மூலம் வீடுகள் கட்டித்தர வேண்டியதன் அவசியம் குறித்து'' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்;

''வீட்டு வசதி பற்றிய 33 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 21,11,55,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்''.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெட்டுத் தீர்மானம் எண். 999, திரு. ஜி. பழனிசாமி.

திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே ''நாகை-காயிதே மில்லத் மாவட்டம், திருத்துறைப்பூண்டி நகரம் வளர்ந்து வரும் நகரமாக இருப்பதால் வீடு கட்டும் வாரியத்தின் மூலமாக பலமாடி வீடு கட்டும் அவசியத்தைப் பற்றி'' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



''வீட்டு வசதி பற்றிய 33 ஆம் எண். மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 21,11,55,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்''.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்கை எண். 34—நகர்ப் பகுதி வளர்ச்சி. மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''நகர்ப் பகுதி வளர்ச்சி பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ. 208,21,28,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்'' எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண். 1035. திரு. ஆர். சிங்காரம், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண். 1023. திரு. ஜி. பழனிசாமி.

திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''கொள்கை பற்றி'' விவாதிக்க நான் கீழ்க் கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

''நகர்ப் பகுதி வளர்ச்சி பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 208,21,28,000 இல்- ரூ. 100 குறைக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரி[illegible]க கஞம், வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவா[illegible]திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு அமைச்[illegible] அவர்கள் தன்னுடைய முன்னுரையாக ஏதாவது கூ[illegible] விரும்பினால் கூறலாம்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மானியக் கோரிக்கைகள் குறித்து கொள்கை விளக்கக் குறிப்புகள் அவை முன் வைக்கப்பட்டுள்ளன. அவைகளில் தமிழில் கொடுக்கப்பட்டுள்ளவைகளை நான் படித்ததாக ஏற்றுக்கொண்டு

அதைக் குறிப்பில் பதியவைத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன் @ விவாதத்தில் மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களைத் தெரிவித்த பிறகு என்னுடைய பதிலுரையில் விளக்கங்களைத் தர இருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கே. செல்வராஜ்.

*திரு. கே. செல்வராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வீட்டுவசதி நகர்ப்புற, வளர்ச்சித் துறை மானியத்தின் மீது பேச வாய்ப்புக் கொடுத்தமைக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். தமிழ் நாட்டில் வீட்டு வசதியைச் செய்து கொடுக்க அரசின் மூலம் பல பிரிவுகளாக வீட்டு வசதி வாரியம், குடிசை மாற்று வாரியம், தமிழ்நாடு கூட்டுறவு வீட்டு வசதி இணையம், தமிழ்நாடு நகர நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டுக் கழகம், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் பல துறைகள் மூலம் குடும்பத்திற்கு ஒரு வீடு அமைய வேண்டுமென்ற அடிப்படையில் வீடுகள் கட்ட அரசு சுமார் ஒரு லட்சத்து பத்தாயிரம் வீடுகள் கட்ட இந்த நிதியாண்டில் திட்டமிடப்பட்டுள்ளதாக வரவு-செலவுத் திட்ட அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. இந்த் வீடுகள் எந்தெந்த மாவட்டங்களில் எவ்வளவு ரூபாயில் கட்டப்படவுள்ளன என்பதை அறிய விரும்புகிறேன். தனியார் துறை வீடுகள் கட்ட வீட்டு வசதி மைய இணைப்பு வளர்ச்சித் திட்டம் தொடங்கி செயல்படுத்தவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த மையங்கள் இந்த ஆண்டில் செயல்படுத்தப்படுமா? எவ்வளவு நிதி தற்போது இந்த மையத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ளது? இந்த மையத்தை நிர்வகிக்க அரசு தனி வாரியம் ஏற்படுத்துமா? தனியார் அமைப்புகளும் அங்கம் வகிக்க செயல்பட அரசு வழி வகுக்குமா என்று முழு விவரத்தையும் அறிய விரும்புகிறேன்.

வீட்டு வசதி வாரியத்தில் வீடுகள் தரத்தை உயர்த்த புதிய திட்டம் தொடங்க உள்ளதாகவும், வரும் ஆண்டில் கிராமங்களில் 27 ஆயிரம் வீடுகளும், நகர்ப்புறங்களில் 30 ஆயிரம் வீடுகளும் தரம் உயர்த்தப் போவதாகவும் வரவு-

@ 126 முதல் 178 ஆம் பக்கங்களில் I மற்றும் II இணைப்புகளாக அச்சிடப் பட்டுள்ளன.



செலவு அறிக்கையில் அறிவிக்கப்பட்டுள்ளது. அப்படி வீடுகளின் தரத்தை உயர்த்த அரசு வீட்டுச் சொந்தக்காரர்களுக்கு எந்த அடிப்படையில் உதவிட உள்ளது? வங்கி மூலமா? கூட்டுறவுத் துறை மூலமா? எப்படி நிதியுதவி செய்ய உள்ளது? மானியம் வழங்கப்படுமா? எந்தெந்த மாவட்டங்களில் அமல்படுத்த உள்ளது என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 11-30

மத்திய அரசின் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சிக் கழகம் மூலம் இந்த ஆண்டு தமிழக அரசு வீட்டு வசதிக்கு எவ்வளவு நிதி ஒதுக்கியது? அந்த நிதி எந்தெந்த வாரியத்திற்கு, பிரிவிற்கு எவ்வளவு தொகை ஒதுக்கி, எவ்வளவு வீடுகள் கட்ட உள்ளன என்பதையும் அறிய விரும்புகிறேன்.

கட்டிட மையம் என்னும் அமைப்பை, மத்திய அரசு நவீன வீடுகள் கட்டப் பயிற்சி செயல் முறைக்கு, இந்தியாவில் எல்லா மாவட்டங்களிலும் மையம் அமைக்க முடிவு செய்தது. சென்ற ஆண்டு, தமிழக அரசு 30 மையங்கள் அமைக்க முடிவு செய்து, தற்போது, 8 மையங்கள் திறக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன. அந்த மையங்களுக்கு மத்திய அரசு 2 லட்சம் ரூபாய் மானியம் தருகிறது. இப்போது ஜெர்மன் அரசு உதவியுடன், இந்தத் திட்டத்திற்கு மேலும் 6 லட்சம் ரூபாய், சுமார் 4 மாத காலத்திலிருந்து வழங்கி வருகிறது. அண்டை மாநிலமான கேரளாவில் 14 மையங்கள் அமைக்க கேட்டு, 14 மையங்களை அமைத்துவிட்டார்கள். நமது மாநிலத்தில் துவக்கப்படாமல் உள்ள மீதி 22 மையங்களையும் உடனே துவக்க வேண்டுகிறேன்.

வீட்டு வசதி வாரியத்தின் மூலம் கட்டப்படும் வீடுகளில் சுமார் 10 சதவீதம், வீடுகள் அரசு ஒதுக்கீட்டில் உள்ளன. அந்த வீடுகள் இன்னும் ஒதுக்கப்படாமல் பல ஆண்டுகாலமாக காலியாக உள்ளன. அந்த வீடுகளில் எப்போது குடியமர்த்தப்படும்? அப்படி எவ்வளவு வீடுகள் தமிழகத்தில் காலியாக உள்ளன என்பதை அறிய விரும்புகிறேன்.

வீட்டு வசதி வாரியக் குடியிருப்புப் பகுதி புதிய வீடுகளில் சுமார் 30 சதவீதம் வீடுகளை ஆதி திராவிடர்களுக்கு, கட்டுகின்ற போதே ஒதுக்கிக் கொடுக்கவேண்டும் என கேட்டுக் கொள்கிறேன். மாவட்ட ஆட்சியர்

அலுவலகம் மூலமாக வீடு கட்ட அரசு ஊழியர்கள் கடன் வசதியில், மாநகராட்சி ஆசிரியர்களுக்கும் கடன் வசதி கிடைக்க மாநகராட்சி ஆசிரியர்களை 702/ கல்வி 23—5—1986 அன்று அரசு ஊழியர்களாக ஆக்கி அரசு ஆணை பிறப்பித்து உள்ளதை அமல்படுத்தி, கடன் கிடைக்க ஆவன செய்ய வேண்டுகிறேன்.

நகரங்களில் நெரிசல் நிறைந்த பகுதிகளில், சுகாதார வசதிகள் இல்லாததற்கு குடிசைப் பகுதிகள் அகற்றப்பட்டு, அவைகளுக்கு மாற்றாக அதே இடத்தில், அடுக்கு மாடிக் குடியிருப்புகள் கட்டி, அந்தக் குடிசை வாழ் மக்கள் குடியேற்றப்படவேண்டும் என்பது அரசின் கொள்கை என அறிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் எனது தொகுதியில் உள்ள செல்வசிந்தாமணி குளம் பகுதியில் உள்ள ஏரியில் சுமார் 3 ஆயிரத்திற்கும் அதிகமான குடிசைவாசிகள் வாழ்ந்து வருகிறார்கள். அவர்களுக்கு மாடி வீடுகள் கட்ட குடிசை மாற்று வாரியத்தின் மூலம் 3,294 வீடுகளுக்கு 14.78 கோடியில் திட்டம் தயாரித்து 3 தவணைகளாகப் பிரித்து, முதல் தவணையாக 648 வீடுகள் கட்டவும் முடிவு செய்து ஜனாதிபதி ஆட்சியில் மாநில வருவாய்த்துறை அரசு ஆணை ஜி.ஓ.எம்.எஸ். நெ. 473, 21—3—1991 தேதியில் ஆணை பிறப்பித்தது. முதல் கட்டமாக 648 வீடுகள் கட்ட 215.496 லட்சம் ரூபாய் ஒதுக்கியது. அந்தப் பணிகள் எதுவும் தொடங்கப்படாமல் கிடப்பில் உள்ளன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உடனடியாக அந்த வீடு கட்டும் பணியைத் தொடங்க, சுமார் 40 ஏக்கர் நிலம் வரை உள்ள அந்தக் குளப்பகுதியில் 10 ஏக்கர் நிலத்திலாவது அந்த வீடுகளைக் கட்டுவதற்கு, இடம் ஒதுக்குவதற்கு ஆவன செய்ய வேண்டும் என்று வேண்டுகிறேன்.

அதேபோல் எனது தொகுதியில் உள்ள தடாகம் ரோட்டில் முத்தண்ணன் குளம் பகுதியில் சாலை ஓரமாக ஏரிப் பகுதியில் சுமார் 800 வீடுகள் கட்ட, குடிசை மாற்று வாரியம் அனுமதி கேட்டு, பொதுப்பணித் துறைக்கு டி. ஓ. நெ. 4577/91-2 29—10—1991 தேதியில் கடிதம் எழுதி, வீடுகள் கட்ட அனுமதி கேட்டு உள்ளது. இது வரையில் எந்தவிதமான பதிலும் வராததால், வீடுகள் கட்டும் பணி தடைபட்டுள்ளது. அந்த வீடுகளைக் கட்ட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அனுமதி பெற்றுத்தர வேண்டுகிறேன்.

கோவை மாநகராட்சிக்கு, மேம்பாட்டுத் திட்டப் பணிகளின் வளர்ச்சிக்கு, குறிப்பாக சென்னை மாநகர வளர்ச்சிக்கு ஒதுக்கியது போல், நிதி ஒதுக்காதது



வளர்ச்சிக்கு எந்தப் பணியும்
கோவை மாநகர
செய்ய முடியாத சூழ்நிலை இந்த ஆண்டும் உருவாகியுள்ளது.
நகராட்சி, நகர்ப்புற மேம்பாட்டு நிதி உதவியின் மூலம்
நகராட்சிகள், மாநகராட்சிகள் வளர்ச்சித் திட்டங்கள்
குடிநீர், சாலை வசதிகள், சுகாதார வசதிகள், செய்ய
முன்வந்து செயல்படுத்த வேண்டும். திரும்பிச் செலுத்த,
வருமானம் பெருக்க, வணிக மையம், குடிசைத் தொழில்
அமைப்புகளை முறையாக நிறுவிச் செயல்படுத்தலாம்,

அறிக்கையில், நகர்ப் பகுதியில் உள்ள
வரவு-செலவு
ஏழைகளுக்குத் திட்டப் பணிகள் செயல்படுத்த நகராட்சி
கள், ஆணையகத்தில். நகர்ப்பகுதி ஏழை மக்களுக்கு
என தனிப்பிரிவு எற்படுத்த முடிவு செய்து உள்ளதாக
அறிவிக்கப்பட்டுள்ளது, இந்த நகர்ப் பகுதி ஏழை மக்கள்
உதவித் திட்டத்தில் உதவிகள் செய்ய உள்ள அரசு மாநகராட்சி
யில் உள்ள ஏழை மக்களுக்கு உதவி செய்ய இந்தப் பிரிவு
ஏற்படுத்தப்படுமா என அறிய விரும்புகிறேன்,

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

முற்பகல் 11·35.

நகர்ப்புற வளர்ச்சிக் கழகம் சுமார்
மத்திய அரசின்
5 லட்சம் பேர்கள் வாழும் நகரில் நவீன கழிப்பிடங்
கள், எல்லா வீடுகளுக்கும். மானியக் கடனில் கட்டித்தர
முன்வந்துள்ளது, தமிழ்நாட்டில் இந்தத் திட்டத்திற்கு
சுமார் 24 கோடி ரூபாய் 1991—92 ஆம் ஆண்டில் ஒதுக்கி.
சுமார் 2·55 லட்சம் வீடுகளுக்கு நவீன கழிப்பிடங்கள்
கட்டிக்கொடுக்க உள்ளதாக அறிகிறேன். அதை இந்த
ஆண்டில். எந்தெந்த நகராட்சியில் செயல்படுத்த உள்ளது?
ஒவ்வொரு நகராட்சியிலும் எவ்வளவு வீடுகள் கட்ட
செயல்படுத்தப்பட உள்ளது என்பதை அறிய விரும்பு
கிறேன்,

கோவை, மதுரை, சென்னை மாநகரப் பகுதியிலுள்ள
சாதாரண ஏழை மக்கள் வீடுகளுக்கும் கழிப்பிடம்
கட்ட நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் மூலமாக மானியக்
கடனில் கோவையில் கட்டித்தர வேண்டுமாய், நகரப்புற
வளர்ச்சிப் பணிகளின் மூலம் கோவை மாநகராட்சிப்
பகுதியில் மக்கள் நெருக்கடியான பகுதிகளான சாந்திபுரம்
டவுன் ஹால் ஒப்பணக்கார வீதி ஆகிய பகுதிகளில்

நகர அபிவிருத்தித் திட்டத்தின் மூலம் உலக வங்கிக் கடனில் சுரங்கப்பாதை வழி அமைத்துக் கொடுக்கவேண்டும். கோயம்புத்தூர், தியாகி குமரன் மார்க்கெட் பகுதியில் டில்லி, பம்பாய் போன்ற நகரங்களில் உள்ளது போல் புதியதாக நவீன பல மாடி வணிக மையம் நகர்ப்புற வளர்ச்சித் துறையின் மூலம் கட்ட வேண்டுகிறேன்.

கோவை மாநகராட்சியோடு இணைக்கப்பட்ட பகுதிகள், இன்னும் கிராமங்களாகவே உள்ளன, ஆதலால் உலக வங்கி உதவியுடன் நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் தீட்டி, சாலைகள், பாதாள சாக்கடைத் திட்டம், குடிநீர்த் திட்டம், சுகாதார வசதித் திட்டம் தீட்டி, போக்குவரத்து, மருத்துவம், பள்ளிக் கட்டிடங்கள் பராமரிப்பில் குடியிருப்புப் பகுதிகளை மேம்படுத்தல் போன்ற பணிகளை செயல்படுத்த வேண்டும். தற்போது நகராட்சி அபிவிருத்தித் திட்டம் மூலமாகவோ, மாநகராட்சி சட்டங்களுக்கு உட்பட்டோ புதிய கட்டிடங்கள் கட்டுபவர்கள் கட்டாமல், சுற்றுப்புறச் சூழ்நிலையைப் பாதிக்கின்ற விதத்தில் கட்டிடங்களைப் புறம்பாகக் கட்டுகின்றார்கள். கட்டப்படும் கட்டிடங்களுக்கு வளர்ச்சியில் பாதகம் ஏற்படும் விதத்தில் செயல்படும் கட்டிடதாரர்களை உடனே கட்டிடம் கட்டும் போதே தடுத்து அரசின் அனுமதியோடு முறையாகக் கட்ட கோவை மாவட்டத்தின் தனிப் பிரிவு ஒன்றை ஏற்படுத்திச் செயல்படுத்த வேண்டும்.

தற்போது மாநகராட்சியிலுள்ள பணிகளை முறையாகச் செயல்படுத்த, மாநகராட்சிக்கு உட்பட்ட சட்டமன்ற பாராளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட கமிட்டி ஒன்றை அமைத்து, மாதம் ஒரு முறை கூடி வளர்ச்சிப் பணிகள் குறித்து விவாதித்து முடிவு எடுக்க உடனடியாகச் செயல்படுத்த வேண்டுகிறேன்.

கோவை மாநகராட்சி முழுவதையும் மேம்படுத்த என்னென்ன திட்டங்கள் மூலம் செயல்படுத்தலாம் என முழுவதுமாக அறிந்து, ஐந்தாண்டுத் திட்டம் ஒன்றை தயாரித்து, முறைப்படுத்தி, கோவை பெருநகர வளர்ச்சிக் குழு என்ற ஒன்றை ஏற்படுத்தி, வளமுள்ள, அழகான மாநகராக கோவை அமைய, திட்டத்தைச் செயல்படுத்த வேண்டுகிறேன்.

வீட்டுவசதி வாரியத்தைப் பொறுத்த வரையில், தமிழகத்தின் மூலை முடுக்குகளில் எல்லாம்—கன்னியாகுமரி, கோவை, வடஆற்காடு-அம்பேத்கார் போன்ற அனைத்



மாவட்டங்களிலும் உள்ள ஏழை எளிய மக்கள் தங்கள் வீட்டு மனைப் பிரிவுகளுக்கு அங்கீகாரம் பெற வேண்டுமென்றால், சென்னைக்கு, நகர ஊரக இயக்குநர் அலுவலகத்திற்கு வர வேண்டியுள்ளது. முன்பெல்லாம் மாவட்டத் தலைநகரிலுள்ள இணை இயக்குநர், பிளான் லே அவுட் அப்ரூவ் செய்வார்கள், கடந்த சில ஆண்டுகளாகத்தான் இயக்குநருக்கு அந்த அதிகாரம் கொடுக்கப்பட்டுள்ளது. எனவே ஏழை எளிய மக்களுடைய பிளான் அப்ரூவலுக்காக வீட்டு வசதி வாரியத்திடமிருந்து பெற வேண்டியுள்ள அந்த இக்கட்டான சூழ்நிலையை மாற்றி மாவட்டங்களிலேயே அவர்கள் அந்த பிளான் அப்ரூவல்.— வீட்டு மனைப் பிரிவுகளுக்கு அனுமதி பெற அலுவலகங்களை அமைத்து, ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டு வாய்ப்பிற்கு நன்றி கூறி, விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. எம். கே. பாலன்.

திரு. எம். கே. பாலன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எங்கள் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவியின் ஆட்சியில் குடும்பத்திற்கு ஒரு வீடு அமையவேண்டுமென்கின்ற கொள்கையுடன் செயல்பட வேண்டுமென அரசு இவ்வாண்டு 1,10,000 வீடுகளைக் கட்ட உத்தரவிட்ட எங்கள் இதய தெய்வத்தை வணங்குகின்றேன்.

பேரறிஞர் அண்ணா அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்கின்ற போது சென்னையில் பல குடிசைப் பகுதிகள் எரிந்து சாம்பலாயின. குடிசைப் பகுதிகள் எரிந்து சாம்பலானதைத் தடுத்து பேரறிஞர் அண்ணா அவர்கள் அதிரடி நடவடிக்கையின் காரணமாக எரிந்த பகுதிகளுக்கு ஓட்டு வீடுகளை அமைத்துக் கொடுத்தார். அதன் பிறகு எங்களுடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவரின் ஆட்சி இருக்கின்றபோது ஓட்டு வீடுகளை அவசர காலத்தில் கட்டியதால் அடிப்படை வசதிகள் எதுவும் செய்துகொடுக்க முடியாத சூழ்நிலையில் அவசரத்தில் கட்டியதால் அந்தப் பகுதிகள் எல்லாம் புரட்சித் தலைவியின் ஆட்சியில் எடுக்கப்பட்டு அடுக்கு மாடி வீடுகள் கட்டிக் கொடுத்தார்கள்.

அதேபோன்று என்னுடைய தொகுதியில், கோட்டூர்புரத்தில் சித்ரா நகர் என்கின்ற பகுதியில் 760 வீடுகள் இன்றைக்கு உள்ளன. சென்னையிலே ஓட்டு வீடுகளை எல்லாம் அகற்றிய வாரியம் கோட்டூர்புரத்தில் இருக்கின்ற அந்த 760 வீடுகளை அகற்றாமல் அப்படியே விட்டதன் காரணமாக இன்றைக்கு வந்த வெள்ளத்தால்கூட அந்த

வீடுகள் எல்லாம் மூழ்கிப் போயின. வெள்ளம் வருகின்ற போதெல்லாம் பக்கத்திலே உள்ள இன்சினியரிங் காலேஜிலே அவர்கள் தஞ்சம் புகுந்து விடுவார்கள். அப்படி ஒரு சூழ்நிலை அந்தத் தாழ்வான பகுதியிலே அந்த 760 வீடுகளுக்குமே உள்ளது. அதுமட்டுமல்லாமல், அடிப்படை வசதியான பாத்ரூம் வசதி, ரோடு வசதி, குடிநீர் வசதி, மின்சார வசதி ஆகிய எதுவும் இல்லாமல் அந்த ஓட்டு வீடுகளில் எல்லாம் அவர்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். ஓட்டு வீடுகளிலே வெயில் காலங்களில் அனலால் பாதிக்கப்பட்டு எல்லோரும் பல வியாதிகளினால் பாதிக்கப்படுகின்ற சூழ்நிலையில், அந்த அவலநிலை அங்கே உருவாகிக் கொண்டு வருகிறது. ஆகவே எங்களுடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவியின் ஆட்சியில் தாயுள்ளம் கொண்ட புரட்சித் தலைவியின் ஆட்சியில் அந்த இடங்களைக் கையகப்படுத்தி, 900 வீடுகள் கட்டுவதற்கான பரப்பளவு கொண்ட அந்த இடத்தை எடுத்து, குடிசை மாற்று வாரியத்தின் மூலமாக அந்த 900 வீடுகளைக் கட்டுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமாய்ப் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

முற்பகல் 11-40.

அதேபோன்று குடிசை மாற்று வாரியத்தில் எங்களுடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சியின் போது வாடகை 22 ரூபாயாக இருந்தது. இதனால் குடிசை மாற்று வாரிய வீடுகளிலே வாழ்ந்து கொண்டிருப்பவர்கள் வாடகையை ஒழுங்காகக் கொடுத்து வந்தார்கள். அப்படி இருந்தும் கூட அப்போதே சில பகுதிகளில் வாடகை கொடுக்க முடியாத சூழ்நிலை இருந்தது. ஏழையின் சிரிப்பிலே இறைவனைக் காண்போம் என்று அண்ணா அவர்கள் சொன்னார்கள். அதையே தான் முத்திரையாகப் போட்டு குடிசை மாற்று வாரியம் இன்றைக்கு இயங்கிக் கொண்டிருக்கிறது. ஆனால், இடையிலே வந்த கருணாநிதி ஆட்சியில் வாடகையைக் குளறுபடி செய்து 125 ரூபாய், 150 ரூபாய், 175 ரூபாய் என்று வாடகையை உயர்த்தி இருந்தும் அங்கே வாழ்கின்ற மக்கள் அடிப்படை வசதி கூட இல்லாது அங்கே வாழ்ந்து வருகிறார்கள். அங்கே எந்த வசதியும் இல்லாத ஏழை எளிய மக்கள், வறுமைக் கோட்டிலே வாழ்கின்ற மக்கள் 300 ரூபாய்க்குள் கார்டு உள்ளவர்கள் அந்தக் குடிசை மாற்று வாரியத்தில் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். ஆனால் இடையிலே வந்தவர்கள் 175 ரூ. 150 ரூ. என்று வாடகையை உயர்த்திவிட்ட காரணத்தினால் வாடகை கட்ட முடியாமல் இன்றைக்குப் பல கோடி ரூபாய் குடிசை மாற்று வாரியத்தினால் வசூலிக்க முடியாமல் நிலுவையாக இருந்து கொண்டிருக்கிறது. கருணாநிதி ஆட்சிக் காலத்தில்



குளறுபடி செய்த காரணத்தால் வாடகை நிலுவை அதிகமாக உள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன், அதே நேரத்தில் வாடகையை வசூல் செய்வதற்கு தெளிவான ஒரு முடிவை அரசு எடுக்க வேண்டும். ஏனென்று சொன்னால் குடிசை மாற்று வாரியத்தில் வாழ்ந்து கொண்டிருப்பவர்கள் இன்றைக்கு வாடகையைக் கொடுக்க முடியாத நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள், அதே நேரத்தில் கருணாநிதி அரசால் பராமரிக்க முடியாமல் அங்குள்ள சங்கங்களே பராமரிக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் வாரியத் திட்டத்திலே இந்த சங்கங்கள் ஒழுங்காக செயல்படவில்லை என்பதை அரசுக்கு தெரிவித்துக் கொள்கிறேன். இவைகள் பராமரிக்க முடியாத சூழ்நிலை இருக்கிற காரணத்தால் சென்ற மாதம் 27-ஆம் தேதி அன்று விருகம்பாக்கத்திலே உள்ள குடிசை மாற்று வாரிய வீடுகள்-முத்து நகரிலே பழுது பார்க்கிற போது அந்த வீடுகள் எல்லாம் இடிந்து குமுறுகின்ற காட்சியை தினமலர் பத்திரிகையிலே முதல் பக்கத்திலே படம் பிடித்துக் காட்டியிருக்கிறார்கள். அதனால் அங்கு 3 பேர் அடிபட்டும் இருக்கிறார்கள். அதேபோன்று 26-ஆம் தேதி அன்று மைலாப்பூரிலே உள்ள சீனிவாசபுரத்தில் 53-வது பிளாக்கிலே இருக்கிற குடிசை மாற்று வாரிய வீடுகள் பழுது பார்க்கப் படாமல் இருந்த காரணத்தால் அவை இடிந்து இரண்டு குழந்தைகளுக்கு அடிபட்டிருக்கிறது. அதிலே ஒரு குழந்தை அந்த இடத்திலேயே இறந்திருக்கிறது. பட்டினப்பாக்கத்திலுள்ள காவல் நிலையத்தில் கேஸைப் பதிவு செய்திருக்கிறார்கள். இன்னொரு குழந்தைக்குக் கால் முறிந்திருக்கிறது. ஆகவே இன்றைக்குக் குடிசை மாற்று வாரிய வீடுகளில் கட்டிய வீடுகளை எல்லாம் பராமரிக்க முடியாத சூழ்நிலை இருந்து கொண்டிருக்கிறது. இதிலே கருணாநிதி ஆட்சி பொறுப்பேற்ற பிறகு 1989–90ஆம் ஆண்டு 1.50 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்திருக்கிறார்கள். அதேபோல் 1991-92-ஆம் ஆண்டுக்கு 1½ கோடி ரூபாய் பராமரிக்க ஒதுக்கீடு செய்திருக்கிறார்கள். ஆனால் இந்த நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டதே தவிர எந்தப் பகுதியும் பராமரிக்கப்படவில்லை என்பது என்னுடைய குற்றச்சாட்டு. ஆகையினால்தான் இதுபோன்ற நிலைமைகள் ஏற்படுகின்றன. குடிசை மாற்று வாரிய வீடுகளில் வாழ்ந்து கொண்டிருப்பவர்கள் பயந்து கொண்டிருக்கிறார்கள். பராமரிப்புக்கு எந்த ஒரு திட்டத்தையும் செய்ய முடியாத ஒரு சூழ்நிலை இருந்து கொண்டிருக்கிறது.

ஆகையினால் நம்முடைய இதய தெய்வம் அவர்களுடைய ஆட்சியில் புதியதாக பல வீடுகளைக் கட்டிக் கொண்டிருந்தாலும் கட்டிய வீடுகளைப் பராமரிக்கிற விதத்தில் ஒரு கணிசமான தொகையை இந்த ஆண்டு ஒதுக்கீடு செய்யவேண்டும். சென்னையிலே கூட எத்தனை குடிசை மாற்று வாரிய வீடுகள் பராமரிக்க இருக்கிறது என்பதைக் கணக்கு எடுக்க வேண்டும். அதில் எந்தெந்தப் பகுதிகள் பராமரிக்க இந்த ஆண்டு எடுத்துக்கொள்ளப்பட

இருக்கின்றன என்பதையும் குறித்துக் கொள்ளவேண்டும். அப்படிக் குறித்து இந்த ஆண்டு பழுது பார்க்கிற வீடுகளைப் பற்றிய விவரங்களை அறிவிக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். அதே போல நிலையான ஒரு வாடகையையும் நிர்ணயிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11.45

இன்றைக்குக் குடிசை மாற்று வாரிய வீடுகளிலே வாழ்ந்து கொண்டிருப்பவர்கள் அதை விற்றுவிட்டுச் சென்றுவிடுகிறார்கள். விற்றவர்களுக்குப் பெயரை மாற்றுவதற்கு ஒரு சட்டத்தைப் போட்டிருக்கிறார்கள். இவர்கள் 1986-ஆம் ஆண்டிலே குடிசைப் பகுதியிலே வாழ்ந்தார்களா என்று கணக்கு பார்க்கிறார்கள். அப்படி இருந்தால்தான் பெயரை மாற்ற முடியும் என்று சொல்கிறார்கள். ஆனால், அவர்கள் இதை எல்லாம் பார்க்காமல் அந்த வீட்டை விற்றுவிட்டுச் சென்றுவிடுகிறார்கள். பணம் கொடுத்தவர்களும் குடியேறிவிடுகிறார்கள். இதனால் பெயர் மாற்றமும் செய்ய முடியாமல் அதே நேரத்திலே வாடகை வசூல் செய்ய முடியாமலும் அவர்கள் இந்தச் சட்டத்தால் திணறிக்கொண்டு இருக்கிறார்கள். இந்தக்குளறுபடியினால் குடிசை மாற்று வாரியத்தில் பல பகுதிகளிலே லட்சக்கணக்கான பணம் வசூலாகாமல் தேங்கிக் கிடக்கிறது. அவற்றை வசூல் செய்வதற்கு அரசு துரித நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று சென்னையில் எம்.எம்.டி.ஏ. மூலமாக அடுக்கு மாடி வீடுகள் கட்டுகிறார்கள். அதில் 30 அடி ரோடு இருந்தால் 4 சமையல் அறை தான் ருக்க வேண்டும் என்ற ஒரு திட்டத்தைப் போடுகிறார்கள். ஆகையினால் வளர்ந்து வரும் சென்னையிலே அடுக்குமாடி வீடுகள் நிறையக் கட்டவேண்டியிருப்பதால், இதை தளர்த்தி 30 அடி ரோடிலே 16 சமையல் அறை இருக்கின்ற மாதிரி ஒரு திட்டத்தை அமைக்கவேண்டும்.

அதே நேரத்தில் ஃப்ளாட்ஸ் கட்டுகின்றவர்களுக்கு கட்டி முடித்த பிறகு அடிப்படை வசதிகளான, ட்ரெயினேஜ் லைன், வாட்டர் லைன், கரண்டு போன்றவற்றிற்கு ஒவ்வொரு இடத்திற்கும் சென்று அப்ளிகேஷன் கொடுப்பதால் கால தாமதம் ஆகின்றது. இதனால் அவர்களுக்கு பணமும் அதிகமாகச் செலவாகிறது. ஆகையினால் ஒரே இடத்திலே இவை எல்லாம் கிடைப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் திடீர்நகர், கோதாமேடு பகுதிகளை பற்றி நான் ஏற்கெனவே பேசியிருக்கிறேன். அந்தப் பகுதிகளுக்கான திட்டம் கைவிடப்பட்டிருக்கிறது. அந்தப் பகுதிகளுக்கான திட்டத்தை இந்த ஆண்டு துரிதமாக எடுத்து குடிசை மாற்று வாரிய வீடுகள் அங்கே கட்டுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டு எனக்கு வாய்ப்பு அளித்த பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி, விடைபெறுகிறேன். நன்றி. வணக்கம்.



*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. உ. பலராமன்*

திரு. உ. பலராமன் : பேரவைத் தலைவர் அவர்களே, 1992-93 ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கையின் மீது வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற பகுதி வளர்ச்சி ஆகிய தலைப்பின் கீழ் கருத்துக்களைச் சொல்வதற்கு வாய்ப்பு அளித்தமைக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள் கிறேன்.

முற்பகல் 11.50.

இந்தத் தலைப்புக்குப் போவதற்கு முன்னால் ஒரு விஷயத்தை நான் நினைவு படுத்துவது சாலப் பொருத்தம் என்று கருதுகிறேன். இந்த அவையில் உரையாற்றிய மாண்புமிகு உறுப்பினர் சகோதரன், ரங்கநாதன் அவர்கள் வழக்கறிஞர் சுப்பிரமணியம் அவர்கள் கொலை செய்யப்பட்ட நிகழ்ச்சியைச் சொன்னார்கள். அதில் ஒரு சின்ன திருத்தம். பட்டப்பகலில் என்று சொன்னதை இரவு என்று மாற்றிக் கொள்ள வேண்டுகிறேன். தேர்தல் காலத்தில், தமிழக காங்கிரசினுடைய தலைவர் வாழப்பாடியார் அவர்கள் பேசிக் கொண்டிருக்கின்றபோதே எதிரே இருந்து கல்லால் அடிக்கப் பட்டு மேடையில் இருந்தவர்கள் காயப்பட, அதை, எதிர்த்து அவர் சாலையிலே அமர்ந்து மறியல் செய்ய, அந்த மறியல் தொடர்ந்து இரண்டு மணி வரை நீடிக்க, பாண்டிச் சேரிக்குத் தேர்தல் பிரச்சாரத்திற்காகச் சென்று திரும்பிய இன்றைய முதல்வர் நேரில் அவர்களைச் சந்திக்க வருகி றார்கள் என்று சொல்ல, மாநகராட்சி காவல்துறை ஆணை யரும் அங்கே வருவதாக அறிவிக்க, பிறகு இருவருமே வருகின்றபோது இன்றைய முதல்வர் அவர்கள் நேரடியாக வருகிறார்கள் என்கிற செய்தியோடு காவலர் வழியிலே நிற்க, வந்த இன்றைய முதல்வர் அவர்கள் ஆறுதல் சொல்லி போராட்டத்தை கைவிடச் சொல்ல, தலைவர் அவர்களும் அந்த மறியல் போராட்டத்தைக் கைவிட்டுப் புறப்பட, அவர் தான் காரிலே வருகிறார் என்று திராவிட முன்னேற்றக் கழகத் தவர் நினைக்க, அந்த வண்டியை அவர்கள் தாக்க, அந்த வண்டியிலே அமர்ந்திருந்த, ஓட்டிக்கொண்டு வந்த வழக்கறிஞர் சுப்பிரமணியம் அவர்கள் தாக்கப்பட, பக்கத்திலே அமர்ந் திருந்த பெரியவர் கிள்ளிவளவன் அவர்களின் ஒரு கண் போக, மறைந்த பேரறிஞர் அண்ணா அவர்களோடு கிட்டத்தட்ட 20 ஆண்டு காலம் தனிச் செயலாளராக பணியாற்றிய கிள்ளிவளவன் அவர்களின் ஒரு கண் பறி போக; இன்னும் 2 வழக்கறிஞர்களுடைய தலை பிளவுபட, இப்படி நடை பெற்ற அந்தக் கொடிய நிகழ்ச்சிகள் இன்று நீதிமன்றத்தில்

[திரு. உ. பலராமன்] [1992 மார்ச் 27

...ந்தாலும் அது சரியான திசையை நோக்கிப் போகவில்லை என்பதை நான் இங்கே சுட்டிக்காட்டி அந்த வழக்கை மறு விசாரணை செய்து உண்மையான குற்றவாளிகளைக் கண்டுபிடிக்க வேண்டுமென்று என்னுடைய கோரிக்கையை இங்கே வைக்க விரும்புகிறேன்.

சராசரி மனிதனுக்கு சோசிலிச சிந்தனையோடு அளிக்கப்படுகிற 3 வாக்குறுதிகள், உண்ண உணவு, உடுக்க உடை, இருக்க இடம், இந்த இருக்க இடம் தந்து உதவுகிற ஆட்சியாக இந்த ஆட்சி செயல்பட்டுக்கொண்டு வருவதை நான் பாராட்டுகிறேன்.

வீட்டு வசதியை ஏற்படுத்தித் தருகிறபோது அங்கே வாழ்கிற மக்கள் ஆரோக்கியமாக வாழ்வதற்கு மாநகராட்சி கொஞ்சம் துணை புரியவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அன்னை இந்திரா காந்தி அவர்கள் 1980 ஆம் ஆண்டு மீண்டும் ஆட்சிக்கு வருகிறபோது 2000 ஆவது ஆண்டு நிறைவு பெறுகிற போது இந்தியாவில் உள்ள அனைவருக்கும் வீடு கொடுத்து முடிக்க வேண்டும் என்ற ஒரு கொள்கையை அறிவித்தார்கள் என்று நான் நினைக்கிறேன். அந்த அடிப்படையில் உலக வங்கிக் கடன் உதவியோடு கொடுக்கப்படுகிற வீடுகள் — கிராமப்புறப் பகுதிகளில் மனைகள் ஒதுக்கித் தரப்படுகின்றன. அந்த வீடுகளில் வாழ்கிற ஏழை எளிய மக்கள் எல்லோருக்கும் வீடு கிடைக்கக் கூடிய அளவுக்கு ஏற்பாடு செய்யவேண்டுமென்ற கோரிக்கையை வைக்க விரும்புகிறேன். அதிலே வாழ்ந்து கொண்டிருக்கிற மக்களுக்கு அடிப்படை வசதிகள் மிகவும் குறைவாக இருக்கிறது, இங்கே மற்ற உறுப்பினர்களும் தெரிவித்தார்கள். அங்கே குடிநீர் வசதி குறைவு. விளக்கு வசதி இல்லை. குறிப்பாக சாக்கடை வசதிகள் இல்லை என்பதை நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

4 அடுக்கு மாடிகள் இருக்கின்றன. அந்த 4-வது அடுக்கில் குடியிருந்தாலும் அவர்கள் கீழே வீதியில் வந்து தான் தண்ணீர் எடுத்துப் போக வேண்டும். அதிலே ஒரு கர்ப்பிணி பெண் இருந்தால் அவர்களுடைய கதி என்ன என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். குடிநீர்த் தொட்டி இருக்கிறது, தண்ணீர் இல்லை. ஆகவே இதை அமைச்சர் அவர்கள் கவனத்தில் கொண்டு ஒரு சிறப்பான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



1992 மார்ச் 27] [திரு. உ. பலராமன்]

இன்னும் ஒன்று. அந்தக் குடிசை மாற்று வாரியப் பகுதிகளில் மாநகராட்சிக்கும் குடிசை மாற்று வாரியத்திற்கும் சில பிரச்சினைகள் வருகின்றன. குப்பை எடுக்க வேண்டுமானால் குடிசை மாற்று வாரியம் பெருக்கிக் கொண்டு வந்து அவர்கள் வீதியில் கொட்ட வேண்டும். இரண்டு நாட்களுக்கு ஒருமுறை மாநகராட்சி எடுப்போம் என்று அவர்கள் சொல்லுகிறார்கள். 2 அதிகாரிகளையும் வைத்து நேரடியாக நான் பேசியபோது கூட ஒரு உடன்பாட்டுக்கு வரமுடியவில்லை என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே அவர்களுடைய கூட்டணியை சரி செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னும் ஒன்று. இந்த குடிசை மாற்று வாரிய வீடுகள் அந்த ஏழை எளிய மக்களுக்கு சொந்தமாக்கப்படும் என்று சென்ற அரசு கூட அறிவித்ததாக நினைவு. அந்த வீடுகள் சொந்தமாக்கப்பட அவர்களிடத்தில் பணம் வாங்கினாலும் வீடுகள் இருக்கின்ற நிலையில் இன்னும் 10 ஆண்டுகள் இருக்குமா என்று சில இடங்களில் சந்தேகமாக இருக்கிறது. கீழே ஒரு அறிவிப்புப் பலகை எழுதி வைக்கப்பட்டிருக்கிறது. 3-வது மாடியில், 4 படிகள் இல்லை, பார்த்துப் போகவும் என்று விளம்பரப் பலகை இருக்கிறது. அப்படியானால் அவர்கள் எப்படி வசிக்கிறார்கள் என்பதற்காக இந்த உதாரணத்தைச் சொல்லுகிறேன். ஆகவே, இதையெல்லாம் சீர் செய்வதற்கு நீங்கள் முயற்சிக்க வேண்டும். சில இடங்களில் இன்னும் 10 ஆண்டுகள் அந்த வீடுகள் இருக்குமா என்பது சந்தேகம். அது தரைமட்டமாக ஆகிவிட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

கீழே ஒருவன் குடியிருக்கிறான். மாடியில் ஒருவன் குடியிருக்கிறான். கீழே குடியிருக்கிறவன் சமையல் செய்கிற இடத்திலே மாடியில் குடியிருக்கிறவன் விடுகிற பாத்ரூம் தண்ணீர் எல்லாம் அவன் சமையல் அறையில் இறங்குகிறது. இதை அதிகாரிகள் இடத்திலே சொல்லியிருக்கிறேன். சில இடங்களில் அவர்கள் ரிப்பேர் செய்து கொண்டிருக்கிறார்கள். அந்த வீடுகள் அவ்வளவு மோசமாக இருக்கிறது என்பதற்கு இது ஒரு சான்று. ஆகவே, தயவு செய்து அந்தக் குறைபாடுகளைச் சீர் செய்வதற்கு முயற்சிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்னும் ஒன்று, இந்த குடிசை மாற்று வாரிய வீடுகளுக்கு இந்த உதவி செய்கிற அதே நேரத்தில் புதிய, புதிய குடிசை மாற்று வாரிய வீடுகளைக் கட்டிக்கொண்டு தான் இருக்கிறோம். பல இடங்களிலே குடிசை...

(முற்)பகல் 11-55.

பகுதிகள் இருக்கின்றன. அந்தப் பகுதிகளை அப்புறப்படுத்திவிட்டு கட்டுவதைவிட, அதற்கு நான் ஒரு சிறிய யோசனையைச் சொல்ல விரும்புகிறேன். அந்த குடிசைப் பகுதிகளையும் ஒழுங்குபடுத்தலாம். ஒவ்வொரு ஆண்டும் தீ விபத்தால் பாதிக்கப்படுகிற குடிசைகளுக்குத் தருகிற உதவிப்பணமும் மழைக்காலங்களில் தருகிற உதவிப் பணமும், இந்த இரண்டையும் 5 ஆண்டுகளுக்குச் சேர்த்தாலே எப்படியும் கிட்டத்தட்ட 10 ஆயிரம் ரூபாய்க்கு வரலாம். ஆகவே, அந்த 10 ஆயிரம் ரூபாயில் அந்த குடிசைப் பகுதிகளைச் சீரமைத்து, 12 அடிக்கு வீதி விட்டு 10-க்கு 12 என்று ஒத்தக்கல் சுவர் வைத்து அதற்கு ஆஸ்பெஸ்டாஸ் ஷீட் போட்டு, அவர்களுக்குத் தனியாக அந்த வீடுகளைத் தருகிறபோது, கால்வாய் வசதி, குடிநீர் வசதி, சாக்கடை வசதி அத்தனையையும் ஏற்படுத்தித் தரலாம். இரண்டு வீட்டுக்கு ஒரு லெட்ரின், பாத்ரூம் என்றுகூட கட்டித் தரலாம். அது சுத்தமாகவும், சுகாதாரமாகவும் நிர்வகிப்பதற்கு வசதியாகவும் இருக்கும் என்று என்னுடைய யோசனையைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, சென்னை நகரம் நெருக்கடியான நகரமாகும். அங்கே எம்.எம்.டி.ஏ. சொல்கிற சட்டப்படி பக்கத்துக்கு 2 அடி சந்து விட்டு கட்டுங்கள் என்று சொன்னால் முடியாது. அப்படியும் யாராவது ஒருவன் சந்து விட்டால் அங்கே கொட்டகை போடுவதற்கு வேறு ஒருவன் தயாராக இருக்கிறான். ஆகவே அதற்கு பயந்து இரண்டு வீட்டையும் ஒட்டிக் கட்டுகிறார்கள். புதிய வீட்டின் நிலை இது. பழைய வீடுகளுடைய நிலை என்ன? வீட்டுக்கு வீடு சேர்ந்துதான் இருக்கும். அவர்கள் புதிதாக மேலும் மேலும் கட்டுகிறார்கள் என்றால் எம்.எம்.டி.ஏ.-வினுடைய அனுமதியை அவர்கள் முழுமையாகப் பெறுவது இல்லை. அதற்காக இந்த அரசிற்கு ஏதேனும் வருமானம் இருக்கிறதா என்றால் இல்லை. அது அதிகாரிகளுக்கும் அவர்களுக்கும் உள்ள மாமூல் வாழ்க்கையோடு தொடர்புடையதாக இருக்கிறது. ஆகவே, எம்.எம்.டி.ஏ. தன்னுடைய விதியைத் தளர்த்தி நெருக்கடியான பகுதியாக இருக்கிற அந்தப் பகுதிகளில் கட்டப்பட்ட வீடுகளுக்கு ஒரு அபராதத்தை விதித்து அதை முழுமையாக அங்கீகரிக்கலாம் என்று நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

சென்னை நகரம் விரிவாக்கப்படுகிறது. விரிவாக்கப் பகுதிகளில் எந்த அடிப்படை வசதியும் இல்லை என்கிற குறைபாடு இருக்கிறது. புதிதாக ஏற்படுகிற எல்லா இடங்



களிலும் ரோடுகள் இல்லை; விளக்குகள் இல்லை. குடிநீர் இல்லை. போக்குவரத்து வாகனங்களும் சரியாகப் போவதற்கும் வருவதற்கும் கூட வசதிகள் இல்லை; பஸ் வசதியும் இல்லை என்கிற குறையைச் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, இந்தக் குறைபாடுகளைக் கவனத்தில் கொண்டு, கொஞ்சம் கருணையோடு பார்க்கவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

இன்னொன்று, மாநகராட்சிக்குச் சொந்தமான இடங்களில் வீடுகள் கட்டப்பட்டிருக்கின்றன. அப்படி கட்டி வாழ்ந்து கொண்டிருப்பவர்கள் மிகவும் ஏழைகள். உதாரணத்திற்குச் சொன்னால், அவன் ஒரு புறம்போக்கு நிலத்திலே சொந்தமாகக் கொட்டகை போட்டு வசித்து வந்தான். 1906-இல் அவர்களுக்கு வீடு கட்டித்தரப்பட்டது. அந்த வீடு அன்று வசதியாக கட்டித்தருகின்றபோது, அதனுடைய மொத்த மதிப்பு 630 ரூபாய். 630 ரூபாயில் அந்த வீட்டை கட்டித் தந்திருக்கிறார்கள். பிறகு அதை மாநகராட்சி எடுத்துக்கொண்டு, வாடகை வாங்கியது. பிறகு மாநகராட்சிக்கே சொந்தம் இந்த வீடு என்று கூறியிருக்கிறது. அதற்குப்பிறகு மார்க்கெட் ரேட் போடுகிறேன் என்று 20 ஆண்டுகளுக்கு முன்னால் இருந்த ஒரு ரேட்டைப் போட்டு அவர்களுக்குத் தந்திருக்கிறார்கள். அதிலே சிலர் வாங்கினார்கள். பலர் வாங்கவில்லை. ஆகவே, வாங்காதவர்கள் இன்று கேட்கிறார்கள். அவர்களுக்கு விலை நிர்ணயத்தை பழைய நிலையிலேயே, அதற்காக 1906 என்று சொல்ல மாட்டேன். ஒரு 20 ஆண்டுகளுக்கு முன் அவர்களுக்கு தந்த நிலையிலேயே சற்று உயர்த்தி, அவர்களுக்குச் சொந்தமாக்க வேண்டும். அதற்கு சுதந்திரபுரம் என்று பெயர்.

அதே போல, போகிபாளையம், குமாரசாமிராஜாபுரம் என்று இரண்டு பகுதிகள் இருக்கின்றன. அந்த வீடுகளையும் அவர்களுக்கு சொந்தமாக்க முயற்சிக்க வேண்டும். இதிலே மாநகராட்சியும் சம்பந்தப்பட்டிருக்கிறது. அதே போல, பெருமாள்கோயில் தோட்டம் என்கிற பகுதியில் ஆதி ஆந்திர மக்கள் அதிகமாக வசிக்கிறார்கள். அவர்களுக்கு கிட்டத்தட்ட 20 ஆண்டுகளுக்கு முன்னால் விலை நிர்ணயம் செய்யப்பட்டது. அதிலேயிருந்து தொடர்ந்து அவர்கள் போராடிக்கொண்டு வருகிறார்கள். இதுவரை அவர்களுக்கு அந்த வீடுகள் சொந்தம் ஆக்கப்படவில்லை. பழைய விலையிலேயே அவர்களுக்குக் கிடைக்க ஏற்பாடு செய்யவேண்டும். காரணம், அவர்கள் ஆதி ஆந்திர மக்கள். அடுத்து, இன்னொரு இடம் தட்டாங்குளம் பகுதியிலே அதேபோன்று இருக்கிறது. அவர்களுக்கும் சொந்தமாக்கப்படவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. உ. பலராமன்] [1992 மார்ச் 27

நண்பகல் 12.00

இறுதியாக, புராணங்களிலே நல்லவை நடப்பதற்காகத் தூது போனவர், அந்த பத்திரிகையாளர் நாரதர் என்பதை நாம் மறந்து விடக்கூடாது. ''நாரதர் கலகம் நல்லவையில் முடியும்'' என்பதைப்போல இந்த நாட்டின் ஜனநாயகத் தூதுவர்களாக இருக்கின்றவர்கள் பத்திரிகையாளர்கள். அந்தப் பத்திரிகையாளர்கள் வெளியிலே வீட்டு வசதி இன்றி அவதிப் படுகிறார்கள் என்று பலர் குறைப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதைப் போக்குவதற்காக அரசாங்கமே பீட்டர்ஸ் காலனியில் நிருபர்களுக்கு வாடகைக்கு வீடு தருகிறோம் என்று அறிவித்தது ஒரு திட்டத்தை. அங்கே வீடும் தந்தது. திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சியில் உண்மையான நிருபர்களுக்கு வீடு தரவில்லை. வழக்கம்போல போலி நிருபர்களுக்கு அவர்கள் வீடு தந்திருக்கிறார்கள். உண்மையான நிருபர்களுக்கு வீடு தருகிற ஏற்பாட்டோடு இந்தப் போலி நிருபர்களை வெளியேற்றி இவர்களை அங்கே குடியமர்த்த, நிருபர்களுக்கு வீடு ஒதுக்கித்தர இந்த அரசு ஆவன செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

குடிசை மாற்று வாரியத்தில் ஏற்கெனவே தலைவர் எம்.ஜி.ஆர். ஆட்சிக் காலத்தில், 86 இல் தவறு செய்தார்கள் என்பதற்காக சிலர் தண்டிக்கப்பட்டார்கள். நன்றாக விசாரித்து, அப்படித் தண்டிக்கப்பட்டவர்களெல்லாம் இன்னும் சிலர் அங்கே பணியாற்றிக் கொண்டு வருகிற மக்களைத் தொல்லைப்படுத்துகிறார்கள். 1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தின் கண்காணிப்பாளராக ***ஒருவர் பணியாற்றுகிறார். ஆனால் அவர் நீதியாக இல்லை.**

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : குற்றச்சாட்டுச் சொல்லும்போது பெயர்களைக் குறிப்பிடாதீர்கள். பெயர் நீக்கப்படுகிறது.

திரு. உ. பலராமன் : குடிசை மாற்று வாரியத்தில் கண்காணிப்பாளராகப் பணியாற்றியவர், வீடு ஒதுக்கித் தருகிறேன் என்று சொல்லி, பலரிடத்திலே கையூட்டுப் பெற்றதன் விளைவாக அந்த நிர்வாகத்தில் விசாரணை நடத்தி, அவர் தண்டிக்கப்பட்டிருக்கிறார். அதற்கு உண்டான சான்றுகளும் இருக்கின்றன. ஆகவே, அப்படிப் பட்டவர்களை இன்னும் தொடர்ந்து அங்கே பணியாற்றுவதற்கு அனுமதித்துக் கொண்டிருப்பது அவ்வளவு நல்லதல்ல

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைப்படி இவை அகற்றப்பெற்றது.



1992 மார்ச் 27] [திரு. உ. பலராமன்]

என்பதை மட்டும் இங்கே சுருக்கமாகக் குறிப்பிட்டு, இந்த மானியத்தின்மீது பேசுகின்ற வாய்ப்பினை அளித்த உங்களுக்கு நன்றி கூறி அமைகிறேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு வி.கே. லட்சுமணன்.

திரு. வி.கே. லட்சுமணன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தியா கிராமங்களில் வாழ்கிறது என்று காந்தியடிகள் சொன்னார்கள். அது தமிழ் நாட்டுக்கும் பொருந்தும்: நம்முடைய வரவு-செலவுத் திட்டத்திலே ''எழில்மிகு சென்னை'' என்ற திட்டத்திற்காக 1,250 கோடி ரூபாய் செலவழிப்பதாக நாம் முடிவு செய்திருக்கிறோம்.

என்னைப் பொறுத்தவரையிலே, இந்தப் பணத்தை சென்னை நகருக்கு மட்டும் செலவழிக்காமல் பல சென்னை நகரங்களைத் தமிழ்நாட்டிலே உருவாக்குவோம் என்று சொன்னால் அது சென்னை நகரத்தின் நெரிசலையும் குறைக்கும் ; கிராமங்களையும் வளர்த்ததாகவும் இருக்கும் என்று நான் இங்கே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

கோவை மாநகரத்தில் உலக வங்கியிலேயிருந்து வந்த நிபுணர்கள் ''கிரேட்டர் கோயம்புத்தூர்'' என்ற ஒரு திட்டத்தை அறிவித்தார்கள். அந்தத் திட்டத்தின்படி ஒரு பெரு நகரம் ; ஒரு பசுமைப் பகுதி; ஒரு சிறு நகரம் என்று அந்தத் திட்டம் அமைக்கப்பட்டிருந்தது. அதன் நோக்கம் என்னவென்று சொன்னால், ஒரு பெருநகரத்திற்கும் ஒரு சிறு நகரத்திற்கும் மத்தியிலே ஒரு பசுமையான பகுதி இருக்க வேண்டும். அது சுகாதாரத்திற்கு நல்லது என்ற கருத்திலே அந்தத் திட்டமானது உருவாக்கப்பட்டிருந்தது.

இன்றைக்கு நாம் நகரத்தைச் சுற்றித்தான் நம்முடைய விரிவாக்கத் திட்டங்களை உருவாக்குகிறோம். இந்த நகரத்திலே நெரிசல் குறைக்கப்பட வேண்டுமென்று சொன்னால், அடிக்கடி பொது மக்கள் பயன்படுத்தாத பல அலுவலகங்களைப் புற நகருக்கு மாற்றுவோம் என்று சொன்னால் அங்கே வளர்ச்சி உருவாகும் என்று நான் நம்புகிறேன்.

பிற்பகல் 12.05

குறிப்பாக பெரிய வங்கிகளினுடைய ரீஜினல் ஆபீஸ், இன்சூரன்ஸ் கம்பெனிகள், இவைபோன்ற பெரிய நிறுவனங்கள் உரு

களை புறநகருக்கு மாற்றுவோம் என்று சொன்னால் அங்கே அந்தப் பகுதி வளர்வதற்கு வாய்ப்பாக இருக்கும். நாம் எம்.எம்.டி.ஏ. மூலமாக மறைமலை நகரை உருவாக்கி னோம். ஆனால் அங்கு வெறும் வீடுகள் கட்டினால், அந்தப் பகுதி வளர்ச்சி அடைவது இல்லை. ஒரு அலுவலகம் என்று சொன்னால், அந்த அலுவலகத்திற்காக ஒரு உணவு விடுதி தோன்றும். உணவு விடுதிக்குப் பின்னாலே துணிக்கடை தோன்றும், இப்படிப்பட்ட அந்த அலுவலகத்தை மையமாக வைத்து, அங்கே வீடுகள் தோன்றுவதற்கு வாய்ப்பாக இருக்கிற காரணத்தினால், நாம் இன்றைக்கு பெரிய பெரிய அலுவலகங்களை, புறநகர்ப் பகுதிக்கு மாற்ற வேண்டுமென்று என்னுடைய கருத்தை நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். சான்றாக, மெட்ராஸ் மெட்ரோபாலிடன் ஏரியாவில் 1,167 ஸ்கொயர் கிலோ மீட்டர் நிலப்பரப்பு இருக்கிறது. இதிலே சென்னைப் பகுதி மட்டும் 172 ஸ்கொயர் கிலோ மீட்டர் ஆக்கிர மித்துக் கொண்டிருக்கிறது. ஆனால், மீதியுள்ள எம். எம். டி.ஏ., வில் மொத்தப் பரப்பிலே வாழ்கிற மக்களிலே, 85 சதவீதம் பேர், 172 ஸ்கொயர் கிலோ மீட்டரிலேதான் இருக்கிறார்கள். இதற்கு என்ன பொருள்? அதிகமான மக்கள், சென்னை நகரிலே குவிந்து இருக்கிறார்களே யொழிய, புறநகர்ப் பகுதியிலே இல்லை என்பதைத் தான் இது காட்டுகிறது. ஒரு ஸ்கொயர் கிலோ மீட்டர் என்று சொன்னால், 280 ஏக்கரா. ஆக இப்படிச் செய் வதன் மூலமாக, நாம் நம்முடைய சென்னை நகரிலே இருக்கிற நெருக்கடியைக் குறைக்க முடியும் என்று நான் நம்புகிறேன்.

பொதுவாக, வீடு கட்டவேண்டுமென்று சொன்னால் அதன் மூலமாக வேலைவாய்ப்புகள் பெருகுகிறது. வீடு கட்டுகிற பொருட்களை உற்பத்தி செய்வதன் மூலமாக, தொழிற்சாலைகள் வருகின்றன. ஆக, வீடு கட்டுவது என்பது, ஏதோ குடியிருப்பதற்காக மட்டுமல்ல; பல பில்டிங் மெட்டீரியல்ஸை உருவாக்குகிற தொழிற்சாலைகளை உருவாக்கவும், அதன்மூலமாக ஆயிரக்கணக்கான பேர் களுக்கு வேலை வாய்ப்புகளை கொடுக்கவும் இந்த வீட்டு வசதித் திட்டமானது நமக்குப் பயன்படுவதாக இருக் கிறது என்பதை நான் சொல்லிக் கொள்ள ஆசைப் படுகிறேன். ஆனால், இந்தத் திட்டத்தை—இந்த வீட்டு வசதித் திட்டத்தை—அமல்படுத்துகிற போது, தனியார் துறைக்கு அதிகமான வாய்ப்பினை அளிக்க வேண்டும். அதை அங்கீகரிக்க வேண்டும். ஆனால் இப்போது வரைபடத்தை அனுப்பி, அதை அங்கீகாரம் பெறுவதிலேகூட பல மாதங்கள் ஆகின்றன என்பதை நான் இங்கே குறிப்பிடாமல் இருக்க முடியாது. அதை எந்த அளவுக்கு விரைவுபடுத்த வேண்டுமோ, அந்த



அளவுக்கு கிராமங்களிலேயும் நகரங்களிலேயும் விரைவுப்
படுத்தினால், வீடுகள் அதிகமாக வரும் என்பதை நான்
இங்கே சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். பொதுவாக,
தமிழ்நாட்டிலே, ''அபார்ட்மென்ட் கல்ச்சர்'' என்பது இப்
போது நடைமுறைக்கு வந்திருக்கிறது. ஆனால், அது
வந்திருக்கிறதேயொழிய, அதற்கான சட்டங்கள் இன்னும்
இங்கே வரவில்லை என்பதை நான் இங்கே சொல்லிக்
கொள்ள ஆசைப்படுகிறேன். 'அபார்ட்மென்ட் கல்ச்சர்'
என்பதில் ஒரு பெரிய தத்துவமே அடங்கி இருக்கிறது.
அதாவது எனக்கு வலதுபுறம் இருக்கிற சுவர், எனக்குச்
சொந்தமானது அல்ல: அது, இன்னொருவருக்கு இடதுபுறச்
சுவர். மேலே இருக்கிற மாடி இன்னொருவருக்கு தளம்.
கீழே இருக்கிற என்னுடைய தளமானது, இன்னொருவருக்கு
மாடி, இப்படியாக உலகத்திலே நமக்கு எதுவுமே சொந்த
மில்லை என்று மிகப்பெரிய தத்துவத்தை சொல்லிக்
கொண்டிருப்பதுதான் இந்த 'அபார்ட்மென்ட் கல்ச்சர்'.
அது சென்னைக்கு வந்திருக்கிறது. ஆனால் அதை
யொட்டி, சென்னையிலே 'அபார்மெண்ட் ஓனர்ஷிப் ஆக்ட்'
என்றும் 'ஓனர்ஷிப் ஃப்ளாட் ஆக்ட்' என்றும் இருக்கிற
அந்தச் சட்டங்கள் அமல் ஆகாததன் காரணமாக, இங்கே
பல இடர்ப்பாடுகள் ஏற்பட்டிருக்கின்றன என்பதை நான்
இங்கே குறிப்பிடாமல் இருக்க முடியாது.

பம்பாய் போன்ற நகரங்களிலும், கர்நாடக மாநிலத்
திலும் இந்தச் சட்டங்கள் ஏற்கெனவே அமலாகி இருக்
கின்றன. பம்பாய் மாநகரத்திலே ஒரு வீடு என்பது,
ஒரு கூட்டுறவுச் சங்கம். ஆக, அந்தக் கூட்டுறவுச்
சங்கம் மூலமாக, வீடுகளை வாங்கவும், விற்கவும், அதிலே
வாழவும் மக்களுக்கு நல்ல வசதிகள் இருக்கின்றன. அந்தச்
சங்கத்திலே இருந்து, ஒருவருக்கு வீட்டை விலைக்கு
விற்க வேண்டுமென்று சொன்னால், ஒரு லட்சம் ரூபாய்க்குக்
குறைவாக வீட்டினுடைய மதிப்பு இருக்கிறது என்றால்,
100 ரூபாய்க்கு ஸ்டாம்ப் பேப்பர் வாங்கினால் போதும்.
ஆனால் நான் பலமுறை நம்முடைய வருவாய்த்துறை
அமைச்சரிடத்திலே கேட்டிருக்கிறேன்; வீடுகட்டும் சங்கத்
திலே இருந்து கொடுக்கப்படுகிற 'கன்வேயன்ஸ் டீட்'களுக்கு
ஸ்டாம்ப் ட்யூட்டியிலிருந்து விலக்களிக்க வேண்டுமென்று
நான் பலமுறை கேட்டுக் கொண்டிருக்கிறேன். அதை
நீங்கள் அமல்படுத்த வேண்டுமென்று உங்களை அன்போடு
கேட்டுக் கொள்கிறேன்.

பிற்பகல் 12.10.

தமிழகம் முழுவதும் ஆயிரக்கணக்கான அங்கீகரிக்கப்
படாத மனைக்கட்டுகள் இருக்கின்றன. இந்த மனைக்

கட்டுகளிலே வாழ்கின்ற மக்கள் தங்களுடைய வீடுகளுக்கு வீட்டு வரி செலுத்துகிறார்கள். இருந்தாலும்கூட அடிப்படை வசதிகள் அவர்களுக்கு இல்லை. தண்ணீரோ, சாலை வசதியோ, சாக்கடை வசதியோ இல்லாமல் அவர்கள் பெரிதும் துன்பத்திற்கு ஆளாகியிருக்கிறார்கள். எனவே, இது ஒரு ஜில்லாவிற்குச் சொந்தமான பிரச்சினை அல்ல. தமிழகம் முழுவதும் உள்ள பிரச்சினை. எனவே, இந்த மாமன்றம் இதற்கு ஒரு 'ஃபார்முலாவை' வகுக்க வேண்டும் என்று நான் உங்களை அன்போடு கேட்டுக் கொள்கிறேன். இனிமேல்............

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர், என்னுடைய வீட்டின் தளம் இன்னொருவருடைய மாடி என்று சொன்னீர்கள், அது தலைகீழாக இருக்கிறது. அது எப்படி என்று விளக்கும்படிக் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. வி. கே. லட்சுமணன் : அதாவது அடுக்கு மாடிக் கட்டிடங்களிலே ஒருவருடைய வீட்டின் தளமானது இன்னொருவர் வீட்டின் ஸீலிங் ஆக இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : தளம் என்பது கீழே போடுவது. மேற்கூரைதான் ஸீலிங். அது தான் மற்றொருவர் வீட்டுக்குத் தளமாக அமைய முடியும்.

திரு. வி. கே. லட்சுமணன் : துணைத் தலைவர் அவர்களே, என்னுடைய வீட்டின் ஃப்ளோரிங் இன்னொருவர் வீட்டுக்கு ஸீலிங். என்னுடைய வீட்டின் வலதுபுறச் சுவர் இன்னொருவர் வீட்டுக்கு இடதுபுறச் சுவர். இடது புறச் சுவர் இன்னொருவர் வீட்டுக்கு வலதுபுறச் சுவர். ஆக எதுவுமே எனக்குச் சொந்தம் இல்லை. இதுதான் தத்துவம். இந்த அங்கீகரிக்கப்படாத மனைக்கட்டுகளைப் பொறுத்தமட்டில் நான் ஒரு கருத்தைச் சொல்ல ஆசைப்படுகிறேன். இனிமேல் யாராவது அங்கீகரிக்கப்படாத மனைக் கட்டுகளைப் பதிவு செய்ய வந்தால் அந்தப் பதிவு செய்யக்கூடாது என்று சார் பதிவாளர்களுக்கு நீங்கள் தாக்கீது அனுப்பினால் அதைத் தடுக்க முடியும் என்பதை இங்கே சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

என்னுடைய பகுதியான கோவை நகரைப் பொறுத்த மட்டில் துப்புரவுத் தொழிலாளர்கள் குறைவாக இருக்கிறார்கள். அதனால் சுகாதாரம் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறது. லாரிகளும் குறைவாக இருக்கின்றன. எனவே,



அதைக் கொஞ்சம் கவனித்து துப்புரவுத் தொழிலாளர்களை அதிகப்படுத்தி, சுகாதாரத்தைப் பாதுகாக்க வேண்டுமென்று உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய மாநகராட்சிக்கும் குடிசை மாற்று வாரியம், குடிநீர் வடிகால் வாரியம், வீட்டுவசதி வாரியம் ஆகியவைகளுக்குமிடையே சரியான உறவு இல்லை. பல சமயங்களிலே ஒரு வாரியம் சொல்லும் 'நாங்கள் இதை மாநகராட்சிக்கு ஒப்படைத்துவிட்டோம்' என்று, ஆனால், மாநகராட்சி, எங்களிடம் ஒப்படைக்கவில்லை' என்று சொல்கிற நிலை உள்ளது. இந்த அளவுக்கு கருத்து வேறுபாடு இருக்கிறது. ஆகவே இதையெல்லாம் தவிர்க்க வேண்டுமென்று நான் இங்கே உங்களைக் கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

கோவையிலே 8 கோடி ரூபாய் செலவிலே பாதாளச் சாக்கடைத் திட்டம், 1983-லே நிறைவேறி இருக்க வேண்டும். கிட்டத்தட்ட 10 ஆண்டுகள் ஆகிவிட்டன. அது நிறைவேறாததன் காரணமாக அங்கே சுகாதாரக் கேடு ஏற்பட்டு, நோய்கள் வருவதற்கான ஆதாரமாக இருக்கிறது என்பதைச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

என்னுடைய தொகுதியிலே புலியகுளத்திலே அதிகமாக தாழ்த்தப்பட்ட மக்கள் வாழ்கிறார்கள். அவர்களுக்கு கல்யாண மண்டபம் கட்டுவதற்கான ஒரே இடம் அதுதான். அந்த இடத்தை காவல் துறை கேட்டுக்கொண்டிருக்கிறது. நான் இங்கே உங்களை அன்போடு கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன். அந்த இடத்தை காவல்துறைக்கு அளிக்காது தாழ்த்தப்பட்ட மக்களின் நலனுக்காக, அவர்களுக்கென்று கல்யாண மண்டபம் கட்டுவதற்காக அதை ஒதுக்கும்படி வேண்டுகிறேன்.

என்னுடைய நகரின் மையப் பகுதியிலே பொதுப் பணித் துறையால் பராமரிக்கப்படுகிற பல கால்வாய்கள் இருக்கின்றன. அவைகள் எல்லாம் தூர் எடுக்கப்படாததன் காரணமாக சுகாதாரம் பாதிக்கப்பட்டு நோய் பரவுவதற்குக் காரணமாக இருக்கின்றன. எனவே, பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் அந்தக் கால்வாய்களைத் தூர் எடுப்பதற்கு தக்க ஏற்பாட்டைச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நகர்ப்புற நில உச்சவரம்புச் சட்டமானது ஒரு நல்ல சட்டம். ஆனால் சென்னையைப் பொறுத்த மட்டில் நம்முடைய மாநகரத்தைச் சுற்றி 850 ஏக்கர் உபரி நிலம் இருக்கிறது. நில

உச்சவரம்புச் சட்டம் அமலாக்கப்பட்டதன் காரணமாக கிடைத்த நிலம், அந்த நிலம் இது வரையிலும் யாருக்கும் வழங்கப் படாமல் இருக்கிறது, முறையாக அது வழங்கப்படும் என்றால் இன்றைக்கு 60,000 வீடுகளை அங்கே கட்ட முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்ள ஆசைப்படு கிறேன்,

பிற்பகல் 12.15

நில உச்சவரம்புச் சட்டத்தில் 22-வது பிரிவின்படி நலிந்த பிரிவினருக்கு அந்த நிலத்தைக் கொடுக்கமுடியும் என்று சொல்லப்பட்டிருக்கிறது, நலிந்த பிரிவினர் யார் என்று கேட்டால் உச்ச நீதிமன்றம் தீர்ப்பு சொல்லியிருக்கிறது. ''யாரெல்லாம் ஆண்டு ஒன்றுக்கு 18,000 ரூபாய்க்குக் குறைவாக வருமானம் உள்ளவர்களோ அவர்கள் நலிந்த பிரிவினர்' என்று சொல்லியிருக்கிறது, ஆக நிலச் சொந்தக் காரர்களுக்குக்கூட இந்த உரிமை வழங்கு வோம் என்று சொன்னால், இன்றைக்கு 66 ஆயிரம் குடியிருப்புகள் சென்னையைச் சுற்றி வருவதற்கு வாய்ப்பிருக் கிறது என்பதை நான் உங்களுக்குச் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். சிலசமயங்களிலே நில உச்சவரம்பி லேயிருந்து நாம் சில பேர்களுக்கு விதிவிலக்கு கொடுத் திருக்கிறோம், தொழிற்சாலைகளுக்கு டாக்டர்களுக்கு என்று தனியார்களுக்குக்கூட கொடுத்திருக்கிறோம், ஆனால் சில தொழிற்சாலைகள் இதை பயன்படுத்திக்கொண்டு இந்த விதிவிலக்கு கொடுக்கப்பட்ட நிலங்களை சொந்த உபயோகத்திற்காக மட்டுமல்லாமல் ஷாப்பிங் காம்ப்ளக்ஸ் கட்டி விற்கிற நிலைமையைக்கூட நாம் பார்க்கிறோம், இதைத் தடுப்பதற்கு முயற்சி மேற்கொள்ள வேண்டும், அதேசமயத்தில் சென்னை எம்.எம்.டி.ஏ. பகுதிக்குள்ளே ஒரு நிலத்தை வருவாய்த்துறை இது வேளாண்மை நிலம் என்று அறிவிக்கிறது, ஆனால் அதே நிலத்தை எம்.எம். டி.ஏ. வேளாண்மை நிலம் அல்ல, இங்கே குடியிருக்க லாம். வணிக முயற்சிக்காக இதைப் பயன்படுத்தலாம் என்று எம்.எம்.டி.ஏ. சொல்கிறது, ஆக இத்தகைய கருத்து வேறுபாடுகளை தவிர்க்கவேண்டும் என்று நான் இங்கே சொல்லிக்கொள்கிறேன்,

சென்னையிலே பில்டிங் புரோமோட்டர்கள் நிறைய பேர்கள் வந்திருக்கிறார்கள், அவர்களுக்கெல்லாம் என்ன தகுதி என்றே நமக்குத் தெரியவில்லை, அவர்கள் என்ன என்ஜினியர்களா? இதற்காகப் படித்துப் பட்டம் பெற்ற வர்களா? சொல்லமுடியாது, ஆனால் நிறைய பேர்கள் வந்திருக்கிறார்கள். அப்படி வந்திருக்கின்ற பில்டிங் புரோ



மோட்டார்கள் வீடு கட்டவேண்டுமென்ற எண்ணம் உள்ள மக்களைப் பயன்படுத்தி நிறைய பொருள் சேர்க்கிறார்கள். தவறான முறையில் பொருள் சேர்க்கிறார்கள், பல சமயங்களில் மக்கள் பெரும் அவதிக்கு உள்ளாகிறார்கள், எனவே இந்த பில்டிங் புரோமோட்டர்களுக்கு ஒரு லைசன்ஸ் முறை அமலாக்கி அதைக் கொண்டுவருவோம் என்று சொன்னால் அதன்மூலமாக இவர்கள் பொது மக்களை ஏமாற்றுகின்ற போக்கினை தடுக்க முடியும் என்று நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்,

என்னுடைய பகுதியிலே பல இடங்கள் நீண்டகாலமாக ஏழை மக்களாலே ஆக்கிரமிக்கப்பட்டு அவர்கள் அங்கே குடியிருந்து வருகிறார்கள். குடிசைமாற்று வாரியத்தின் மூலமாக அந்த நிலங்களை அவர்களுக்கே சொந்தமாக்கி அவர்கள் வாழ்கின்ற இடத்திலேயே அவர்களுக்கு வீடு கட்டிக்கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்,

குறிப்பாக கோவை-திருச்சி சாலையிலே எல்.ஜி.பி., ஹவுஸ் அலுவலகம் ஆகியவற்றுக்கு பின்புறம் இருக்கிற பகுதியிலே வாழ்கின்ற மக்களுக்கு குடிசைமாற்று வாரியத்தின் மூலமாக வீடு கட்டித் தரவேண்டும் என்றுகேட்டுக் கொள்கிறேன்;

அதேபோல கோசிமின் பகுதி என்று இருக்கிறது, அந்தப் பகுதி மக்களுக்கும் குடிசைமாற்று வாரியத்தின் மூலமாக வீடுகள் கட்டித்தரவேண்டும் என்று நான் இங்கே கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன். நான் ஏற்கெனவே சொன்னதுபோல இந்த எழில் மிக்க சென்னை 2000 என்ற கருத்தை நான் சொன்னபோது, எங்களுடைய கிராமம்தான் நினைவுக்கு வருகிறது. கிராமத்திலே ஒரு குடம் தண்ணீர் ஒரு ரூபாய் என்று விற்கப்படுகிறது. என் னுடைய கிராமத்து மக்கள் தண்ணீருக்காக அலைகின்ற காட்சியைப் பார்க்கிறபோது, நாம் இங்கே நகரத்திற்காக, ஒரே நகரத்திற்காக அதிகத் தொகை செலவிடுவது சரி யாக இருக்குமா என்பதை நீங்கள் மறுபடியும் பரிசீலிக்க வேண்டும் என்று கூறி வாய்ப்புக்கு நன்றி தெரிவித்து, அமைகிறேன், வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. எஸ். அண்ணாமலை.

**திரு. எஸ். அண்ணாமலை :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வீட்டு வசதித்துறை மானியக் கோரிக்கை யின்மீது எனக்குப் பேச வாய்ப்பளித்திருக்கின்ற மாண்புமிகு முதல்வர் அவர்கள் டாக்டர் புரட்சித் தலைவி, நான் வணங்குகின்ற அன்னை பராசக்தியின் மறு உருவமாய் வீற்றிருக் கின்ற என்னுடைய ஆதிபராசக்திக்கு என்னுடைய முதற்கண் நன்றி யை தெரிவித்துக் கொண்டு என்னுடைய பகுதியில் பல்லவபுரம் கன்டோன்மென்ட் பகுதியில் மத்திய சர்க்காருக்கு உட்பட்ட நிலங்களில் கிட்டத்தட்ட ஒரு 2 ஆயிரம், 3 ஆயிரம் பேர்கள் குடியிருந்துகொண்டு இருக்கிறார்கள். அவர்களுக்கு அங்கே பட்டா வழங்குவதிலேயும், குடிநீர் பிரச்சினையானாலும், சாலை வசதி, தெரு விளக்குகள் பிரச்சினையானாலும், மாநில அரசு செய்யமுடியாத சூழ்நிலையில் மத்திய சர்க்கார் அந்த இடத்திலே தடையாகவும், அவர்களுக்கு, அந்தப் பகுதியிலே இருக்கின்ற மக்களுக்கு வேண்டிய சலுகைகளையும் செய்ய முடியாத சூழ்நிலையில் நாம் இருந்துகொண்டு இருக்கிறோம். அப்படிப்பட்ட இடங்களை வீட்டுவசதி மற்றும் குடிசை மாற்று வாரியத்தின்கீழ் கொண்டுவந்து அந்தப் பகுதியிலே இருக்கின்ற மக்களுக்கு பட்டா இல்லாததால், மின் விளக்கு இல்லாமல் அவதிப்படுகிறவர்களுக்கு அந்த இடத்திலே அடுக்கு மாடி கட்டித் தருவதற்கும், மாநில அரசு அறிவிக்கின்ற அத் தனை சலுகைகளையும் அவர்கள் பெறுவதற்கும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பிற்பகல் 12.20

அடுத்து, பல்லாவரம், ஆலந்தூர் இப்படிப்பட்ட நகராட்சி களில் நிலங்களை வாங்கி அங்கே தனியார்கள் அடுக்குமாடி வீடுகளைக் கட்டுகிறார்கள். அங்கே பாதாளச் சாக்கடை வசதி கிடையாது. மழை வெள்ளத்தினால் அந்தப் பகுதிகள் பாதிக்கப்பட்டபோது மழைத் தண்ணீர் சரியாக வெளியேற முடியாத சூழ்நிலையில் மக்கள் அங்கே வசிக்கிறார்கள். ஆனால் தனியார் அங்கே பிளாட்டுகளை வாங்கி அடுக்குமாடி வீடுகளைக் கட்டி, கொள்ளை லாபத்திற்கு விற்றுவிடுகிறார்கள். அந்தப் பகுதிகளிலே எல்லாம் அடுக்குமாடி வீடுகளில் குடி யேறுகிறவர்களுக்கு எவ்வளவோ பிரச்சினைகள் இருக்கின்றன. குறிப்பாக, அவர்களுக்கு குடிப்பதற்குத் தண்ணீர் கிடையாது. பாதாளச் சாக்கடை வசதி இல்லாத காரணத்தினால் அடுக்கு மாடி வீடுகளிலே இருக்கிறவர்கள் அத்தனைபேரும் நடு ரோட்டிலே தண்ணீரை விடுகின்ற சூழ்நிலை இருக்கின்ற காரணத்தி னால் அங்கே குடியிருக்கின்ற மக்கள் மிகவும் பாதிக்கப் படுகிறார்கள். இப்படிப்பட்ட நிலையில் இந்த நகராட்சி களிலே அடுக்குமாடி கட்டுவதற்காக எம்.எம்.டி.ஏ. வுக்கு பிளான் அப்ரூவலுக்காக வருகிறபோது அந்தப் பிளானை



அப்ரூவல் செய்ய வேண்டாம் என்று அமைச்சர் அவர்களிடம் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல ராணி அண்ணா நகர் பகுதியிலே குடிநீர் வசதி இல்லாத காரணத்தினால் லாரியில் கொண்டுபோய் தண்ணீர் கொடுக்கிறார்கள். ஒரு வாரத்திற்கு கிட்டத்தட்ட 25 இலட்சம் ரூபாய் இதனால் அரசுக்கு செலவாகிறது. இதை கார்ப் பரேஷன் மூலம் அல்லது மெட்ரோ வாட்டரில் ஹேன்ட்- ஓவர் செய்து அங்கிருக்கின்ற ஒரு லைனைக் கொண்டு போய் ஒரு மேல் நிலைத் தொட்டி அமைத்து அவர்களுக்குத் தண்ணீர் கொடுத்தால் அரசுக்கு லாபகரமாக இருக்கும். காரணம் அவர்கள் 10 ரூபாய்தான் மெயின்டெனன்ஸ் சார்ஜஸ் என்கிற வகையில் கொடுக்கிறார்கள். ஆனால் அரசாங்கம் செய்வதோ கிட்டத்தட்ட 25, 30 இலட்ச ரூபாய். ஆனால் நமக்கு டோட்டலாக மாதம் ஒன்றுக்கு வருவதோ 15 ஆயிரம் ரூபாய் தான். இப்படிப்பட்ட நிலையில் அவர்கள் கேட்கின்ற வசதி களைச் செய்து கொடுக்க முடியாத நிலையில் அரசாங்கம் இருக்கிறது. ஆகவே, இப்படிப்பட்ட இடங்களில் எல்லாம் நேரடியாக மேல்நிலைத் தொட்டிகளைக் கட்டி அவர்களுக்கு தண்ணீர் தர வேண்டுமென்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, எம்.எம். டி. ஏ. யிலே நிலஆர்ஜிதம் செய்து அங்கே இருக்கின்ற அடிப்படை வசதிகளுக்கு ஏற்ப ஸ்கீம் போடுகிறார் கள். அப்போது பக்கத்திலே இருக்கிற நிலங்களை எடுக்கிற போது அவர்கள் கோர்ட்டிலே போய் ஸ்டே வாங்கிவிடு கிறார்கள். இதனால் காலதாமதம் ஆகிக் கொண்டே போகி றது. அந்தக் காலதாமதத்தைப் போக்க உடனடியாக அந்த நில ஆர்ஜிதத்தை செய்கிற வகையில், அவர்கள் கோர்ட்டுக்குப் போகாத அளவுக்கு ஒரு சட்டம் கொண்டு வந்து உடனுக்குடன் அரசாங்கம் எடுக்கின்ற நிலங்களைக் கைப்பற்றுவதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல மாநகராட்சியில் இருப்பவர்களைப் பொறுத்த வரையில், நகர்ப்புறங்களில் இருப்பவர்களைப் பொறுத்த வரையில் அவர்கள் வீடு கட்டுவதற்கு பிளான் அப்ரூவல் செய்வதைப் பொறுத்தவரையில் கூட காலதாமதம் ஆகிக் கொண்டிருக்கிறது. ஒருவருக்கு 6 மாதம், ஒரு வருடம் கூட ஆகிறது. இப்படிப்பட்ட சூழ்நிலையை மாற்றி அவர்கள் கொடுக்கின்ற பிளானை உடனுக்குடன் பரிசீலனை செய்து, நேரடியாகப் பார்வையிட்டு, கூடிய சீக்கிரத்தில் ஓரிரு மாதங் களுக்குள்ளாக பிளானை அப்ரூவல் செய்து தர ஏற்பாடு செய்ய வேண்டுமென்று அமைச்சர் அவர்களுக்கு நான் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுபோல சில குறுகிய இடங்களை அப்ரூவல் செய்வதற்காக வேண்டி செல்கின்றபோது கூட அவர்களுக்கு சட்டத் திட்டங்களுக்கு உட்பட்டு அந்தப் பகுதியிலே இருக்கின்ற விதிப்படி பிளானிங்கில் கொஞ்சம் கூடுதல் குறைவாய் இருக்கின்ற நிலையிலும் கூட அதை பெரிதாகக் கருதாமல் அதை சரி செய்து அப்படிப்பட்டவர்களுக்கும் எம். எம். டி. ஏ. அனுமதி தர வேண்டும் என்று சொல்லிக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 12.25

என்னுடைய தொகுதியில் உள்ள எம். ஜி. ஆர். நகர் பகுதி ஒரு பெரிய பள்ளமாகும். மழையினால் பாதிக்கப்பட்ட மக்களைப் பார்வையிடுவதற்காக புரட்சித் தலைவி அவர்கள் அங்கே வந்தார்கள். மாண்புமிகு அமைச்சரவர்களும் வந்து பார்வையிட்டிருக்கிறார்கள். அதை ஒரு பெரிய சூளை பள்ளம் என்று சொல்லுவார்கள். கிட்டத்தட்ட 3,000 வீடுகள் அந்தப் பள்ளத்திலே இருக்கிறது. அந்த வீடுகளை அப்புறப்படுத்தி, ஒரு மேடான பகுதியில் அடுக்கு மாடி வீடுகளாக் கட்டித் தரவேண்டுமென்று மாண்புமிகு அமைச்சரவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, குடிசை மாற்று வாரியத்தால் அடுக்கு மாடி வீடுகள் கட்டிக் கொடுத்திருக்கிற இடங்களில் அடிப்படை வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டும். அங்கே சுவர்கள் பழுதடைந்து இருக்கின்றன. அவை முந்தைய ஆட்சிக் காலத்தில் கட்டப்பட்ட வீடுகளாகும், அங்கே படிக்கட்டுக்கள் இல்லாத இடங்கள் கூட இருக்கின்றன, மழைக்காலத்தில் மேலே விழும் தண்ணீர் கீழ்த்தளம் வரை வருகிறது. அப்படிப்பட்ட குடிசை மாற்று வீடுகளை உடனுக்குடன் பழுதுபார்த்து அந்த மக்களுக்கு நல்லது செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அங்கே சாலை வசதிகள் சரிவரக் கிடையாது, அதற்குக் காரணம் அவர்கள் கொடுக்கின்ற மெயின்டனன்ஸ் சார்ஜ் வாடகைக் குறைவாக இருப்பதுதான். இதனால் அவர்களுக்கு அடிப்படை வசதிகளைச் செய்ய முடியாத சூழ்நிலையில் அரசாங்கம் இருக்கிறது. எனவே, அதைச் சற்று கூட்டி, அவர்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளைச் செய்து தர வேண்டுமென்று கேட்டு, பேரவைத் துணைத் தலைவர், அவர்களுக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன், நன்றி. வணக்கம்,

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. ப. ரங்கநாதன்.







திரு. ப. ரங்கநாதன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே. மானியக் கோரிக்கை எண். 33 வீட்டு வசதி மானியக் கோரிக்கை எண். 34 நகர்ப்புற வளர்ச்சி பற்றிய மானியக் கோரிக்கைகள் பற்றி எனக்குப் பேச வாய்ப்பு அளித்த சட்டமன்றப் பேரவைத் துணைத் தலைவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன், முதலில் வீட்டு வசதி வாரியத்தைப் பற்றி ஒரு சில கருத்துக்களை இங்கே எடுத்து வைக்கக் கடமைப்பட்டுள்ளேன்,

தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திலே 3 சதவித இட ஒதுக்கீடு செய்கிறார்கள். அதாவது மத்திய அரசுத் துறையிலே இருப்பவர்களுக்கு ஒரு குறிப்பிட்ட விழுக்காடும். மாநில அரசுத் துறையிலே இருப்பவர்களுக்கு ஒரு குறிப்பிட்ட விழுக்காடும். மற்றவர்களுக்கு ஒரு குறிப்பிட்ட விழக்காடு என்றும் அங்கே வீட்டு காலி மனைகளையும், கட்டிய வீடுகளையும கடந்த காலங்களிலே ஒதுக்கீடு செய்துள்ளார்கள், ஆனால் அப்படி கடந்த காலங்களில் அங்கே ஒதுக்கீடு பெற்றவர்கள். எல்லாம் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள்தான், சென்னை நகரத்தைப் பொருத்தவரையில் ஒரு ஒதுக்கீட்டாளருக்கு ஒரு வீட்டு மனை என்று நிர்ணயம் செய்தும் கூட தமிழ்நரடு வீட்டுவசதிவாரியத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்களுக்கு குறைந்தது ஐந்து வீடுகளுக்கு மேல் அல்லது ஐந்து வீட்டு மனைகளுக்கு மேல் ஒதுக்கீடு பெற்றுள்ளார்கள், என்பதை இந்த நேரத்தில் நான் கூறிக் கொள்ளக் கடமைப்படடிருக்கினேன்

பிற்பகல் 12,30

தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், மத்திய அரசுப் பணியில் உள்ளவர்களுக்கும், மாநில அரசுப் பணியில் உள்ளவர்களுக்கும், மற்றவர்களுக்கும் என்று ஒதுக்கீடு விழுக்காடு நிர்ணயித்துள்ளபோது சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் இத்தனை விழுக்காடு என்று நீங்கள் நிர்ணயிக்கவேண்டுமென்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்:

அண்மையில், பொது நிறுவனங்கள் குழு உறுப்பினர் என்ற முறையில் ஆந்திர மாநிலத்திற்குச் செல்லும் வாய்ப்பு ஏற்பட்ட போது, அங்கேயுள்ள 295 சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் ஐதராபாத் நகரத்திலே இரண்டு மனைகள் வீதம் ரூ. 70.000 விலையில் ஒதுக்கியுள்ளார்கள், அது மட்டுமல்லாமல், அங்கே அரசாங்கம் 5 லட்சம் ரூபாயை வட்டியில்லாத் கடனாக சட்டமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கியிருக்கிறார்கள், நமது அமைச்சர் அவர்களும்

திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே........

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் ; :உறுப்பினர் திரு. இரா, தாமரைக்கனி அவர்கள் குறுக்கிட வேண்டாம், உறுப்பினர் திரு ப, ரெங்கநாதன் தொடர்ந்து பேசவேண்டும்,

திரு. ப. ரெங்கநாதன் : ஏனென்றால் இங்கேயுள்ள அனைவரும் காங்கிரஸ் மற்றும் அனைத்திந்திய அண்ணா தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர்கள்தான், ஆகவே அமைச்சர் அவர்கள் மனமுவந்து இந்த கோரிக்கையை ஏற்கவேண்டும். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு, இரா, தாமரைக்கனி அவர்கள் தொடர்ந்து குறுக்கிடுவது சரியல்ல. தயவு செய்து அமைதியாக இருக்கவேண்டுமென்று கேட்டுக், கொள்கிறேன், திரு. ப. ரங்கநாதன், பேசுங்கள், (குறுக்கீடு)

திரு, ப, ரங்கநாதன் : பரிவோடு பரிசீலிக்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன், அவர் தொடர்ந்து குறுக்கீடு செய்துகொண்டே இருக்கிறார்,

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு, இரா, தாமரைக்கனி அவர்கள் அமைதியாக இருக்கவேண்டும், இல்லையென்றால் வெளியேறவேண்டும், (குறுக்கீடு)

திரு. ப. ரங்கநாதன் : அடுத்து, தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், போலியாக, தவறாக ஒதுக்கீடுகள் செய்துள்ள விஷயத்தில், அந்த காலி வீட்டு மனைகளையும், ஒன்றுக்கு மேல் அதிகமாகப் பெற்றுள்ள தனியார் யாராக இருந்தாலும் அவர்களிடத்தில் இருக்கின்ற வீடுகளையும் காலி மனைகளையும் உடனடியாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கணக்கெடுத்து அந்த ஒதுக்கீடுகளை ரத்து செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன், ஏனென்றால். கடந்த காலங்களில் தி,மு,க, ஆட்சிக் காலத்தில் ஏறத்தாழ ஒரு குறிப்பிட்ட கட்சியை சார்ந்தவர்களுக்கு 5-லிருந்து 10 மனைகள் சென்னை நகரத்திலே ஒதுக்கியிருக்கிறார்கள், அவைகளை உடனடியாகக் கணக்கிட்டு ரத்து செய்ய வேண்டும் அடுத்து கொளத்தூர் பகுதியில் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். ஆட்சிக் காலத்தில் என் தொகுதியில் பெரியார் நகர் அரசு அலுவலர் குடியிருப்பு ஒன்றை உருவாக்கினார்கள்,



அதனுடைய விரிவாக்கமாக கொளத்தூர் பகுதியிலே அரசு ஊழியர்களுக்கு வீட்டு மனை வழங்கும் திட்டம். பெரியார் நகர் உருவாக்கப்பட்டு பணி மூப்பின் அடிப்படையில் வீட்டு மனைகள் ஒதுக்கப்பட்டு நல்ல முறையில் உருவாக்கப்பட்டுள்ளது. அதே அடிப்படையில் கொளத்தூர் பகுதியில் உள்ள அரசுக்குச் சொந்தமான நிலத்தை வீட்டு மனைகளாக மாற்றி அரசு ஊழியர்களுக்கு பணி மூப்பின் அடிப்படையிலும் வழங்கும் திட்டம் சுமார் 8 ஆண்டுகளுக்கு முன்பு உருவாக்கப்பட்டது, அந்த திட்டத்தை உடனடியாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அமுல்படுத்த வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டு கொள்கிறேன், அதே போன்று 1957 ஆம் ஆண்டு தொழில் துறை பணியாளர்கள் மற்றும் பொருளாதாரத்தில் நலிவடைந்த பிரிவினருக்காக கட்டப்பட்ட தொழிற் துறை வீட்டு வசதி திட்டத்தின் கீழ் புரசைவாக்கம், திரு. வி. க. நகரில் 544 வீடுகளும், வியாசர்பாடி சர்மா நகரில் 540 வீடுகளும் மத்திய அரசாங்கத்தின் மானியம் பெற்றுக் கட்டப்பட்டுள்ளது. இதே போன்று கோவை, சிங்காநல்லூர், பீளமேடு, மதுரை, பைகாரா, சிவகாசி மற்றும் பல இடங்களில் கட்டப்பட்டுள்ளது. மேற்கண்ட குடியிருப்புகள் தொழிலாளர் நல அதிகாரி அவர்களால் ஒதுக்கீடு செய்யப்பட்டு கடந்த 33 ஆண்டுகளுக்கு மேல் குடியிருந்து வருகிறார்கள். அந்த குடியிருப்புக்களை, அந்த சாதாரண தொழிலாளர்கள் குடியிருக்கின்ற குடியிருப்புகளை மத்திய அரசு 1978 ஆம் ஆண்டு சொந்தமாக்கிக் கொடுப்பது பற்றி ஒரு ஜி. ஓ. வை மாநில அரசுக்கு அனுப்பியுள்ளது. அந்த ஜி. ஓ. வின் அடிப்படையில், மத்திய அரசாங்கத்தின் உத்தரவின் அடிப்படையில் அண்டை மாநிலமான கர்நாடகாவும் 1985 ஆம் வருடம் ஒரு குடியிருப்புக்கு ரூ. 3,905 என்ற வீதம் அடிமனையும் சேர்த்து புதுவை மாநிலத்தில் உள்ள காந்தி நகரில் .... (குறுக்கீடு)

பிற்பகல் 12.35

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. தாமரைக்கனி அவர்க்ள் வெளியேற வேண்டும் என்று உத்தரவிடுகிறேன். (குறுக்கீடு) இப்படிக் குறுக்கிடுவது இந்த அவையை அவமதிப்பதாக இந்த அவை கருதுகிறது. நீங்கள் தயவு செய்து வெளியேறுங்கள். (குறுக்கீடு) திரு. ப. ரங்கநாதன் தொடர்ந்து பேச வேண்டும்.

திரு. ப. ரங்கநாதன் : புதுவை மாநிலத்தில் உள்ள காந்தி நகரில் ஒரு குடியிருப்பின் விலையாக ரூ. 5,959 என்று அடிமனை உட்பட, ஆக மொத்தம் ரூ. 6,208 என்று நிர்ணயம் செய்து குடியிருப்புக்களை சொந்தமாக்கிக் கொடுத்து உள்ளார்கள். அதே அடிப்படையில் 1987 ஆம் ஆண்டு தமிழக அரசும் குடியிருப்புக்களை சொந்தமாக்குவது என முடிவு

செய்து அரசாணை எம். எஸ். எண். 97, நாள் 15—7—1987 மூலம் உத்தரவு பிறப்பித்துள்ளது. அதே போன்று அதிலே சில மாறுதல்களைச் செய்து அரசாணை எண். எம். எஸ். நெம்பர். 1611, 9—12—1988 அன்று மறு உத்தரவு பிறப்பித்துள்ளது. அதே போன்று எம். எஸ். நெம்பர். 1074, 9—11—1989 அன்று மறு உத்தரவு பிறப்பித்துள்ளது. அதே போன்று எம். எஸ். நெம்பர். 249, 22—2—1991 அன்றைக்கு மறு உத்தரவு பிறப்பித்துள்ளது. ஆக 1985 ஆம் ஆண்டிலிருந்து தொடர்ந்து மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் புரட்சித் தலைவர் அவர்கள் மத்திய அரசுக்குச் சொந்தமான குடியிருப்புக்களை 33 ஆண்டுக் காலமாக தொழிலாளர்கள் குடியிருந்து அவர்களே பாதுகாத்து வந்திருக்கிற அந்த குடியிருப்புக்களை அவர்களுக்குச் சொந்தமாக்கிக் கொடுப்பது பற்றி மாண்புமிகு மறைந்த முதலமைச்சர் அவர்கள் ஆணை பிறப்பித்துள்ளார்கள். அதை மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் உடனடியாக பரிசீலனை செய்து அவர்களுக்கு பட்டா வழங்கவேண்டுமென்று நான் இந்த அவையிலே கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம். தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தைப் பொறுத்த வரையில் 20 ஆண்டுகளுக்கு முன்பு எம். யூ. டி. யூ. பி. என்ற திட்டத்தின் மூலமாக 20 ஆண்டுகளுக்கு முன்பு சென்னை நகரத்திலே குடிசைகளை அகற்றி அடுக்கு மாடி வீடுகளை கட்டினார்கள். இந்த குடியிருப்புக்கள் இன்றைய நிலையில் இடிந்து விழும் சூழ்நிலையில் இருக்கிறது என்று தெரிவித்துக் கொள்கிறேன். அந்த குடியிருப்புக்களில் வாழ்கின்ற ஒதுக்கீட்டாளர்களுக்கு இலவசமாக வீடுகளை வழங்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

பிற்பகல் 12.40

அதுபோன்று அந்த குடியிருப்புக்களில் வாழ்கின்ற வசித்து வருகின்ற பாமர மக்களுக்கு, ஏழைத் தொழிலாளர்களுக்கு அடிப்படை வசதிகள் இல்லை. வீடுகளுக்கு கதவு இல்லை; அங்கே குடிக்க தண்ணீர் இல்லை; அங்கே பெண்மணிகள் வீதிகளிலிருந்துதான் நாலாவது மாடிக்கு தண்ணீர் எடுத்துச் செல்கிறார்கள். இந்த அவல நிலையைப் போக்குவதற்கு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களும் வீட்டு வசதி நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களும் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன். அதே நேரத்தில் அந்த வீடுகளை அதிலே குடி இருக்கிற ஒதுக்கீட்டாளர்களுக்கு இலவசமாக வழங்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால் தேர்தல் நேரத்திலே வாக்குகளைக் கேட்க அந்தப் பகுதிக்குச் சென்றபோது சென்னை நகரத்தில் இருக்கின்ற



நாங்கள் ஏறத்தாழ 12 பேர் வெற்றி பெற்றோம். நாங்கள் 12 பேரும் ஒரே கருத்தைத்தான் வலியுறுத்திச் சொன்னோம். மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் தமிழகத்திலே ஆட்சிக்கு வருவது நிச்சயம், அவர்கள் ஆட்சிக்கு வந்தால் நாங்கள் உங்களுக்கு அங்கே 20 ஆண்டுகளாக சிரமப்பட்டு வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். எந்தவிதமான முன்னேற்றமும் இல்லாமல் இருக்கிறார்கள்—நாங்கள் அவர்களிடத்திலே சொல்லும்போது இந்த வீடுகளை இலவசமாக பத்திரப் பதிவு செய்து தருகிறோம் என்று அந்த நேரத்திலே வாக்குறுதி தந்தோம். அதை நிறைவேற்றித் தருகின்ற வகையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பல்வேறு நலத் திட்டங்களை அறிவித்து உள்ளார்கள். இந்த நேரத்தில் தாய்மார்களுக்கு, கர்ப்பிணிப் பெண்களுக்கு 2 ஆயிரம் ரூபாய் வழங்கி இருக்கிறார்கள். ஒய்வூதியம் ரூபாய் 50-லிருந்து 75 ரூபாயாக உயர்த்தி இருக்கின்றார்கள். இப்படிப் பல்வேறு திட்டங்களை அமுல்படுத்தும் நேரத்தில், 20 ஆண்டுகளாக வாழ்ந்து வருகின்ற அந்த ஏழைகளுக்கு, புரட்சித் தலைவர் மேல் அன்பு கொண்டிருக்கிறவர்களுக்கு, புரட்சித் தலைவி அவர்களின் மேல் பாசம் கொண்டுள்ளவர்களுக்கு, அவர்கள் மேல் பற்றுக் கொண்டுள்ள வர்களுக்கு இலவசமாக நீங்கள் அந்த வீடுகளை வழங்கவேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, தமிழ்நாடு அர்பன் டெவலப்மென்ட் ஸ்கீம். எம். யூ. டி. ஸ்கீம். இந்தத் திட்டத்தின் மூலம் குடிசைப் பகுதிகளை அபிவிருத்தி செய்து இருக்கிறார்கள். அங்கு உள்ளவர்களுக்கு இன்னும் பட்டா முறையாக வழங்கப்படவில்லை. அதையும் அவர்களுக்கு கிடைக்க அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அடுத்து, நகர வளர்ச்சியைப் பற்றி இங்கே குறிப்பிட ஆசைப்படுகிறேன். எம். எம். டி. ஏ. என்றாலே பொது மக்கள் அஞ்சுகின்ற ஒரு நிலை இருக்கிறது. அந்த அலுவலகத்தின் பெயரைமாற்றி அதை உருவாக்கிய புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர். அவர்களுடைய பெயரைத்தான் அதற்கு சூட்டி இருக்க வேண்டும். அதை விடுத்து யாரோ ஒருவருடைய பெயரை வைத்து அந்த மாளிகைக்கு பெயர் சூட்டி இருக்கின்றார்கள். (குறுக்கீடு) அந்தப் பெயரை அகற்றிவிட்டு மறைந்த புரட்சித் தலைவருடைய பெயரை அந்த மாளிகைக்கு சூட்ட வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன், காரணம், புரட்சித் தலைவர் காலத்தில் நகர வளர்ச்சியானது நகர அபிவிருத்தி திட்டமானது நல்ல முறையில் சீராக நடைபெற்றுக் கொண்டிருந்தது. அதைக் குறிக்கும் வகையில் புரட்சித் தலைவர் அவர்களுடைய பெயரை அந்த மாளிகைக்கு சூட்ட வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்,

[திரு. ப. ரங்கநாதன்] [1992 மார்ச் 27

அதே போல் எம். எம். டி. ஏ. -வில் பணியாற்றுகின்ற அதிகாரிகளைச் சாதாரண பொதுமக்கள் பார்ப்பதற்கு சிரமப்படுகிறார்கள். அதைப் போக்குகின்ற வகையில் அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அதுமட்டுமல்லாமல், இங்கே எனக்கு முன்பு பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. பலராமன் அவர்களும், திரு. வி. கே. லட்சுமணன் அவர்களும் தெளிவாகக் குறிப்பிட்டார்கள், சென்னை நகரத்திலேயும், தமிழகத்திலேயும் குறிப்பாக ரியல் எஸ்டேட் வைத்து நடத்துகின்றவர்கள், அவர்கள் எந்த விதமான ஒரு அடிப்படை வசதியையும் செய்து கொடுக்காமல், 'அன்-அப்ரூவ்டு லே-அவுட்' போட்டு அவர்கள் கொள்ளை அடிக்கிறார்கள். (குறுக்கீடு) எம். எம். டி. ஏ. பெர்மிஷன் பெறுவது கிடையாது; டவுன் பிளானிங் அப்ரூவ்டு பெர்மிஷன் கிடையாது. (குறுக்கீடு). அதை உடனடியாக தடுத்து நிறுத்தும் வகையில் அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்றேன்.

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :</u> மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. தாமரைக்கனி அவர்கள் உடனடியாக அவையை விட்டு வெளியேற வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். (குறுக்கீடு) திரு. இரா. தாமரைக்கனி அவர்கள் வெளியேறவேண்டும்; உடனடியாக வெளியேறவேண்டும். (குறுக்கீடு). திரு. இரா. தாமரைக்கனியை வெளியேற்ற உத்தரவிடுகிறேன். மார்ஷல். (குறுக்கீடு).

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

பிற்பகல் 12.45

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> வெளியேறுமாறு பேரவைத் துணைத் தலைவர் உத்தரவிட்டதை மீறி இங்கே இருக்கக் கூடாது. அவரை வெளியேற்றக் காவலர்களுக்கு உத்தரவிடுகிறேன்.

<u>திரு. இரா. தாமரைக்கனி :</u> என்னை யாரும் தொடக் கூடாது. நான் போவேன். நான் போவேன். இல்லே.... ஏன் தொடுகிறீர்கள்? என்ன உரிமை இருக்கிறது? உனக்கு என்ன உரிமை இருக்கிறது?

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> உடனடியாக திரு. இரா தாமரைக்கனியை அப்புறப்படுத்தக்கேட்டுக்கொள்கிறேன்,

(திரு. இரா. தாமரைக்கனி பேரவைக் காவலர்களால் வெளியேற்றப்பட்டார்.)



1992 மார்ச் 27]

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் ;</u> திரு, தாமரைக்கனியின் இத்தகைய செய்கைகள் தொடர்ந்து அவையில் நடைபெற்று வருகின்றன, இது தொடர்கிறபோது வேறு வகையான நடவடிக்கைகள்தான் எடுக்கவேண்டி வரும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். திரு. ப. ரங்கநாதன்.

<u>திரு. ப.ரங்கநாதன் :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. சென்னை நகரிலும், தமிழகத்திலும் புதிது புதிதாக அங்கீகாரம் இல்லாமல் பல்வேறு குடியிருப்புக்களை ஏற்படுத்தி, அவற்றை ரியல் எஸ்டேட் மூலமாக விற்றுக் கொண்டு வருகிறார்கள், அதனால், மழைக்காலங்களில் பல் வேறு சிரமங்கள் ஏற்படுகின்றன. சென்னை மாநகராட்சியில் பல்வேறு சிரமங்கள் ஏற்படுகின்றன, இதையெல்லாம் ஒழுங்கு படுத்துகின்ற வகையில், கட்டுப்படுத்துகிற வகையில் மாண்பு மிகு அமைச்சரவர்கள் ஒழுங்கு முறை சட்டத்தைக் கொண்டு வந்து, அனைத்து ரியல் எஸ்டேட்டுகளும் இந்த எம். எம். டி. ஏ. அல்லது வீட்டு வசதி வாரியத்தில் தனியாக அங்கீகாரம் பெற்ற பிறகுதான் அவர்கள் வியாபாரம் செய்ய முடியும் என்பதை இந்த அவையில், இந்த சட்டமன்றக் கூட்டத் தொடரிலே செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஏனென்றால், அங்கங்கே நிலங்களை மடக்குகிறார்கள் அரசு நிலங்களை மடக்குகிறார்கள், பிளாட் போட்டு விற்று, கொள்ளையடித்து விட்டு, சென்று விடுகிறார்கள். இதைக் கட்டுப்படுத்துகிற முறையில் அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, சென்னை நகரில் நகர வளர்ச்சித் துறை மூலமாக எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகளை இந்த விளக்கக் குறிப்பில் படித்துப் பார்த்தேன், எழில்மிகு சென்னை 2011 என்ற தலைப்பில் இன்றைக்கு சென்னை நகரில் நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. இன்றைக்கு சென்னையில் அனைத்துச் சாலைகளும் நெருக்கடியான சூழ்நிலையில் இருந்து கொண்டிருக்கின்றன. 10 ஆண்டுகளுக்கு முன்பு நுங்கம்பாக்கம் நெடுஞ் சாலை நெருக்கடி இல்லாமல் இருந்ததை நான் பார்த்து இருக்கிறேன். ஆனால் இன்றைக்கு காலையிலிருந்து இரவு 12.00 மணி வரையில் பயங்கரமான நெருக்கடி அங்கே ஏற் படுகிறது, அதையும் அகலப்படுத்த வேண்டும். இப்படி நெருக்கடியான சாலைகள் வட சென்னையில் திருவொற்றியூர் நெடுஞ்சாலை, இராயபுரம் நெடுஞ்சாலை, வால்டாக்ஸ் நெடுஞ் சாலை, பிராட்வே ரோடு நெடுஞ்சாலை, எருக்கன்சேரி ஹைரோடு நெடுஞ்சாலை, என் தொகுதியில் பேப்பர் மில்ஸ் நெடுஞ்சாலை, மாதவரம் ஹைரோடுகளும் நெடுஞ்சாலை

போன்ற சாலைகளும் உள்ளன. அங்கே ஆக்கிரமிப்பு செய்திருக்கிற வீடுகளையும். கடைகளையும் இடித்துத் தள்ளுகிற வகையில் அவர்கள் நீதிமன்றத்திற்குச் சென்றாலும் கூட அவர்களுக்கு தடை எதுவும் பெறாத வண்ணம் இங்கே அவசர சட்டத்தைப் போட்டு உடனடியாக இந்தச் சாலைகளை அகலப்படுத்த வேண்டுமென்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

பிற்பகல் 12.50

நகர வளர்ச்சித் துறை மூலமாக சென்னை நகரில் இருக்கிற அனைத்து ஆக்கிரமிப்புப் பகுதிகளையும் கையகப்படுத்தி. அங்கே யார் யார் குடியிருக்கிறார்கள் என்றெல்லாம் பார்க்காமல்— அரசு நிலங்களில் குடிசைகளைப் போட்டுக் கொண்டு ஆக்கிரமிப்பு செய்து கொண்டிருக்கிறார்கள். அதையெல்லாம் அப்புறப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன், நான் கடந்த சட்ட மன்ற கூட்டத் தொடரில் ஒன்றை இங்கே குறிப்பிட்டேன். எங்கள் பகுதியில் 100 ஆண்டுகளுக்கு மேலாக இயங்கிக் கொண்டிருந்த பி. அண்ட் சி. மில் தொழிற்சாலை மூடிக் கிடக்கிறது என்று. அதை மாண்புமிகு தமிழக முதல்வர் தலையிட்டு திறக்க வேண்டும். ஏனென்றால், 10,000 தொழிலாளர்கள் ஏறத்தாழ 3,4இலட்சம் பேர் பட்டினியால் வாடுகிறார்கள்; அவர்களுக்கு புனர்வாழ்வு அளிக்க வேண்டுமென்று நான் முதன் முதலில் இந்த சட்ட மன்றத்தில் குரல் கொடுத்தேன். அதையேற்று நமது முதலமைச்சர் அவர்கள் அதைப் பரிவோடு கவனித்து அந்த 10 ஆயிரம் குடும்பங்களுக்கும் நல்வாழ்வு அளிக்கின்ற வகையில். ஒரு சீரிய திட்டத்தினை வகுத்து இருக்கிறார்கள் இன்றைக்குக் காலையிலே பத்திரிக்கையிலே பார்த்தேன். நேற்றைக்கு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் மூலமாகவும் ஆணையாளர் அவர்கள் மூலமாகவும் வருகின்ற ஏப்ரல் மாதம் 13ந் தேதி அந்த ஆலையைத் திறப்பதற்கான தேதியை நிர்ணயித்து, ஆலை திறக்கும் படியாக தொழிலாளர்கள், பணிக்கு வர வேண்டும் என்றும், ஒரு மாதச் சம்பளத்தை இலவசமாக வழங்கவேண்டும் என்றும், போனஸ் போன்ற பிரச்சினைகளை எல்லாம் ஆலை திறந்த பின்பு பார்த்துக் கொள்ளலாம் என்றும் முடிவு எடுக்கப்பட்டுள்ளதை பார்த்து நான் மகிழ்ச்சி அடைகிறேன். அதற்காக என் தொகுதியின் சார்பிலும், என் தொகுதிக்குப் பக்கத்தில் உள்ள பெரம்பூர் தொகுதியின் சார்பிலும் அந்தத் தொழிற்சாலையில் பணியாற்றுகின்ற தொழிலாளர் குடும்பங்களின் சார்பாகவும், குறிப்பாக பெண்களின் சார்பாகவும், நான் நன்றியையும், பாராட்டுக்களையும் தமிழக முதலமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.



V211,31 (N92
N92-21
163177

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஜி. பழனிசாமி.

அடுத்து வீட்டு வசதி வாரியத்தைப் பற்றியும் நகர வளர்ச்சி பற்றியும் இங்கே குறிப்பிடுகின்றபோது, சென்னை நகரைப் பொறுத்த வரையில், எங்கள் தொகுதியிலே, மனைப்பட்டாக்களை வழங்காமல்......

திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் தாமரைக்கனி அவர்கள் இந்தச் சட்டமன்றத்திலே தொடர்ந்து உறுப்பினர்கள் பேசுகின்றபோது, அவருக்குச் சம்பந்தம் இல்லாத இடையூறுகள் செய்து வருகிறார்கள். ஆகவே, தாங்கள் விதிமுறைக்கு உட்பட்டு, அவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். மற்ற சட்டமன்ற உறுப்பினர்கள்........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் சொல்வதற்கு முன்னாலே நான் சொல்லி விட்டேன். தொடர்ந்து இப்படிச் செய்து கொண்டிருக்கிறார். அதனால் கடும் விளைவுகள் ஏற்படும் என்பதை அவருக்கு எச்சரிக்கையாகச் சொல்லியிருக்கிறேன். இப்போது காவலர்களை விட்டு அப்புறப்படுத்தச் செய்திருக்கிறேன். அந்த அளவிற்குக் கடுமையான நடவடிக்கைகள் அவர் மீது எடுக்கப்பட்டுக் கொண்டுதான் வருகின்றன. இதற்குமேல் என்ன நடவடிக்கை எடுக்கலாம் என்பதை நான் ஆராய்ந்து சொல்கிறேன். திரு. ப. ரங்கநாதன்.

திரு. ப. ரங்கநாதன் : பி. அன்ட் சி. மில் பிரச்சினையைத் தீர்த்து வைத்ததற்காக மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டுள்ளேன்.

என் தொகுதியைப் பொருத்தவரையில் நீண்ட நாட்களாக டி. என். யு. டி. பி. ஸ்கீம், எம். யூ. டி. பி. ஸ்கீம் போன்ற திட்டங்களால், அபிவிருத்தி செய்யப்பட்டும் பட்டா வழங்காமல் இருக்கிறது. அதைப் போக்குகின்ற வகையில் எங்கள் பகுதி மக்கள் சார்பாக அனைத்துப் பெண்களும், ஒன்றாகச் சேர்ந் என்னிடத்திலே ஒரு. முறையீட்டைக் கொடுத்துள்ளார்கள். முதலமைச்சருடைய பிறந்த நாள் விழாவை எங்கள் பகுதியில் கொண்டாடுகிறோம், நீங்கள் அதற்குத் தலைமை

[திரு. ப. ரங்கநாதன்]

தாங்க வேண்டும், அந்த நேரத்திலே எங்களுக்கு எல்லாம், 20 ஆண்டுக்காலமாக கிடைக்கக்கூடிய பட்டாக்களை வழங்குவதற்காகன பணியை நீங்கள் சட்டமன்றத்திலே எடுத்துச் சொல்லி, அவர்களுடைய அனுமதியைப் பெற்று வாருங்கள் என்று நேற்றைக்கு என்னிடத்தில் மனுவாகக் கொடுத்து இருக்கிறார்கள். அதை இங்கே நினைவு படுத்துகின்ற வகை மாண்மிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது யிலே, வருகின்ற மாதத்தில் அந்த நிகழ்ச்சிக்கு அமைச்சர்கள் எல்லாம் வந்து, அங்கே நீண்ட நாட்களாக கொடுக்காமல் இருக்கிற பட்டாக்களை முதலமைச்சருடைய பிறந்த நாள் விழாவிலே வழங்க வேண்டும் என்று கேட்டு, எனக்கு பேச வாய்ப்பு அளித்த பேரவைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி அமர்கிறேன், நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்.

12.55 பிற்பகல்

*மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'கொடையளி செங்கோல் குடியோம்பல் நான்கும்
உடையானாம் வேந்தர்க் கொளி.'

கொடை, அருள், செங்கோல் முறை, தளர்ந்த குடிகளை காத்தல் ஆகிய நான்கும் உடைய அரசன், அரசர்க்கெல்லாம் விளக்கு போன்றவன் என்பது வள்ளுவரின் வேத வாக்கு. அத்தகைய உயரிய பண்புகளை எல்லாம் ஒருங்கே பெற்றிருக்கிற எங்களுடைய ஒளி விளக்கு, போற்றுதற்குரிய மாண்புமிகு தமிழக முதல்வர், டாக்டர் புரட்சித் தலைவி அவர்களது திருநாமத்தை உச்சரித்து, அவர்தம் பாதம் தொட்டு, வணங்கி எமது துறை தொடர்பான அறிக்கையை இந்த மாமன்றத்திலே சமர்ப்பிக்கிறேன்.

மாண்புமிகு புரட்சித் தலைவியினுடைய புனித லட்சியங்களை புழுதிவாரி இறைத்த புல்லர்கள் எல்லாம் இந்த மாமன்றத்திலே இல்லாததது, தமிழக மக்கள் தாங்கள் தேடிக் கொண்ட புண்ணியத்தைக் காப்பாற்றுகின்ற வகையிலேயும், லட்சோபலட்சம் ஏழை அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அடலேறுகளின் காவல் தெய்வமாக, இவற்றிற்கெல்லாம் மேலாக எடுத்த சபதத்தை, கொடுத்த



சத்தியத்தைக் காப்பாற்றுகின்ற இலட்சிய தேவதையாக அரசு இயந்திரத்தை அதன் அற்புதத் திட்டங்களின் வடிவிலே சுழற்றிவிட்டுக் கொண்டிருக்கிற போற்றுதற்குரிய தமிழக முதல்வர் அவர்கள் அறிவித்திருக்கிற திட்டங்கள் பயன் பெறுவோருக்கு முறையாகச் சென்றடைகின்றனவா என்று கண்ணுங் கருத்துமாகக் கண்காணிக் கடமைப்பட்டவனாக, இந்த மாமன்ற உறுப்பினர்கள் அத்தனை பேர்களுடைய ஆதரவையும் நாடி வணக்கத்தோடு எமது துறைகளுடைய மானியக் கோரிக்கைகளை பேரவைத் தலைவர் அவர்களே, உங்கள் வாயிலாக இந்த மன்றத்திற்கு சமர்ப்பிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்தத் துறைகளின் மானியக் கோரிக்கைகள் குறித்த கொள்கை விளக்கக் குறிப்புகள் புத்தகமாக அச்சடிக்கப்பட்டு மாண்புமிகு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. இங்கு 47 வெட்டுத் தீர்மானங்கள் வீட்டு வசதி சம்பந்தமாகக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அதைப்போல 25 வெட்டுத் தீர்மானங்கள் நகர்ப்புற வளர்ச்சி சம்பந்தமாக மாண்புமிகு உறுப்பினர்கள் கொடுத்திருக்கிறார்கள்.

அது மாத்திரமல்லாமல் இந்தக் கோரிக்கைகளில் ஆறு மாண்புமிகு உறுப்பினர்கள் கலந்து கொண்டு நாட்டு நலன்கள் கருதி தங்களது சீரிய கருத்துக்களையும் பரிந்துரைகளையும் நல்ல விளக்கங்களையும் எடுத்துரைத்திருக்கிறார்கள். அதற்காக அவர்கள் அத்தனை பேர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

விவாதம் என்று வருகிறபோது அவரவர்களுடைய எண்ணங்களுக்கேற்ப பாராட்டுதலையும் தூற்றுதலையும் வழங்குவது வழக்கம்தான். அந்த வகையிலே இன்று இந்தத் துறைகள் சம்பந்தப்பட்ட வகையிலே பாராட்டிப் பேசிய மாண்புமிகு உறுப்பினர்களுக்கு என்னுடைய உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், அறிவுத் திறனாலும் ஆற்றல் திறனாலும் எண்ணியதை எண்ணியவாறு செய்துகொண்டிருக்கிற வல்லமை படைத்த மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் நல்லாசியோடு மாண்புமிகு உறுப்பினர்கள் அத்தனை பேர்களும் எழுப்பியுள்ள பல்வேறு பிரச்சனைகள் குறித்தும் சிறப்பான நியாயமான நடவடிக்கைகளை முறைப்படி அரசு எடுக்கும் என்ற உறுதியினைக் கூற கடமைப் பட்டிருக்கிறேன்.

இந்தத் துறை சம்பந்தப்பட்ட வீட்டு வசதியை எடுத்துக் கொண்டு பார்ப்போமேயானால் ஏழை எளிய பாட்டாளி மக்களுடைய அன்றாட பிரச்சினையாக இருக்கிற வீட்டுவசதித் தேவையைப் பூர்த்தி செய்கின்ற வகையில் நாட்டு மக்களுடைய

நலன்களைக் காப்பாற்றுகின்ற அரசாக ஒரு குடும்பத்திற்கு ஒரு வீடு என்ற அரசின் திட்டத்தை கொள்கையை செயல் படுத்துகின்ற வகையில் வரும் நிதியாண்டில் 1,10,000 வீடுகள் கட்டப்பட்டு வழங்கப்பட அரசு இலக்கு நிர்ணயித்திருக்கிறது. என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். (மேஜையைத் தட்டும் ஒலி).

அதைப்போல தமிழகத்தின் சிறிய மற்றும் நடுத்தர நகரங்களில் வாழ்பவர்களுக்கு ரூ. 18.55 கோடி செலவில் 10 நகரங்களிலே 2210 வீடுகளை 1991-92 ஆம் ஆண்டிலே தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் கட்டி முடித்துள்ளது. ஆனால் இதையே முதல் கட்ட நடவடிக்கையாக 1992-93 ஆம் ஆண்டில் 15 நகரங்களில் குறிப்பாக ஆரணி, போரூர், திருவள்ளூர் கும்மிடிப்பூண்டி, மணப்பாறை, துறையூர், அரியலூர், தேனி, பெரியகுளம், ஒட்டன்சத்திரம், சாத்தூர், இராஜப்பாளையம், கொல்லம்பாளையம், பாலக்கோடு ஆகிய நகரங்களில் ரூ. 41.32 கோடி மதிப்பீட்டிலே 5,773 வீடுகளைக் கட்டும் பணியை இந்த அரசு மேற்கொள்ளவிருக்கிறது. என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) பெருமிதத்தோடும் மகிழ்ச்சியோடும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இப்படிப்பட்ட சிறிய மற்றும் நடுத்தர நகரங்களில் ஏற்படுத்தப்படவுள்ள திட்டங்களின் கீழ் இரண்டாவது கட்ட நடவடிக்கையாக பொருளாதாரத்தில் நலிந்த பிரிவினரும் குறைந்த வருவாய் பெறுபவர்களும் பயன்படுகின்ற வகையிலே அடிப்படை வசதிகளையும் அனைத்துத் தேவைகளையும் பூர்த்தி செய்கின்ற வகையிலே மேம்படுத்தப்பட்ட வீட்டுமனைகள் ஒதுக்கிடு செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதற்கும் மேலாக வீடுகள் கட்டிக்கொள்ள பணக் கடன்களும் வழங்கப்படும் என்பதை இந்தப் பேரவைக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றைக்கு தமிழ்நாட்டிலே வீட்டுமனைத் திட்டங்கள் எந்தக் காலத்திலும், எந்த ஆட்சிக் காலத்திலும் இல்லாத வகையிலே மிகவும் துரிதமாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. வீட்டுமனைத் திட்டங்களைச் சிறப்பாகச் செயல் படுத்துகின்ற வகையில் 1992 ஆம் ஆண்டில் 32 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்ட நிலை மாற்றப்பட்டு இன்று 1992-93 ஆம் ஆண்டுக்காக 48 கோடி ரூபாயாக அது உயர்த்தப்பட்டிருக்கிறது. மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய பொற்கால அரசில் வரும் நிதியாண்டில் கொடுத்து கொடுத்துச் சிவந்த கரங்களுக்குச் சொந்தக்காரரானவர் பெயரில் அமைக்கப்பட்டுள்ள செங்கை எம். ஜி. ஆர். மாவட்டத்திலுள்ள மதுரவாயலில் ரூ. 12.75 கோடி செலவிலே



3,500 வீட்டு மனைகள் தாழ்த்தப்பட்ட மக்களுடைய வசதிக்காகவும் அனைத்து மக்களுடைய வசதிக்காகவும் வழங்கப்பட இருக்கின்றது. (மேசையைத் தட்டும் ஒலி).

பிற்பகல் 1.00

அதுமட்டுமல்லாமல், தாழ்த்தப்பட்ட, மக்களுடைய ஒப்
பற்ற தலைவர் பெயரில் அமைக்கப்பட்டுள்ள வட ஆற்காடு
அம்பேத்கார் மாவட்டத்தில் தரைப்படைவீடு என்ற கிராமத்
திலே ரூ. 15.40 கோடி செலவிலே 4,575 வீட்டு மனைகள்
உருவாக்கிக் கொடுக்கப்பட உள்ளது என்பதை உவகைப்
பெருக்கோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத்
தட்டும் ஒலி). இப்படி வடிவமைக்கப்பட்ட 5,000 வீட்டு மனை
களோடு 1992-93 ஆம் ஆண்டிலே 15,000 வீட்டு மனைகளாக
அதிகரிக்கப்படும் என்பதை இந்த மாமன்றத்திற்குத் தெரி
வித்துக்கொள்கிறேன். இதிலும் கூட பொருளாதாரத்தில் நலி
வுற்ற பிரிவினருக்காக 55 விழுக்காடுகளும், குறைந்த வருவாய்
பிரிவினருக்காக 35 விழுக்காடுகளும் ஒதுக்கப்பட்டிருக்கிறது
என்பதை மன மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.
இப்படியெல்லாம் வீடுகள் கட்டப்பட்டு, மனைகள் பிரிக்கப்
பட்டு, ஒதுக்கீடுதாரர்களுக்கு ஆண்டாண்டு காலமாக இருந்து
வந்த விற்பனைப் பத்திர பிரச்சினைகளை எல்லாம் போக்குவ
தற்காக தமிழகத்தினுடைய போற்றுதற்குரிய முதல்வர்
அவர்கள் தற்போதுள்ள குறைகளை களைகின்ற வகையிலே
'அலாட்டீஸ் சர்வீஸ் மேனேஜர்' என்று சொல்கின்ற அளவில்
ஒதுக்கீடுதாரர்கள் மேலாளர் என்ற பதவிகள் உருவாக்கப்
பட்டு தமிழகத்தில் 8 இடங்களில் பணி அமர்த்துவதற்கு
உத்தரவிட்டிருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி). இதனால்
ஒதுக்கீடுதாரர்களுக்கு 'சேல் டீட்' விற்பனைப் பத்திரம் விரை
வாகக் கிடைக்கப் பெறும் என தெரிவித்துக் கொள்கிறேன்.

சென்னை நகரத்தில் ஒதுக்கீடுதாரர்கள் வங்கிகள் மூலமாக
மாதத் தவணையில் செலுத்துகின்ற முறை பயனுள்ளதாக
உள்ளதால், இந்த முறையையே மற்ற மாவட்டங்களுக்கும்
நீட்டிக்க புரட்சித் தலைவி அவர்கள் உத்தரவிட்டிருக்கின்றார்
கள். இதன்படி ஒதுக்கீடுதாரர்கள் கோட்ட
அலுவலகங்களுக்கு நெடுந்தூரம் செல்லவேண்டிய சிரமம்
நீக்கப்பட்டு, அவர்களுடைய வீடுகளுக்கு அருகாமையிலே உள்ள
அங்கீகரிக்கப்பட்ட வங்கிகளில் பணம் செலுத்த ஏதுவாக
அமைக்கப்பட்டிருக்கிறது. அதேபோல் வீட்டு வசதி வாரியக்
கோட்டங்களில் கணிப்பொறிகள் 'கம்ப்யூட்டர்கள்' பொருத்தப்
பட்டு, ஒதுக்கீடுதாரர்களுடைய கணக்குகளும் சரிசெய்யப்
பட்டு, அவர்கள் செலுத்திய மாதத் தவணைகள் முறையாகக்
கணக்கிடப்பட்டு, பாக்கித் தொகையினுடைய விவரங்கள்

[திரு. டி. எம். செல்வகணபதி]

[1992 மார்ச் 27

ஒதுக்கீடுதாரர்களுக்கு அவர்கள் கேட்கின்ற போதெல்லாம்
தெரிவிக்கின்ற, அறிவிக்கின்ற, திட்டத்தை மாண்புமிகு
தமிழக முதல்வர் அவர்கள் அறிமுகப்படுத்த ஆணை
பிறப்பித்துள்ளார்கள் என்பதையும் உள்ள உவகையோடு
தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி).
இதற்கெல்லாம் மேலாக அரசு ஊழியர்களுடைய துயர்
துடைக்கின்ற ஒப்பற்ற தலைவி, டாக்டர் புரட்சித் தலைவி
அவர்கள் 1991-92 ஆம் ஆண்டு முதல் 1995-96 ஆம் ஆண்டு வரை
யில் ரூ. 62.8 கோடி செலவிலே 5,262 வாடகைக் குடியிருப்
புகளைக் கட்டுவதற்கு ஒப்புதல் அளித்திருக்கின்றார்கள்.
(மேசையைத் தட்டும் ஒலி). அரசு ஊழியர்களுடைய தேவை
களைப் பூர்த்தி செய்கின்றவகையில் இந்தத் திட்டம் தமிழ
கத்தில் 56 நகரங்களில் மேற்கொள்ளப்பட இருப்பதை மன
மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத்
தட்டும் ஒலி). அரசு ஊழியர்கள்மீது என்றென்றும் அக்கறை
கொண்டிருக்கின்ற மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள்
வீடு கட்ட முன் பணம் கேட்டு, விண்ணப்பித்து, அரசு ஆணையை
எதிர்நோக்கி இருக்கின்ற ஏராளமான அரசு அலுவலர்களு
டைய எண்ணத்தைப் பூர்த்தி செய்கின்ற வகையிலே இந்த
ஆண்டான 1992-93-ல் ரூ. 18 கோடியிலிருந்து ரூ. 25 கோடி
யாக உயர்த்திக் கொடுத்திருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும்
ஒலி).

அதுமட்டுமல்லாமல், மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்
கள் நீண்ட காலமாக நிலுவையிலுள்ள கணிசமான எண்ணிக்
கையிலுள்ள விண்ணப்பங்களையும் மனதில் கொண்டும், நாள்
தோறும் உயர்ந்துவரும் கட்டிடப் பொருட்களின் விலையை
கருத்தில் கொண்டும், தன்னுடைய அறிவுத் திறனாலும்,
ஆற்றல் திறனாலும் அரசு அலுவலர்களின் நலனுக்காக ஒரு
திட்டத்தை தீட்டிக் கொடுத்திருக்கின்றார்கள்.

பிற்பகல் 1.05

இந்தத் திட்டத்தின் மூலமாக அரசு அலுவலர்களுக்கு மற்ற
நிதிநிறுவனங்களின் மூலமாக வீடு கட்ட முன்பணம் பெறுவதற்கு
அரசே வழிவகை செய்யும். அந்த வகையிலேதான் மெசர்ஸ்
கான்பின்ஹோம்ஸ் என்ற மத்திய அரசின் நிதி நிறுவனத்தின்
உதவியோடு அரசு அலுவலர்களுக்கு ரூபாய் 50 கோடி
அளவில் வீடு கட்ட முன் பணம் தர அரசு திட்டம்
இட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி). இதில் முதல் கட்
டமாக 1992-93 ஆம் ஆண்டிலே இந்த நிதி நிறுவனத்தின்
மூலமாக ரூபாய் பத்துகோடி அரசு அலுவலர்களுக்கு வீடு
கட்ட முன் பணமாக கிடைக்க இருக்கிறது என்பதை மகிழ்ச்
சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).



1992 மார்ச் 27] [திரு. டி.எம். செல்வகணபதி]

அது மட்டுமல்லாமல், அரசு தருகின்ற கடனுக்கும் நிதி நிறுவனம் தருகின்ற கடனுக்கும் இடையிலே உள்ள வட்டி விகிதாச்சார வித்தியாசத்தை அரசே ஏற்கும் என்று மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி). இப்படி அரசே அரசு ஊழியர்களுக்கு நிதி நிறுவனங்களோடு இணைந்து வீடு கட்ட முன் பணம் தருவதும் அதற்கு உண்டான வட்டி விகிதத்தை அரசே ஏற்பது என்பதும் தமிழக சரித்திரத்திலேயே இதுதான் முதல் தடவை என்று கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

இந்த நிலையிலே மாண்புமிகு சட்டப்பேரவை உறுப்பினர்களுக்கு தெரிவிப்பது எல்லாம் கடந்த தி.மு. கழக ஆட்சியில் வீட்டு வசதி வாரியம் 1990-91-ல் வீட்டு வசதி திட்டங்களுக்காக ரூபாய் 90 கோடியே 7 லட்சம் மட்டுமே செலவிடப்பட்டது. ஆனால் இன்று தாய் உள்ளம் கொண்டு தமிழகம் காக்கின்ற டாக்டர் புரட்சித் தலைவியினுடைய ஆட்சிக் காலத்தில் 1992-93 ஆம் ஆண்டில் இந்தத் தொகை ரூபாய் 140 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது என்பதை மெத்தப் பணிவன்போடு தெரிவித்துக் கொள்கிறேன் (மேசையைத் தட்டும் ஒலி).

கூட்டுறவே நாட்டுயர்வு என்ற கொள்கைப்படி தமிழகத்தினுடைய ஒப்பற்றத் தலைவி டாக்டர் புரட்சி தலைவி அவர்கள் வீட்டு வசதித் துறையின் வாயிலாக 1991-92 ஆம் ஆண்டில் ரூ. 125 கோடியாக இருந்த திட்ட மதிப்பீட்டை 1992-93 ஆம் ஆண்டில் ரூபாய் 136 கோடியாக உயர்த்துவதற்கு இசைவு அளித்துள்ளார்கள் (மேசையைத் தட்டும் ஒலி). என்பதை மெத்தப் பணிவோடு தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். காந்தி கண்ட கிராம ராஜ்யத்தை நினைவாக்குகின்ற வகையிலேதான் கிராமிய வீட்டு வசதி திட்டத்தின் வாயிலாக ரூபாய் 30 கோடியே 7 லட்சம் செலவில் 30 ஆயிரம் வீடுகளும், குறைந்த வருவாய் மற்றும் நடுத்தர வருவாய்த் திட்டத்தின் வாயிலாக ரூபாய் 31 கோடியே 97 லட்சம் செலவில் 8,624 வீடுகளும், நகர்ப்புற வீட்டு வசதித் திடடத்தின் வாயிலாக ரூபாய். 65 கோடி மதிப்பீட்டிலே, 10 ஆயிரம் வீடுகளும் கிராம வீடு மேம்பாடுத் திட்டத்தின் வாயிலாக ரூ. 9 கோடி மதிப்பீட்டிலே 30 ஆயிரம் வீடுகளும், ஆக மொத்தம் ரூ. 136 கோடியே 4 லட்சம் செலவில் 78,624 வீடுகளுக்கு இன்று மதிப்பீடு வழங்கப்பட்டிருக்கிறது என்பதை மன மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன் (மேசையைத் தட்டும் ஒலி). இவை அனைத்தும் 1992-93 ஆம் ஆண்டிலே செயல்படுத்தப்பட உள்ளது என்பதையும் இந்த மாமன்றத்திற்கு உணர்த்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[திரு. டி.எம். செல்வகணபதி] [1992 மார்ச் 27

அதுமட்டுமல்லாமல், கிராமங்களிலே வாழும், பொருளா
தாரத்தில் நலிவுற்ற பிரிவினர்களுக்கு வீடுகளை மேம்படுத்தும்
வகையில் ஷூப்ரா என்னும் புதிய திட்டம் ஒன்று 1991-92
ஆம் ஆண்டு 10 ஆயிரம் வீடுகளுக்கு 3 கோடி ரூபாய் மதிப்பீட்டிலே
செயல்படுத்தப்பட்டது. இந்தத் திட்டம் கிராமங்களிலே
உள்ள பொருளாதாரத்தில் நலிவுற்ற பிரிவினர்களின் வீடு
களை மேம்படுத்த கடனும் மானியமும் வழங்கப்பட்டு ஓலைக்
குடிசைகளை ஓட்டு வீடாக, உறுதியாக சுவர் கொண்ட. ஓட்டு
வீடாக மாற்றவும் இத்திட்டம் வெகு அளவிலே நல்ல முறையில்
பயன்படுகின்ற காரணத்தால்தான், இந்திய முதல
மைச்சர்களுக்கெல்லாம் வழிகாட்டியாக விளங்குகின்ற தமிழ
கத்தினுடைய முதல்வர் ஒப்பற்ற தலைவி மாண்புமிகு டாக்டர்
புரட்சித் தலைவி அவர்கள் வரும் நிதியாண்டிலே தமிழகத்தில்
30 ஆயிரம் வீடுகள் பயன் அடைகிற வகையில் (மேசையைத் தட்
டும் ஒலி) ரூபாய் 9 கோடியை ஒதுக்கித் தந்துள்ளார்கள் என்பதை
மகிழ்ச்சிப் பெருக்கோடு தெரிவித்துக் கொள்ளக் கடமைப் பட்
டிருக்கிறேன். மேலும் இந்தியத் துணை கண்டத்திலேயே இத்
தகைய ஒப்பற்ற திட்டத்தை முதன்முறையாக உரு
வாக்கித்தந்த பெருமை, ஈடு இணையற்ற தலைவி டாக்டர் புரட்சித்
தலைவி அவர்களுக்குத்தான், அவர் ஒருவருக்குத்தான்
சொந்தம் என்று மெத்தப்பணிவன்போடு தெரிவித்துக்
கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காணுகின்ற நமது அரசு
ஏழை எளிய பாட்டாளி மக்களுடைய நம்பிக்கை நட்சத்திரம்
டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் 16—11—1991 ஆம் நாள
ன்று மழை காலத்திலே வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட சென்னை
நகர குடிசை வாழ் மக்களை சந்தித்து கடும் மழையில் குறை
தீர்க்க சென்றார்களே அன்று குடிசைமாற்று வாரியத்திற்கு
ட்ட கட்டளை இன்று இந்த மானியத்திலே நிறைவேற்றப்பட
உள்ளது. தாழ்வான பகுதிகளில் மழைக் காலங்களில் கண்ணீரும்
கம்பலையுமாய் அழுது கொண்டிருந்த அந்த ஏழைத்
தாய்மார்களுக்குதான் கொடுத்த வாக்குறுதிகளை சத்திய வாக்காக
நிறைவேற்றுகின்ற வகையிலே தான் சென்னை நகரத்திலே
வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட தாழ்வான பகுதிகளை மேம்
படுத்த வருகிற நிதி ஆண்டிலே 5 ஆயிரம் அடுக்குமாடி வீடு
களை 25 கோடி ரூபாய் மதிப்பீட்டிலே உருவாக்க தாய் உள்ளம்
கொண்ட தங்கத் தலைவி அவர்கள் குடிசை மாற்று வாரியத்
திற்கு ஆணை பிறப்பித்து உள்ளார்கள் என்பதை மகிழ்ச்சி
யோடு தெரிவித்துக் கொள்கிறேன் (மேசையைத் தட்டும் ஒலி).

பிற்பகல் 1-10

அதேபோல ஏற்கனவே அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டப்
பட்ட திட்டங்களில் உள்ள குறைபாடுகளை போக்குகின்ற



1992 மார்ச் 27] [திரு. டி.எம். செல்வகணபதி]

வரையிலே 1992-93 ஆம் ஆண்டுக்கு ரூ. 4 கோடியே 45
இலட்சங்கள் செலவிடப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்
கிறேன்.

அதுமட்டுமல்லாமல் குடிசைப் பகுதிகளில், சாலை, குடிநீர்,
தெருவிளக்கு, சாக்கடை போன்ற வசதிகளைச் செய்து முடிக்
கின்ற வகையிலே ரூ. 6 கோடியே 45 இலட்சம் செலவிலே
சுமார் 28,000 குடும்பங்கள் பயன் அடைகின்ற வகையிலே
மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட இருக்கின்றன என்ப
தையும் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும்
ஒலி).

கடன் வழங்கும் திட்டத்தின் வாயிலாக குடிசைவாழ் மக்க
ளுக்கு 1992—93 ஆம் ஆண்டில் 4,000 குடும்பங்கள் பயன்
அடைகின்ற வகையிலே ரூ. 3 கோடியே 20 இலட்சங்கள்
பணம் கடனாக வழங்க திட்டமிடப்பட்டுள்ளது. ஆக குடிசை
மாற்று வாரியத்தினுடைய பல்வகைப் பணிகளுடைய மேம்
பாட்டிற்காக நிதி ஒதுக்கீடு ரூ. 29 கோடியாக 1991--92-லே
இருந்ததை ரூ. 40 கோடியாக 1992--93 ஆம் ஆண்டுக்கு உயர்த்தி
யுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்
கிறேன் (மேசையைத் தட்டும் ஒலி).

நகர்ப்புற வளர்ச்சியை எடுத்துக் கொண்டால், நகர்ப்புற
வளர்ச்சியை பொறுத்த வரையில் தமிழகத்தில் நகர்ப் பகுதிகள்
வெகு விரைவாக வளர்ந்து வருகின்றன. 34 விழுக்காடு மக்கள்
நகர்ப்புற பகுதியில் வாழ்ந்து வருகிறார்கள். நகர்ப்புற
வளர்ச்சியிலே தெளிவோடு செயல்பட்டுக் கொண்டிருக்கின்ற
நமது அரசு நிதியாதாரங்களைத் திரட்டி அதை உறுதி செய்
வதில் அரசு முனைப்பாக செயல்பட்டுக் கொண்டிருக்கிறது.
அதே போலத் தான் நகர்ப் பகுதிகளில் உள்ள ஏழை எளிய
மக்களுக்கு பல்வேறு திட்டப் பணிகள் முறையான வளர்ச்சி
அடிப்படையில் செயல்படுத்த நாம் முடிவு செய்திருக்கிறோம்.
அந்த அடிப்படையிலேதான் நவீன உத்திகளை கையாண்டு
நகர்ப்புற வரைபடங்களை தயாரிக்கும் திட்டங்களில் இந்தத்
துறை ஈடுபட்டுள்ளது. இதற்காக ரூ. 1 கோடியே 20 இலட்சம்
செலவில் 30 நகரங்களுக்கு வானவெளி அளவியல் மேற்
கொள்ளப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்
கிறேன். ரூ 20 இலட்சம் செலவிலே இந்தத் திட்டத்தின்
கீழ் குன்னூர், கோத்தகிரி மற்றும் கூடலூர் ஆகிய மூன்று நகர்ப்புற
பகுதிகளுக்கு வரைபடம் தயாரிக்கும் பணியும் ஆரம்பிக்கப்பட
உள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இது தவிர
நடப்பு நிதியாண்டில் ரூ. 14 இலட்சம் செலவில் கரூர்,
திருவண்ணாமலை, கும்பகோணம், தேனி மற்றும் அல்லிநகரம்
ஆகிய 4 நகரங்களில் வானவெளி அளவியல் மூலமாக ஏரியல்
போட்டோகிராபி மூலமாக வரைபடம் தயாரிக்கின்ற பணி
மேற்கொள்ளப்பட இருக்கிறது என்பதையும் தெரிவித்துக்

கொள்கிறேன். இதைத்தவிர 37 நகரங்களுக்கான வரைபடம் தயாரிக்கும் பணியும் இவற்றில் அடங்கும். இந்த வானவெளி நிழற் படங்களை உறுதுணையாக வைத்துத்தான் இந்தத் துறையினுடைய அலுவலர்களுக்கு ரூ. 5 கோடியே 60 இலட்சம் செலவில் அண்ணா பல்கலைக் கழகத்தில் உள்ள தொலை உணர்வு மையத்தால் பயிற்சி அளிக்க மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன் (மேசையைத் தட்டும் ஒலி).

சிறிய மற்றும் நடுத்தர நகரங்களின் ஒருங்கிணைந்த திட்டத்தினை செயல்படுத்துவதற்காக மத்திய அரசினுடைய நிதியுதவி பெறுகின்ற வழி முறைகளில் மிகுந்த கட்டுப்பாடு இருந்த காரணத்தினால் மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் இவ்வழி முறைகளை மைய அரசு திருத்தியமைக்க வேண்டும் என்று கோரியதில் மைய அரசும் வழிமுறைகளை திருத்திடமைத்து அவற்றின் மீது விளக்கக் குறிப்பும் கோரியுள்ளது. அப்படி திருத்திய வழிமுறைகள்படி சிறிய மற்றும் நடுத்தர நகரங்களில் ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சி திட்டத்தில் பயன் பெறுகின்ற நகரங்கள் மக்கள் தொகை அளவு 1 இலட்சத்திலிருந்து 3 இலட்சமாக உயர்த்தப்பட்டிருக்கிறது. அனைத்து வளர்ச்சிகளையும் மேற்கொள்கின்ற வகையில் குடிநீர் வழங்குதல் வடிகால் அமைப்பு தொழிற்கூடங்கள் அமைத்திடவும் இந்த நிதியிலிருந்து நிதி அளிக்கப்படும் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். சிறிய மற்றும் நடுத்தர நகரங்களுக்கான ஒருங்கிணைந்த வளர்ச்சித் திட்டங்கள் ஒரு நகரத்திற்கு 1 கோடியே 20 இலட்சம் செலவில் பர்கூர் காஞ்சிபுரம், விழுப்புரம், பெரம்பலூர், எடப்பாடி, திருத்தணி ஆகிய 6 நகரங்களில் வரும் நிதியாண்டில் மேம்பாட்டுப் பணிகள் நடைபெற இருக்கின்றது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன் (மேசையைத் தட்டும் ஒலி).

பிற்பகல் 1.15

போக்குவரத்து மற்றும் சாலை மேம்பாட்டிற்காக ரூ. 48 இலட்சத்து 50,000 செலவிலே தமிழகத்தில் இருக்கின்ற சுமார் 30 நகரங்கள் பயனடைகின்ற வகையிலே பல்லவன் போக்குவரத்து ஆலோசனை குழுவினால் ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. அந்த ஆய்வின்படி, போக்குவரத்து ஆய்வுக்காக நாகப்பட்டினம், ராணிப்பேட்டை, செங்கற்பட்டு, விழுப்புரம், திருச்செங்கோடு, தர்மபுரி, காரைக்குடி, மயிலாடுதுறை, கோவில்பட்டி, விருதுநகர், இராமநாதபுரம், அருப்புக்கோட்டை புதுக்கோட்டை, காஞ்சிபுரம், கடலூர், வேலூர், ஆற்காடு, திருப்பூர், பொள்ளாச்சி, ஈரோடு, தஞ்சாவூர், திண்டுக்கல், கும்பகோணம், தூத்துக்குடி, திருநெல்வேலி, நாகர்கோவில், மற்றும் பெரிய நகரங்களான சேலம், திருச்சி, மதுரை,



கோயம்புத்தூர் ஆகிய நகரங்களும் இந்த ஆய்வுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி.)

நகர் ஊரமைப்புத் திட்ட நிதியாக ரூபாய் 33 கோடி நகராட்சிகள், நகர பஞ்சாயத்துகளின் திட்டப் பணிக்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது. இந்தத் தொகை, கொடுக்கக்கூடிய அளவை 2 கோடியே 70 இலட்சம் ரூபாயாக இருந்ததை மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ரூபாய் 5 கோடிக்கு ஒப்புதல் அளிக்க ஆணையிட்டுள்ளார்கள் என்பதை மெத்தப் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி.)

எழில்மிகு சென்னை 2,000 என்ற போற்றுதலுக்குரிய தமிழகமுதலமைச்சருடைய உன்னத திட்டத்தை மெய்ப்பிக்கின்ற வகையில் இந்தப் பேரவையில் சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் சார்பாக அறிவிக்கப்பட்டிருக்கின்ற திட்டங்களும், செயல்முறைகளும் அமைந்திருக்கின்றன என்பதை மெத்தப் பணிவன்போடு தெரிவித்துக் கொள்கிறேன்.

சென்னைப் பெருநகருக்கு இரண்டாவது முழுமைத் திட்டத்தை சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமம் தயாரிக்கின்றது. அதற்கான கொள்கைகளையும், செயல்படுத்தும் திட்ட முறைகளையும் வரையறுக்கும் வகையில் சென்னை 2011 என்ற கருத்தரங்கம் ஒன்று நடத்தப்பட்டது. அந்த கருத்தரங்கத்தின் வெளிப்பாடாக இரண்டாவது முழுமைத் திட்டம் செயற்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

எந்த ஒரு ஆட்சிக் காலத்திலும் இல்லாத சாதனையாக சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தில் தேங்கிக் கிடந்த திட்ட அனுமதி வழங்கலை துரிதப்படுத்த டிசம்பர் 1991 முதல் பிப்ரவரி 1992 வரை சிறப்பு செயலாக்கம் 'ஸ்பெஷல் டிரைவ்' என்று சொல்லப்படுகின்ற அளவுக்கு மேற்கொள்ளப்பட்டு சுமார் 1962 விண்ணப்பங்களில் 887 திட்ட விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்டு முடிவுக்கு கொணரப்பட்டிருக்கிறது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இதன் மூலமாக 45 சதவீதம் தேக்கம் குறைக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

வேறு எந்த ஒரு ஆட்சிக் காலத்திலும் இல்லாத வகையில் ஆட்சி அமைத்த 6 மாத காலக் கட்டத்தில் கட்டிட விதிகளை அமல்படுத்தும் நோக்கத்தோடு திட்ட அனுமதி விதியை மீறிய 17 கட்டிடங்கள் இடிக்கப்பட்டிருக்கின்றன. திட்ட அனுமதியைக் கடைப்பிடிக்காமல் வரம்பு மீறிய கட்டிடதாரர்களை ஒழுங்குபடுத்துகின்ற வகையில் இந்த சிறப்பு

[திரு. டி.எம். செல்வக்கணபதி] [1992 மார்ச் 27]

செயலாக்கம் மேற்கொள்ளப்பட்டது என்பதை கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். 2½ ஆண்டு தி.மு.க. ஆட்சியில் மொத்தமே 9 கட்டிடங்கள்தான் இடிக்கப்பட்டிருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கதாகும். சென்னை பெருநகர் வளர்ச்சி குழுமத்தைப் பொறுத்தவரையில் அது ஆரம்பிக்கப்பட்ட 1976 ஆம் ஆண்டிலிருந்து இதுவரையில் திட்ட விதி முறையை மீறிய 24 கட்டிடங்கள் மட்டுமே இடிக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது ஆகும். ஆனால் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் பொன்னான ஆட்சிக் காலத்தில் 6 மாதக் காலக்கட்டத்தில் கட்டிடங்கள் விதிகளை அமல் படுத்துகின்ற ஒரே நோக்கத்திற்காக 17 கட்டிடங்கள் இடித்து முறைப்படுத்தப்பட்டிருக்கின்றன என்பதைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன் (மேசையைத் தட்டும் ஒலி).

நாளுக்கு நாள் பெருகி வருகின்ற போக்குவரத்து நெரிசலைச் சீர்படுத்துவதற்காக. சென்னை கடற்கரையிலிருந்து மயிலாப்பூர் லஸ் வரையிலான விரைவுப் போக்குவரத்து திட்டத்தின் முதல் கட்ட வேலைகள் மத்திய அரசினுடைய ரயில்வே துறையின் முழுமையான நிதி ஆதாரத்தோடு செயல்படுத்தப்படுகிறது. அப்படி மயிலாப்பூர் லஸ்—இருந்து தரமணி செல்லும் விரைவுப் போக்குவரத்து திட்டத்தினுடைய 2-வது கட்டப் பணிகளை மத்திய அரசின் முழு நிதி உதவியோடு துரிதமாக எடுத்துச் செயல்படுத்த மத்திய அரசை நமது அரசு தொடர்ந்து வலியுறுத்தி வந்துள்ளது. இப்படிப் பட்ட முக்கியமான திட்டத்தைச் செயல்படுத்துவதில் மத்திய அரசு காட்டும் ஆர்வம் ஏமாற்றம் அளிப்பதாகவும், எதிர் பார்த்த அளவுக்கு ஊக்கம் அளிப்பதாகவும் இல்லை என்ற காரணத்தாலும் நாள்தோறும் பெருகி வரும் சாலைப் போக்கு போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்கவும் இந்த 2ஆவது கட்ட விரைவு போக்குவரத்துத் திட்டத்தை உடனடியாகச் செயல்படுத்தவேண்டிய அவசியத்தைத் தெளிவாக உணர்ந்து இருக்கின்ற காரணத்தாலும் மேலும் கால தாமதம் இல் லாமல் மத்திய அரசினால் நிதி உதவி மறுக்கப்பட்ட இந்த 2 ஆம் கட்ட விரைவுப் போக்குவரத்துத் திட்டப் பணிகளை அரசே ஒரு தனி நிறுவனம் ஒன்றை அமைத்து அதன் மூல மாக அனைத்துப் பணிகளையும் செயற்படுத்த உறுதி பூண்டி ருக்கிறார்கள் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் என்பதை இந்த அவைக்கு எடுத்துரைக்கக் கடமைப்பட்டிருக் கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

இந்த நிறுவனத்திற்கு சென்னை மாநகர விரைவுப் போக்குவரத்துநிறுவனம்என்று பெயரிடப்பட்டு இது கூட்டுத்துறை நிறுவனமாக செயல்பட ஆரம்பிக்கும் என்பதை மன மகிழ்ச்சி யோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).



1992 மார்ச் 27] [திரு. டி. எம். செல்வகணபதி]

பிற்பகல் 1.20

இது எழில்மிகு சென்னை என்ற ஒப்பற்ற கருத்தை செயல்படுத்துகின்ற வகையிலேயும் அமையும் என்பதையம் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த அடிப்படையில் முதற் கட்டமாக இந்த நிறுவனத்தினுடைய பங்குத் தொகைக்கு அரசினுடைய பங்காக ரூபாய் 1 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தினுடைய மொத்த திட்ட மதிப்பீடு 190 கோடி ரூபாயாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்தத் திட்டத்தைச் செயல்படுத்த தேவைப்படும் நிதி ஆதாரங்களை பல்வேறு நிதி நிறுவனங்களிடமிருந்தும் மற்றும் கூட்டுத்துறை அலுவலர்களிடமிருந்தும் பெறப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்,

சென்னை நகருக்கு அருகிலுள்ள பல பகுதிகளில் மழைக் காலங்களில் சதுப்பு நிலங்களாக மாறி, நீர் தேங்கி வீடு கட்ட தகுதியில்லாத இடமாக இருப்பதை மாற்றி நகர் வளர்ச்சிக்கு ஏற்றதாக இப்பகுதிகளை திருத்தி அமைக்க சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சென்னை பெருநகர் வளர்ச்சி வெள்ள நிவாரணம் மற்றும் மழைநீர் வடிகால் பற்றிய ஆய்வினை ரூபாய் 1⅓ கோடி செலவில் வெளிநாட்டு நிபுணர்களைக் கொண்டு மேற்கொள்ள இருக்கிறது. பெருகி வரும் வீட்டுவசதித் தேவையைப் பூர்த்தி செய்கின்ற வகையில் தான் சென்னைக்கு அருகில் பள்ளிக்கரணை என்ற ஊரில் அரசுக்குச் சொந்தமான 3 ஆயிரம் ஏக்கர் நிலம் தற்போது சதுப்பு நிலமாக உள்ளதை, குடியிருப்புப் பகுதியாக மாற்ற வேண்டிய வழிவகைகள் குறித்து இந்த நிபுணர் குழு ஆராயும். இந்த நிபுணர்கள் குழு அளிக்கும் ஆலோசனைகளைச் செயல் படுத்தி பள்ளிக்கரணையை ஒருபுதிய நகரியமாக உருவாக்க, நமது போற்றுதலுக்குரிய இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் உத்தரவிட்டு இருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஐக்கிய நாடுகள் குடியிருப்பு மையத்தின் நிலையுறும் நகரத் திட்டத்தின் வாயிலாக நகர மேம்பாட்டைச் செயல் படுத்த சுற்றுச் சூழல் சுகாதாரம் மற்றும் அனைத்து அடிப் படை வசதிகளையும் அளிக்கின்ற வகையில் ஆய்வு மேற் கொள்ளப்பட்டிருக்கிறது. இந்தத் திட்டத்தின்கீழ் தெற் காசிய நாடுகளில் உள்ள அத்துணை நகரங்களிலும், சென்னை நகர் மட்டுமே தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

அதேபோல, ஆசியா மற்றும் தூரக் கிழக்கு நாடுகளில் பொருளாதாரம் மற்றும் சமூகக் குழுவின் உள்ளாட்சிகளின்

[திரு. டி. எம். செல்வகணபதி] [1992 மார்ச் 27

''சிட்டி நெட், ரீஜினல் நெட் ஓர்க்'' இல் சேர்த்துக்கொள்ள இந்தியாவிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள 3 நகரங்களில் சென்னை நகரமும் ஒன்றாக அமைந்திருக்கிறது.

சென்னைப் பெருநகரின் போக்குவரத்துத் தேவையினை கண்டறிவதற்காக சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின் வாயிலாக ஆய்வு மேற்கொள்ளப்பட இருக்கிறது. இந்த ஆய்வு ரூபாய் 80 இலட்சம் செலவிலே மேற்கொள்ளப்பட உள்ளது. மேலும் ஜப்பான் நாட்டு மூலதனத்தில் உலக வங்கி உதவியுடன் சென்னை பெருநகர பகுதிக்கான சுற்றுப்புறச் சூழல் மற்றும் சுகாதாரம் பற்றி ரூபாய் 1 கோடியே 50 லட்சம் செலவிலே சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம் ஆய்வினை மேற்கொண்டுள்ளது என்பதை மெத்தப் பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ்நாடு நகர வளர்ச்சித் திட்டங்களில் ஒரு குறிப்பிடத்தக்கதொரு திட்டம், கைடட் அர்பன் டெவலப்மெண்ட் என்று சொல்லுகின்ற வகையில் முன்னோடி நகர் வளர்ச்சித் திட்டம், அந்தத் திட்டம் உலக வங்கியின் உதவியோடு செயல்படுத்தப்படும். இத்திட்டத்திற்கு ஒப்புதல் அளிக்கப்பட்ட மதிப்பீடு ரூபாய் 13 கோடியே 5 இலட்சமாகும். சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தால் இத்திட்டம் செயல்படுத்தப்படும். இந்தத் திட்டத்தினுடைய நோக்கம் குடிநீர் சாலை மற்றும் வடிகால் வசதி போன்ற அடிப்படைத் தேவைகள் அனைத்தும் கொண்ட தன்னிறைவு பெற்ற 10 ஆயிரம் மனைகளை தனியாரிடமிருந்து நியாயமான, குறைந்த விலையில் வாங்கி, பொருளாதாரத்தில் நலிவுற்ற மக்களுக்கு அளிப்பதாகும். இந்தத் திட்டத்தினுடைய அடிப்படை தத்துவம், சமுதாயத்தில் நலிவுற்ற பிரிவைச் சார்ந்த மக்களுக்கு அனைத்து வசதிகளும் நிறைந்த வீட்டுமனைகளை குறைந்த விலையில், இத்தொழிலில் உள்ள தனியாரிடமிருந்து பெற்றுத் தருவதாகும். இந்தத் திட்டத்தைச் செயலாக்க முன்வரும் தனியார்களுக்கு அரசு ஒரு சில வகையில் உதவி செய்ய உத்தேசித்துள்ளது. இந்தத் திட்டத்தின்கீழ் நிலச் சொந்தக்காரர்களும் இத்தொழிலில் உள்ள தனியார் நிறுவனங்களும் தங்களிடம் உள்ள மனைப்பகுதிகளில் உள்ளிட்ட உட்புறப்பகுதிகளில் குழுமத்தின் தொழில் நுட்ப ஆலோசனையின் அடிப்படையில் சாலை வசதி, குடிநீர் வசதி, வடிகால் வசதி போன்ற வசதிகளை அவர்களுடைய செலவிலேயே செய்து அந்த நிலத்தை மேம்படுத்துவார்கள். இந்தத் திட்டம் அமைந்துள்ள பகுதிகளை வெளியில் பிரதான சாலைகளுடன் இணைத்தல், குடிநீர் வசதியை அமைத்தல், வடிகால் இணைப்பு ஏற்படுத்துதல் மற்றும் பிரதான மின் திட்டத்துடன் இணைத்தல் ஆகிய பணிகளை குழுமம்



1992 மார்ச் 27] [திரு. டி. எம். செல்வகணபதி]

தன்னுடைய செலவில் செய்து கொடுக்கும். இந்தத் திட்டத்தின்கீழ் கிடைக்கும் மனைகளின் மொத்த எண்ணிக்கையில் 30 சதவீத வீட்டுமனைகளை நியாயமான குறைந்த விலையில் தமிழ்நாடு பெருநகர் வளர்ச்சிக் குழுமமே விலைக்கு வாங்கி மேற்குறிப்பிட்டபடி நலிந்த பிரிவினருக்கு அளிக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். இவ்வாறு அனைத்து வசதிகளும் கொண்ட மேம்படுத்தப்பட்ட மனைகளில் 40 சதவீத மனைகளை நிலச் சொந்தக்காரர்களிடமே திருப்பிக் கொடுத்து, அவர்கள் அதை சந்தை விலைக்கே விற்றுக்கொள்ள வழிவகையும் செய்யப்பட்டிருக்கிறது. இந்தத் திட்டத்தினை செயல்படுத்த முன்வருபவர்களுக்கு தேவைப்படும் இடங்களில் நகர்ப்புற உச்சவரம்பில் இருந்து விலக்கு அளிக்கப்படும் என்றும் தெரிவித்துக் கொள்கிறேன.

பிற்பகல் 1.25

இந்தத் திட்டம் செயல்படுத்தப்பட தேவைப்படும் அனைத்து உதவிகளையும் சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமமே செய்யும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். இந்தத் திட்டம் செயல்படுத்தப்பட்டால் ஆண்டு ஒன்றுக்கு அனைத்து வசதிகளையும் உடைய பத்தாயிரம் வட்டு மனைகள் சமுதாயத்தில் நலிந்த பிரிவினருக்குக் கிடைக்கக் கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. நலிந்த பிரிவினருக்கு நியாயமான குறைந்த விலையில் வீட்டுமனை, இந்தத் திட்டத்தைச் செயல்படுத்த முன்வரும் தனியார் நிறுவனங்களுக்கு நியாயமான இலாபம் ஆகிய இரண்டு நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு இந்த கைடட் அர்பன் டெவலப்மெண்ட் என்கிற முன்னோடி நகர் வளர்ச்சித் திட்டம் செயல்படுத்தப்பட இருக்கின்றது.

இப்படியாக வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறையின் சார்பாக 1991ஆம் ஆண்டில் வீட்டு வசதிக்காக 297 கோடி ரூபாயாக இருந்தது, வரும் 1992—93 ஆம் ஆண்டுக்கு இது ரூபாய் 341 கோடியாக உயர்த்தப்படுகிறது என்று மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

உலக வங்கியின் உதவியோடு செயலாக்கப்படும் தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டங்களுக்கான நிதி ஒதுக்கீடு சென்ற நிதியாண்டைவிட வரும் நிதியாண்டில் 1992—93 ஆம் ஆண்டுக்கு 65 கோடியிலிருந்து நிதி ஒதுக்கீடு ரூபாய் 127 கோடியாக உயர்த்தப்பட்டிருக்கின்றது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

என்னுடைய இந்த விளக்கங்களுக்குப் பின்னாலும் மாண்புமிகு உறுப்பினர்கள் முன்மொழிந்துள்ள வெட்டுத் தீர்மானங்களை வலியுறுத்தத் தேவையில்லை என்று கருதுகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கு பேசுகின்ற பொழுது குறிப்பாக மாண்புமிகு உறுப்பினர் செல்வராஜ் அவர்கள் மனைப் பிரிவு ஒப்புதலில் தாமதத்தைத் தவிர்ப்பது தொடர்பாக இங்கு எடுத்துரைத்தார்கள். அவருக்குப் பதில் கூறுகின்ற வகையிலே, ஒரு சீரான கோட்பாடு களைக் கடைப்பிடிக்கப்பட வேண்டுமென்ற அடிப்படை யிலேதான் மனைப் பிரிவு ஒப்புதல் வழங்கப்படுவதை நகர் ஊரமைப்பு இயக்குநரின் பொறுப்பில் ஒப்படைக்கப்பட்டிருக் கின்றது. மனைப் பிரிவு ஒப்புதல் கோரி, உள்ளாட்சி களின் மூலம் பெறப்படும் விண்ணப்பங்கள் அனைத்தும் பெறப்பட்டு ஒரு மாதத்திற்குள் முடிவெடுக்கும் வகையில் நிர்வாகம் முடுக்கி விடப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மனைப் பிரிவுகளுக்கு நகர் ஊரமைப்பு இயக்குநரிட மிருந்து ஒப்புதல் பெறுவதில் தாமதம் குறித்து இது வரையில் அரசுக்கு எந்தப் புகார்களும் கொடுக்கப்படவில்லை அப்படிப் புகார்கள் இருந்தால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் என்னிடம் எழுத்து மூலமாக அந்தப் புகார் களைத் தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. செல்வராஜ் அவர் கள் செல்வ சிந்தாமணி பகுதியில் அடுக்கு மாடியில் வீடுகள் கட்டுவது தொடர்பாகவும், தடாகம் பகுதியில் குடிசைப் பகுதி மேம்பாட்டுப் பணிகள் பற்றியும் இங்கு விவாதம் எழுப்பியிருக்கின்றார்.

செல்வ சிந்தாமணி குடிசைப் பகுதியில் குடிசை மாற்று வாரியமே வீடுகள் கட்டி கோவை மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து நில ஒப்படைப்புப் பிரேரணைகள் அரசால் கோரப்பட்டுள்ளன. பிரேரணைகள் பெற்ற பின் அரசு அதனைப் பரிசீலித்து குடிசைப் பகுதி மாற்று வாரியத்திற்கு வருவாய்த் துறையினால் அனுமதி பெற்ற பின்னர் குடிசைப் பகுதி மாற்று வாரியம் திட்டத்தை நிறைவேற்றும் என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அதேபோல தடாகம் பகுதியில் குடிசைப் பகுதி மேம்பாட்டுப் பணிகள் மாவட்ட ஆட்சியரிடமிருந்து நிலத் தில் நுழைய முன் அனுமதி பெற்று திட்டம் தொடங்கப் படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.கே. பாலன் அவர்கள் பேசுகின்றபொழுது கோட்டூர்புரம் சித்ரா நகர் பகுதியில் உள்ள தீப்பிடிக்காத வீடுகளை மாற்றி அடுக்கு மாடி வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட வேண்டுமென்று கூறியிருந்



தார்கள். அதேபோல, அடுக்கு மாடிக் குடியிருப்புகளில் பராமரிப்புப் பணிகள் செய்வது சம்பந்தமாகவும் விவாதம் எழுப்பியிருக்கிறார்கள்.

அதுமட்டுமல்லாமல், கோதாமேடு பகுதியில் பணிகளைத் துரிதப்படுத்துவதற்காகவும், கோதாமேடு பகுதியில் ஏற்கெனவே குடியிருப்பு கட்டத் திட்டம் வடிவமைக்கப்பட்டு டெண்டர் கேன்சல் செய்யப்பட்டது தொடர்பாகவும் இந்த அவையிலே விவாதத்தை எழுப்பி இருக்கின்றார்.

கோட்டூர்புரம் சித்ரா நகர் பகுதியைப் பொறுத்தவரை 1992—93 ஆம் ஆண்டில் ஹட்கோ நிறுவன உதவியுடன் வேலைகள் நிச்சயமாகத் தொடங்கப்பட முயற்சிகள் நடந்து வருகின்றன என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல, பராமரிப்புப் பணிகளைப் பொறுத்தவரை, நான் இந்த அவையில் ஏற்கெனவே அறிவித்தது போல, ஹட்கோ நிறுவனத்திடமிருந்து ரூபாய் 4 கோடி நிதியுதவி பெற்ற பின்பு பராமரிப்புப் பணிகள் போற்றுதலுக்குரிய புரட்சித் தலைவி அவர்களுடைய அரசிலே துரிதப்படுத்தப் படும் என்று தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

பிற்பகல் 1.30

அதோடு மட்டுமல்லாமல், கோதாமேடு டெண்டர் சம்பந்தப் பட்ட விஷயங்களைப் பேசுகின்றபோது, கோதாமேடு பகுதியிலே 736 குடியிருப்புகள் கட்ட, திட்டம் வடி வமைக்கப்பட்டு 'ஹட்கோ' விற்கு அனுப்பப்பட்டது. இத் திட்டத்தினை, காலதாமதமின்றி தொடங்க டெண்டர்கள் கோரப்பட்டன. டெண்டரின் மதிப்பீடுகள் ரூ. 50 லட்சத் திற்கு மேல் இருந்ததால், 'பிரீ-குவாலிபிகேஷன்' டெண்டர் அழைக்கப்பட்டது.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> அவையின் முன் அனுமதியோடு, பேரவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப் படுகிறது.

<u>மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'பிரீ-குவாலிபிகேஷன்' டெண்டர் அழைக்கப்பட்டதில், தகுதி பெறத் தேவையான 60 மதிப்பெண்கள், பங்கு பெற்றவர்கள் பெறாததால், டெண்டர் விதிகளின்படி, அவை நிராகரிக்கப்பட்டன. அதற்கிடையில் நிதியுதவி இதற்கு செய்து கொடுக்கும் 'ஹட்கோ' நிறுவனம், திட்டத்தின் கட்டிட வடிவமைப்

யையும் மூல லே-அவுட்டையும் மாற்றியமைக்க வற்புறுத்திய தன் காரணத்தால் திருத்திய திட்டம் 'ஹட்கோ' விற்கு அனுப் பப்பட்டிருக்கிறது. 'ஹட்கோ'-வின அங்கீகாரம் பெற்ற பின, டெண்டர் கோரப்பட்டு, மிக விரைவிலே பணிகள் தொடங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்கள் பேசுகையில், 30 அடி அகல சாலையையொட்டி, ஸ்பெஷல் பில்டிங்ஸ் என்ற வகையில், நான்குக்கு மேல் குடும்பங்களைக் கொண்ட மாடிக் கட்டிடங் களை, எம்.எம்.டி.ஏ., சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தால் அனுமதிக்க வேண்டுமென்று சொன்னார்கள். அதிகமான குடும்பங்கள் வாழ்கின்ற பகுதியிலே, போக்கு வரத்து நெரிசல் ஏற்பட வாய்ப்பு இருக்கிறது. ஆகவே அதற்கேற்ற வகையிலேதான் அகலமான சாலை வேணடும். மேலும், அடிப்படை வசதிகளை வழங்குவதற்கும் தகுந்த வகையிலே அகலமான சாலை வேண்டும். இதனைக் கருத்தில் கொண்டுதான் அதிகக் குடும்பங்கள் வாழக்கூடிய ஸ்பெஷல் பில்டிங்ஸ் என்ற கட்டிடங்கள் அமைப்பதற்கு, குறைந்தது 10 மீட்டர் அகலமான சாலை வேண்டுமென்ற நிபந்தனை இருக்கிறது. போக்குவரத்து நெரிசலை ஓரளவுக்கு தவிர்க்கவும், மற்ற வசதிகளை வழங்கவும், குறைந்தது 10 மீட்டர் அகல சாலை வேண்டுமென்ற தொழில் நுட்ப கருத்திற்கிணங்க ஒரு நிபந்தனை இருக்கிறது. இதுமிகவும் அவசியமானதும், தேவையானதுமான நிபந்தனையாகு மென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல, மாண்புமிகு உறுப்பினர் திரு. பலராமன் அவர்கள், தண்ணீர் மற்றும் கழிவுநீர் வசதிகள் மேம்பாடு சம்பந்தமாகவும், அடுக்குமாடிக் குடியிருப்புகள் பராமரிப்புப் பணிகள் துரிதப்படுத்துவது சம்பந்தமாகவும், இந்த அவையிலே விவாதத்தை எடுத்து வைத்திருக்கிறார். அவருக்கு பதில் கூறுகிற வகையிலே, தண்ணீர் மற்றும் கழிவுநீர் வசதிகள் மேம்பாடு சம்பந்தமாக பார்ட்-2 திட்டத் தின்கீழ் 1992-93 ஆம் ஆண்டில், ரூ. 20 லட்சம் இந்த மேம்பாடு வசதிகளுக்காக ஒதுக்கப்பட உள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அடுக்குமாடிக் குடியிருப்பு களில் பராமரிப்புப் பணிகள் குடிசை மாற்று வாரியத்தால் கூடிய விரைவில் மேற்கொள்ளப்பட இருக்கிறது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். ரூ. 4 கோடி கடன் 'ஹட்கோ'-விலிருந்து பெற திட்டமிடப்பட்டுள்ளது. கடன் உதவி பெற்றபின், உடனடியாக பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. கே. லட்சுமணன் அவர் கள் அங்கீகரிக்கப்படாத மனைப் பிரிவுகளை ஒழுங்கு படுத்துவது சம்பந்தமாக இங்கே விவாதத்தை எழுப்பி இருந்தார்கள். அங்கீகரிக்கப்படாத மனைப் பிரிவுகளைப் பதிவு செய்யக் கூடாது என்று அரசு ஆணை பிறப்பித்தும், நீதிமன்றத்தின் தடை காரணமாக இந்தப் பிரேரணை அமல் படுத்துவதில் பிரச்சினைகள் ஏற்பட்டிருக்கின்றன. நீதி மன்றத் தடையை விரைவில் முடிவுக்குக் கொண்டுவர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. அங்கீகரிக்கப் படாத மனைப் பிரிவுகளில் வீட்டுமனைகளை வாங்கியிருக்கிற சொந்தக்காரர்கள், அங்கே வீடு கட்டியிருந்தால், அரசோ அல்லது உள்ளாட்சி நிதியிலிருந்தோ அடிப்படை வசதிகள் செய்து தருவது சட்டப்படியும், நடைமுறைப்படியும் இல்லாத தால், மனைக்குச் சொந்தக்காரர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து, அடிப்படை வசதிகளை நிறைவேற்றுவதால் ஆகும் செலவினை விகிதாச்சார முறைப்படி பகிர்ந்துகொள்ள தாங்களே முன் வருவார்களேயானால் இது மாதிரியான மனைப் பிரிவுகளை ஒழுங்குபடுத்துவதற்கு அரசு நடவடிக்கை எடுக்கு மென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. அண்ணாமலை அவர்கள் பேசுகிறபோது, ராணி அண்ணாநகர் பகுதிக்கு, சென்னைக் குடிநீர் மற்றும் கழிவுநீர் அகற்று வாரியத்தால், குடிநீர் வழங்குதல் சம்பந்தமாகச் சொன்னார். அதுமட்டுமல்ல. அடுக்குமாடி குடியிருப்புகளில் பராமரிப்புப் பணிகள் உடனடி யாகச் செய்து கொடுக்க வேண்டுமென்றும் அதே கோரிக் கையை மாண்புமிகு உறுப்பினர் எழுப்பியிருந்தார். ராணி அண்ணாநகர் பகுதியில் 1,536 குடும்பங்களுக்கு, கிணறு மற்றும் ஆழ்குழாய்க் கிணறுகள் மூலமாக தண்ணீர் வழங்கப் பட்டு வருகிறது. மேலும், லாரிகள் மூலமாகவும் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. தற்போது, அப்பகுதியில், சென்னைக் குடிநீர் மற்றும் கழிவுநீர் அகற்று வாரியத்தி னால், குடிநீர் வழங்குவதை விரிவுபடுத்த வேண்டிய நட வடிக்கையை அரசு நிச்சயமாக மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எனவே, மாண்புமிகு உறுப்பினர்கள், எனது துறை சம்பந்தப்பட்ட மானியக் கோரிக்கைகளை நிறைவேற்றி, அவற்றில் கோரியுள்ள தொகைகளை அரசு வழங்கவேண்டு மென்று கோரி, என்னை ஈன்றெடுத்த தாய்க்கும், தந்தைக்கும் மேலாக, தமிழகத்தின் நலம் காக்கும் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் புனிதப் பணிகளுக்கு என்னால் தினையளவும் நலமேதும் கிடைக்குமானால் செத்தொழியும் நாள் எனக்குத் திருநாள் ஆகும் எனக் கூறி, மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களை வணங்கி, அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

[1992 மார்ச் 27
பிற்பகல் 1.35

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ப. ரங்கநாதன்.

திரு. ப. ரங்கநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை நகரத்தைப் பொறுத்தவரையில் கடந்த 1977-லிருந்து மறைந்த புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் ஆட்சிக் காலத்திலும் சாதிக்க முடியாததை மாண்புமிகு முதல்வர் அவர்கள் தலைமையிலே, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமும், காங்கிரஸ் கட்சியும் கூட்டணி அமைத்து 12 தொகுதிகளிலே நாங்கள் வெற்றி பெற்று இந்த அவைக்கு வந்திருக்கின்றோம். இந்த 12 தொகுதிகளிலும் T. N. U. D. P., M. U. D. P. ஸ்கீமிலே என் தொகுதியிலேயும், வட சென்னையில் இருக்கின்ற பிற தொகுதிகளிலும், தென் சென்னையிலே இருக்கின்ற, மத்திய சென்னையிலே இருக்கின்ற தொகுதிகளிலும் அடிப்படை வசதிகளை செய்து முடித்து இன்னும் பட்டா வழங்காமல் இருக்கின்ற குறையினைப் போக்குகின்ற வகையில் என் தொகுயில் இருக்கின்ற பிரச்சினைகளைப் போக்குகின்ற வகையில் அமைச்சர் அவர்கள் பதில் உரையில் தெரிவிப்பார்கள் என்று நினைத்தேன். தெரிவிக்கவில்லை. அதைத் தயவு செய்து விளக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ரங்கநாதன் அவர்களுடைய தொகுதியில் இருக்கின்ற பெரம்பூருக்கு அருகில் இருக்கின்ற பகுதிக்கு பட்டா வழங்க வேண்டுமென்று ஏற்கெனவே என்னிடம் ஒரு கோரிக்கையை எழுத்து மூலமாகக் கொடுத்திருந்தார். அங்கு வாழும் மக்களுக்குப் பட்டா வழங்குவதற்காக அனைத்து ஆணைகளும் பிறப்பிக்கப்பட்டு, பட்டாவும் வழங்கப்பட உள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். கூடிய விரைவில் புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு அந்த மக்களுக்குப் பட்டா வழங்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ரங்கநாதன் அவர்கள் பேசுகின்றபோது, வெட்டுத் தீர்மானங்கள் மீது ஆவலாக ஒரு பதிலை அமைச்சர் அவர்களின்



வாயிலாக எதிர்பார்த்தோம் என்று சொன்னார்கள். சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் வீடு வழங்கப்படுமா? ஆந்திர மாநிலத்திலே சட்டமன்ற உறுப்பினர்களுக்கு 70,000 ரூபாயில் இரண்டு மனைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. 5 இலட்சம் ரூபாய் வீடு கட்ட வட்டி இல்லாமல் கடன் கொடுக்கப்படுகின்றது. இதை முன் உதாரணமாக வைத்துக் கொண்டு, இங்கே சட்டமன்ற உறுப்பினர்களுக்குக் கொடுக்கப்படுமா என்பதையும் அதேபோல், மைலாப்பூரிலே 300 வீடுகள் தீக்கிரையாகியிருக்கின்றன. பாதிக்கப்பட்ட அந்த மக்களுக்கு வீடு கட்டிக்கொடுக்கப்படுமா என்பதையும் உங்கள் மூலமாக அமைச்சரிடமிருந்து அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞானசேகரன் ஒரு தர்மசங்கடமான விவாதத்தை எழுப்பியிருக்கிறார். சட்டமன்ற உறுப்பினர்களுக்கு ஏற்கனவே தங்களால் சட்டமன்ற விடுதியிலே அறைகள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. (சிரிப்பு) இருந்தாலும், சென்னை மாநகரத்திலே நிலத்தினுடைய தட்டுப்பாடு அதிகமான அளவில் இருக்கின்ற காரணத்தாலும், பல்வேறு பகுதிகளிலே வீட்டு மனைகள் முறையாக கிடைக்கப் பெறாத காரணத்தாலும் இந்த மாதிரி பிரச்சினைகளையெல்லாம் வைத்துத்தான் (Guided Urban Development) என்ற திட்டத்தை இந்த மானியக் கோரிக்கையிலே அறிவித்து இருக்கிறார்கள். அதன்படி நிச்சயமாக மனைகள் பெருக்கப்படும். சட்டமன்ற உறுப்பினர்களுடைய தகுதிக்கேற்றவாறு அவர்களுக்கு வீடுகளோ வீட்டு மனைகளோ இல்லாத பட்சத்திலே.... (சிரிப்பு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன் அவர்களிடமிருந்து எனக்கு ஒரு கிளாரிபிகேஷன் தேவைப்படுகிறது. அதாவது, ஆந்திர மாநிலத்தில் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு வீடுகள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன என்று கூறினார். ஆந்திர மாநிலத்தில் சட்டமன்ற உறுப்பினர்களின் ஆயுட்காலத்திற்கும் அவர்களுக்கு வீடுகள் வழங்கப்பட்டிருக்கிறதா? அல்லது அவர்கள் சட்டமன்ற உறுப்பினர்களாக இருக்கின்ற காலத்திற்கு மட்டுமா என்பதை விளக்கிச் சொல்லவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. சி. ஞானசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கேள்விகளுக்கு பதில் சொல்லியாக வேண்டும். அதாவது ஆந்திர மாநிலத்தில் சட்டமன்ற உறுப்பினர்களுக்கென்று 70,000 ரூபாய் மதிப்பில் இரண்டு மனைகளும், வீடு கட்டிக் கொள்வதற்கு 5 இலட்சம் ரூபாய் வட்டியில்லாக் கடனும் கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த முறை தேர்ந்தெடுக்கப் பட்ட உறுப்பினர்களுக்கு அந்தச் சலுகை வழங்கப்பட்டி ருக்கிறது. அதே சலுகையை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய வாயிலிருந்து உடனடியாக எங்களுக்கு விடையாக கிடைக்கும் என்று எதிர்பார்க்கிறோம். (சிரிப்பு).

பிற்பகல் 1.40

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

*மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர் பெருமக்கள் எல்லாம், 'தமக்கென வாழா பிறர்க்குரியவர்' என்று பொது மக்களால் (சிரிப்பு) மிகவும் பாராட்டப் படுகின்ற காரணத்தினாலேயே அந்த பெருந்தன்மையை நாம் கொண்டிருக்கின்ற காரணத்தினாலேயே மற்றவர் களுடைய குறைபாடுகளையெல்லாம் பார்த்து அவற்றை யெல்லாம் நீக்கி முடித்ததற்குப் பிறகு வேண்டுமானால் சட்டமன்ற உறுப்பினர்கள் பற்றி கவனிக்கலாம். மற்றவர் களைப் பற்றி நாம் முதலிலே கவனிப்போம். ஏனென் றால் முதலில் நமக்காக கவனித்துக்கொள்வது என்பது அவ்வளவு சரியாக இருக்காது என்ற காரணத்தினாலே தான் சொல்கிறேன். நாட்டுமக்களைப் பற்றி நாம் அதிகமாகக் கவலைப்பட வேண்டியவர்களாக இருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. டி. சுதர்சனம்

திரு. ப. ரங்கநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரே ஒரு ...... (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர் இப்போது கேட்கிறார். நீங்கள் ஏற்கெனவே ஒரு தரம் கேட்டுவிட்டீர் கள் இல்லையா, திரு. டி. சுதர்சனம் ஒரு கிளாரிபிகேஷன்.

திரு. டி. சுதர்சனம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 2 ஆண்டுக்கால திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் அண்ணா நகர் தொகுதியிலே பல்வேறு



இடங்களிலே முறைகேடாக மனைகள், பலருக்கு 2 மனைகள், 3 மனைகள் என்று ஒதுக்கப்பட்டு இருக்கின்றன. அதனுடைய விவரங்கள் எல்லாம் அமைச்சருக்குத் தெரியும் என்று நினைக்கிறேன். அப்படி ஒதுக்கப்பட்டிருந்தால், அந்த மனைகள் திரும்பப் பெறப்படுமா? அப்படி பெறப்பட்ட மனை களை மற்றவர்களுக்கு, வீடு இல்லாதவர்களுக்கு, கொடுக்கப் படுமா என்பதைப் பற்றி அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆட்சிக் காலத்தில் இப்படி முறைகேடாக வீட்டு மனைகள் ஒதுக்கப்பட்டிருக் கிறது என்பது அமைச்சருக்குத் தெரிந்திருக்கும் என்று யூகத்திலே சொல்லியிருக்கின்றார்கள். நிச்சயமாக இந்த அரசைப் பொறுத்தவரையில், 'தவறு செய்தால், அதை தெரிந்து செய்தால் அவன் தேவன் என்றாலும் விட மாட்டேன்' என்ற அடிப்படையிலே நடவடிக்கை மேற் கொள்ளப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

(அ) கோரிக்கை எண் 33—வீட்டு வசதி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்கை எண் 33—வீட்டு வசதி. வெட்டுத் தீர்மானங்கள் வலி யுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன் : இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதி யுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. ஜி. பழனிசாமி தன்னுடைய வெட்டுத் தீர்மானத்தை வலியுறுத்த விரும்புகிறாரா என அறிய விரும்புகிறேன்.

திரு. ஜி. பழனிசாமி : இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஜி. பழனிசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதி யுடன் திரும்பப் பெறப்படுகிறது.

''வீட்டு வசதி பற்றிய 33-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ. 21,11,55,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்''

என்னும் மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சரின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்).

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை).

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெற்றது.

(ஆ) கோரிக்கை எண். 34—நகர்ப் பகுதி வளர்ச்சி:

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்கை எண் 34—நகர்ப் பகுதி வளர்ச்சி. வெட்டுத் தீர்மானம் வலியுறுத்தப்படுகின்றதா என அறிய விரும்புகிறேன். திரு. ஜி. பழனிசாமி.

திரு. ஜி. பழனிசாமி : இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஜி. பழனிசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

''நகர்ப்பகுதி வளர்ச்சிப் பற்றிய 34-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ. 208,21,28,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்''

என்னும் மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சரின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்).

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை).

ஏற்போரே அதிகமென்று கருதுகிறேன்.



ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெற்றது.

6. உறுப்பினர் பேரவைப் பணிகளினின்று தற்காலிகமாக நீக்கி வைக்கப்படுதல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று இந்த அவையில் நான் இல்லாத நேரத்தில் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. ... ரங்கநாதன் அவர்கள் பேசுகின்றபோது சட்டமன்ற உறுப்பினர் திரு. இரா. தாமரைக்கனி அவர்கள் அடிக்கடி எழுந்து குறுக்கீடு செய்து அவையின் நடவடிக்கைகளுக்கு ஊறு விளைவித்தார் என்ற தகவல் எனக்கு வந்துள்ளது. இதைப்பற்றி இந்த அவையின் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் பலரும் நாள்தோறும் புகார்கள் செய்தவண்ணமே இருக்கிறார்கள். அடிக்கடி ஒவ்வொரு நாளும் திரு. தாமரைக்கனி அவர்கள் எழுந்து குறுக்கிட்டு இங்கே அவையின் நடவடிக்கைகளுக்கு, அலுவல்களுக்குத் தொந்தரவு கொடுத்துக் கொண்டிருக்கிறார். இடையூறு விளைவித்துக்கொண்டு இருக்கிறார் என்பது போன்ற புகார்கள் இங்கே எழுந்த வண்ணமே இருக்கிறது. அது மட்டுமின்றி, இன்று அவையின் துணைத் தலைவர் அவரை வெளியேற்றும்படி உத்தரவு இட்டபின்னர், மாண்புமிகு துணைத் தலைவரின் கட்டளையை நிறைவேற்ற காவலர்கள் வந்தபோது. அந்த காவலர்களில் ஒருவரையும் உறுப்பினர் தாமரைக்கனி அவர்கள் அடித்திருக்கிறார்கள். எனவே இதுபோன்ற விரும்பத்தகாத நடவடிக்கைகள், அவையின் அலுவல்கள் நல்ல முறையில் எந்த தொந்தரவும் இன்றி இடையூறின்றி நடைபெறுவதற்கு, ஒவ்வொரு நாளும் இத்தகைய இடையூறுகளை விளைவித்துக்கொண்டிருக்கிற உறுப்பினர் மீது மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாங்கள் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

பிற்பகல் 1.45

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெரிவித்ததைப் போல திரு. இரா. தாமரைக்கனியினுடைய... இன்றைய நடவடிக்கை என்பது அவையின் கண்ணியத்தையும், அவைக்கு இருக்கிற பெருமையையும்

குலைக்கிற வகையில் அமைந்திருந்தது என்பதை இங்கே இருக்கிற மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லோரும் கண்டிருக்கிறார்கள். நானும் அப்போது என்னுடைய அறையிலேயிருந்து அவசர அவசரமாக ஓடி வந்து பார்த்தபோது, அவரை வெளியேறுமாறு பணித்துக் கொண்டிருந்த காவலர்களிடத்தில் முறைகேடாக நடந்து கொண்டிருந்ததைக் கவனிக்க முடிந்தது. இங்கே இருக்கிற காவலர்கள் என்னுடைய கட்டளையை நிறைவேற்றச் செல்கிறபோது, அப்படிப்பட்ட காவலர்கள்மீது இதைப்போன்று முறைகேடான முறையில் நடந்துகொள்வது என்பது பேரவையைப் பெரிதும் அவமதிக்கிற செயலாகும். அத்தகைய காவலர்கள் தங்களுடைய கடமையை நிறைவேற்றச் செல்கிறார்கள் என்று சொன்னால் பேரவைத் தலைவரே அங்கே சென்று செய்கிறார் என்று தான் பொருள். எனவே, அப்படிப்பட்ட காவலர்களிடத்தில் தவறாக நடந்துகொள்வது என்பது மிகவும் கண்டிக்கத்தக்கது என்பதைப் பேரவையின் சார்பில் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஏற்கெனவே இதே மாண்புமிகு உறுப்பினர் ஒவ்வொரு முறையும் இதே முறையில் நடந்துகொண்டு பல்வேறு முறைகேடுகளிலே ஈடுபடுகிற காரணத்தால், ஏற்கெனவே ஒரு முறை இதைப் போல நானே அவரை வெளியேற்றி இருக்கிறேன். இன்றைக்கு இரண்டாவது முறையும் வெளியேற்றப்பட்டிருக்கிறார். அந்த இரண்டு முறை வெளியேற்றப்பட்டதையும் கருத்திலே கொண்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இன்றைக்கு மிக வருந்தி நடந்த சம்பவத்திற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று தெரிவித்திருப்பதையும் கணக்கில் எடுத்துக்கொண்டு இப்படி இரண்டு முறை வெளியேற்றப்படுகிற உறுப்பினர்கள் மீது எடுக்கிற ஒழுங்கு நடவடிக்கைத் தண்டனையான இந்தப் பேரவைக் கூட்டத் தொடரின் எஞ்சிய நாட்கள், அனைத்து நாட்களுக்கும், எஞ்சிய பகுதி முழுமையும் அவர் அவைக்கு வரக்கூடாது என, பேரவை விதி 120-ன்கீழ் என்னுடைய தீர்ப்பினை வழங்குகிறேன்.

பேரவைக் கூட்டத் தொடரின் எஞ்சிய நாட்கள், முழுமைக்கும், இந்தக் கூட்டத் தொடர் முழுமைக்கும், பேரவைக்குள்ளும் பேரவை வளாகத்திற்குள்ளும் வரலாகாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இதை இதே அவையில் அவரையும் சேர்த்து, இரண்டு உறுப்பினர்கள் இதைப்போல தகாத முறையில் அடிக்கடி நடந்து கொண்டிருப்பார்கள். இன்னொரு உறுப்பினரும் இதை எச்சரிக்கையாக எடுத்துக்கொண்டு முறையாக நடந்துகொள்ள வேண்டும் என்றும் பேரவையின் சார்பில் தெரிவித்துக்கொள்கிறேன்.



பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் 30—3—1992, திங்கட்கிழமை காலை 9.30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை பிற்பகல் 1.47 மணிக்கு ஒத்தி வைக்கப்பெற்றது.

## 7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

### அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

42. 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு திடமற்ற சாராவி மற்றும் வார்னீஷ் (பிரஞ்சு பாலிஷ்) விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறையின் 12—4—1991 ஆம் நாளிட்ட 96 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1937 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54 (3) பிரிவின் கீழ் பேரவை முன்வைக்கப் பெற்றது].

43. 1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுபான (சில்லறை விற்பனை) விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து உள், மதுவிலக்கு மற்றும் ஆயத் தீர்வைத் துறையின் 27—11—1990 ஆம் நாளிட்ட 999 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1937 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54(3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது[.

44. 1972 ஆம் ஆண்டு தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியப் பணி விதிகளில் திருத்தமொன்றுசெய்வது குறித்து வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறையின் 4—10—1991 ஆம் நாளிட்ட 1333-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1971 ஆம் ஆண்டு தமிழ்நாடு குடிசைப் பகுதிகள் (மேம்படுத்துதல் மற்றும் அகற்றுதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 11/1971) 72(2) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.

45. தமிழ்நாடு ஜி.டி. நாயுடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் 1988-89 ஆம் ஆண்டிற்கான ஆண்டுக் கணக்குகள் மற்றும் தணிக்கை அறிக்கை [1971 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஜி. டி. நாயுடு வேளாண்மைப் பல்கலைக் கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 8/1971) 33(3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது],

பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் [1992 மார்ச் 27

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய தாள்கள்.

55. கோரிக்கை எண். 33—வீட்டு வசதி குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு, 1992—93. (தமிழ், ஆங்கிலம்).

56. கோரிக்கை எண். 34—நகர்ப்புற வளர்ச்சி குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு. 1992—93. (தமிழ், ஆங்கிலம்).

57. பொதுக் கணக்குக் குழுவின் முப்பத்திநான்காவது அறிக்கை, 1991—92.

58. பொதுக் கணக்குக் குழுவின் முப்பத்தைந்தாவது அறிக்கை, 1991—92.

59. பொதுக் கணக்குக் குழுவின் முப்பத்தாறாவது அறிக்கை, 1991—92.

60. பொதுக் கணக்குக் குழுவின் முப்பத்தேழாவது அறிக்கை, 1991—92.

61. அரசு உறுதிமொழிக் குழுவின் மூன்றாவது அறிக்கை, 1991—92.



1992 மார்ச் 27]

(66 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)

தமிழ்நாட்டில் வீட்டு வசதி 1992-93.

மானியக் கோரிக்கை எண். 33.

வீட்டு வசதி.

**1. வீட்டு வசதி கொள்கை :**

1.1. வீட்டு வசதி என்பது ஓர் அடிப்படைத் தேவையும் சமூக பொருளாதார வளர்ச்சியில் ஒரு முக்கிய அம்சமும் ஆகும். வீடு வசிப்பதற்கான இன்றியமையாத இடமாக இருந்த போதிலும் குடும்பத்திற்கான பல முக்கியமான தேவைகளைப் பூர்த்தி செய்வதாகவும் உள்ளது. இல்லம் என்பது வாழ்விடமாக அமைவதோடு மட்டுமல்லாது இதில் முதலீடு செய்வது என்பது பயன் தரத்தக்க ஒன்றும் ஆகும். இதனால் பொருளாதார நடவடிக்கைகள் மேம்படுவதோடு தேசிய கொள்கையின் கீழ்க் காணும் இலக்குகள் பலவற்றை எய்தவும் அடிப்படையாக அமைகிறது. அவையாவன :—

(அ) வாழ்வதற்கு இல்லத்தை ஏற்படுத்திக் கொடுத்தல் அதன் மூலம் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துதல்.

(ஆ) பொருளாதார நடவடிக்கைகளைத் தூண்டுதல். கணிசமான அளவிற்கு வேலை வாய்ப்பை ஏற்படுத்துதல். அதன் மூலம் உற்பத்தித் திறனை அதிகரித்தல்.

(இ) மக்கள் தாங்களாகவே முன் வந்து சேமிக்கும் வழக்கத்தை மேற் கொள்வதற்குரிய சிறந்த உந்து சக்தியாகச் செயல்படுதல்.

(ஈ) பொது சுகாதாரம், துப்பரவு, கல்வி ஆகிய துறைகளில் கடினமான இலக்குகளை எய்த உகந்த சூழ்நிலைகளை ஏற்படுத்துதல்.

1.2. மகளிர், ஆடவர் அனைவரும் வீடுகள் பெறக்கூடிய வகையில் ஒரு ஜனநாயக நாடு உத்திரவாதம் அளிக்க வேண்டும். இத்தகைய நிலைமையில், இவர்களும் குழந்தைகளும் பாதுகாப்புடனும், கண்ணியத்துடனும் வாழ

முடியும், குடிநீர், சுகாதாரம், சாலைகள் மற்றும் அடிப்படைப் பணிகளை. வீடு மற்றும் நகர் நிலையில் ஏற்படுத்தி மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவது அரசின் கடமையாகும்,

1.3. தரத்திலும் எண்ணிக்கையிலும் வீட்டுவசதி சமீப காலத்தில் கணிசமான முன்னேற்றம் அடைந்திருந்தாலும். 1—3—1981 நிலவரப்படி தேசிய அளவில் வீட்டுவசதி பற்றாக்குறை 23.3 மில்லியன்களாகும், நகர்ப்புறங்களில் பற்றாக்குறை 7 மில்லியன்களாகவும். கிராமப்புறங்களில் 16.3 மில்லியன்களாகவும் இருந்ததாக கணக்கிடப்பட்டுள்ளது, இதே காலத்தில். தமிழ்நாட்டில் நகர்ப்புறங்களில் பற்றாக்குறை 3 இலட்சங்களாகவும் கிராமப்புறங்களில் பற்றாக்குறை 7 இலட்சங்களாகவும் இருந்தது எனக் கணக்கிடப்பட்டுள்ளது, நகர்ப்புறங்களில் பரிமாண வளர்ச்சி மிதமாக இருந்தாலும். இவ்வளர்ச்சி கடந்த 20 ஆண்டுகளில், ஆண்டுதோறும் 3-லிருந்து 4 விழுக்காடு வளர்ச்சியைக் கண்டுள்ளது, குறிப்பாக 1981-ஆம் வருட மக்கள் கணக்கெடுப்பின்படி நகர்ப்புறங்களில் வசிக்கும் மக்கள் தொகையில் சரிபாதி, ஒரு இலட்சம். அதற்கு மேல் வசிக்கும் பெரு நகரங்களில் உள்ளனர் எனக் கணக்கிடப்பட்டுள்ளது, இதன் காரணமாக பெருநகரங்களில், மக்கள் நெரிசல் மற்றும் போக்குவரத்து நெரிசலுடன். சுகாதாரமற்ற சூழலில் குடிசை வளர்ச்சி நகரத்திற்குத் தேவையான அடிப்படை வசதிகளில் பற்றாக்குறை ஆகியன மிகுந்து காணப்படுகின்றன, அனைத்து நகரங்களிலும். குடிசை வாழ்பவர்களின் எண்ணிக்கை. நகர மக்கட் தொகையில் 18,75 விழுக்காடு இருந்தாலும். பெரு நகரங்களில், இவ்விழுக்காடு 31 ஆக, அதாவது அதன் மக்கள் தொகையில் மூன்றில் ஒரு பங்காக உயர்ந்து காணப்படுகிறது,

1.4. வீட்டு வசதி வாரியங்கள் அல்லது வளர்ச்சி அதிகார அமைப்புகள் போன்ற அரசு நிறுவனங்களின் மூலம் வங்கிகள். கூட்டுறவு சங்கங்கள் முதலியனவற்றின் நிதி உதவியுடன் கிராம மற்றும் நகரப் பகுதிகளில் கட்டப்பட்ட மற்றும் மேம்படுத்தப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை மொத்த எண்ணிக்கையில் 15 விழுக்காடுகளேயாகும்,,,, அரசு நிறுவனங்களில் வீடு கட்டும் முயற்சியை மேலும் ஊக்குவிப்பதுடன் இவ்வரசு தனியார் துறையில் வீட்டு வளர்ச்சியை துரிதப்படுத்த தேவையான சூழ்நிலைகளை உருவாக்குவதில் முனைந்து செயல்படும்; ஒரு குடும்பத்திற்கு ஒரு வீடு என்ற அரசின் குறிக்கோளை அடைவதில் அரசுத்துறை மற்றும் தனியார் துறை இணைந்து செயல்பட அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படும்.



1.5. மாநிலத்திற்கான வீட்டு வசதிக் கொள்கை பின்பற்றப்படுவதன் அடிப்படை நோக்கங்களாவன :—

(1) இக்கொள்கையின்படி எல்லா மக்களுக்கும், குறிப்பாக வீடற்றவருக்கும், வீடு பற்றாக்குறை உள்ளவருக்கும் செயல் நோக்கமளிக்கவும், உதவவும், நிலங்களுக்கு அணுகு வழி, பொருள், தொழில் நுட்பவியல் மற்றும் நிதி வசதி ஆகியவற்றின் மூலம் அவர்களுக்கு இயலக்கூடிய உறைவிடங்களைப் பெறுதல்.

(2) நாட்டின் வீட்டு வசதி இருப்பு மற்றும் அதன் ஒழுங்கான பாதுகாப்பு. புதுப்பித்தல் மற்றும் நிலை உயர்த்துதல் ஆகியவற்றின் வளர்ச்சி அடைய வீட்டு வசதிக்கான முதலீட்டினை ஊக்குவித்தல்.

(3) தடைகளை நீக்கி சுற்றுப்புறச் சூழலை உருவாக்கவும். திறன் மிக்க அணுகுமுறையினை வளர்ச்சியடைய செய்து வீட்டு வசதி முயற்சிகளை அதிகமாக்கி முதலீட்டினை ஒப்படைத்தல்.

(4) குடிநீர், துப்புரவு, மற்றும் இதர அடிப்படை வசதிகளின் தரத்தினை உயர்த்துதல் மூலம் மனித குடியிருப்புச் சூழ்நிலையினை மேம்படுத்துதல்.

(5) மனித குடியிருப்புப் பகுதிகளில் நாட்டின் உயரிய பண்பாட்டினையும், நாட்டிற்குரிய அல்லது உள்ளூர் கட்டிடக் கலையையும் பாதுகாத்தல் மற்றும் மேம்படுத்துதல்.

1.6. இந்நோக்கங்கள் கீழ்க்கண்டவாறு நிறைவேற்றப்படவேண்டும் :—

(1) சரியான சமயத்திலும். விரும்பத்தக்க இடங்களிலும் வீட்டு வசதியினைப் பெருக்கும் பொருட்டு அடிப்படை வசதிகளுடன் கூடிய நிலங்களை நியாயமான விலையில் கிடைக்க ஊக்குவித்தல்.

(2) அடிப்படை வசதிகளுடன் கூடிய நில அபிவிருத்தி ஏற்படும் வகையில் நிலங்களில் வழிகாட்டும் நகர் அபிவிருத்திப் பணிகளை ஊக்குவித்தல்.

(3) நகர் மற்றும் கிராமப்புறங்களில் வீட்டு வசதிகளைப் பெருக்குவதற்கு உதவியாக வீட்டு மனை உரிமையாளர்களுக்கு மனைகளை உடைமையாக்குதல்.

(4) வீட்டு வசதிகளைப் புதியதாக உருவாக்கவும், ஏற்கனவே உருவாக்கப்பட்டுள்ள வீடுகளை மேம்படுத்தவும் தேவைப்படும் நிதியினை நிதி நிறுவனங்களின் மூலம் தனியார்களுக்கு விரைந்து கிடைத்திட அனைத்து நடவடிக்கைகளையும் ஊக்குவித்தல். வீட்டுவசதிகளைப் பெருக்கும் முகமான சேமிப்புகளை ஊக்குவிக்கவும், இதற்காகத் தேவைப்படும் நிதி ஊக்கம் அளித்திடவும் தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

(5) வாடகைக் குடியிருப்புகளைப் பெருக்கிட தக்க் சூழ்நிலைகளை உருவாக்குதல்.

(6) தரப்படுத்தப்பட்ட கட்டிட பொருள்கள் மற்றும் உபகரணங்களை குறைந்த செலவில் உருவாக்குவதற்குத் தேவைப்படும் தொழில் நுட்ப மற்றும் வடிவமைப்பு ஆகியவற்றினைப் பெருக்கிட மேற்கொள்ளும் ஆராய்ச்சிகளுக்கு சீரிய வகையில் ஊக்கமளித்தல்.

(7) தரப்படுத்தப்பட்ட கட்டிடப் பொருள்களை நியாயமான விலையில் கிடைத்திட நடவடிக்கை மேற்கொள்ளுதல்.

(8) உள்ளூரில் கிடைத்திடும் கச்சாப் பொருளைக் கொண்டு தரமான கட்டிடப் பொருட்களைத் தயாரிக்கவும் இவற்றை மலிவு விலையில் மக்களுக்கு கிடைக்கும் வகையில் அனைத்து நடவடிக்கைகளையும் ஊக்குவித்தல்.

(9) ஒவ்வொரு மாவட்டத்திலும் கட்டிட மையங்களை அமைத்து கட்டுமான திறனை மேம்படுத்தவும், புதியதாக உருவாக்கவும் தேவைப்படும் நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

(10) கூட்டுறவு முறையில் வீட்டு வசதிகளை உருவாக்கவும், மேம்படுத்தவும், அரசுப் பணி சேராக் குழுக்கள் மற்றும் தானியங்கி நிறுவனங்கள் வீட்டு வசதிப் பணிகளை மேற்கொள்ள வழிகாட்டும் முறைகளை உருவாக்கவும், ஊக்குவிக்கவும் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

(11) வீட்டு வசதியைப் பெருக்குவதற்கு தேவைப்பட்டால் கட்டிட நிதிகள் மற்றும் நெறிமுறைகளை தளர்த்துதல்.

(12) உள்ளாட்சிகளில் ஆரோக்கியமான சூழ்நிலை உருவாக்கவும், குடியிருப்புகள் சீராக வளர்ச்சியடையவும் தேவைப்படும் அனைத்து அடிப்படை வசதிகளையும்





அமைத்திட தக்க நடவடிக்கை எடுத்தல். மேலும். இவ்வடிப்படை வசதிகள் ஒரே சமயத்தில் குடியிருப்புகளுக்கு அமையும் வகையில் அனைத்துத் துறை நிதி உதவிகளும், ஒருங்கிணைந்த வகையில் ஒன்று சேர அளிக்க நடவடிக்கைகளை ஊக்குவித்தல் ; முக்கியமாக இவ்வசதிகள் நகர் மற்றும் கிராமப்புறங்களில் வசிக்கும் ஏழை மக்கள் பயன்படும் வகையில் அமைந்திட எல்லா நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுதல்.

(13) தொன்றுதொட்டு கடைப்பிடிக்கப்பட்டு வரும் கட்டுமான செயல்திறனை, ஆங்காங்கு கடைப்பிடிக்கப்பட்டு வரும் வழக்கங்களை ஊக்குவித்தல்.

1.7. தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் மற்றும் தமிழ்நாடு கூட்டுறவு வீட்டு வசதி இணையம் ஆகிய நிறுவனங்கள் அரசின் வீட்டு வசதிக் கொள்கைகளைப் பல்வேறு வருவாய்ப் பிரிவினரும் பயன்பெறும் வகையில் நிறைவேற்றிட செயல் திட்டங்களைத் தீட்டி நிறைவேற்றுவதுடன் தனியார் துறையில் வீட்டு வசதியைப் பெருக்கிட முன்னோடியாகவும், ஊக்குவிக்கும் நிறுவனங்களாகவும், இம்மாநிலத்தில் செயல்படுகின்றன.

## 2. தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் :

### 2.1. திட்டங்கள் :

2.1.1. தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் 1961 ஆம் ஆண்டு நிறுவப்பட்டு மாநிலம் முழுவதும் செயல்பட்டு வருகிறது. பொருளாதாரத்தில் நலிவுற்றோருக்காக 90,172 வீடுகளும், குறைந்த வருவாயினருக்காக 50,146 வீடுகளும்/மனைகளும், நடுத்தர மற்றும் உயர்தர வருவாயினருக்காக 49,532 வீடுகளும்/மனைகளும், அரசு ஊழியர்களுக்காக 22,022 வாடகை அடுக்குமாடி குடியிருப்புகளும், குடிசை வாழ் மக்களுக்காக 20,060 குடியிருப்புகளும், தொழிலாளர் நல வீட்டு வசதித் திட்டத்தின் கீழ் 3,130 குடியிருப்புகளும், காவல் துறையினருக்காக 3,370 குடியிருப்புகளுமாக இதுவரை தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் 2,38,432 குடியிருப்புகளை ஏற்படுத்தியுள்ளது. தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் பொருளாதாரத்தில் நலிவுற்றோர் மற்றும் குறைந்த வருவாயினருக்காக 55 விழுக்காடு மனைகளும்/வீடுகளும், நடுத்தர மற்றும் உயர்தர வருவாயினருக்காக 45 விழுக்காடும் அமைத்துக் கொடுப்பதைக் குறிக்கோளாகக் கொண்டுள்ளது.

[1992 மார்ச் 27

## 2.2. குறைந்த வருவாய் பிரிவினருக்காக வீட்டுவசதித் திட்டம் :

2.2.1. இத்திட்டமானது ஆண்டொன்றிற்கு ரூ. 12,601 முதல் ரூ. 26,400 வரை வருமானமுள்ள குடும்பத்தினர் பயன் பெறுவதற்காக உருவாக்கப்பட்டுள்ளது. இக் குடியிருப்புகள் ஒவ்வொன்றிற்கும் நிர்ணயிக்கப்பட்ட விலை மதிப்பீடு ரூ. 50,000 ஆகும். முழுத் தொகையில் மூன்றில் ஒரு பங்கு முன்பணமாகவும் மீதத் தொகையை 15 ஆண்டு களில் (கட்டுமானக் காலம் இரண்டு ஆண்டுகள் உட்பட) மாதத் தவணையில் செலுத்தலாம். இத் திட்டத்தின் கீழ் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தால் பிப்ரவரி 1992 முடிய 50,146 குடியிருப்புகள் (மனைகள் மற்றும் வீடுகள்) ஏற்படுத்தப்பட்டுள்ளன.

## 2.3. நடுத்தர மற்றும் உயர்தர வருவாய்ப் பிரிவினருக்கான வீட்டுவசதித் திட்டம் :

2.3.1. நடுத்தர வருவாய்ப் பிரிவினருக்கான வீட்டு வசதித் திட்டம் ஆண்டொன்றிற்கு ரூ. 26,401 முதல் ரூ. 44,400 வரை வருமானமுள்ள குடும்பத்தினர் பயன் பெறுவதற்காக உருவாக்கப்பட்டுள்ளது. இக் குடியிருப்புகள் ஒவ்வொன்றிற்கும் நிர்ணயிக்கப்பட்டுள்ள விலை மதிப்பீடு ரூ. 1,75,000 ஆகும். முழுத் தொகையில் மூன்றில் ஒரு பங்கு முன்பணமாகவும், மீதத் தொகையை 12 முதல் 14 விழுக்காடுகள் வட்டியுடன் கூடிய மாதாந்திரத் தவணை யாக 15 ஆண்டுகளில் (கட்டுமானக் காலம் இரண்டு ஆண்டுகல உட்பட) திருப்பிச் செலுத்தும்படியாக அமைக்கப்பட்டுள்ளது.

2.3.2. உயர்தர வருவாய்ப் பிரிவினருக்காக வீட்டு வசதித் திட்டமானது ஆண்டொன்றிற்கு ரூ. 44,400-க்கு மேல் வருமானமுள்ள குடும்பத்தினர் பயன் பெறுவதற்காக உருவாக்கப்பட்டுள்ளது. முழுத் தொகையில் 40 சதவீதம் முன்பணமாகவும், மீதத் தொகை 14 முதல் 16 விழுக் காடுகள் வட்டியுடன் கூடிய மாதாந்திர தவணையாக 15 ஆண்டுகளில் (கட்டுமான காலம் இரண்டு ஆண்டுகள் உட்பட) திருப்பிச் செலுத்தும்படியாக அமைக்கப்பட்டுள்ளது.

2.3.3. தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் பிப்ரவரி 1992 முடிய நடுத்தர மற்றும் உயர்தர வருவாய்ப் பிரிவினருக் காக 49,532 குடியிருப்புகள் (மனைகள், வீடுகள், அடுக்கு மாடி குடியிருப்புகள்) ஏற்படுத்தியுள்ளது.



1992 மார்ச் 27]

## 2.4. சிறிய மற்றும் நடுத்தர நகர வீட்டு வசதித் திட்டம் :

2.4.1. சிறிய மற்றும் நடுத்தர நகரங்களில் வீட்டு வசதிகளை ஏற்படுத்துவதற்காக மாநிலம் முழுவதும் உள்ள அனைத்து சிறிய மற்றும் நடுத்தர நகரங்களில் வீடுகள் கட்டுவதற்கான திட்டத்தை அரசு ஏற்படுத்தியுள்ளது. இத்திட்டத்தின் கீழ், வருகின்ற 5 ஆண்டுகளில் ஒரு இலட்சம் குடியிருப்புகள் கட்டப்படும். இத்திட்டத்திற்கு தேவையான நிதியுதவி, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சிக் கழகம், தேசிய வீட்டுவசதி வங்கி மற்றும் தமிழ்நாடு வீட்டுவசதி வாரிய வருவாய் போன்றவற்றின் மூலம் பெறப்படும். இத்திட்டத்திற்குப் பொருத்தமான தனியார் நிலங்களைக் கண்டறிந்து அந்த நில உரிமை யாளர்களிடம் தொடர்பு கொண்டு, பேச்சு வார்த்தை மூலம் நியாயமான விலையில் நிலங்களை வாங்கி திட்டத்தை நிறைவேற்றுவதற்கு மாவட்ட ஆட்சியரைத் தலைவராகக் கொண்ட மாவட்ட அளவிலான அரசு அலுவலர்கள் அடங்கிய குழு அனைத்து மாவட்டங்களிலும் நியமிக்கப் பட்டுள்ளது.

2.4.2. முதல் கட்டமாக 77 நகரங்கள் தேர்ந்தெடுக்கப் பட்டு உள்ளன. 10 நகரங்களில் ரூ. 1,855 இலட்சம் மதிப்பீட்டில் 3,457 வீடுகள் கட்டும் பணி தொடங்கப் பட்டுள்ளது, 1992-93-ஆம் ஆண்டில் 15 நகரங்களில் ரூ. 4,132 இலட்சம் மதிப்பீட்டில் 5,779 வீடுகள் கட்டும் பணி தொடங்கவிருக்கின்றன. மீதமுள்ள நகரங்களில் கட்டுமானப் பணிகள் நிலம் கையகப்படுத்திய பின் தொடங்கப்படும்.

## 2.5. தமிழ்நாடு நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம் :

2.5.1. தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம், சென்னை, மதுரை, சேலம், கோயம்புத்தூர், ஈரோடு, தூத்துக்குடி, திருநெல்வேலி, திருப்பூர் ஆகிய 10 முக்கிய நகரங்களில் 967 ஹெக்டேர் பரப்பளவில் ரூ. 246.41 கோடி மதிப்பீட்டில் தன்னிறைவு வீட்டுமனைத் திட்டத்தின் கீழ் 70,000 தன்னிறைவு மனைகளை உருவாக்கி வருகிறது. இதற்கான திட்டக் காலம் 1988 அக்டோபர் மாதம் முதல் 1995 மார்ச் மாதம் முடிய ஆகும்.

2.5.2. இதுவரை 24 திட்டங்கள் உலக வங்கியின் ஒப்புதல் பெறப்பட்டு உள்ளன. இதில் பிப்ரவரி 1992 வரை 7 திட்டங்கள் முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 17 திட்டங்கள் பல நிலைகளில் செயல்பாட்டில் உள்ளன.

மேலும் 5 திட்டங்கள், உருவாக்கப்பட்டு கொண்டிருக்கின்றன. இத்திட்டத்தில் மேலும் 10,000 தன்னிறைவு மனைகள் திட்ட மதிப்பீட்டில் ஏற்பட்ட சேமிப்பின் மூலம் உருவாக்கி மொத்தம் 80,000 தன்னிறைவு மனைகள் உருவாக்க திட்டமிடப்பட்டுள்ளது, பிப்ரவரி 1992 வரை ரூ. 8,502 இலட்சம் செலவழிக்கப்பட்டு உள்ளது. 47,739 தன்னிறைவு மனைகள் உருவாக்கப்பட்டு உள்ளன.

## 2.6. தமிழ்நாடு அரசு ஊழியர்கள் வாடகை வீட்டுவசதித் திட்டம்

2.6.1. இத்திட்டம், மாநிலத் தலைநகர், மாவட்டம், வருவாய்க் கோட்டத் தலைமை இடங்களில் அரசு ஊழியர்களுக்கு வாடகைக் குடியிருப்புகள் அளிப்பதற்காக உருவாக்கப்பட்டு உள்ளது. அரசின் சார்பில் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் இத்திட்டத்தை நடைமுறைப்படுத்தி குடியிருப்புகளை பராமரித்து வருகின்றது. தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் 29-2-1992 முடிய 22.022 அடுக்கு மாடி குடியிருப்புகள் கட்டியுள்ளது. பெருகி வரும் தேவைகளைக் கருத்தில் கொண்டு, அரசு ஊழியர்களுக்கு மேலும் வாடகைக் குடியிருப்புகளை உருவாக்குவதற்காக நிதி நிறுவனங்களின் நிதி உதவி பெற திட்டமிடப்பட்டு உள்ளது.

## 2.7. நிலம் கையகப்படுத்துதல் மற்றும் மேம்பாட்டுத் திட்டம் :

2.7.1. நிலம் கையகப்படுத்துதல் மற்றும் மேம்பாட்டுத் திட்டத்தின் குறிக்கோளானது உயர்ந்து கொண்டிருக்கும் நிலங்களின் விலையைக் கட்டுப்படுத்த முன் கூட்டியே நிலங்களைக் கையகப்படுத்தி நியாயமான விலைகளில் வீடுகள் கட்டித் தருவதாகும்.

## 2.8. 1992-93 ஆம் ஆண்டிற்கான திட்டங்கள் :

2.8.1. 1992-93 ஆம் நிதி ஆண்டில் 13,000 அபிவிருத்தி செய்யப்பட்ட வீட்டுமனைகளும், 8,500 வீடுகளும் கட்ட திட்டமிடப்பட்டுள்ளது. 1992-93 ஆம் நிதி ஆண்டில் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் ரூ. 140 கோடி மதிப்பீட்டில் திட்டங்கள் நிறைவேற்ற உள்ளது, அதில் ரூ. 21 கோடி தமிழக அரசின் நிதிநிலை ஆதாரமாக இருக்கும்.



## 3. தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம் :

3.1. குடிசைப் பகுதிகளுக்கான அரசின் கொள்கை கீழ்க்கண்ட சிறப்பு அம்சங்களைக் கொண்டதாக இருக்கும் :

(1) வீட்டுவசதி பற்றிய அரசின் ஒட்டுமொத்தமான கொள்கைக்கு இணங்க குடிசைவாழ் மக்களின் குடியிருப்பு வசதியையும் அவர்களின் மேம்பாட்டினையும் கருத்தில் கொண்டதாக அமையும்.

(2) மாநிலத்திலுள்ள அனைத்து குடிசைவாழ் மக்களுக்கும் வசதியுள்ள வீடுகளை சம நோக்கில் பகிர்ந்து அளிப்பதை உறுதி செய்வதாக இருக்கும்,

(3) சென்னை மாநகரம் மற்றும் மாநிலத்தின் இதர பெரிய நகரங்களில் நெருக்கடியைக் குறைக்கும் நோக்கம் உடையதாகவும் இருக்கும்.

(4) நகர்ப்புறங்களில் குடிசைப் பகுதிகளின் எண்ணிக்கையினைக் குறைப்பதுடன் குடிசை வாழ் மக்களின் இன்னல்களைத் தீர்ப்பதற்கான வழிமுறைகளைத் தேடுவதாகவும் அமையும்.

(5) குடிசை வாழ் மக்களுக்கு அவர்களின் ஏற்பு சக்திக்கு உட்பட்ட விலையில் வீடுகள் கட்டித் தரும் நோக்கமுடையதாக இருக்கும்.

(6) குடிசைப் பகுதிகளில் ஏற்படும் பிரச்சினைகளைக் களைய வேண்டியதன் அவசியத்தைக் கருத்தில் கொண்டு குடிசை மாற்றுத் திட்டங்களையும் மற்றும் குடிசைப் பகுதி அபிவிருத்தித் திட்டங்களையும் செயல்படுத்த உதவி செய்வதாக அரசின் கொள்கை அமையும்.

(7) தற்போது அமைந்துள்ள எளிதில் தீப்பிடிக்கக் கூடிய குடிசைகளை மேம்படுத்தி பெரிய நகர்ப்புறங்களில் தீ விபத்தினால் ஏற்படும் அபாயத்தைக் குறைப்பதாயும் அமையும்.

(8) குடிசை மாற்றுத் திட்டங்கள் மற்றும் குடிசைப் பகுதி அபிவிருத்தித் திட்டங்களில் குடிசை வாழ் மக்களும் பங்கு பெறுவதற்கு ஏற்புடையதாக அரசின் கொள்கை அமையும்.

3.2. மேலே கூறியுள்ள அரசின் கொள்கைகளைத் திட்ட வடிவமாக்கி நிறைவேற்றுவதற்கான செயல் முறைகளை அரசு வழி வகுத்துள்ளது. அவைகளின் விவரங்கள் வருமாறு :

(1) சென்னை துரித ரயில் போக்குவரத்துத் திட்டம் போன்ற பொதுமக்களின் வசதிக்கான திட்டத்தின் வழிப் பாதையில் அமைந்துள்ள குடிசைகளையும், பொது நீர்நிலை, நகரத்தின் நடைபாதைகள், பூங்காக்கள் போன்ற ஆட்சேபகரமான இடங்களிலுள்ள குடிசைகளையும் கட்டாய மாகக் காலி செய்யப்பட்டு மாற்று இடங்களில் குடிய மர்த்தப்பட வேண்டும்.

(2) எந்தெந்த குடிசைப் பகுதிகளில் அவை அமைந் துள்ள இடத்திலேயே அபிவிருத்தி செய்ய வாய்ப்புள்ளதோ அத்தகைய குடிசைப் பகுதிகள் ஏற்கப்பட்டு அவைகள் அபிவிருத்தி செய்யப்பட்டு தேவையான அடிப்படை வசதி கள் அமைத்துத் தரப்படும்.

(3) நகரங்களின் நெரிசல் மிகுந்த பகுதியில் சுகாதார வசதிகளற்ற குடிசைப் பகுதிகள் அகற்றப்பட்டு அவைகளுக்கு மாற்றாக அதே இடத்தில் அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டி அவைகளில் குடிசைவாழ் மக்கள் குடியேற்றப்பட வேண்டும்.

(4) குடிசை மாற்றுத் திட்டங்களோ அல்லது அபி விருத்தித் திட்டங்களோ நிறைவேற்றப்பட முடியாத பகுதிகளில் குடிசைவாழ் மக்களின் மேம்பாட்டிற்காகத் தன்னிறைவு வீட்டுமனைத் திட்டங்கள் செயல்படுத்தப் பட்டு வருகின்றன. இத்திட்டங்களில் அபிவிருத்தி செய்யப்படுகின்ற மனைகளின் விலை, குடிசைவாழ் மக்களின் வாங்கும் திறனுக்குள்ளாக நிர்ணயிக்கப்படுகிறது.

(5) தன்னிறைவு வீட்டுமனைத் திட்டங்களில் மனை கள் ஒதுக்கீடுதாரர்களுக்கு உரிமை செய்யப்படுவது திட்டத்தின் உள் அம்சமாகிறது,

(6) குடிசைவாழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்ப தற்கு அங்கொன்றும் இங்கொன்றுமாக செயல்படுவது என்ற அணுகுமுறை இல்லாமல், அனைத்து அடிப்படை வசதி களையும் உள்ளடக்கிய ஒருங்கிணைந்த அணுகுமுறையே இத்திட்டத்தின் தனிச் சிறப்பாகும்.



(7) ஹட்கோ போன்ற நிதி வழங்கும் நிறுவனங்கள் மூலம் குறைந்த வட்டி விகிதங்களில் வீடு கட்டவோ அல்லது மாற்றி அமைக்கவோ சுலபமாக கடன் வழங்க வழி செய்யப்படுகிறது.

(8) குடிசைவாழ் மக்கள் தாங்களே முன்வந்து முதலீடு செய்து திட்டத்தில் பங்குபெற வாய்ப்பு அளிக்கப் படுகிறது.

(9) தற்போது அமலிலுள்ள குறைந்த வாடகை வசூல் செய்யும் முறையில் உள்ள அடுக்குமாடிக் குடியிருப்புகள் சுலபத் தவணை முறையில் ஒதுக்கீடு செய்யும் முறைக்கு மாற்றப்பட்டு வருவதால் ஒதுக்கீடுதாரர்கள் தங்கள் குடி யிருப்புகளைத் தாங்களாகவே பராமரிக்க முடியும். மேலும் அவர்களுக்கு குடியிருப்புகள் காலப்போக்கில் உடைமை யாகவும் ஆகிறது.

(10) குடிசைப் பகுதிகள் பெருகுவதைக் கட்டுப் படுத்தவும், மாநிலத்தில் குறிப்பாக சென்னை பெருநகர்ப் பகுதியில் புதிய குடிசைப் பகுதிகள் தோன்றாமல் இருப்பதற்கும் தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

3.2.1. அரசின் இத்தகைய வேகமும் விவேகமுமான கொள்கையை 1971 ஆம் ஆண்டு நிறுவப்பட்டு (Act 11/1971) அன்று முதல் தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம் செயல்படுத்தி வருகிறது.

3.2.2. இவ்வாரியம், தலைவர் மற்றும் வெவ்வேறு துறையைச் சார்ந்த 9 நிர்வாகிகள் அடங்கிய குழுவினரால் நிர்வகிக்கப் படுகிறது. அரசின் கொள்கைக்கும் வரை முறைகளுக்கும் உட்பட்டு இவ்வாரியம் பல்வேறு திட்டங் களை உருவாக்கி செயல்படுத்தி வருகிறது.

திட்டங்கள் :

3.3. குடிசைமாற்றுத் திட்டம் :

3.3.1. வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட குடிசைப் பகுதி களை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 16—11—1991 அன்று பார்வையிட்டார்கள். இப்பகுதிகளை மண்ணிட்டு நிரப்பி இங்கு வாழும் மக்களுக்கு அடுக்குமாடி குடியிருப்பு கள் கட்ட திட்டப் பிரேரணைகள் அனுப்புமாறு அரசு விருப்பம் தெரிவித்தது. இத்திட்டத்தின் ஒரு பகுதியாக 1992-93 ஆம் ஆண்டு தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று

வாரியம் 5,000 குடியிருப்புகள் ரூபாய் 25.00 கோடி செலவில் கட்டத் திட்டப் பணிகளை மேற்கொள்ளும். இத் திட்ட மதிப்பீட்டு செலவினத்தில் 15 சதவீதம் அரசிடம் மானியமாகவும் மீதமுள்ள 85 சதவிகிதம் ஹட்கோ நிறுவனத்திடம் கடனாகவும் பெறப்படும். வாரியம் அமைவதற்கும் முன், சென்னை மாநகராட்சியினாலும், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தினாலும் கட்டி முடிக்கப் பட்ட 7,191 அடுக்குமாடிக் குடியிருப்புகள் உட்பட பிப்ரவரி 1992 வரை இவ்வாரியம் 54,934 அடுக்குமாடி குடியிருப்புகளை ரூ. 132.28 கோடி செலவில் கட்டியுள்ளது.

## 3.4. தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் :

உலக வங்கி நிதி உதவியுடன் இத்திட்டம் சென்னை மற்றும் மாநிலத்தின் முக்கிய நகரங்களான மதுரை, கோயம்புத்தூர், திருச்சி, சேலம், வேலூர், ஈரோடு, திருப்பூர், தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி ஆகிய நகரங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 1988-89 ஆம் ஆண்டிலிருந்து செயல்பட்டு வரும் இத்திட்டத்தின்கீழ் குடிசைப் பகுதிகள் அபிவிருத்தி செய்யப்பட்டு, அப்பகுதிகளில் குடிசைவாழ் மக்களின் மேம்பாட்டிற்காக, சாலைகள், குடிநீர், கழிவுநீர், வடிகால் மற்றும் தெரு விளக்குகள் போன்ற அடிப்படை வசதிகள் செய்து தரப்படுவதுடன் மனை உரிமையும் வழங்கப்படுகிறது. சுமார் ரூ. 46.40 கோடி செலவில் 6 ஆண்டுகளில் 94,000 குடும்பங்கள் பயனடையுமாறு திட்டமிடப்பட்டுள்ளது. 1992 ஆம் ஆண்டு பிப்ரவரி முடிய இத்திட்டத்திற்காக 13.97 கோடி செலவு செய்யப்பட்டு 41,157 குடும்பங்கள் பயனடைந்துள்ளன.

## 3.5. விரைவுபடுத்தப்பட்ட குடிசை அபிவிருத்தித் திட்டம் :

3.5.1. இத்திட்டத்தின்கீழ் சுகாதாரமில்லாத குடிசைப் பகுதிகளை அபிவிருத்தி செய்து அப்பகுதியில் சுற்றுப்புற சூழலை மேம்படுத்தும் பொருட்டு குடும்பத்திற்கு ரூ. 1,500 வீதம் செலவு செய்து, பொது குடிநீர்க் குழாய், பொதுக் கழிப்பிடம், சாலை மற்றும் தெரு மின் விளக்குகள் அமைக்கப்படுகின்றன. இத்தொகை அரசினால் மானியமாக அளிக்கப்படுகிறது. இத்திட்டம், தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்திற்குள் வராத நகரங்களில் மட்டுமே பொதுவாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. 1992 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் முடிய இத்திட்டத்தின் மூலம் ரூ. 11.45 கோடி செலவு செய்யப்பட்டு 1,17,603 குடும்பங்கள் பயன் பெற்றுள்ளன.





## 3.6. வீடற்றோருக்கு வீடு வழங்கும் திட்டம் :

3.6.1. ஏற்கனவே அபிவிருத்தி செய்யப்பட்ட குடிசைப் பகுதிகளில் வாழும் மக்களுக்காக ஹட்கோ நிறுவனம் மூலம் கடனுதவி பெற்று வீடுகள் கட்டப்பட்டு, அவ்வீடுகள் அக்குடிசைப் பகுதிகளில் வாழும் மக்களுக்கு சுலபத்தவணை முறையில் ஒதுக்கீடு செய்யப்படுகின்றன. சிக்கனத் தொழில் முறைகளைக் கடைப்பிடித்தலும் அப்பகுதிகளிலேயே கிடைக்கக்கூடிய பொருட்களை உபயோகிப்பதும் இத்திட்டத்தின் சிறப்பு அம்சங்களாகும். 1992 ஆம் ஆண்டு பிப்ரவரி முடிய ரூ. 3.24 கோடி செலவில் 2,882 வீடுகள் கட்டப்பட்டு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

## 3.7. நடைபாதையில் வசிப்போருக்கு வீடுகள் கட்டும் திட்டம் :

3.7.1. சென்னை நகரில் நடைபாதையில் வசித்துவரும் ஏழை மக்களை அவ்விடங்களிலிருந்து அகற்றி சென்னைப் பெருநகரத்தின் பல பகுதிகளில் குடியேற்றம் செய்வது இத்திட்டத்தின் நோக்கமாகும். மத்திய மற்றும் மாநில அரசுகளின் மானிய உதவியுடன் ஹட்கோ நிறுவனம் வழங்கும் கடனுதவியுடனும் அடிப்படை வசதிகளுடனும் கூடிய மனைகள் அபிவிருத்தி செய்யப்பட்டு மைய வீடுகளும் (Core Home) கட்டித் தரப்படுகின்றன. இத்திட்டத்தின்கீழ் பிப்ரவரி 1992 வரை ரூ. 2.48 கோடி செலவு செய்யப்பட்டு 4,588 குடும்பங்கள் பயன் பெற்று இருக்கின்றன.

## 3.8. கடன் வழங்கும் திட்டம் :

3.8.1. குடிசைவாழ் மக்கள் தாங்களாகவே வீடுகள் கட்டிக் கொள்வதற்காக ரூபாய் 8,000 கடனுதவி வழங்கப் படுகிறது. இக்கடன் மூன்று தவணைகளில் அளிக்கப்படும். 1992 ஆம் ஆண்டு பிப்ரவரி முடிய இத்திட்டத்தின் மூலம் ரூ. 6.43 கோடி செலவு செய்யப்பட்டு 8,964 குடும்பங்கள் பயனடைந்துள்ளன.

## 3.9. நேரு வேலை வாய்ப்புத் திட்டம் :

3.9.1. இத்திட்டத்தின்கீழ் குடிசைவாழ் மக்கள் தங்களின் வீடுகளை திருத்தி மேம்படுத்துவதற்காக ஒவ்வொரு குடும்பத்திற்கும் ரூ. 4,150 கடனுதவி அளிக்கப்படுகிறது. இதில் மத்திய அரசின் மானியமாக ரூபாய் 800 மற்றும் மாநில அரசின் மானியமாக ரூபாய் 200 அடங்கும். மீதமுள்ள ரூபாய் 3,150 ஹட்கோ நிறுவனத்திடமிருந்து

கடனாகப் பெறப்படுகிறது. குடிசைவாழ் மக்கள் இக் கடனை பத்தாண்டுகளில் சுலப மாததாந்திர தவணைமுறை யில் திருப்பிச் செலுத்த வேண்டும். இத்திட்டத்தின்கீழ் பிப்ரவரி 1992 முடிய ரூபாய் 2.75 கோடி செலவிடப் பட்டு 10,478 குடும்பங்களுக்கு கடனுதவி அளிக்கப்பட் பட்டுள்ளது.

## 1992-93 ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்தப்படும் திட்டங்கள் :

### 3.10. குடிசைமாற்றுத் திட்டம் :

3.10.1. இத்திட்டத்திற்காக நடப்பு நிதியாண்டில் ரூ. 25 கோடி செலவிடப்பட்டு சுமார் 5,000 அடுக்குமாடி வீடுகள் கட்டப்படவிருக்கின்றன. இதில் அரசின் மான்யம் ரூ. 3 கோடி ஆகும். மீதமுள்ள தொகை ஹட்கோ நிறுவனத்திட மிருந்து கடனாகப் பெறப்படும்.

### 3.11. தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் :

3.11.1. இத்திட்டத்தின் மூலம் ரூ. 4.5 கோடி செல விடப்பட்டு சுமார் 15,000 குடும்பங்கள் பயனடையவிருக் கின்றன. இதற்கான அரசின் நிதி ஒதுக்கீடு ரூ. 4.5 கோடியாகும்.

### 3.12. விரைவுபடுத்தப்பட்ட குடிசை அபிவிருத்தித் திட்டம் :

3.12.1. இத்திட்டத்தின் மூலம் 13,000 குடும்பங்கள் பயனடைய ரூபாய் 1.95 கோடி செலவிடப்படும். இத் திட்டத்திற்கான முழுத் தொகையும் அரசால் வழங்கப் படும்.

### 3.13. வீடற்றோருக்கு வீடு வழங்கும் திட்டம் :

3.13.1. இத்திட்டத்திற்காக ரூ. 1.15 கோடி செலவு செய்து 523 குடும்பங்கள் பயனடையும். இத்திட்டத்தின் முழுத் தொகையும் ஹட்கோ நிறுவனத்திடமிருந்து கடனாகப் பெறப்படும்.





### 3.14. நடைபாதை வாசிகளுக்கான மாற்றுவீடுகள் கட்டும் திட்டம் :

3.14.1. இத்திட்டத்தின்கீழ் ரூ. 1.50 கோடி செலவு செய்து நடைபாதையில் வசிக்கும் 2,954 குடும்பங்கள் பயன்பெறவிருக்கின்றன. இதில் அரசின் முதலீடு ரூ. 77 இலட்சமாகும்.

### 3.15. கடன் வழங்கும் திட்டம் :

3.15.1. ஹட்கோ நிறுவனத்திடமிருந்து கடனுதவி பெற்று ரூ. 3.20 கோடி செலவில் 4,000 குடும்பங்கள் பயன்பெற இருக்கின்றன.

### 3.16. வருவாய் ஈட்டும் திட்டம்:

3.16.1. இத்திட்டம் வாரியத்திற்கு வருவாய் ஈட்டும் பொருட்டு திட்டமிடப்பட்டுள்ளது. தியாகராயநகர், காமராஜர் காலனி பகுதியில் வருவாய் ஈட்டு திட்டத்திற்கான கட்டுமானப் பணிகள் 1991-92ஆம் ஆண்டு துவக்கப்பட்டது. சென்னை கலங்கரை விளக்கத்திற்கு அருகில் திட்டமிட்டுள்ள கடைகள் கட்டும் திட்டத்திற்கு திட்ட ஒப்புதல்பெற நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது. இப்பணிகளுக்கு 1992-93 ஆம் ஆண்டில் ரூபாய் 2.8 கோடி செலவிடப்படும். வருவாய் ஈட்டும் திட்டங்கள் பெருமள வில் சென்னை மற்றும் இதர நகரங்களில் உள்ள முக்கியமான இடங்களில் நிறைவேற்ற திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத் தின் மூலம் பெறப்படும் வருமானம் குடிசைப்பகுதி மாற்று திட்ட மூலம் கட்டப்படும் குடியிருப்புகளை பராமரிக்க பயன் படுத்தப்படும். இத்திட்டம் ஹட்கோவிடம் பெறப்படும் கடன் மூலம் நிறைவேற்றப்படும்.

### 3.17. சுயநிதித் திட்டம் :

3.17.1. சென்னை நகரில், ஒரு குறிப்பிட்ட துயருறும் 55,000 குடும்பங்கள் நதிக்கரை பொதுத் திட்டங்களுக்குத் தேவையான இடங்கள் மற்றும் நடைபாதைகளில் வாழ்கின்றனர். இக் குடும்பங் களை மாற்றிடங்களில் குடியமர்த்த சுயநிதி வீட்டுவசதி திட்டம் என்ற புதிய திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் மேம்படுத்தப்பட்ட மனைகள் மற்றும் அடிப்படை வசதி கள் அமைத்துத் தரப்படும். வணிக மற்றும் தொழில் துறைக்கு தேவைப்படும் மனைகளும் இத் திட்டத்தினை சுயநிதியாக்கும் பொருட்டு உருவாக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இத் திட்டப் பணிகள் நிறைவேற்ற ஹட்கோ மற்றும் தேசிய வீட்டு வசதி வங்கியிடம் கடன்பெற உத்தேசிக்கப்பட்டுள்ளது. இத் திட்டத்தில்

உருவாக்கப்படும் மனைகளில் 70 சதவிகிதம் குடிசை வாழ் குடும்பங்களுக்கும், மீதமுள்ள 30 சதவிகிதம் மத்திய வருவாய் மற்றும் உயர் வருவாய்ப் பிரிவினருக்கும் ஒதுக்கப்படும். குறைந்த மற்றும் மிகக் குறைந்த வருவாய்ப் பிரிவினருக்கான மாதாந்திரத் தவணை இப்பிரிவினரின் செலுத்தும் தகுதிக்கேற்ப நிர்ணயிக்கப்படும். மீதமுள்ள தொகையினை ஈடுசெய்யும் பொருட்டு மத்திய/உயர் வருவாய்ப் பிரிவினர் மற்றும் வணிக தொழில்துறை பிரிவினருக்கான மனைகள் உயர் விலையில் நிர்ணயிக்கப்பட்டு இத்திட்டத்தின் நிதிநிலையினை சுயநிதியாக்கப்படும். பள்ளிக்கரணை, ஒக்கியம்—துரைப்பாக்கம், சோழிங்கநல்லூர், பெரும்பாக்கம் ஆகிய பகுதிகளில் உள்ள அரசு நிலங்கள் இத் திட்டத்தினை நிறைவேற்ற கண்டறியப்பட்டுள்ளது. இப்பகுதியில் உள்ள வெள்ள நீரை வெளியேற்ற பெரிய வெள்ளநீர் வடிகால் ஒன்று அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது. இவ்வெள்ளநீர் வடிகால் திட்டம் முடிவு செய்யப்பட்டவுடன் 55,000 குடும்பங்களை 5 ஆண்டுகளுக்குள் குடியமர்த்த நில மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்படும். 1992-93ஆம் ஆண்டில் எழில் நகர், கொரட்டூர் பகுதிகளில் இத்திட்டங்களை நிறைவேற்ற ரூபாய் 0.05 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டம் ''ஹட்கோ'' நிறுவனத்திடம் '' கடன் பெற்று நிறைவேற்றப்படும்.

## 3.18. சென்னை துரித ரயில் போக்குவரத்துத் திட்டம் செயல்படுத்தப்படும் இடங்களிலுள்ள குடிசைகளை அகற்றி மாற்றுக் குடியிருப்பு செய்யும் திட்டம் :

3.18.1. சென்னை துரித ரயில் போக்குவரத்துத் திட்டத்திற்குத் தேவையான நிலங்களை அளிக்கும் திட்டத்தின் ஒரு பகுதியாக, தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம் இராதாகிருஷ்ணன் சாலை வரையில் உள்ள அனைத்து குடிசைவாழ் மக்களையும் மாற்று இடங்களில் குடியமர்த்தியுள்ளது. இத் திட்டத்தின் 2-வது பகுதியான சென்னை இராதாகிருஷ்ணன் சாலை முதல் லஸ் வரையில் உள்ள குடிசைவாழ் மக்கள் ஏற்கெனவே வேறு இடங்களில் குடியமர்த்தப்பட்டுள்ளனர். லஸ் வரையிலான மீதமுள்ள பகுதியில் உள்ள குடிசைவாழ் மக்கள் விரைவில் மாற்று இடங்களில் குடியமர்த்தப்படுவர்.

## 3.19. சமூக முன்னேற்றப் பணியினர் பிரிவு :

3.19.1. அரசு சார்பற்ற பிற அமைப்புகளுடன் கூட்டுசேர்ந்து தமிழ்நாடு குடிசைமாற்று வாரியம் குறிப்பிட்ட குடிசை பகுதிகளில் மருத்துவ வசதி, வயது வந்தோருக்கு கல்வி அளித்தல், மகப்பேறு, குழந்தைகள் நல பராமரிப்பு போன்ற சமுதாயப் பணிகளை அங்கு வாழும் ஏழை மக்களின் நலன் கருதி செயல்படுத்தி வருகிறது. இந்தப் பகுதியில் வாழும் வேலையற்ற இளைஞர்கள் வருமானம் பெற வழிவகை செய்யும் பொருட்டு அவர்களுக்கு சிறு தொழிற்பயிற்சி அளிக்கப்படுகிறது.



## 4. வீட்டுவசதி கூட்டுறவுச் சங்கங்கள் :

4.1. கிராமப்புற மற்றும் நகர்ப்புற மக்களின் வீட்டுவசதித் தேவையினை நிறைவேற்ற நிதியுதவி அளித்துவரும் நிறுவனங்களில் வீட்டுவசதி கூட்டுறவு சங்கங்களும் ஒன்றாகும். நகர்ப்புற மற்றும் கிராமப்புற வீட்டுவசதி திட்டங்களை கூட்டுறவின் மூலமாக நிறைவேற்றுவதற்கு தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி இணையம் தலைமை நிறுவனமாக பணியாற்றி வருகிறது.

## 4.2. கிராமப்புற வீட்டுவசதித் திட்டம் :

4.2.1. கிராமப்புறத்தில் வசித்துவரும் பொருளாதாரத்தில் நலிவடைந்த பிரிவினர்கள் கிராமப்புற வீட்டுவசதித் திட்டத்தின் மூலம் வீடு கட்டிக்கொள்வதற்கான நிதி உதவியானது 1978-79 ஆம் ஆண்டிலிருந்து அளிக்கப்பட்டு வருகிறது.

4.2.2. சென்னை மாவட்டத்தைத் தவிர்த்து மற்ற மாவட்டங்களில் ஒரு வட்டத்திற்கு ஒரு வட்டக் கூட்டுறவு வீட்டுவசதி சங்கம் என்ற அடிப்படையில் 165 வட்டக் கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்கள், கிராமப்புற வீட்டுவசதித் திட்டத்தை செயல்படுத்தி வருகின்றன. இந்த வட்ட கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கங்கள் அனைத்தும் தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி இணையத்துடன் இணைக்கப்பட்டு, அதனிடமிருந்து நிதி வசதி பெற்று சட்ட உறுப்பினர்கள் வீடு கட்டுவதற்கான கடன் உதவி செய்து வருகின்றன. இதற்காக தேவைப்படும் நிதி வசதியினை அரசிடமிருந்தும் மற்றும் அரசின் பொறுப்புறுதியின் பேரில் நிதி வசதியினை ஹட்கோ நிறுவனத்திடமிருந்தும் தமிழ்நாடு கூட்டுசதி வீட்டுவசதி இணையம் பெற்று வருகிறது.

4.2.3. கிராமப்புற வீட்டுவசதித் திட்டத்தின்கீழ் பொருளாதாரத்தில் நலிவுற்ற ஆதி திராவிடர் மற்றும் ஆதிதிராவிடர் அல்லாதோருக்கு வீடுகட்ட கடனுதவி அளிக்கப்படுகிறது.

4.2.4. திட்ட ஆரம்ப காலத்திலிருந்து, அதாவது, 1978-79 முதல் பிப்ரவரி 1992 வரை 3.49 இலட்சம் வீடுகள் கிராமப்புற வீட்டுவசதித் திட்டத்தின் மூலம் கட்டப்பட்டுள்ளன.

## 4.3. கிராமப்புறங்களில் குறைந்த வருவாய் மற்றும் நடுத்தர வருவாய்ப் பிரிவினருக்கான வீடுகள் கட்டும் திட்டம் :

4.3.1. குறைந்த மற்றும் நடுத்தர வருவாய் பிரிவினரின் தேவையினை கருத்தில் கொண்டு 1989—90 ஆம் ஆண்டிலிருந்து இத்தகைய பிரிவினர்களுக்கும் வீடுகட்ட கடன் வழங்கப்படுகிறது, அவ்வாறு வழங்கப்படும் கடன் அளவு குறைந்த வருவாய்

பிரிவினர்களுக்கு ரூ. 22,000-மும் நடுத்தர வருவாய்ப் பிரிவின ருக்கு ரூ. 60,000 ஆகும். இதற்கான நிதி உதவி ஹட்கோவிடமிருந்து பெறப்படுகிறது. இத்திட்ட ஆரம்ப காலத்திலிருந்து அதாவது 1989–90 முதல் 1991–92 வரை 9,760 வீடுகள், ரூ. 36.34 கோடி நிதியுதவியில் கட்டி முடிக்கப் பட்டுள்ளன.

4.4. நகர்ப்புற வீட்டுவசதித் திட்டம் :

4.4.1. தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி இணையம் ஆயுள் காப்பீட்டுக் கழகத்திடமிருந்து கடனுதவி பெற்று நகர்ப்புற கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்களின் உறுப்பினர்களுக்கு வீடுகள் கட்ட கடன் வழங்குகிறது. ஆயுள் காப்பீட்டுக் கழகத்திடம் இருந்து பெருமளவில் கடன்பெறும் மாநிலங்களில் தமிழ்நாடு முக்கிய பங்கு வகிக்கிறது. தமிழ்நாட்டிற்கு ஆண்டுதோறும் ரூ. 15 கோடிக்கு குறையாமல் கடன் கிடைக்கிறது. தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி இணையம் ஆண்டு ஒன்றுக்கு ரூ. 65 கோடி வரை தனது சொந்த நிதியினைக் கொண்டும், நிதி நிறுவனங்க ளிடமிருந்து பெறப்படும் நிதியில் இருந்தும் கடன் உதவி அளிக் கிறது. இவ்வாறு வழங்கப்படும் கடனுதவியானது உறுப்பினர் கடனை திருப்பிச் செலுத்தும் திறனைப் பொறுத்தும், கட்டப்பட விருக்கும் வீட்டின் மதிப்பினைப் பொறுத்தும், ரூ. 10,000-லிருந்து ரூ. 1,50,000 வரை அளிக்கப்படுகிறது. தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி இணையம் அதன் துவக்க காலத்தில் இருந்து அதாவது 1959 ஆம் ஆண்டிலிருந்து 1992ஆம் ஆண்டு (29-2-1992) வரை நகர்ப்புறங்களில் 1,11,063 வீடுகள் கட்ட ரூ. 447.80 கோடி கடனுதவி அளித்துள்ளது.

4.5. நகர்ப்புறங்களில் உறைவிட மேம்பாட்டுத் திட்டம் :

4.5.1. ஒரு இலட்சத்திலிருந்து 20 லட்சம் வரை மக்கள் தொகை உள்ள நகரம் மற்றும் பெருநகரப் பகுதிகளின் வீட்டு வசதி மற்றும் உறைவிட மேம்பாட்டுத் திட்டம் நேரு ரோஜ்கர் யோஜனா என்ற திட்டம் வாயிலாக 1990—91 ஆம் ஆண்டில் அமல்படுத்தப்பட்டது. இத் திட்டத்தின் கீழ் பொருளாதாரத் தில் நலிவுற்ற பிரிவினருக்கு ஒரு வீட்டிற்கு ரூ. 4,150 வீதம் கீழ்க் கண்ட விவரப்படி கடனுதவி அளிக்கப்படுகின்றது :—

| | | ரூ. |
|---|---|---|
| (1) ஹட்கோவிடமிருந்து பெற்று வழங்கப் படும் கடன். | | 3,150 |
| (2) மானியம்— | | |
| (அ) மத்திய அரசின் மானியம் | .... | 800 |
| (ஆ) மாநில அரசின் மானியம் | .. | 200 |
| மொத்தம் | .. | 4,150 |



4.5.2. இதன்படி பழைய வீட்டினை பழுதுபார்த்தல் முதற் கொண்டு வீட்டின் கூரை அமைப்பை ஓடுவேய்ந்து மாற்றி அமைத் தல் முதலியவைகளுக்கு இக்கடன் அளிக்கப்படுகிறது. இதில் 5,000 வீடுகளுக்கான கடன் உதவி வீட்டுவசதி கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் அளிக்கப்படும்.

4.6. கிராமப்புறங்களுக்கான மாநில வீட்டுவசதி மேம்பாட்டுத் திட்டம் (சுப்ரா) :

4.6.1. கிராமப்புறங்களுக்கான மாநில வீட்டுவசதி மேம்பாட் டுத் திட்டம் 1991–92 ஆம் ஆண்டிலிருந்து வட்ட கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்கள் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் கிராமப்புறங்களிலுள்ள பொருளாதாரத்தில் நலிவடைந்த பிரிவினர்களுக்கு அவர்களுடைய வீடுகளை மேம் படுத்துவதற்காக ரூ. 3,000 வழங்கப்படுகிறது. இதன்படி ஓலை வேயப்பட்ட கூரைக்கு பதிலாக ஓடு வேய்தல், சுவர்களை உறுதிப் படுத்துதல், சுகாதார வசதி மற்றும் தண்ணீர் வசதி ஏற்படுத்தி கொடுத்தல் போன்றவைகளுக்காக கடன் உதவி வழங்கப்படும். ஒரு வீட்டிற்கு வழங்கப்படும் நிதியுதவி வருமாறு :

| | | ரூ. |
|---|---|---|
| (1) ஹட்கோ நிறுவனத்திடமிருந்து பெற்று வழங்கப்படும் கடன். | | 2,000 |
| (2) மாநில அரசின் மானியம் | .. .. | 500 |
| (3) பயனீட்டாளரின் பங்கு | .. .. | 500 |
| மொத்தம் | .. | 3,000 |

4.6.2. 1991—92 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் 10,000 வீடுகள் வட்ட கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்களின் மூலமாக பயனடையும்.

4.7. 1992–93 ஆம் ஆண்டுக்கான திட்டங்கள் :

கிராமப்புற வீட்டு வசதித் திட்டம் :

பொருளாதாரத்தில் நலிவுற்ற பிரிவினர் :

4.7.1. 1992–93 ஆம் ஆண்டில் பொருளாதாரத்தில் நலி வுற்ற பிரிவினர்க்கு ரூ. 30.07 கோடி செலவில் 30,000 வீடுகள் கட்ட கீழ்க்கண்டவாறு கடனுதவி வழங்க திட்டமிடப்பட்டுள்ளது. இதற்கு ரூ. 4.50 கோடி வரவு-செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கப் பட்டுள்ளது.

[1992 மார்ச் 2

| (1) | | சமவெளிப் பகுதி. (2) | மலைப் பகுதி. (3) |
|---|---|---|---|
| | | ரூ. | ரூ. |
| (1) ஹட்கோ கடன் | .. .. | 7,000 | 9,000 |
| (2) மாநில அரசு மானியம் | .. | 1,500 | 1,500 |
| (3) பயனீட்டாளரது பங்கு | .. .. | 1,500 | 1,500 |
| மொத்தம் | .. | 10,000 | 12,000 |

குறைந்த மற்றும் நடுத்தர வருவாய்ப் பிரிவினர் :

4.7.2. குறைந்த வருவாய்ப் பிரிவினருக்கு அதிக ஊக்கமளிக்க வேண்டுமென்ற அரசின் நோக்கத்தின் அடிப்படையில் 1992—93 ஆம் ஆண்டில் ரூ. 31.97 கோடி கடனுதவி அளிக்கப்பட இருக் கிறது. இதன் மூலம் குறைந்த வருவாய்ப் பிரிவில் 6,352 வீடு களும், நடுத்தர வருவாய்ப் பிரிவில் 2,272 வீடுகளும் ஆகமொத்தம் 8,624 வீடுகள் கட்ட நிதியுதவி வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

நகர்ப்புற வீட்டுவசதித் திட்டம் :

4.7.3. 1992-93 ஆம் ஆண்டில், நகர்ப்புறங்களிலுள்ள குறைந்த வருவாய்ப் பிரிவினர், நடுத்தர வருவாய்ப் பிரிவினர் மற்றும் உயர் வருவாய்ப் பிரிவினர்களுக்கு 10,000 வீடுகள் கட்டு வதற்கு ரூ. 65 கோடி கடனுதவி வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

கிராமப்புறங்களில் மாநில வீட்டுவசதி மேம்பாட்டுத் திட்டம் (சுப்ரா) :

4.7.4. 1992—93 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் கிராமப் புறங்களில் 30,000 வீடுகள் ரூ. 9 கோடி செலவில் மேம்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. ஒரு வீட்டிற்கு வழங்கப்படும் நிதியுதவி பின்வருமாறு :

| | | ரூபாய். |
|---|---|---|
| " ஹட்கோ " நிறுவனத்திடமிருந்து பெற்று வழங்கப்படும் கடன் | .. .. .. | 2,000 |
| மாநில அரசின் மானியம் | .. .. | 500 |
| பயனீட்டாளரது பங்கு | .. .. .. | 500 |
| மொத்தம் | .. | 3,000 |



1992 மார்ச் 27]

5.1 " நேரு ரோஜ்கார் யோஜனா " திட்டத்தின்கீழ் உறைவிடம் நிலை உயர்த்துதல் மூலம் வேலை வாய்ப்பினை உருவாக்குதல்

5.1.1. பொருளாதாரத்தில் நலிவுற்ற பிரிவினருக்கு " வீட்டு வசதி மற்றும் உறைவிடம் நிலை உயர்த்துதல் திட்டத்தின் மூலம் நகர்ப்புற வேலை வாய்ப்பு " என்ற புதிய திட்டத்தினை மத்திய அரசு மேற்கொண்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ், 20 லட்சம் வரை மக்கள் தொகை கொண்ட நகரங்களில் வாழும் பொருளா தாரத்தில் நலிவுற்ற பிரிவைச் சார்ந்த ஒவ்வொரு குடும்பத்திற்கும் ரூ. 4,150 வீதம் உறைவிட நிலையை உயர்த்த நிதிஉதவி அளிக்கப் படுகிறது. இந்நிதி உதவி கடன் மற்றும் மானிய வடிவில், ரூ. 3,150 ஹட்கோவிலிருந்து கடனாகவும், ரூ. 800 மற்றும் ரூ. 200 முறையே மத்திய அரசு மற்றும் மாநில அரசால் மானிய மாகவும் வழங்கப்படுகிறது. சமுதாயத்தில், பொருளாதாரத் தில் நலிவுற்ற பிரிவினரின் ஒவ்வொரு குடும்பமும் பயன்பெறும் வகையில் இத்திட்டம் செயலாக்கப்படுகிறது. 1991—92 ஆம் ஆண்டில் 58,000 குடும்பங்கள் இத்திட்டத்தின்கீழ் கொண்டு வரப்பட்டுள்ளன.

5.2. அரசு அலுவலர்களுக்கு வீடுகட்ட முன்பணம் :

5.2.1. அரசு அலுவலர்களுக்கு வீடுகட்ட முன்பணம் வழங்கும் திட்டத்தின் கீழ் அரசு அலுவலர்களுக்கும், அனைத்திந்திய பணித் தொகுதி உள்ளிட்ட அதிகாரிகளுக்கும், மனை வாங்கி வீடு கட்டுவ தற்கும் அல்லது வீடு கட்டுவதற்கும், அல்லது கட்டிய வீடு-அங்ங் னம் வாங்குவதற்கும் அல்லது கட்டப்பட்டுவரும் வீடு அங்ஙனம் வாங்குவதற்கும், வீடுகளை விரிவுபடுத்த மேம்படுத்தவும், ரூ. 2.50 இலட்சம் உச்சவரம்புக்குட்பட்ட தொகையில் மனை வாங்குவதற் கும், மொத்த உச்ச வரம்புத் தொகையான ரூ. 2.50 இலட்சத்தில் ரூ. 1.00 இலட்சத்திற்குட்பட்டு ஏற்கெனவே கட்டப்பட்ட இட வசதியினை பெருக்கவும், கூடுதலாக்கவும், அரசினால் கடனுதவி அங்கீகரிக்கப்பட்டு வருகிறது.

5.2.2. இத்திட்டத்திற்கு 1992—93 ஆம் ஆண்டு வரவு- செலவுத் திட்டத்தில் ரூ. 2,500 இலட்சம் கீழ்க்காணும்படி நிதி ஒதுக்கீடு செய்ய முடிவு செய்யப்பட்டுள்ளது.

| | (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|
| 1. அனைத்திந்திய பணி அதிகாரிகள் .. | 50.00 |
| 2. பிற அரசு ஊழியர்கள் .. .. | 2,150.00 |
| 3. ஊராட்சி ஒன்றிய பள்ளி ஆசிரியர்கள் .. | 300.00 |
| மொத்தம் .. | 2,500.00 |

5.2.3. வீட்டுவசதி அபிவிருத்தி நிதி நிறுவனம் மூலம் பெற்ற ரூ. 15 கோடி, 1989-90 ஆம் ஆண்டு முதல் அரசு ஊழியர்களுக்கு முன்பணம் வழங்க செலவிடப்பட்டுள்ளது. 1991—92 ஆம் ஆண்டு மேற்கூறிய திட்டத்தின்கீழ் மொத்த தொகையும் செலவிடப்பட்டுள்ளது. சென்னை, மதுரை மற்றும் கோயம்புத்தூர் ஆகிய நகரங்களிலும் மற்றும் அதனைச் சுற்றியுள்ள நகரங்களின் பல பகுதிகளில் உள்ள அரசு ஊழியர்களுக்கு 8 விழுக்காடு வட்டியுடன் கடன் வழங்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 5.75 விழுக்காடு அதிக வட்டியை அரசு உதவித் தொகையாக வழங்கி சரி செய்கிறது.

## 5.3. தமிழ்நாடு அரசு ஊழியர் வீடுகட்டும் முன்பணம் சிறப்பு குடும்ப பயனளிப்பு நிதித் திட்டம் :

5.3.1. தமிழ்நாடு அரசு ஊழியர் வீடுகட்டும் முன்பண சிறப்பு குடும்ப பயனளிப்புத் திட்டம் 1-4-1986 முதல் செயல்பட்டு வருகிறது. வீடுகட்ட முன்பணம் பெற்ற அனைத்து அரசு ஊழியர்களுக்கும் கடன் தொகையினை திரும்பச் செலுத்தும் தொகையில் 1 விழுக்காடு தொகையை மாத சந்தாவாக கடன் பெற்ற மாதத்திற்கு அடுத்த மாதம் முதல் செலுத்த வேண்டும். ஓய்வு பெறுவதற்குமுன் 5 ஆண்டுகளுக்கு மேல் பணிக்காலம் உள்ள அரசு அலுவலர்கள் மட்டுமே இத்திட்டத்தின்கீழ் வரமுடியும். கடன் பெற்றவர் பணிக்காலத்தில் மரணமடைந்தால் அவரது கடன் முழுவதுமாக செலுத்தப்படாமலிருப்பின் இத்திட்டத் தொகையினால் மீத கடன் தொகைக்கு சரிக்கட்டப்படும்.

## 5.4. 1992-93 ஆம் ஆண்டுக்கான திட்டம் :

### நேரு ரோஜ்கார் யோஜனா திட்டம் மூலம் குடியிருப்புகள் மேம்படுத்துதல் :

5.4.1. 1992-93 ஆம் ஆண்டில் 38,918 குடும்பங்கள் இத்திட்டத்தின்கீழ் கொண்டுவரப்படவுள்ளன :



### வீடுகட்ட முன் பணம் :

5.4.2. அரசு ஊழியர்கள் வீடு வாங்க அல்லது வீடு கட்ட கடனுதவி வழங்குவதற்கு அரசு வணிக வங்கிகள் மற்றும் வீட்டு வசதி நிதி நிறுவனங்களுடன் பேச்சு வார்த்தைகள் துவக்கியுள்ளது. இது தொடர்பாக இறுதி முடிவு எடுக்கப்பட்டவுடன் இத்திட்டத்தின் விவரங்கள் அறிவிக்கப்படும்.

## 6.1. வீட்டு வசதிக்கு மொத்த மதிப்பீடு :

6.1.1. 1992-93-ல் பொதுத் துறையின் உதவியால் அபிவிருத்தி செய்யப்படும் வீடுகட்டும திட்டத்திற்கான முதலீட்டினை ரூ. 341.19 கோடிக்கு கீழ்க்கண்டவாறு வழங்கிட உத்தேசிக்கப் பட்டுள்ளது.

| நிறுவனத்தின் பெயர். | மதிப்பீடு. (ரூபாய் கோடியில்). |
|---|---|
| தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் .. .. | 140.00 |
| தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம் .. | 40.15 |
| வீட்டுவசதி கூட்டுறவு சங்கம் .. .. | 136.04 |
| வீட்டுவசதித் துறை .. .. .. | 25.00 |
| மொத்தம் .. | 341.19 |

## இணைப்புகள்—II.

## மானியக் கோரிக்கை எண். 34.

## நகர்ப்புற வளர்ச்சி.

1.1. இந்நாட்டில் நகர்ப்புறப் பகுதிகளைப் பரவலாகக் கொண்ட மாநிலமாகத் தமிழ்நாடு திகழ்கிறது. 1991-ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கின்படி 34 விழுக்காட்டிற்கு மேற்பட்டோர் 469 நகர மையங்களில் வாழ்கின்றனர். நகர் புறமக்கள் தொகையின் விழுக்காட்டில் ஏற்றம் இருந்து கொண்டே வருகிறது. 1961 ஆம் ஆண்டில் 26.7 விழுக்காடு மட்டுமே நகர்ப்புற மக்கள் தொகையாக இருந்தது. 1991-ஆம் ஆண்டு 34 விழுக்காடாகவும் இது உயர்ந்துள்ளது. 17.65 மில்லியன் நகர்ப்புற மக்கள் தொகையில் 16.0 மில்லியன் மக்கள் முதல் நிலை, இரண்டாம் நிலை, மூன்றாம் நிலை நகரங்களிலும், அதனைச் சுற்றியுள்ள புறநகர்ப் பகுதிகளிலும் வாழ்கின்றனர். மீதியுள்ள 1.65 மில்லியன் மக்கள் சிறிய நகரங்களில் பரவியுள்ளனர். சென்னை, கோவை, மதுரை, சேலம் மற்றும் திருச்சி ஆகிய ஐந்து பெரிய நகர்ப்பகுதிகளில் மட்டும் நகர் புறங்களில் வாழும் மக்கட் தொகையில் 40 விழுக்காடு உள்ளனர். இயற்கையாகப் பெருகும் வளர்ச்சியை விட கிராமங்கள் மற்றும் சிறு நகரங்களிலிருந்து இடமாற்றம் செய்வதால் ஏற்படும் வளர்ச்சியே இதற்கு முக்கிய காரணமாகும். எனவே, நகர் வளர்ச்சிக் கொள்கை இது போன்ற இடமாற்றங்களைத் தவிர்க்க முயல்வதை நோக்கமாகக் கொள்ளவேண்டும். அதே சமயத்தில் பெருநகரங்கள் அவற்றிற்கு இயல்பான உள்ளாற்றலை அடையவும், ஏற்கனவே தோற்றுவிக்கப்பட்ட அடிப்படை வசதிகளை முழுமையாகப் பயன்படுத்தும் வகையிலும் நகர் வளர்ச்சிக் கொள்கை உருவாக்கப்படுதல் வேண்டும்.

1.2. அடுத்த நூற்றாண்டு துவக்கத்தில் 2001 ஆம் ஆண்டின் முடிவிற்குள் தமிழ்நாட்டில் சமச்சீரான நகர் வளர்ச்சி அமைவதற்கு ஏதுவாக கீழ்க்காணும் நகரமைப்புகள் உருவாகலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.—

(1) எட்டு மில்லியன் மக்கள் தொகையினைக் கொண்டதாக சென்னை பெருநகர்ப்பகுதி.

(2) 2.5 மில்லியன் மக்கள் தொகை கொண்ட கோவை மற்றும் மதுரை போன்ற இரண்டாம் நிலைப் பெருநகர்ப் பகுதிகள்.

(3) சேலம், திருச்சி, திருநெல்வேலி, ஈரோடு முதலிய நகரங்களின் இயற்கையான வளர்ச்சி ஊக்குவிக்கப்படும்.







(4) ஒரு இலட்சம் மக்கள் தொகை கொண்டதாக உள்ள நகரங்கள் ஊக்குவிக்கப்பட்டு வளர்ச்சியடைய செயல் திட்டம் வகுக்கப்படும்.

(5) சிறிய மற்றும் நடுத்தர நகரங்களின் வளர்ச்சி ஊக்குவிக்கப்படும்.

(6) தொழில் வளர்ச்சியில் பின்தங்கிய மற்றும் மிகக் குறைந்த அளவில் நகர்மயமான வட்டங்களில் உள்ள நாட்டுப்புற மக்களுக்கு வசதிகளைச் செய்திடும் பொருட்டு புதுநகரங்கள் ஆய்ந்தறியப்படும்.

(7) போக்குவரத்து வசதிகள் மேம்படுத்தப்படும்.

(8) உள்ளமைப்பு வசதிகளில் காணப்படும் குறைபாடுகள் ஆய்ந்தறிந்து அவற்றினைக் களைந்திட முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

(9) சீரான வளர்ச்சியின் நோக்கங்களை நிறைவேற்றிட எல்லா துறைகளின் வழியாகவும் கிடைத்திடும் வளங்கள் நெறிப்படுத்தப்படும்.

1.3. ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் மொத்த ஒதுக்கீடான ரூபாய் 82 கோடியில், 70 விழுக்காட்டுத் தொகை சென்னை பெருநகர்ப்பகுதிக்காக செலவிடப்பட்டது. ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இத்தொகை 50 விழுக்காடாக அமைந்தது. சென்னை நகரம், தமிழகத்தின் தலைநகரமாக இருப்பது மட்டுமின்றி, பல்வேறு வணிக மற்றும் வியாபாரத் துறைக்கு வழி வகுப்பதாகவும் அமைகிறதால், இதனில் தேவையான அளவு வீட்டு வசதி, சாலைகள் குடிநீர் வடிகால் போன்ற வசதிகள் அவசியமாவதை கருத்திற் கொள்ளப்பட்டு இத்தொகை முதலீடு செய்யபட்டது. இருப்பினும் முதலீடு செய்யப்பட்ட தொகையின் அளவு குறைந்தபட்ச தேவையான அடிப்படை வசதிகளைக் கருத்திற்கொண்டால் மிகவும் குறைவேயாகும். மைய மற்றும் மாநில அரசுகளின் நிதி உதவியுடன் ஒருங்கிணைந்த சிறிய மற்றும் நடுத்தர நகரங்களின் அபிவிருத்தித் திட்டம் மூலமா இரண்டாந்தர நகரங்களின் தேவைகள் ஓரளவு பூர்த்தி செய்யப்பட்டன. மேலும், மாநில நிதி ஒதுக்கீட்டிலிருந்தே, ஒருங்கிணைந்த நகர்ப்புற அபிவிருத்தித் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டதின் மூலம் மேலும் சிறிய நகரங்கள் பல பயன் அடைந்துள்ளன.

மைய மற்றும் மாநில அரசுகளின் நிதி ஒதுக்கீட்டின் மூலம் செயல்படுகின்ற ஒருங்கிணைந்த் நகர் அபிவிருத்தித் திட்டங் களினால் இதுவரை 50 நகரங்கள் பயன் பெற்றுள்ளன. இதற் காக 30.25 கோடி முதலீடு செய்யப்பட்டுள்ளது. மாநில அரசின் முதலீடான ரூ. 31.70 கோடியில் ஆறு மற்றும் ஏழாவது ஐந்தாண்டுத் திட்டங்களில் 304 சிறிய மற்றும் நடுத்தர நகரங்கள் பயன் பெற்றன.

1.4. அடுத்த நூற்றாண்டின் துவக்கத்தில் 2001 ஆம் ஆண் டிற்குள் போதிய அளவு நகரமயமாக்கும் குறிக்கோளினை அடைய இந்த அரசு செயலாக்க அணுகுமுறை ஒன்றினை நிறைவேற்ற உள்ளது. இவ்வணுகுமுறையின்படி, சென்னைப் பெருநகரம் மட்டுமின்றி, இரண்டாம் நிலை நகரங்கள் மற்றும் நடுத்தர நகரங்கள் ஆகியவற்றின் சீரான வளர்ச்சிக்குத் தேவையான நிதி ஒதுக்கீட்டை அளிக்கவிருக்கிறது. இதனால் அத்தியாவசிய அடிப் படை வசதிகள் இந்நகரங்களில் பெறப்பட்டு முன்னேற்றம் அடைய வாய்ப்பு உண்டு. இக்கொள்கையை நிறைவேற்றுவதில் அரசு கீழ்க்கண்ட செயலாக்கங்களில் தனது கவனத்தை உன்னிப் பாகச் செலுத்தி செயல்படும்.

(1) குறைந்த பட்ச ஒப்புக்கொள்ளக் கூடிய தரத்தினில் வீட்டுவசதி, சாலை, குடிநீர் வடிகால் மற்றும் சுற்றுப்புற வசதி களுக்காக சென்னைப் பெருநகர்ப் பகுதியில் முதலீடு செய்வதை உறுதி செய்தல்.

(2) இரண்டாம் நிலை நகரங்களில் குடிநீர், போக்கு வரத்து மற்றும் செய்தித் தொடர்பு தகவல் வசதிகளுக்காக போதிய அளவு நிலங்களை ஊக்குவித்தல்.

(3) பெரிய நகர மையங்களையும், புதிய நகரங்களையும் நிலை நிறுத்தி ஊக்குவித்தல்.

(4) சிறிய மற்றும் நடுத்தர நகரங்களிலும் நிதி வசதி கள் போதிய அளவு கிடைக்க வழி செய்து இந்நகரங்களின் இயல்பான வளர்ச்சிக்கு தடை ஏற்படாமல் கண்காணித்தல்.

1.5. மேலே குறிப்பிட்டுள்ள நகரமயமாக்கும் கொள்கை யினை ஒருங்கிணைந்து செயலாக்க ஒவ்வொரு நகரமும் போது மான நிதி வசதி பெற அனைத்து நடவடிக்கையும் மேற்கொள் ளப்படும். இந்நடவடிக்கைகள் ஆவன.—

(1) உலக வங்கி உதவியுடன் தமிழ்நாடு நகர அபிவிருத்தி திட்டங்களை ரூபாய் 632 கோடி ஒதுக்கீட்டில் தீவிரமாக நடைமுறைப்படுத்தப்பட்டு இலக்கினை அடைய முயற்சிக்கப் படும். இந்தத் திட்டத்தினால் சென்னை, கோவை, மதுரை, சேலம், திருச்சி, ஈரோடு திருப்பூர், வேலூர், திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி ஆகிய 10 பெரிய நகரங்கள் பயன்பெறும்.



(2) உலக வங்கித் திட்டத்தின்கீழ் ரூ. 167 கோடி முத லீட்டுடன் உருவாக்கப்பட்டுள்ள நகராட்சி நகர அபிவிருத்தி நிதி ஐம்பதினாயிரம் மற்றும் அதற்கு மேல் மக்கட் தொகை கொண்ட நகரங்களிலும், மாவட்ட தலைநகரங்களிலும் தேவைப்படும் அடிப்படை வசதிகளை துரிதமாக மேற்கொள்ள நிதியைப் பயன் படுத்தப்படும்.

(3) மைய மற்றும் மாநில அரசின் நிதி உதவியுடன் சிறு மற்றும் நடுத்தர நகரங்களின் வளர்ச்சிக்காக, ஒவ்வொரு நகரத் திற்கும் அனுமதிக்கக்கூடிய 1.2 கோடியினை அளித்து சிறு மற் றும் நடுத்தர நகரங்களை படிப்படியாக முன்னேற்றமடைய ஊக்குவிக்கப்படும். உலக வங்கித் திட்டத்தின்கீழ் செயல்படும் நகராட்சிகளின் நகர அபிவிருத்தித் நிதி ஒதுக்கீட்டினை பெற இயலாத நகரங்கள் இத்திட்டத்தின் கீழ் பயன் பெற முன் னுரிமை அளிக்கப்படும்.

(4) மாநில ஒருங்கிணைந்த நகர் அபிவிருத்தித் திட்டத் தின் கீழ் ஒதுக்கப்பட்ட நிதி மூலம் பேரூராட்சிகள், இரண்டாம் நிலை மற்றும் மூன்றாம் நிலை நகராட்சிகளில் தேவைப்படும் அடிப்படை வசதிகள் அமையும் வகையில் திட்டங்கள் வகுக்கப் பட்டு செயலாக்கப்படும்.

(5) மாநிலத்தில் நகர் வளர்ச்சிக் கொள்கையின் அடிப் படையில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒவ்வொரு நகர வளர்ச்சிக்கும் தேவையான நிதி ஒதுக்கீடு செய்யப்படுவதுடன், இந்நகரங்கள் சுற்றுப்புறம் உள்ள கிராமங்களின் தேவைகளை பூர்த்தி செய்ய வளர்ச்சி மையங்களாகவும் உருவாக அனைத்து நடவடிக்கை களும் மேற்கொள்ளப்படும்.

(6) நகர்ப்பகுதிகளில் வரையறுக்கப்பட்ட வழியில் மேம் பாடுகளை முறைப்படுத்தி வழி நடத்த முழுமைத் திட்டம், பிரிவு வளர்ச்சித் திட்டம் மற்றும் புதுநகர் வளர்ச்சித் திட்டம் ஆகியவற்றை உருவாக்க அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள் ளப்படும். இக்குறிக்கோளை அடையும் வகையில் மாநிலத்தில் சென்னை பெருநகர் உட்பட அனைத்து நகராட்சிகளுக்கும் முழுமைத் திட்டத்தினை தயாரிக்கும் பணியில் பெருமளவு முன் னேற்றம் கண்டு வருவது குறிப்பிடத்தக்கதாகும்.

(7) நகரத் திட்டங்களுக்கு வரைபடம் தயாரிக்கும் பணியே முக்கிய அம்சமாக கருதப்பட்டு, நவீன நுட்ப செய்முறைகளான வான்வழிப் படங்கள், தொலை நோக்கு வரை படங்கள் ஆகி யவை தயாரிப்பதில் முக்கிய கவனம் செலுத்தப்படும்.

(8) கணிப் பொறிகள் நிறுவி மண்டல மற்றும் நகரங் களுக்கான பெரிய தகவல் மையமாக செயல்பட அமைக்கப்படும். இதனால் திட்டங்கள் உருவாக்குவது மட்டுமின்றி அனைத்துத் துறைப் பிரிவுகளுக்கும், நிறுவனங்களுக்கும் உரிய புள்ளி விவரங் களை எளிதில் கிடைக்கவும் வழி செய்யப்படும்.

1.6. சென்னை பெருநகரைப் பொருத்தவரையில் சென்னை பெரு நகர அபிவிருத்திக் குழுமம், தமிழகத்தில் இதர பகுதிகளுக்கு தமிழ்நாடு நகர் ஊரமைப்பு இயக்கமும் நகர் வளர்ச்சிக் கொள் கையினை நெறியான வகையில் திட்டம் வகுக்கவும், நடை முறைப் படுத்தவும் நிர்வகிக்கவும் பொறுப்பினை ஏற்று செயல் படுகின்றன.

## நகர் ஊரமைப்பு இயக்ககம்.

### 2.1. பெருமளவு கொள்கை குறிக்கோள்கள் :

2.1.1. 1971-ஆம் ஆண்டு நகர் ஊரமைப்புச் சட்டத்தை நிர்வ கிப்பது மற்றும் இச்சட்டத்தில் உள்ளடங்கிய பல்வேறு விதத் திட் டங்களை உருவாக்குவது மற்றும் செயல்படுத்துவதில் உள்ளூர் திட்டக் குழுமங்களுக்கு உதவுவது ஆகியவை நகர் ஊரமைப்பு இயக்ககத்தின் பெரும் குறிக்கோளாகும். இவை ஒழுங்குபடுத்தப் பட்ட மற்றும் திட்டமிடப்பட்ட நகர்ப்புற மையங்களில் வளர்ச் சியையும், இப்பகுதியில் மக்கள் வாழும் பகுதி சுத்தமாகவும் பணியாற்ற ஏதுவாகவும் மற்றும் வாழ்வதற்கு ஏற்ற சுற்றுப் புறத்தைக் கொண்டதாக அமைவதையும் உறுதி செய்யும். தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம், தமிழ்நாடு பஞ்சா சாயத்து சட்டம் மற்றும் பொது சுகாதார சட்டம் ஆகியவற்றில் உள்ள தனியார் நிலப் பகுதிகளில் ஏற்படும் குடியிருப்பு, தொழில் பகுதி வளர்ச்சிகளை முறைப்படுத்தவும், அவற்றினை அறிவிக்கை செய்வித்தும், கட்டட விதிகளின் கீழ் கட்டடங்களை முறைப்படுத்துவதும் ஆன பணிகளும் இந்த இயக்ககத்திட்டம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. மாநில நகர் ஊரமைப்பு நிதியின் மூலமாக மைய மாநில நிதி உதவியுடன் நகர் அபிவிருத்தி திட்டங்களை செயல்முறைப் படுத்தும் நிதி முகமை மற்றும் இயக்கும் பணியினையும் இயக்ககம் செய்து வருகிறது.

2.1.2. 1971 ஆம் ஆண்டு நகர் ஊரமைப்புச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பெரும் கொள்கை குறிக்கோள்களில் வெற்றியை (1) மண்டல திட்டங்கள், (2) முழுமைத் திட்டங்கள், (3) புதுநகர் வளர்ச்சித் திட்டங்கள் மற்றும் (4) விரிவு அபிவிருத் தித் திட்டங்கள் மூலமாக அடைய உத்தேசிக்கப்பட்டுள்ளது. மண்டல திட்டப் பகுதிகளுக்கென அறிவிக்கை செய்யப்பட்ட மண்டலத்திட்டங்கள் வளர்ச்சி மையங்களையும் பெரிய செய்தித் தொடர்பு வழிகளையும் அப்பகுதியில் அடங்கிய தொழில், விவசாயம் மற்றும் ஏனைய வளர்ச்சித் துறைகளை கண்டறியும். உள்ளூர் திட்டப்பகுதிகளுக்கான முழுமைத் திட்டங்கள் மற்ற பல வழிமுறைகளுடன் அப்பகுதியிலுள்ள நிலத்தை எவ்வாறு பயன்படுத்துவது என்பதையும், பல்வேறு தேவைக்கென நிலங்களை ஒதுக்கீடு செய்வது மற்றும் தனிப் படுத்துவது ஆகியவற்றையும் முறையான திட்ட வளர்ச்சி அடையத் தேவையான பெரும் செய்தித் தொடர்பு வழிகளை



யும் மற்றும் விரிவு அபிவிருத்தித் திட்டங்களுக்கான பகுதிகளையும் கண்டறிவது ஆகியவற்றையும் அளிக்கும். புதுநகர் வளர்ச்சித் திட்டங்கள் ஓசூர், சித்தோடு, பல்கலைநகர், குறிச்சி, மாமல்ல புரம், நாவல்பட்டு போன்ற வளர்ந்து வரும் புதிய தொழில் பகுதிகள் மற்றும் சுற்றுலா மைய நகரங்களுக்காக உருவாக்கப் படுகிறது. பிரிவு அபிவிருத்தி திட்டங்கள் நகர்ப்புற மையங் களில் குறிப்பிட்ட ஒரு பகுதிக்கானது. இத்திட்டங்கள் வளர்ந்து வரும் அல்லது மிகச் சமீப காலத்தில் முன்னேற்றம் அடைய வுள்ள பகுதிகளுக்கானது. இவை குடியிருப்புப் பகுதி, சாலை கள், விளையாட்டு மைதானப் பகுதி, பள்ளி மற்றும் இதர நிலப்பயன்பாடு ஆகியவற்றுக்கான விரிவான செயல் திட்டங் களை அளிக்கும்.

### 2.2. முன்னேறி வரும் திட்டங்கள்.

#### 2.2.1. மண்டல அமைப்புத் திட்டம் :

மாநிலம் முழுமைக்கும் மாவட்டங்களுக்கான தேவையான புள்ளி விவரங்கள் தொகுதி வட்டாரத்தை அலகாகக் கொண்டு அனைத்தையும் இயக்ககம் சேகரித்துள்ளது. இப்புள்ளி விவர ஆய்வின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்ட சில தொகுதி களுக்கு வட்டாரத் திட்டம் தயாரிக்கப்படும். இத்திட்டங்களி னால் வளர்ச்சி மற்றும் சேவை மையங்கள் கண்டறியப்படு வதுடன் போக்குவரத்து, மருத்துவம், குடிநீர் வழங்குதல் போன்ற துறைகளில் துண்டித்து நிற்கும் இடங்களை ஆய்ந் தறிந்து ஆக்கப் பூர்வ ஆலோசனைகள் திட்டங்களில் வழங்கப் படும்.

#### 2.2.2. கட்டமைப்பு திட்டம் முழுமைத் திட்டம், புதுநகர் அபி விருத்தி திட்டம் மற்றும் விரிவு அபிவிருத்தித் திட்டம் :

திட்டங்களைத் தயாரிப்பதும், நிறைவேற்றுவதும் உள்ளூர் திட்டக்குழுமம் மற்றும் புதுநகர் அபிவிருத்திக் குழுமம் ஆகிய வற்றின் தலையாய கடமையாகும். சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தினைத் தவிர 101 உள்ளூர் திட்டக் குழுமங்களும் 5 புதுநகர் அபிவிருத்திக் குழுமங்களும் அமைக்கப்பட்டுள்ளன.

2.2.3. நகரின் முறையான வளர்ச்சிக்கு கொள்கை வகுக்கும் கட்டமைப்புத் திட்டங்கள் 35 நகரங்களுக்கு தயாரிக்கப்பட் டுள்ளன. இத்திட்டங்களினால் இந்நகரங்களுக்கான நிதி மற் றும் இயங்குமுறை திட்டங்களை தயாரிக்க உதவுவதுடன் குறிப் பிட்ட திட்டங்களை செயல்படுத்த தெரிந்தெடுக்கவும் உதவும். மாநில நகர் ஊரமைப்பு நிதி மற்றும் தமிழ்நாடு நகர் அபிவிருத்தி திட்டத்தின்கீழ் நகராட்சி நகர் அபிவிருத்தி நிதி ஒதுக்கீட்டில்

பயன் பெற சம்பந்தப்பட்ட உள்ளூர் திட்டக் குழுமங்களுக்கு திட்ட அறிக்கை தயாரிக்க இக் கட்டமைப்பு திட்டங்கள் மூலம் மேலனுப்ப இயலும்.

2.2.4. முழுமைத் திட்டங்கள் எதிர்கால வளர்ச்சிப் பகுதிகளை தனிமைப்படுத்தி, குறிப்பிட்ட நில உபயோகங்களுக்கு ஒதுக்கீடு செய்து, போக்குவரத்து இணையமாக திகழவும், வாகனங்கள் வசதியாக செல்லக்கூடிய வகையில் அமையவும் திட்டங்களை உருவாக்குவதாகும். 100 உள்ளூர் திட்டக் குழுமங்களுக்கான முழுமைத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டு அரசின் இணக்கம் பெறப்பட்டுள்ளது. மேலும் வளர்ச்சிக்கு சில தேவையான பகுதிகளை புதுநகர் பகுதிகளாக அறிவிக்கப்பட்டது. இதனால் இக்குழுமங்கள் தேவையான வாய்ப்பு வளங்களை தானாகப் பெற்று அபிவிருத்திப் பணி மேற்கொள்ள இயலும். 5 புதுநகர் பகுதிக்கான திட்டங்களை இதுவரை தயாரித்து அரசின் இணக்கமும் பெறப்பட்டுள்ளது. உலகப் புகழ் வாய்ந்த புராதன கலை மையமான மாமல்லபுரம் அதன் கலாச்சார புகழ் காப்பாற்றிட ஒரு புதுநகரமாக உருவாக்கப்படுகின்றது.

2.2.5. முழுமைத் திட்டத்தின் அடுத்த கட்டமாக துரிதமான வளர்ச்சிக்கு மிகுந்த வாய்ப்புள்ள நகரங்களின் பகுதிகளுக்கு விரிவு அபிவிருத்தித் திட்டங்கள் தயாரிக்கப்படுகின்றன. இதுகாறும் 1,263 விரிவு அபிவிருத்தித் திட்டங்கள் அறிவிக்கை செய்யப்பட்டு அவற்றில் 740 திட்டங்கள் தயாரித்து ஒப்புதல் அளிக்கப்பட்டன. அடுத்த இரண்டு ஆண்டுகளில் மற்ற அறிவிக்கை செய்யப்பட்ட திட்டங்களையும் தயாரித்து முடிக்கப்பட்டுவிடுமென எதிர்பார்க்கப்படுகிறது.

2.2.6. திட்ட செயல்முறைக்கு நிதி அளித்தல் :

தமிழ்நாடு நகர் ஊரமைப்புச் சட்டம் 1971-ன் கீழ் பிரிவு 64-ன்படி நகர் ஊரமைப்பு இயக்குநரால் ''நகர் ஊரமைப்பு அபிவிருத்தி நிதி'' பராமரிக்கப்பட்டு வருகிறது. மைய மற்றும் மாநில அரசுகளின் உதவியுடன் செயல்படுத்தப்பட்ட சிறிய மற்றும் மத்திய நகரங்களின் ஒருங்கிணைந்த அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் கிடைக்கப் பெற்ற நிதியையும் மற்றும் மாநில அரசின் ஒருங்கிணைந்த அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் அளிக்கப்பட்ட நிதியையும் இணைத்து நகர் ஊரமைப்பு அபிவிருத்தி நிதி ஆரம்பத்தில் தோற்றுவிக்கப்பட்டது. பின்னர் மாநில அரசுக்கு திருப்பி அளிக்கப்பட வேண்டிய ரூ. 33 கோடி கடன் தொகையை மாநில அரசு இந்நிதிக்கு மான்யமாக அளித்துள்ளது இந்நடவடிக்கை இந்நிதியை ஒரு சுழற்சி நிதியாக மாற்றுவதற்கு உதவி புரிவதுடன் நகரங்கள் பலவற்றில் அடிப்படை வசதிகளை மேற்கொள்ள இந்நிதியைப் பயன்படுத்தவும் வகை செய்துள்ளது.



நகர் ஊரமைப்பு வளர்ச்சி நிதியால் பயன்பெறும் திட்டங்கள் சிறிய மற்றும் நடுத்தர நகரங்களுக்கான வளர்ச்சி திட்டங்கள் :

2.2.7. மைய மற்றும் மாநில அரசு உதவியுடன் சிறு மற்றும் நடுத்தர நகரங்களுக்கான ஒருங்கிணைந்த வளர்ச்சித் திட்டங்களை நிறைவேற்றுவதில் இத்துறை பிரதான பங்கு வகிக்கின்றது. இத்திட்டங்களுக்கு தேவையான நிதியுதவியை தேவைப்படும் போது அளிப்பதுடன் இத்திட்டங்களின் முன்னேற்றங்களை கண்காணிக்கும் மையமாக இத்துறை செயல்படுகிறது. அங்கீகரிக்கப்பட்ட அனைத்து திட்டங்களுக்கும் தேவையான நிதியுதவி மாநில மற்றும் மைய நிதியிலிருந்து வழங்கப்படுகிறது. இவை மைய மாநில அரசின் 50-க்கு 50 விழுக்காடுகள் சரி நிகர் கடன் உதவியுடன் செயல்படுகிறது. இதனால் ஒவ்வொரு நகரத்திற்கும் ரூபாய் 120 இலட்சம் அதிகபட்சம் கடனுதவி பெற முடியும். இத்திட்டத்தின் கீழ் ஆறாவது திட்ட காலத்தில் 28 நகரங்களும் ஏழாவது திட்டத்தின் கீழ் 14 நகரங்களும் பயன்பெற்றன. உள்ளாட்சி நிறுவனங்களுக்கு பேருந்து நிலையம், வணிக மையம், மண்டி, மார்க்கெட், இணைப்பு சாலை தொழில் மற்றும் குடியிருப்பு அபிவிருத்தி பகுதிக்கான அடிப்படை வசதிகளுடன் மனை ஒதுக்குதல் குறைந்த செலவில் கழிவு வசதி ஆகிய பல்வேறு தேவைகளை எளிதில் புகுத்துவதே இத்திட்டத்தின் முக்கிய கருவாகும். இத்திட்டங்களுக்காக ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ரூ. 18.00 கோடியும், 7-வது திட்டக் காலத்தில் ரூ. 15.81 கோடியும் முதலீடு செய்யப்பட்டுள்ளது. 1990-91 ஆம் ஆண்டு அங்கீகரிக்கப்பட்ட நகரங்களுக்காக ரூ. 64·00 இலட்சம் விடுவிக்கப்பட்டது. ஆறாவது திட்டக் காலத்தில் அங்கீகரிக்கப்பட்ட 183 திட்டங்கள் முடிக்கப்பட்டு பயனுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளன. 1990-91 ஆம் ஆண்டு 45 திட்டங்கள் மைய அரசால் ஏற்கப்பட்டு தற்போது செயல் படுத்தப்பட்டு வருகின்றன. 1991-92 ஆம் ஆண்டில் 6 நகரங்களுக்கான திட்ட உத்தேசங்கள் மைய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளன. இத்திட்டங்கள் 1992-93 ஆம் ஆண்டு காலத்தில் செயற்படுத்தப்படும்.

மாநில ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் :

2.2.8. சிறு மற்றும் நடுத்தர நகரங்களின் ஒருங்கிணைந்த வளர்ச்சித் திட்டத்திற்கு இணையாக இத்திட்டம் மாநில அரசு நிதி உதவியுடன் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் உள்ளாட்சிக்கு வருவாய் பெருகிட, வருவாய் ஈட்டும் திட்டங்களை செயல்படுத்தும் முகமாக, ஒவ்வொரு நகருக்கும் ரூ. 30 இலட்சம் நிதி உதவி அளிக்கப்பட்டு வருகிறது. மைய அரசு மற்றும் மாநில அரசு நிதி உதவியுடன் செயல்படுத்தப்பட்டு

வரும் ஒருங்கிணைந்த வளர்ச்சித் திட்டத்தின்கீழ் நிதி உதவி பெறாத நகரங்களுக்கு இந்நிதி உதவி அளிக்கப்பட்டு வருகிறது. ஆறாவது திட்டத்தில் 107 நகராட்சி மற்றும் பேரூராட்சிகளில் 172 திட்டங்களுக்கு ரூ.7.44 கோடி கடனுதவி அளிக்கப்பட்டுள்ளது. ஏழாவது திட்டத்தில் கூடுதலாக 149 நகராட்சி மற்றும் பேரூராட்சிகளுக்கு ரூ. 14.59 கோடி கடனுதவி அளிக்கப்பட்டுள்ளது. அடுத்து, 50 நகரங்களில் 58 திட்டங்கள் ரூ. 9.68 கோடி நிதி உதவி பெறும் பொருட்டு தேர்ந்தெடுக்கப்பட்டு, நிதியும் விடுவிக்கப்பட்டுள்ளது. உள்ளூர் திட்டக் குழுமப் பகுதிகளில் விரிவு அபிவிருத்தி திட்டங்கள் மற்றும் முழுமைத் திட்டங்கள் செயல்படுத்திட ரூ. 62.00 லட்சம் முன் பணமாக அளிக்கப்பட்டுள்ளது.

## சிறப்புத் திட்டங்கள் :

### அ. இயற்கைக் கேட்டிற்கெதிராக திட்டமிடுதல் :

2.2.9. இயற்கைச் சீற்றத்தின் விளைவாக ஏற்படும் பிரச்சினைகளிலிருந்து பாதுகாக்க 1970 ஆம் ஆண்டிலேயே இத்துறை கற்பனைத் திறன் மிக்க ஒரு திட்டத்தை உருவாக்கியது. எளிதில் புயலில் தாக்குதலுக்கு உள்ளாகும் பகுதிகளை ஆய்ந்து இத்துறையால் வடிவமைக்கப்பட்டவாறு 107 சிறப்பு புயல் பாதுகாப்பு இல்லங்கள் கட்டப்பட்டுள்ளன. இந்த இல்லங்கள் சாதாரண நாட்களில் சமுதாய நல மையங்களாகவும், அவசர காலங்களில் போதுமான புகலிடமாகவும் திகழ்கிறது. மேலும் அண்ணா பல்கலைக் கழகத்துடன் கலந்தறிந்து இத்துறையால் உருவாக்கப்பட்ட புயல் முன் எச்சரிக்கைச் சின்னம் புயலினால் எளிதில் பாதிக்கக்கூடிய அனைத்து கடலோர கிராமங்களிலும் நிறுவ உருவாக்கப்பட்டுள்ளது. இதனால் முன்னெச்சரிக்கையாக மக்கள் புகலிடங்களுக்கு செல்ல ஏதுவாகும். கடலோர கிராமங்களில் எளிதில் புயலினால் பாதிக்கப்படும் மீனவர் உடைமையைப் பாதுகாக்க ஒரு புதுமையான அணுகுமுறை கையாளப்படுகிறது. இதற்கென வடிவமைக்கப்பட்ட இரும்பு கலந்த கலவையிலான பாதுகாப்பு கிடங்கு மீனவர்கள் குடிசைக்குள் வைக்கப்பட்டு, உடைமைகளை பத்திரப்படுத்த இயலும். இதனால் கோரக் காற்றில் குடிசையே பறந்தாலும் விலை உயர்ந்த பொருள்கள் சேதமடைய வாய்ப்பில்லை. இச்சாதனங்களை ஒவ்வொரு கிராமத்திலும் அமைப்பதற்கு ஏதுவாக கள சோதனைகள் இவ்வாண்டில் மேற்கொள்ளப்படும். ஒவ்வொரு மாவட்டத்திலும் விரிவான இயற்கை கேடு தடுப்புத் திட்டங்களை தற்போது தயாரித்து வருகிறது. தென்னாற்காடு மாவட்டத்திற்கான திட்டம் அரசிற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.



## நகரவான் வழிப் படங்கள் :

2.2.10. வான் வழி நிழற் படங்களை நகரமைப்புப் பணிகளுக்கு பயன்படுத்துவதில் இந்தியாவில் மட்டுமின்றி, நகரமைப்பு நிறுவனங்கள் அனைத்திலுமே இத்துறை முதலிடம் வகிக்கிறது. 30 நகரங்களுக்கு வான் வழி புகைப்படங்கள் எடுக்கும் மிகச் சிறப்பு மிக்க திட்டத்தை ரூ. 1.20 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்த அரசு அனுமதித்துள்ளது. தேசிய தொலை உயர்வு மைய முகமைக்கு (NRSA) இப்பணி அளிக்கப்பட்டுள்ளது. இப்பணியினை நிறைவேற்ற ரூ. 1.13 கோடி செலுத்தப்பட்டுள்ளது. இத்திட்டம் தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின் கீழ் உலக வங்கி நிதிஉதவியுடன் செயல்படுத்தப்படவுள்ளது. இவ்வான் வழி புகைப்படங்கள் மூல தயாரிக்கப்படும் பெரிய அளவு வரைபடங்கள், திட்டம், மற்றும் இதர பணிகளுக்கு உதவியாக இருக்கும். வான்வழி புகைப்படம் தயாரிக்கும் பணி 20 நகரங்களுக்கு முடிவடைந்துள்ளது. இதர நகரங்களில் வான் வழி புகைப்படம் தயாரிக்கும் பணி நடைபெற்றுவருகிறது.

## கடலோர நகரங்கள் மேலாண்மைத் திட்டம் :

2.2.11. தமிழ்நாட்டில் கடலோரப் பகுதிகள் அனைத்துக்குமான கடலோர நகர மேலாண்மை திட்டம் தயாரிக்கும் பணியினை தற்போது இத்துறை பொறுப்பேற்றுள்ளது. இதற்கு தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரிய தலைவரை தலைவராகக் கொண்ட வல்லுநர் குழு ஒன்றினை அரசு அமைத்துள்ளது. இத்திட்ட அறிக்கைப் பணி முடியும் தறுவாயில் உள்ளது.

## நகர்ப்புற தகவல் மையம் :

2.2.12. இத்துறையின் தலைமை அலுவலகத்திலும், மண்டல அலுவலகங்களிலும் கணிப் பொறிகள் நிறுவப்பட்டு, பெரிய தகவல் மையம் அமைக்கப்பட்டுள்ளது. இதனால் முடிவு எடுக்கத் தேவைப்படும் நகர்ப்புற புள்ளி விவரங்கள் இத்துறையின் அனைத்துப் பிரிவுகளுக்கும் எளிதில் கிடைக்கும்.

## போக்குவரத்து ஆய்வு :

2.2.13. பெரு நகரங்களில் போக்குவரத்து புள்ளி விவரங்களை சேகரித்து செயல் திட்டங்களை இத்துறை போக்குவரத்துப் பிரிவு வகுத்துள்ளது. இத்தகு திட்டங்கள் கோவை, மதுரைக்கு முன்னரே தயாரித்து முடிக்கப்பட்டுள்ளது. தற்போது திருச்சிக்கு தயாரிக்கப்பட்டு முடிக்கப்பட்டுள்ளது. ஒரு இலட்சத்திற்கு மேல் மக்கட் தொகை உள்ள நகரங்கள் அனைத்திற்கும் இந்த ஆய்வு தற்போது மேற்கொள்ளப்படுகிறது.

## 2.3. 1992-93 ஆம் ஆண்டுக்கான திட்டங்கள் :

### வளர்ச்சித் திட்டங்கள் தயாரித்தல் :

2.3.1. வட்டாரங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு அவற்றிற்கு தொகுதி வட்டாரத் திட்டங்கள் தயாரிக்கப்படும். நிலை ஆண்டில் தமிழகத்தில் உள்ள அனைத்து மாவட்டங்களுக்கான கட்டமைப்பு திட்டங்கள் தயாரித்து முடிக்கப்படும். மக்கட் தொகை 50,000-க்கு மேலுள்ள நகரங்களுக்கும் நகராட்சி களின் நகரமைப்பு நிதி மற்றும் மாநில நகர் ஊரமைப்பு நிதியிலிருந்து போதிய நிதி ஒதுக்கீடு பெற கட்டமைப்புத் திட்டங்கள் இவ்வாண்டில் தயாரிக்கப்படும். இதன் அடிப் படையில் உள்ளாட்சி நிறுவனங்கள் நிதி மற்றும் இயக்கத் திட்டங்கள் தயாரித்து விரிவான திட்ட அறிக்கை அளித்திட இயலும். ஏற்கனவே 1990-91 ஆம் ஆண்டில் 35 நகரங் களுக்கு தயாரித்த கட்டமைப்புத் திட்டத்திற்கு கூடுதலாக இப்பணி மேற்கொள்ளப்படும்.

2.3-2: 1992-93 ஆம் ஆண்டில் 12 உள்ளூர் திட்டகு மங்களின் முழுமைத் திட்டங்கள் அரசின் இறுதி ஒப்புதல் பெறப்படும். மேலும் 400 பகுதிகளுக்கு விரிவு அபிவிருத்தி திட்டங்கள் துரிதமான வளர்ச்சி ஏற்பட ஊறுபடத்தக்க நகரங்களில் மேற்கொள்ளப்படும். விரிவு அபிவிருத்தித் திட்டம் மற்றும் முழுமைத் திட்டங்களை செயல் முறைப்படுத்த உதவியாக ரூ. 62·50 இலட்சம் இவ்வாண்டில் முதலீடாக அளிக்கப்படும்.

### சிறு மற்றும் நடுத்தர நகரங்களுக்கான ஒருங்கிணைந்த அபிவிருத்தித் திட்டங்கள் :

2.3.3. 1992-93 ஆம் ஆண்டில் மைய மாநில அரசின் சரி நிகர் நிதியில் ரூ. 4 கோடி தொகை பெற்று பணி முன்னேற்ற மடையும் திட்டங்களையும் மேலும் புதிய நகரங்களில் செயல் படுத்தப்படவுள்ள திட்டங்களையும் முடித்திட பயன்படுத்தப் படும். ஏழாவது ஐந்தாண்டுத் திட்ட அனைத்து மீதி திட்டங்களும். இந்த ஆண்டில் முடிக்கப்படும். மேலும் இத் திட்டத்தின் கீழ் புதியதாக ஆறு சிறு மற்றும் மத்திய நகரங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு மைய அரசு உதவியுடன் ரூ. 6·00 கோடி முதலீட்டில் திட்டப் பணிகள் மேற்கொள்ளப்படும்.



அவ்வையாவன :

| எண். (1) | நகரம், (2) | முதலீடு. (3) (ரூபாய் கோடியில்). |
|---|---|---|
| 1 | பெரம்பலூர் .. .. .. | 1,20 |
| 2 | விழுப்புரம் .. .. .. | 0.92 |
| 3 | காஞ்சிபுரம் .. .. .. | 1.20 |
| 4 | கிருஷ்ணகிரி .. .. .. .. | 1.20 |
| 5 | திருத்தணி .. .. .. .. | 1.20 |
| 6 | எடப்பாடி .. .. .. .. | 0.97 |
| | | 6.69 |

### மாநில அரசின் ஒருங்கிணைந்த நகர் அபிவிருத்தி திட்டங்கள் :

2.3.4. மாநில நகர் ஊரமைப்பு நிதியிலிருந்து மாநில ஒருங்கிணைந்த நகர் அபிவிருத்தி திட்டங்களுக்கு நடப்பு ஆண்டில் ரூ. 5.00 கோடி நிதி உள்ளாட்சி நிறுவனங்களுக்கு ஒப்புதல் பெறப்பட்ட திட்டங்களை மேற்கொள்ள முதலில் விடுவிக்கப்படும், தொடர்ந்து ஏழாவது திட்டத்தில் எஞ்சிய 42 திட்டங்களும் பயன்படத்தக்க வகையில் முடிக்கப்படும். மேலும் 1990-91 மற்றும் 1992-93-ல் அங்கீகரிக்கப்பட்டு ரூ. 9.68 கோடி நிதி விடுவிக்கப்பட்ட 50 திட்டங்களும் முடுக்கி விடப்பட்டு இவ்வாண்டு பயனுக்கு கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்படும்.

### நகர வான்வழி படங்கள் :

2.3.5. தமிழ்நாடு நகர் அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூ, 1,20 கோடி செலவில் வான்வழி நிழற்படங்கள் அனைத்து 30 நகரங்களுக்கும் தயாரித்து முடிக்கப்படும். 1992-ஆம் ஆண்டு ஜூன் மாதத்திற்குள் விரிவான நில உபயோக வரைபடங்கள் பெறத்தக்க வகையில் திருத்தப்பட்ட பெரிதளவு நகர வரைபடங்கள் கிடைக்கப் பெற இயலும்.

### இயற்கைக் கேட்டிற்கு எதிராக திட்டமிடுதல் :

2.3.6. 1992-93 ஆம் ஆண்டில் தஞ்சை மற்றும் தென் ஆற்காடு மாவட்டங்களுக்கான இயற்கைக் கேடு எதிர்த் திட்டம் தயாரிக்கப்படும். நகர் ஊரமைப்பு இயக்ககம், [illegible] பல்கலைக் கழகத்துடன் கலந்தறிந்து உருவாக்கிய

புயல் முன் எச்சரிக்கைக் கருவி நடப்பு ஆண்டில் மகாபலி புரம் கடற்கரை ஓரத்தில் முதலில் சில கிராமங்களில் கள சோதனை செய்யப்படும். கடலோர பாதிப்பு நேரிடும் மக்கள் புயல் தாக்குதல் தக்க ஓசையினை முன்னதாக கேட்டு தங்கள் வசிக்குமிடங்களிலிருந்து அருகில் உள்ள புயல் பாதுகாப்பு இல்லங்களுக்கு குடியிருப்பு மேற்கொள்ள இக்கருவி பயன்படும்.

நகர்ப்புற தகவல் மையம் :

2.3.7. நகரங்களில் முழுமைத் திட்டம், விரிவு அபிவிருத்தித் திட்டம் தயாரித்திடவும் மாவட்டங்களுக்கு கட்டமைப்புத் திட்டம் தயாரித்திடவும் நகர் ஊரமைப்பு இயக்ககத்தில் நிறுவப்பட்டு கணிப்பொறி நன்கு பயன்படுத்தப்படும். மேலும் இக்கணிப் பொறியை நன்கு பயன்படுத்தப்படும். வகையில் தேவைப்படும் அனைத்து நடவடிக்கைகளும் (Software) எடுக்கப்படும். குறிப்பாக நில அமைப்பு திட்டமிடுதலுக்கு தேவையான அனைத்து உபகரணங்களும் கணிப் பொறியில் நிறுவ நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

2.3. 8.4 நகரங்களுக்கு நகர்ப்புற வரைபடங்கள்:

திருவண்ணாமலை, தேனி-அல்லி நகரம், கரூர் மற்றும் கும்ப கோணம் ஆகிய 4 நகரங்களுக்கு வான்வழிப் புகைப்பட எடுத்திட வும், வரைப்படப் பெருக்கங்களில் ஏற்படும் குறைகளைக் களைய வும், வரைப்பட இணைப்புகளைச் சீர் செய்யவும் மைய அரசு செல வினத்தின் 50 விழுக்காடுக்கும் பங்கினை ஏற்க முன் வந்துள்ளது. இத்திட்டத்திற்கு மாநில அரசின் பங்காக ரூ. 7.00 இலட்சம் 1992-91 ஆம் ஆண்டில் ஒதுக்கு வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

3. சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்:

3.1. முகவுரை.—

3.1.1 சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம், நகர் மற்றும் ஊரமைப்பு சட்டம் 1971 ஆம் ஆண்டு திருத்தப்பட்ட தமிழ்நாடு சட்டம் 22/1974-ன் கீழ் சட்டமுறைப்படி ஓர் அமைப்பாக உரு வாக்கப்பட்டது. இக்குழுமம் 1972-ல் ஒரு தனிக்குழுவாக அமைக் கப்பட்டு பின்னர் 1975-ல் சட்ட முறைப்படி அமைக்கப்பட்ட குழுவாக தகுதி பெற்றது. இது தமிழக அரசின் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறையின் கட்டுப்பாட்டின் கீழ் வருகின்றது. சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமம் 6 நகராட்சிகள், 4 நகரி யங்கள், 27 பேரூராட்சிகள், 10 ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள 215 கிராமங்களைக் கொண்டு சுமார் 1,177 சதுர கிலோ மீட்டர்



பரப்பளவைக் கொண்ட சென்னைப் பெருநகரை தன்னகத் கொண்டுள்ளது. சென்னை பெருநகர் வளர்ச்சிப்பகுதியில் இன்றைய மக்கட் தொகை சுமார் 61 இலட்சங்கள் என மதிப்பிடப் பட்டுள்ளது. இக்குழுமத்தின் முக்கிய குறிகோள்களாவன;—

(அ) சென்னை பெருநகர்ப் பகுதியில் இயல்புக்கேற்ற திட்டம் அக்கட்டமைப்பு மற்றும் பொருளாதார வளர்ச்சிக்காக திட்டமிடுதல்.

(ஆ) சென்னை பெருநகர் பகுதிக்கான முழுமை திட்டத்தை யும் அதன் ஒரு பகுதி வளர்ச்சிக் கட்டுப்பாடு விதிகளையும் செயல் படுத்துதல்.

(இ) பெருநகர் வளர்ச்சிக்கான பணிகளை முறைப்படுத்துதல் ஒருங்கிணைத்தல் மற்றும் செயல்படுத்துதல்.

3.2. சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தில் சட்டபூர்வ மான செயல்பாடுகள்.

3.2.1 சென்னைப் பெருநகர் பகுதியில் உருவாகும் எல்லா வளர்ச்சிப் பணிகளுக்கும், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம், நகர் மற்றும் ஊரமைப்பு திட்டம், 1971-பிரிவு 49-ன் படி திட்ட அனுமதி வழங்குவதின் மூலம் வளர்ச்சிப் பணிகளை ஒழுங்குப் படுத்துகிறது. முழுமைத் திட்டத்தின் ஒரு பகுதியாக உள்ள வளர்ச்சிக் கட்டுப்பாடு விதிகளின் படியே திட்ட அனுமதி வழங்கப் படுகிறது, வளர்ச்சி கட்டுப்பாட்டில் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் கொள்கைகள் :

(அ) வணிக நோக்கமற்ற தனி நபர்களின் வளர்ச்சிப் பணி களுக்கும் சாதாரண கட்டிடங்களுக்கும் தாராளமாக திட்ட அனுமதி வழங்குதல்.

(ஆ) சிறப்புக் கட்டிடங்களுக்கும் (தரைத்தளம் முதல் தளத்திற்கு மேற்பட்டவை) அடுக்கு மாடி கட்டிடங்களுக்கும் (தரைத்தளம் +3½ தளங்களுக்கு மேற்பட்டவை) கடுமையான சட்ட திட்டங்கள் அமுல்படுத்தப்படுதல்.

3.3 சென்னை பெருநகர் பகுதிகான இரண்டாவது முழுமத்திட்டம் 991-2011 தயார் செய்தல்.

3.3.1. வளர்ச்சி வரைமுறைப்படுத்தும் நோக்கத்திற்காக சென்னைப்பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சென்னைப் பெருநகருக் கான முதல் முழுமைத் திட்டத்தை 1975-ல் தயார் செய்தது. அரசு அத்திட்டத்தை நகர் மற்றும் ஊரக திட்ட சட்டப்படி அங்கீகாரம்

செய்தது. கடந்த 15 ஆண்டுகளில் அரசின் கொள்கைகள் வளர்ச்சியில் ஏற்பட்ட மாற்றங்களில் முன்னேற்றத்தின் போக்கு மற்றும் மக்களின் கண்ணோட்டத்தில் ஏற்பட்ட மாறுதல் முதலியவைகளை கருத்தில் கொண்டு முதல் முழுமைத் திட்டத்தினை காலத்திற் கேற்றவாறு புதுப்பிக்க வேண்டியுள்ளது.

3. 3. 2. இதன் அடிப்படையில் "2011-ல் சென்னை" என்ற ஆராய்ச்சிக் கருத்தாய்வரங்கம் சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தினால் நடத்தப்பட்டது. இதன் படி வளர்ச்சிக்கான கொள்கைகளை உருவாக்கவும் சென்னை பெருநகரின் பொருளாதாரம் மற்றும் வேலைவாய்ப்பு போன்றவைகளை முன்னேற்றம் அடையச் செய்யவும் கொள்கைகள் இக்கருத்தாய்வில் பரிந்துரைக்கப்பட்டன. இக்கருத்தாய்வின் கண்டுபிடிப்புகள் பரிந்துரைகள் சனவரி 10, 11 தேதிகளில் நடைபெற்ற கருத்தாய்வு மாநட்டில் விவாதிக்கப்பட்டது. இரண்டாவது முழுமைத் திட்டத்திற்கான உள்ளீடாக இப்பரிந்துரைகள் இருக்கும். இந்த முழுமைத் திட்டம் தயாரிக்கும் பணி 1992-ன் முடிவிற்குள் முடியும் என எதிர்பார்க்கப்படுகிறது.

### 3. 3. 3. விரிவான வளர்ச்சி திட்டங்கள் தாயார் செய்தல்.

அண்ணா சாலைப் பகுதிக்கான விரிவான வளர்ச்சித் திட்டம் அரசாணை எண் 737, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை, நாள் 26—4—1991-ன் படி அங்கீகாரம் பெற்றுள்ளது, ஜார்ஜ்டவுன் என்று அழைக்கப்படும் வள்ளலார் நகர் பகுதிக்கான விரிவான வளர்ச்சித் திட்டத்திற்கு அரசு இணக்கம் தெரிவித்துள்ளது,

### 3.4. நடைமுறையில் உள்ள திட்டங்கள் :

#### 3.4.1. மறைமலை நகர் புதுநகர் :

இத்திட்டம் 3,300 ஏக்கர் நிலப்பரப்பில் 20 ஆண்டு காலத்திற்குள் ஒரு லட்சம் மக்கள் வாழத்தக்க வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் 1974-ல் 31 கோடி ரூபாய் தோராய திட்ட மதிப்பீட்டுடன் (நிலம் மற்றும் நிலம் மேம்பாட்டுடன் பாலாறு நீர் வழங்கல் உள்ளிட்ட மதிப்பீடு) தொடங்கப்பெற்றது. சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் குடியிருப்பு மற்றும் தொழிற்சாலைகளுக்கான மனைகளை இதுவரை சுமார் 818 ஏக்கர் நிலப்பரப்பில் உருவாக்கியுள்ளது. ஹட்கோ உதவியுடன் 1992-ல் கட்டி முடிக்கப்பட்ட வீடுகளையும் உருவாக்கியுள்ளது. நில ஆர்ஜிதம் செய்த நிலங்களை கையகப்படுத்துவதற்கு அந்தப் பகுதியிலுள்ள மக்கள் எதிர்ப்பதால், சில பகுதிகளில் மேற்கொண்டு மேம்பாட்டுப் பணியைத் தொடர முடியவில்லை.



31—12—1991 முடிய நிலம், பணிகள், கடன் மீதான வட்டி மற்றும் பணியாளர்களுக்கான செலவு ரூ. 27·26 கோடி, பயனடைந்தோரிடம் இருந்து திரும்பப் பெறப்பட்ட தொகை ரூ. 13.27 கோடி. 1992-93 நிதியாண்டில் நில ஆர்ஜித மேம்பாட்டுப் பணிக்காகவும் ரூபாய் 100 லட்சங்கள் செலவிட உத்தேசிக்கப்பட்டுள்ளது. 1992-93-ம் ஆண்டின் பணிகள் நிலம் கையகப்படுத்துதலைப் பொறுத்துள்ளது,

#### 3.4.2. மணலி புதுநகர் :

மணலி புதுநகர் வட சென்னையிலிருந்து சுமார் 26 கி.மீ. தொலைவில் திருவொற்றியூர்—பொன்னேரி சாலையில் உருவாகி வருகிறது. இத்திட்டம் 1,450 ஏக்கர் நிலப்பரப்பில் 75,000 மக்கள் 20 ஆண்டுகளுக்குள் குடியேறத்தக்க வகையில் பகுதி பகுதியாக செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டம் 1974-ல் 32·37 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தொடங்கப்பட்டது. சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் இதுவரை 489 ஏக்கர் நிலப்பரப்பை கையகப்படுத்தி அதில் 169 ஏக்கரை வளப்படுத்தி, வீட்டு மனைகளாக ஒதுக்கீடு செய்துள்ளது. இத்துடன் 1,760 வீடுகள் ஹட்கோ உதவியுடன் கட்டப்பட்டுள்ளது. 31—12—91 இறுதி வரை செலவான தொகை ரூபாய் 16 கோடி. பயனடைந்தோரிடமிருந்து பெறப்பட்ட தொகை ரூ. 6.75 கோடி. 1992-93-ம் நிதியாண்டில் ரூ. 40 லட்சங்கள் நில ஆர்ஜிதத்திற்கும் மேம்பாட்டுப் பணிக்காகவும் ஒதுக்கப்பட்டுள்ளது. எடையான் சாவடியில் 20 ஏக்கர் நிலம் ஆர்ஜிதம் செய்யவும், மேம்படுத்தவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

#### 3.4.3. கோயம்பேடு மொத்த விற்பனை அங்காடி வளாகம் :

மத்திய வர்த்தகப் பகுதியில் உள்ள அழுகு பொருள், துணி வகைகள், உணவு தானியங்கள் ஆகியவற்றின் விற்பனைத் தளத்தை கோயம்பேட்டிற்கு மாற்றுவதன் மூலம் மத்தியப் பகுதியில் நெரிசலைத் தவிர்ப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டத்தின் நில மேம்பாட்டுடன் 5.000 கடைகளுடன் கூடிய அங்காடி வளாகம் 298 ஏக்கரில் அமைக்கப்பட்டு, அடிப்படை வசதிகளும் வழங்கப்பட்டுள்ளன. இத்திட்டச் செலவின் பெரும் பகுதி சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் சுய நிதியிலிருந்து செலவழிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. வியாபாரிகளிடமிருந்து தொகை வசூலிக்கப்படுகிறது. அகக்கட்டுமான வசதிகளான சாலைகள், சிறு பாலங்கள், மழைநீர் வடிகால் குழாய்கள், சாக்கடை வசதிகள், மேல்நிலைத் தொட்டி மற்றும் தண்ணீர் விநியோக குழாய்கள் அமைத்தல் போன்ற பணிகள் முடிவடையும் தறுவாயில் உள்ளன. முதற்கட்டமாக அழுகும்

பொருட்கள் அங்காடியின் கட்டுமானப்பணி எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது. மலர், கனி மற்றும் காய்கறி போன்ற அழுகு பொருள் அங்காடியில் சுமார் 2,407 கடைகள் அமைக்கப்பட்டுள்ளன. அவைகளில் 2,212 கடைகளின் கட்டுமானப்பணி முடிவடைந்துள்ளது. முடிவுறுப்பணிகள் 1,382 கடைகளில் முன்னேற்றத்தில் உள்ளது. மலர் அங்காடியில் எல்லாப்பணிகளும் முடிவடைந்துள்ளது. காய்கறி அங்காடியில் பிரிவு 1 மற்றும் 2-ல் 238 கடைகளும், பிரிவு 3 மற்றும் 6-ல் உள்ள 1,187 கடைகளும் ஏப்ரல் 1992-ல் முடிவடையும் என எதிர் பார்க்கப்படுகிறது. தனி அங்காடியிலுள்ள 449 கடைகள் மார்ச் 1993-ல் முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

3.4.4. தற்போது முன்னேற்றத்தில் உள்ள இத்திட்டத்தின் ஒரு பகுதிக்கான திருத்திய மதிப்பீட்டுத்தொகை ரூபாய் 50.39 கோடி. 31—12—1991 வரை ஆன செலவுத்தொகை ரூபாய் 48.40 கோடி. இத்திட்டத்திற்கான அரசுக் கடன் தொகை ரூ. 14.32 கோடி பயனடைந்தோரிடமிருந்து சனவரி 1992 வரை பெறப்பட்ட தொகை ரூ. 12.28 கோடியாகும்.

### 3.4.5. புறநகர் பேருந்து மற்றும் சரக்குந்து நிலையம் :

நகரில் உள்ள போக்குவரத்து நெரிசலைத் தவிர்த்து, சீரான போக்குவரத்து திட்டமிட பேருந்து மற்றும் சரக்குந்து நிலையங்களை மாதவரம், கோயம்பேடு ஆகிய இடங்களில் அமைக்க திட்டமிடப்பட்டு உள்ளது, மாதவரம் நிலையத்தின் திட்டமதிப்பீடு ரூபாய் 5·44 கோடி, முதற்கட்டமாக கையகப்படுத்தப்பட்டுள்ள மொத்த நிலப்பரப்பான 80 ஏக்கரில் முதலில் 42 ஏக்கரில் சரக்குந்து நிலையமும், 8 ஏக்கரில் பேருந்து நிலையமும் அமைக்கப்படுகின்றன. நிலச் சமன்பாடு, மழைநீர்க் கால்வாய்கள், மதகுகள், பொது கழிப்பிடங்கள், உயர்நிலை நீர் தேக்கத் தொட்டி, குடிநீர் குழாய் அமைப்பு, குடிமை கட்டிடங்கள் போன்ற அடிப்படை வசதிகளுக்கான பணிகள் நடைபெற்று வருகின்றன. முழுப்பணிகளும் 1992 டிசம்பரில் முடியும் என எதிர்ப்பார்க்கப்படுகிறது, இத்திட்டம் சுய நிதியின் மூலமே நடைபெறுகின்றன. 31—12—1991 வரையிலான செலவுத் தொகை ரூ. 4.92 கோடி. இத்திட்டத்தினால் பயனடைவோரிடமிருந்து பெறப்பட்ட தொகை ரூ. 4.32 கோடி. 1992-93 நிதியாண்டில் மாதவரம் சரக்கு பேருந்து நிலையத்திற்கு ரூ. 30 லட்சங்கள் செலவழிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

### 3.4.6. இரும்பு மற்றும் எஃகு அங்காடி :

இத்திட்டம் ஜார்ஜ் டவுன் பகுதியில் உள்ள இரும்பு மற்றும் எஃகு அங்காடியைச் சாத்தங்காட்டிற்கு மாற்றுவதன் மூலம் நகரின் நெருக்கடியைக் குறைக்கும் நோக்கத்தோடு அமையவுள்ளது.



சுமார் 203 ஏக்கர் நிலப்பரப்பு இத்திட்டத்திற்காக கையகப்படுத்தப்பட்டு உள்ளது. இத்திட்டத்தின் மதிப்பீடு ரூபாய் 17,00 கோடி இத்திட்டம் சுய நிதியிலேயே அமையும் திட்டமாகும். சுமார் 850 இரும்பு மற்றும் எஃகு மொத்த வணிகர்கள் இத்திட்டத்தின் மூலம் பயன்பெறுவர். இத்துடன் இந்திய எஃகு நிறுவனம் விசாகப்பட்டினம் எஃகு நிறுவனம் ஆகியவைகளும் பயனடைகின்றன. அனைத்துப்பணிகளும் முடிவுற்று வணிகர்களுக்கான குத்தகை மற்றும் விற்பனை ஒப்பந்தம் வழங்கப்படவுள்ளது. 31—12—1991 வரை இத்திட்டத்திற்கான செலவு ரூபாய் 14.97 கோடி இத்திட்டத்தினால் பயனடைவோரிடமிருந்து ரூ. 6.75 கோடி வசூல் செய்யப்பட்டுள்ளது, 1992—93 நிதியாண்டில் ரூ. 10 லட்சம் இத்திட்டத்தில் செலவழிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

### 3,4,7, நிலச் சேர்ப்பு மற்றும் வளர்ச்சி செயல் திட்டம் :

நகரில் போக்குவரத்துச் சூழலை சீரமைக்கும் நோக்குடன் மூன்று முக்கிய தேசிய நெடுஞ்சாலைகளையும் இணைக்கும் ஒரு கோளப்பானதயாக, உள்வட்டச்சாலையை வடிவமைத்து தமிழ் நாடு வளர்ச்சித் திட்டத்தின்கீழ் அமைக்கப்படுகிறது. இவ் உள்வட்டச்சாலை அமைந்ததால், அதன் இருமருங்கிலும் உள்ள நிலப்பகுதிகளின் விலை மதிப்பில் ஏற்படக்கூடிய உயர்வில் ஒரு பகுதியேனும் சமுதாயத்திற்கு சென்றடைவதற்காகவும், இப்பகுதி சீரிய வளர்ச்சியினைப் பெறவும், அதன் மூலம் பெருகி வரும் வீட்டு வசதி வணிகப்பகுதி, தொழிற்சாலைப்பகுதி போன்றவைகளை நிறைவு செய்யவும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் மாதவரத்தின் வடபுறத்திலும், அதைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் ஒருங்கிணைந்த திட்டம் ஒன்றை தீட்டியுள்ளது. இத்திட்டத்தின் கீழ் 494 ஏக்கர் நிலங்கள் முன்னேற்றம் அடையும். எட்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் பகுதி வாரியாக மேம்படுத்தப்படவுள்ளன. இக்காலத்தில் 25,000 தன்னிறைவு வீட்டு மனைகளையும் அங்காடிகளையும், அமைக்க உள்ளது. இத்திட்டத்தின் மதிப்பீடு ரூ. 30 கோடியாக இருக்கும், அதில் அரசின் பங்கு ரூபாய் இரண்டு கோடி. மீதமுள்ள தொகை அரசு நிறுவனங்களின் நிதி உதவியுடன் அமைக்கப்படும், 1991—92-ல் அரசின் நிதி உதவி ரூ. 25 லட்சத்தில் முதற் கட்டமாக 33 ஏக்கர் நிலங்களை கையகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

### 3,4,8, விரைவு போக்குவரத்து நிலைகளில் நகரை சீரமைத்தல்:

சென்னை கடற்கரையிலிருந்து லஸ் வரை அமைய உள்ள விரைவு போக்குவரத்து அமைப்பைப்பயன்படுத்தி சென்னை நகரில் வணிக மையங்களை பரவலாக அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது

சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமம் தயாரிக்கும், இரயில் போக்குவரத்து திட்டத்தில் வணிக மற்றும் தொழிற்சாலைகளுக்கான உரிய இடங்கள் சுட்டிக்காட்டப்படுவதுடன், அரசின் முதலீட்டரல் உருவாகும் நில விலை உயர்வின் ஒரு பகுதியாயினும் சமுதாயத்தை சென்றடையும் வகையில் வழிவகை காணப்படும் இத்திட்டத்தின் மொத்த மதிப்பீடு ரூ. 20.00 லட்சம், தற்போதுள்ள நில உபயோக விவரங்களும் சிந்தாதிரிப்பேட்டை மற்றும் லஸ் ஆகிய இரண்டு நிலையங்களுக்கான எல்லையை திட்டத்தில் நிர்ணயித்தல் போன்ற பணிகள் முடிவடைந்துள்ளது. விரிவான மேம்பாட்டுத் திட்ட வரைபடங்கள் 1992 மார்ச்சுக்குள் முடிவடைந்து விடும். தற்போதுள்ள நில உபயோக விவரங்கள் சேகரிப்பது நடைபெற்று வருகிறது,

### 3.4.9. புறநகர் நகரங்களின் வளர்ச்சி :

திருவள்ளூர் நகரம் இரட்டை மின்சார இரயில் பாதையிலும், இரண்டு முக்கிய மாவட்ட சாலை தொடர்பிலும் சென்னையிலிருந்து சுலபமாக சென்றடையும் வாய்ப்புடன் அமைந்துள்ளது. முழுமைத் திட்டத்தின் நோக்கீட்டில் இந்த நகரம் விரைவான வளர்ச்சியைப் பெற வாய்ப்புகள் உள்ளன. எனவே, சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் திருவள்ளூர் புதுநகர் வளர்ச்சித் திட்டங்களை தயாரிக்க அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது.

### 3.5. தமிழ்நாடு நகர வளர்ச்சித் திட்டம் :

3.5.1. சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் ஏற்று நடத்திய சென்னை நகர வளர்ச்சித்திட்டம் 1 மற்றும் 2-ன் மூலம் பெற்ற சிறப்பு அனுபவத்தின் அடிப்படையில் தமிழ்நாடு நகர வளர்ச்சித் திட்டம் என்ற ஒரு மூன்றாவது பெரிய திட்டம் உலக வங்கியின் உதவியுடன் 1988 செப்டம்பரில் உருவாக்கப்பட்டது. இத்திட்டத்தின் மொத்த மதிப்பீடு ரூ. 632.60 கோடி (இணைப்பு-1). இத்திட்டத்தின் நோக்கங்களாவன :—

தன்னிறைவு வீட்டுமனைகள், குடிசைப் பகுதி மேம்பாடு தமிழ்நாட்டில் உள்ள பத்து நகரங்களில் போக்குவரத்தை மேம்படுத்துதல், பல்லவன் போக்குவரத்து கழகத்திற்குப் பேருந்துக்கள் வாங்குதல், மேலும் உள்ளாட்சி நிறுவனங்கள் வருவாய்ப் வரத்தக்க வசதி திட்டங்களை தீட்டவும் தொழில்நுட்ப மற்றும் நிதி உதவியும் புரிகிறது. இதற்கென 'ஒரு உயர்நிலை தொழில்நுட்பக் குழு, 'திட்ட மேலாண்மைக் குழு'' என்ற ஒன்று சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் விரிவாக



உருவாகியுள்ளது. இதன் தலைவராக வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை செயலாளர் நியமிக்கப்பட்டு திட்டங்களை மேலாண்மை செய்கிறார். இக்குழுவில் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம், நகராட்சிகளின் நிர்வாக இயக்ககம், பல்லவன் போக்குவரத்துக் கழகம், நெடுஞ்சாலைத்துறை, நகர் மற்றும் ஊரமைப்புத்துறை, தமிழ்நாடு குடிநீர் மற்றும் வடிகால் வாரியம் மற்றும் செயல்படுத்தும் நிறுவனங்களின் பிரதிநிதிகள் அங்கம் வகிக்கின்றனர்.

3.5.2. சென்னைப் பெருநகர் நீங்கலாக உள்ள மதுரை, சேலம், கோவை, திருச்சி, வேலூர், செங்கல்பட்டு, திருநெல்வேலி மற்றும் சிவகெங்கை ஆகிய நகரங்களில் செயல்படும் திட்டங்களை மேற்பார்வையிடும் பொறுப்பை நகர மட்ட மேலாண்மைக்குழு ஏற்கிறது. சென்னைப் பெருநகர்ப் பகுதிக்கான பொறுப்பை சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் ஏற்கிறது.

3.5.3. 1992 சனவரி இறுதி வரையான திட்டச் செலவுத் தொகை ரூ. 180.08 கோடி (இணைப்பு-2).

(அ) சென்னை, மதுரை, திருச்சி, கோவை, தூத்துக்குடி, ஈரோடு, சேலம், வேலூர் மற்றும் திருநெல்வேலி ஆகிய நகரங்களில் 23 தன்னிறைவு வீட்டு மனைத் திட்டப்பணிகள் பல்வேறு நிலைகளில் நடைபெற்று வருகின்றன.

(ஆ) சென்னை, மதுரை, கோவை, திருச்சி, சேலம், வேலூர், ஈரோடு, திருப்பத்தூர், திருநெல்வேலி, தூத்துக்குடி ஆகிய இடங்களில் குடிசைப்பகுதி மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

(இ) சாலை திட்டத்திற்காக 27 திட்டங்களுக்கு மொத்தம் ரூபாய் 115.23 கோடிக்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது. சென்னை (6), மதுரை (2), திருநெல்வேலி (1), திருச்சி (1), சேலம் (2), ஈரோடு (1), வேலூர் (1), கோயம்புத்தூர் (2) மற்றும் தூத்துக்குடி (1) போன்ற இடங்களில் 17 திட்டங்களுக்கான பணிகள் நடைபெற்று வருகின்றன. போக்குவரத்து நெரிசலை குறைக்க இராயபுரம் மேம்பாலம் ரூ. 10.50 கோடி செலவில் மேற்கொள்ளப்பட உள்ளது. இதற்கான வேலைகள் 1992-1993-ம் நிதியாண்டில் தொடங்கப்பட உள்ளது.

(ஈ) நகராட்சி நகர் வளர்ச்சி நிதியிலிருந்து பல்வேறு வருவாய்க்கான பணிகள் 39 உள்ளாட்சிகளில் தொடங்க ரூபாய் 88.32 கோடிக்கான அரசின் நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டு செயல்பட உள்ளது. 1992 சனவரி இறுதி வரை ரூ. 26.13 கோடி நிதி உதவி 33 நகராட்சி / மாநகராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

[1992 மார்ச் 27

### 3.5.4. தொழில் நுட்ப ஆய்வுகள் :

(அ) சென்னைப் பெருநகருக்கான போக்குவரத்து திட்டம் தயார் செய்ய, ஒருங்கிணைந்த போக்குவரத்து மற்றும் சாலை நெருக்கடி பற்றிய ஆய்வு முன்னேற்றத்தில் உள்ளது.

(ஆ) இது தவிர சென்னையில் ரிப்பன் கட்டிடம் முதல் கத்திப்பாரா சந்திப்பு வரை அண்ணா சாலைக்கு மாற்றாக பேருந்துகள் மட்டும் செல்லக்கூடிய பாதையை அமைக்க பொறியியல் சாத்தியக்கூறுகள் பற்றிய ஆய்வு தற்பொழுது எடுக்கப்பட்டுள்ளது.

(இ) சென்னைக் பெருநகர் வெள்ளப் பாதுகாப்பு மற்றும் நிவாரணம் பற்றிய ஒருங்கிணைந்த ஆய்வு எடுக்கப் பட்டுள்ளது.

3.5.5. 1992–93 ஆம் நிதியாண்டில் தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின்கீழ் அரசின் நிதி உதவியையும் சேர்த்து ரூ. 125.70 கோடி செலவிட திட்டமிடப்பட்டுள்ளது. திட்டம் பற்றிய தகவல்கள் இணைப்பு 3-ல் கொடுக்கப் பட்டுள்ளது.

### 3.6. விரைவு போக்குவரத்துத் திட்டம் :

3.6.1. விரைவு போக்குவரத்து திட்டம் ஒரு பெருமைக் குரிய இன்றியமையாத திட்டமாகும். தற்போதுள்ள நகர போக்குவரத்து திட்டங்களுக்கு இத்திட்டம் ஓர் இணைப்புத் திட்டமாகும். அண்ணாசாலையிலிருந்து லஸ் வரையிலான போக்குவரத்து நெரிசல் மிக்க சாலைகளுக்கு இத்திட்டம் நிவாரணமளிக்கும்.

3.6.2. இத்திட்டம் சென்னை கடற்கரையிலிருந்து லஸ் வரை அமையும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதன் மொத்த நீளம் 8.45 கி.மீ. சென்னை கடற்கரையிலிருந்து பொது மருத்துவ மனை-பூங்கா நிலையம் வரையிலான 2.9 கி.மீ. தரை தூரம் வழியாகவும் பொது மருத்துவமனையிலிருந்து லஸ் வரையி லான 5.55 கி.மீ. தூரம் தரைக்கு மேலும் அமையும். தடங்கலற்ற போக்குவரத்தைக் கருத்திற் கொண்டு இது தடையற்ற இரு வழிப்பாதையாக அமைக்கப்படுகிறது.



1992 மார்ச் 27]

3.6.3. இத்திட்டத்திற்கான ஒப்புதலை மத்திய திட்டக்குழு வும் அனுமதியை இரயில்வே நிர்வாகமும் 1983—84லேயே வழங்கி யுள்ளது. இதுவரை 48 சதவீத கட்டமைப்புப் பணிகள் முடி வடைந்துள்ளன. இத்திட்டத்தின் தற்போதைய மதிப்பீடு ரூ. 125.00 கோடி. இத்திட்டம் டிசம்பர் 1995-ல் முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. சேப்பாக்கம் வரை யிலுள்ள இருப்புப்பாதை அமைக்கும் பணி டிசம்பர் 1992-ல் முடிவடையும்.

3.6.4. இத்திட்டம் விரைவாக முடிவடைவதில் தமிழக அரசு ஆர்வமாக உள்ளது. இரயில்வே துறையினருக்கு தன்னுடைய முழு ஒத்துழைப்பையும் வழங்குகிறது. மேலும் இத்திட்டத்திற்கு தேவையான நிலங்களை இரயில்வேக்கு இனாமாகவே வழங்கி யுள்ளது. கூடுதல் நிதி ஒதுக்கீட்டிற்காக மத்திய அரசை அணுகியுள்ளது.

### 3.7. 1992—93-ன் புதிய திட்டங்கள் :

3.7.1. பெரியமேடு மறு மேம்பாட்டுத் திட்டம் : சென்னை யில் மத்திய மேற்கு பகுதியில் அமைந்துள்ள பெரியமேடு இந்தியா விலுள்ள தோல் வியாபார கேந்திரத்தில் முக்கியமாக திகழ் கின்றது. இந்திய தோல் ஏற்றுமதியின் 40 சதவீதம் இந்தப் பகுதியிலிருந்து அனுப்பப்படுகிறது.

3.7.2. இந்த பெரியமேட்டுப்பகுதி இன்று வரை திட்டமிட்ட தாக வளர்ச்சிபெறவில்லை. மோசமான சாலைகள், மழைக் காலங்களில் தண்ணீர் தேங்கியிருந்தால் மின் இணைப்பு ஏற்றுமதி தொழிலுக்கு அவசியமான வசதி இல்லாதிருத்தல், இட நெருக்கடி விரிவாக்கத்திற்கு போதிய இட வசதியின்மை முதலிய தன்மை களை கொண்டதாக இப்பகுதி தற்போது விளங்குகிறது.

3.7.3. எனவே, இப்பகுதி மறுமேம்பாடு அடைய சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தினால் மறுமேம்பட்டுத் திட்டம் தயார் செய்யப்பட்டு வருகின்றது. மறுமேம்பாட்டிற்கான ஒத்துழைப்பை இப்பகுதியில் வாழும் மக்களிடம் வேண்டுதல், கட்டிட மற்றும் நகர வளர்ச்சியில் ஈடுபட்டுள்ள தனியார் துறை யினர் ஆதரவை வேண்டுதல், நிதி நிறுவனங்களின் உதவியை கோருதல் போன்றவைகளுடன் சென்னைப்பெருநகர்வளர்ச்சிக் குழுமம் இப் பகுதியின் மறு மேம்பாட்டிற்கு இணக்கத்தை பெறுதல், இத்திட்டத்தின் முக்கியமான அம்சமாகும்.

[1992 மார்ச் 27

**3.7.4. அடையார் கடற்கரைப் பகுதி வளர்ச்சித் திட்டம் :**

அரசு ஆணை எண் 2186, வருவாய் துறை, தேதி 16-10-90-ன் படி அரசு மைலாப்பூர் கிராமத்தின் நில அளவை எண் 4309-1,2,8 மற்றும் 23இல் உள்ள 45.45 ஏக்கர் நிலப்பரப்பினை சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் செயல்பாட்டிற்காக கொடுத்துள்ளது. இந்த நிலப்பரப்பில் அலுவலகக் கட்டிடங்கள், கேளிக்கைக்கான வளாகம், பூங்காக்கள், விளையாட்டு அரங்கங்கள் முதலியவைகள் உள்ளடங்கிய ஒரு ஒருங்கிணைந்த வளர்ச்சித் திட்டம் தயாரிக்கப்பட இருக்கின்றது. இத்திட்டத்தின் மொத்த மதிப்பீட்டுச் செலவு ரூ. 40.5 கோடியாகும். இது ஒரு சுயநிதி திட்டமாகும்.

**3.7.5. சுயசார்பு நகரங்களின் வளர்ச்சித் திட்டம் :**

குடியிருப்பிற்கான ஐக்கிய நாடுகளின் மையத்தினால் இத்திட்டம் கொண்டு வரப்பட்டுள்ளது. சுற்றுப்புறம் மற்றும் அடிப்படைத் தேவைகளின் அவசியத்தை அறிந்து கொள்ள இயலும் தன்மையையும் சுற்றுப்புற வசதிகளுக்காக திட்டமிடல் மற்றும் மேலாண்மைத் திறன் ஆகிய இயல்புகளை நகர வளர்ச்சி அதிகார மன்றங்களில் மேம்படுத்தவும், இத்தகைய வளர்ச்சி அணுகுமுறைகளில் சம்பந்தப்பட்ட அனைவரையும் நிலைத்த நடைமுறை செயலாக்கத்தில் ஈடுபடுத்தவும் இத்திட்டம் தனது கொள்கையை கொண்டிருக்கின்றது.

3.7.6. சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமம் மற்றும் தமிழக அரசின் முயற்சியின் விளைவாக இந்திய மைய அரசு குடியிருப்பிற்கான ஐக்கிய நாடுகளின் மையத்திற்குச் சென்னை நகரை இத்திட்டத்தில் இணைத்துக்கொள்ள பரிந்துரை செய்துள்ளது. இப்பரிந்துரையை ஐக்கிய நாடுகளின் மையம் ஏற்றுக்கொண்டு சென்னை நகரை இத்திட்டத்தில் சேர்த்துள்ளது. தெற்கு ஆசிய நாடுகளில் சென்னை நகரம் மட்டுமே இத்திட்டத்தில் சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ளது.

3.7.7. (அ) நகர் அளவில் மேற்கொள்ளும் இரண்டு நடவடிக்கைகள் முதற்கட்டமாக இத்திட்டத்தில் உள்ளது. தேவைகளின் அவசரத்திற்கு ஏற்ற வகையில் பிரச்சினைகளை வரிசைப்படுத்தி இனங்கண்டு கொள்ளுதல், நிர்வாகம், தொழில்நுட்பம் மற்றும் அரசியல், நிலையில் செயல் திட்டங்களை தயாரித்தல், முக்கிய செயலாக்கக் காரணங்களின் ஒத்துழைப்பை விழைதல் மற்றும் திட்டத்தை செயலாக்க ஒத்துழைப்பை அளித்தல் ஆகியவை இத்திட்டத்தின் முக்கிய அம்சங்களாகும்.



1992 மார்ச் 27]

(ஆ) தொழில்நுட்ப அறிவைத் திரட்டுதல், நிதி வளங்களை அணுகுதல், நகரங்களிடையே ஆராய்ச்சி திறன்களைப் பரிமாறிக்கொள்ளுதல், ஒருங்கிணைந்த நகர மேலாண்மை மற்றும் சுற்றுப்புற அடிப்படை தேவைகளின் அனுபவங்களை உபயோகித்துக்கொள்ளுதல் போன்ற நடவடிக்கைகள் திட்ட நிலையில் மேற்கொள்ளப்படும்.

3.7.8. நகர்ப்புற சுற்றுப்புறத் தேவைகளின் வளர்ச்சிகளின் தொடர்புகளை விவரிக்கும் நடப்பு செயல்பாடுகளுடன் இத்திட்டம் நெருங்கிய இணைப்பினைக் கொண்டுள்ளது. இந்த திட்டம், ஐக்கிய நாடுகள் சுயசார்பு நகரங்களின் வளர்ச்சித் திட்டம், மேலாண்மைத் திட்டங்களுடன் மற்றும் உலக வங்கியின் நகர சுற்றுப்புறத் தேவைகள் பற்றிய முக்கியமாக அதனுடைய தொடர்பு கொண்டுள்ளது. எல்லா அமைப்புகளுடன்

**3.7.9. சென்னைப் பெருநகர் வெள்ள நிவாரண மற்றும் மழைநீர் வடிகால் பற்றிய ஆய்வு;**

சென்னை பெருநகர் வெள்ள நிவாரணம் மற்றும் மழைநீர் வடிகால் பற்றிய ஆய்வு, இங்கிலாந்தில் உள்ள திருவாளர்கள் மோட்மேக் டெனால்டு இன்டர்நேஷனல் (எம்.எம்.ஐ) நிறுவனத்திற்கு அளிக்கப்பட உள்ளது. அந்த ஆய்விற்கான செலவு ரூ. 151.93 இலட்சங்கள் ஆகும். இந்த ஆய்வு 15 மாதங்களுக்குள் நிறைவு செய்யப்படும்.

இந்த ஆய்வின் நோக்கம், நீர்தேங்கும் நிலப்பகுதியை வற்ற வைக்க தீர்வுகளைப் பரிந்துரைக்கவும், பருவகால வெள்ளங்களிலிருந்து பாதுகாத்துக் கொள்ளவும் மற்றும் இப்பகுதியை நல்ல நகர்ப்புறமாக்குவதற்காகவும் ஆகும். மேலும், இந்த ஆய்வுச் கட்டிடங்களுக்கும் கட்டுமான பணிகளுக்கும் மற்றும் நிலத்தடி நீரின் உப்புத் தன்மையை போக்குவதற்கும் உரிய முன் எச்சரிக்கை பொறியியல் நடவடிக்கைகள் எடுப்பதற்கும் வழி வகுக்கும்.

**3.7.10. சுற்றுப்புறச் சுகாதாரத் திட்டத்திற்கான ஆய்வு;**

கிருஷ்ணா குடிநீர் திட்டத்தின் கீழ் உலகவங்கியின் நிதி உதவியுடன் ரூ. 505 கோடி மதிப்பீட்டில் சென்னைபெருநகர் குடிநீர் மற்றும் வடிகால் வாரியம், சென்னையில் இரண்டாவது குடிநீர் திட்டத்தை எடுத்துக்கொண்டுள்ளது. இத்திட்டத்தின் ஒரு பகுதியாக சுற்றுப்புறச் சுகாதாரத் திட்டம் உலக வங்கியினால் உருவாக்கப்பட்டுள்ளது. இதற்கு ஜப்பானிய அரசு நிதி உதவ உள்ளது. இத்திட்டத்தின் மொத்தச் செலவு ரூ. 1.5 கோடியாகும். கீழ்க்கண்ட முக்கியப் பிரிவுகளை உள்ளடக்கிய இத்திட்டம் விரைவில் ஆரம்பிக்கப்பட உள்ளது.

(1) குறைந்த செலவில் சுகாதாரம்.

(2) திடக் கழிவுப் பொருள் சேகரித்தல் மற்றும் அழித்தல் பற்றிய மேலாண்மை.

(3) மனமயக்கும் வேதியக் கழிவுப் பொருட்கள் சேகரித்தல்.

(4) நிலத்தடி நீர் மற்றும் மண்வளம் பாதுகாத்தல்.

(5) மழைநீர் வடிகால் மற்றும் வெள்ளப் பாதிப்பை களைதல்.

(6) நீர்க்கால்வாய்களின் தூர் நீக்குதல் மற்றும் நில அழகு படுத்துதல்.

(7) தொடர்புடைய நிறுவனங்களின் கொள்கை, நிதிக் கொள்கை ஆகியவற்றை உறுதிப்படுத்துதல் மற்றும் பயிற்சி அளித்தல், இவ்வாய்வில் மேற்கொள்ள வேண்டிய நிபந்தனைகள் பற்றிய குறிப்புகள் தயாரிக்கப்பட்டு அவை முடிவிற்குக் கொண்டுவரப்பட உள்ளது.

அது சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தில் உண்டாக்கப்பட்ட ஆய்வு ஒருங்கிணைப்புப் பிரிவினால் அங்கீகாரம் பெறப்படும். இவ்வாய்விற்கான ஆலோசகர்களின் விவரங்களின் தொகுப்புப் பணி முன்னேற்றத்தில் உள்ளது. வரும் ஏப்ரல் 1992 இல் இவ்வாய்வினைத் தேர்ந்தெடுத்த ஆலோசகர்களிடம் ஒப்படைக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

1992-93 ஆம் ஆண்டிற்கான நகர வளர்ச்சிக்கான முதலீடு.

| | அரசின் நிதி. | நிதி நிறுவனங்களின் உதவி. | மொத்த முதலீடு.* |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | (ரூ. இலட்சத்தில்.) | | |
| சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமம் .. | 486.26 | .. | 486.26 |
| நகர் மற்றும் ஊரமைப்பு இயக்ககம் .. | 357.50 | .. | 357.50 |
| பதிவாளர் வீட்டு வசதி கூட்டுறவு சங்கம் .. | .. | 6500.00 | 6500.00 |
| மொத்தம் .. | 843.76 | 6500.00 | 7343.76 |

*வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறையின்கீழ் உள்ள முகமைகளால் செயல்படுத்தப்படும் திட்டங்கள் மட்டும் அடங்கும்.

இணைப்புகள்

## இணைப்பு 1

| (1) | ரூபாய் (கோடியில்) (2) | மொத்தத்தில் விழுக்காடு. (3) |
|---|---|---|
| **(அ) நிறுவனம்** | | |
| 1. நகராட்சி நகர வளர்ச்சி நிதிக்கடன் மற்றும் மானியம் தளவாடங்கள், சீரமைப்பு பணிகள், பராமரிப்பு மற்றும் வசதி செய்தல், வருவாய் தரத்தக்க வணிகம் போன்றவற்றிற்கான நிதி உதவி, முதலில் 10 திட்ட நகரங்களில் உள்ள 80 நகராட்சிகளுக்கு .. .. .. .. .. .. .. | 160.61 | 25,39 |
| 2. தொழில் நுட்ப உதவி.—பயிற்சி மற்றும் திட்ட ஒருங்கிணைப்பிற்கு தொடர்புடைய தளவாடங்கள் செயல்படுத்தும் நிறுவனங்களுக்கு அளித்தல் .. .. .. .. .. | 13.67 | 2,16 |
| **(ஆ) குடியிருப்பு :** | | |
| 1. நிலமேம்பாடு : தன்னிறைவு வீட்டு மனைகள் அமைத்தல், ட்டுக் குடியிருப்பு மற்றும் சமுதாய வசதிகள், வீடு கட்டடகடனுதவி சுமார் 70,000 குறைந்த வருவாய் உள்ள குடும்பங்களுக்கு (3,50,000 மக்கள்) தமிழ்நாட்டில் உள்ள சென்னை, மதுரை, சேலம், கோவை, திருச்சி உள்ளிட்ட 10 பெரிய நகரங்களில் அமைத்தல் .. .. .. .. .. | 242.44 | 38,33 |
| 2. முன்னோடி நகர வளர்ச்சித் திட்டம்.—சென்னையில் தனியாரிடமிருந்து 7,000 குறைந்த வருவாயினருக்கான தன்னிறைவு மனைகளை 140 ஹெக்டேரில் வாங்குதல் அடிப்படை வசதிகள், சமுதாய வசதிகள், வீட்டு மேம்பாட்டுக்குக் கடனுதவி வழங்கல் .. .. .. .. .. .. .. | 13,22 | 2,09 |
| 3. குடிசைப் பகுதி மேம்பாடு.—சுற்றுப்புற மற்றும் மனைவசதி சுமார் 84,000 குடும்பங்களுக்கு தனியார் நிலத்தில் 10 நகரங்களின் சமுதாய வசதிகளுடன் .. .. .. .. | 45.65 | 7.22 |
| **(இ) போக்குவரத்து :** | | |
| 1. போக்குவரத்து மேலாண்மை மற்றும் போக்குவரத்து:—சாலை அமைப்பு மற்றும் மேம்படுத்துதல், பாலம் விளக்குக்குறி நடந்து செல்வோருக்கான வசதி 10 நகரங்களில் அமைத்தல் .. | 98.72 | 15.61 |
| 2. பல்லவன் போக்குவரத்துக் கழகம்.—சுமார் 1,000 பேருந்துகள், அதன் தொடர்பான பணிகள், தளவாடங்கள். பணிமனைகள், பேருந்து நிலையங்கள், பெரிய சீரமைப்பு மனைகள், பயணிகள் நிழற்குடை சென்னையில் .. .. .. .. .. | 58.24 | 9.20 |
| மொத்தத் திட்டம் .. | 632.55 | 100.00 |

## இணைப்பு—2.

**தமிழ்நாடு நகர வளர்ச்சித் திட்டம் செயல்பாடு—1992 சனவரி இறுதியில் உள்ள நிலை.**

| வரிசை எண் மற்றும் திட்டத்தின் பெயர். | 1992 சனவரி இறுதிவரை அடைந்துள்ள நிலை. நிதி. (கோடி.) | செயல்பாடு. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1. தன்னிறைவு வீட்டு மனைத் திட்டம் .. | 81.50 | 45.560 தன்னிறைவு பெற்ற மனைகள். |
| 2. வழிகாட்டும் நகர வளர்ச்சித் திட்டம் .. | | |
| 3. குடிசைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம். .. .. .. | 12.54 | 34.662 குடும்பங்கள். |
| 4. போக்குவரத்து மேலாண்மை மற்றும் போக்குவரத்து. | 28.36 | நிர்வாக அனுமதி பெற்றவைகள்—27, வேலைகள் முன்னேற்றத்தில் உள்ள பணிகள்—17. |
| 5. பல்லவன் போக்குவரத்துக் கழகம் .. | 22.24 | பேருந்து சட்டங்கள் வாங்குதல்—645, பயணிகள் பேருந்தாக கட்டுமானம் செய்தல்—645. |
| 6. நகராட்சி நகர வளர்ச்சி நிதி .. .. | 26.60 | 39 நகராட்சிகளுக்கு அரசிடம் இருந்து நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது. 33 நகராட்சிகளுக்கு நிதி வழங்கப் பட்டுள்ளது. |
| 7. தொழில் நுட்ப உதவி | 3.23 | பல்வேறு ஆய்வுகள் முடிந்துள்ளன/நடைபெறுகின்றன. கணிப்பொறி செயல்படுத்தும்/ஒருங்கிணைக்கும் நிறுவனங்களில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. |
| 8. திட்டமிடுதல் மற்றும் ஒருங்கிணைத்தல் | 5.61 | பணியாளர்கள் ஊதியம். |
| மொத்தம் .. | 180.08 | |

## இணைப்பு—3.

### நிதி மற்றும் செயல்பாட்டு இலக்கு 1992—93.

| வரிசை எண். (1) | திட்டம்/நிறுவனம். (2) | செயல்பாட்டு இலக்கு. (3) | திட்ட மிட்ட தொகை. (4) | அதில் அரசின் பட்ஜெட் உதவி. (5) |
|---|---|---|---|---|
| | | | (ரூபாய் கோடியில்). | |
| 1. | தன்னிறைவு வீட்டு மனைகள் (தமிழ் நாடு வீட்டு வசதி வாரியம்.) | 13,000 மனைகள் .. | 50.00 | 7.50 |
| 2. | முன்னோடி திட்டம் (சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்.) | .. | 2.00 | 1.00 |
| 3. | குடிசைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் (குடிசை மாற்று வாரியம்.) | 20,000 குடும்பங்கள் .. | 5.00 | 5.00 |
| 4. | போக்குவரத்து மேலாண்மை மற்றும் போக்குவரத்து (நெடுஞ்சாலை மற்றும் ஊரகப் பணி இயக்ககம்.) | 12 கி.மீ. சாலைகள் பாலம் மற்றும் சாலை மேம்பாலங்கள் கட்டுதல். | 20.00 | 20.00 |
| 5. | பேருந்து மற்றும் அடிப்படை வசதிகள் (பல்லவன் போக்குவரத்துக் கழகம்.) | 350 பேருந்து [illegible] | 15.00 | 10.00 |



| வரிசை எண். (1) | திட்டம்/நிறுவனம். (2) | செயல்பாட்டு இலக்கு. (3) | திட்ட மிட்ட தொகை. (4) | அதில் அரசின் பட்ஜெட் உதவி. (5) |
|---|---|---|---|---|
| 6. | நகராட்சி—நகர வளர்ச்சி நிதி (நகராட்சி நிர்வாகம் இயக்ககம்.) | சுமார் 45 நகராட்சிகளை உள்ளடக்கியது. | 30.00 | 30.00 |
| 7. | தொழில் நுட்ப. உதவி (சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் மற்றும் திட்ட மேலாண்மைக் குழு.) | பயிற்சி மற்றும் ஆலோசனை ஆய்வு. | 2.00 | 2.00 |
| 8. | திட்டமிடுதல், மேலாண்மை ஒருங்கிணைத்தல் கட்டணம். | .. | 1.70 | 1.70 |
| | | மொத்தம் .. | 125.70 | 77.20 |

600 008.

## LIST OF AGENTS FOR THE SALE OF TAMIL NADU GOVERNMENT PUBLICATIONS.

### IN MADRAS CITY.

1 Account Test Institute, Egmore, Madras-8.
2 The City Book Company, Madras-4.
3 Higginbothams (Private) Limited, Madras-2.
4 P. Varadachary and Company, Madras-1.
5 C. Subbiah Chetty and Company, Madras-5.
6 The Universal Book House, Moore Market, Madras-3.
7 C. Sitharaman and Company, Madras-14.
8 Mohan Pathippagam and Book Depot, Madras-5.
9 C. Venkatesan Chetty and Company, No. 8-C, Pycrofts Road, Madras-5.
10 The South India Saiva Siddhanta Works Publishing Society (Tirunelveli) Limited, Madras-1.
11 The Sangam Publishers, No. 11, Sunkurama Chetty Street, Madras 1.
12 New Century Book House (Private) Limited, Madras 2.
13 Kalaivani Book Centre, No. 1, Ponniamman Koil Street, Egmore, Madras-8.

### IN MOFFASIL OF TAMIL NADU

1 A. Venkatasubban & Company, Vellore (North Arcot) District
2 Bharathamatha Book Depot, Thanjavur (Tanjore District).
3 P. V. Nathan & Company, Kumbakonam (Tanjore District)
4 Appar Book Stall, Thanjavur.
5 P. N. Swaminathan and Company, Bazaar Street, Pudukkottai.
6 Palaniappa Brothers, Tiruchirappalli-2.
7 S. R. Subramania Pillai, Tirunelveli Junction.
8 B. Aruldoss, Villupuram (South Arcot District).
9 Vasantham Stores, Booksellers, 9/31, Cross Cut Road, Coimbatore-12.
10 Mercury Book Company, 20, Karuppa Gounder Street, Coimbatore-1.
11 S. M. Jegannatham Book House, 35, Nandhi Koil Street, Tiruchirappalli-1.
12 Ganesh Stores, South Car Street, Sivakasi
13 Mary Martin, Booksellers, Kotagiri (The Nilgiris).
14 A. K. Chandriah Chettiar & Sons, Salem-1
15 Parameswari Book Shop, No. 461, Old Market Street, Salem.
16 Meenakshi Pathipagam, Pudukkottai
17 K. V. Narayana Iyer & Sons, Dindigul, Madurai District.
18 Jayakumari Stores, Nagercoil (Kanyakumari District).
19 Baby Stores, Booksellers, Villupuram (South Arcot District).
20 Dinamani Stores, No. 3/1, Old Post Office Road, Coimbatore-14.
21 Kumaran Book Depot, Booksellers, Erode-1
22 Vela Book Company, No. A, Annaji Rao Street, Erode-1.
23 Radhamani Stores, 6-A, Raja Street, Coimbatore-1.
24 Ajantha Book Centre, Salem-1.
25 Sri Vidya, 63, Tennure High Road, Tiruchirappalli-2.
26 Sri Ramavilas Book Shop, 90, Amman Sannathi, Madurai-1.

### IN OTHER STATES.

1 Jain Book Agency, New Delhi.
2 International Book House, Trivandrum.
3 The Book Syndicate, Hyderabad-1.
4 Labour Law Publications, Hyderabad.
5 Puthagalayam, Pondicherry.
6 Prabu Book Service, Gurgaon, Haryana.
7 K. P. Bachi & Company, 286, B.B. Gandhi Street, Calcutta-12.

© Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing Madras.